வரு.76 இல. 30 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI தினகரன் வாரமஞ்சரி

2024 ஓகஸ்ட் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

August 04 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-

## 'உறுமய' உறுதிகள் வழங்க தடை

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி அபேட்சகர் என்பதால் உறுமய உறுதிகள் வழங்குவதை தேர்தல் ஆணைக்குழு தடை செய்துள்ளது.

மீண்டும் 'உறுமய' உறுதிகள் வழங்குவது ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.













# பொது வேட்பாளர் ரணில்

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான பிரதான அரசியல் கட்சிகளின் பெரும்பான்மை ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருப்பதால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களம் இறங்கியுள்ளதாக, அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தீர்மானம் கடந்த முதலாம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் கூடிய கட்சியின் மத்திய குழுவில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி சுதந்திரமாக செயற்பட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது தமது குழுவில் இணைந்துள்ளதாக, அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க கடந்த 31ஆம் திகதி கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பீடமும் மத்திய குழுவும் தீர்மானித்தன. அந்த வகையில் ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே தமது ஆதரவை கோரியுள்ளதாக கட்சியின் தலைவரும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா மற்றும்

06


பிரதமர் தினேஷ் குணவர்தன


அமைச்சர் பிரசன்ன ரணதுங்க


அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா


ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா


அமைச்சர் ஜீவன் தொண்டமான்


தே.ம.கா. தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா

# இனப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்; நல்லிணக்கம், சமத்துவம் மிக முக்கியம்

## சிங்கள மொழியுடன் தமிழையும் ஊக்குவிக்க வேண்டும்

## தமிழகத்தில் ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியால் இலங்கையருக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும்



யாழ்ப்பாணம் உட்பட வட மாகாண மக்கள் நீண்டகாலமாக பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற போதிலும், அந்த மாகாணத்தில் பாரிய பொருளாதார திறன் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த சந்தர்ப்பங்களை வடக்கு மாகாணம் உட்பட முழு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற யாழ். மாவட்ட கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்

06

யாழ். கல்வியியலாளர், தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி



## கங்காராம விகாராதிபதி ஞானிஸ்ஸர தேரர் காலமானார்

இறுதிக் கிரியை பூரண அரச மரியாதையுடன் நாளை



கொழும்பு, ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய கலபொட ஞானிஸ்ஸர தேரர் நேற்று முன்தினம் (02) தனது 81ஆவது வயதில் காலமானார்.

06

புதிய சொத்து பிரகடன சட்டத்தின் பிரகாரம்

## தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்த ஜனாதிபதி, பிரதமர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட ஆளும் கட்சி அமைச்சர்கள் தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்துள்ளதாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

06

ஜனாதிபதி ரணிலின் மூலம்

## தமிழ் மக்களின் தாகங்கள் அனைத்தும் தீர்க்கப்படும்

அமைச்சர் டக்ளஸ் உறுதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூலம் தமிழ் மக்களின் அனைத்து தாகங்களுக்கும் தீர்வை பெற்றுக்கொள்ள முடியுமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தாளையடி கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்தினம் (02) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றிய

06

## 'தர்ம ரஷ்மி' முதல் பரிசு ரூ. 10 இலட்சம்




பொசன் உற்சவத்தையொட்டி ஹோமாகம, 'தர்ம ரஷ்மி' பொசன் வலயத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பொசன் வெளிச்சக் கூடுகள் போட்டியில் முதல் பரிசு பெற்ற எஸ்.எல்.சனத் பந்து என்ற நபருக்கு 10 இலட்சம் ரூபாவுக்கான காசோலை நேற்று லேக்ஹவுஸ் நிறுவனத்தில் வழங்கப்பட்டது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், ரூபவாஹினி தலைவர் சுதந்த லியனகே, இ.போ.ச. தலைவர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸ் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## எங்கள் கருத்து...

### சாதுர்யமாக சிந்திப்பார்களா தமிழ் மக்கள்?

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்து வரும் நிலையில், தமிழ் அரசியல் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகளும் முனைப்புப் பெற்று வருகின்றன. இதுவரை காலமும் போலன்றி தமக்கான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில் தமிழர் தரப்பு பிடிவாதமாக இருப்பதுபோலத் தெரிகின்றது. வடக்கு,கிழக்கில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பிலான உடன்பாடு அங்குள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் தேசிய கட்சிகளுக்குமிடையில் அண்மையில் எட்டப்பட்டது. ஆனால் இந்த உடன்பாட்டுக்கு தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஆதரவாக இருந்த போதும், அவ்வுடன்பாட்டில் தமிழரசுக் கட்சி கைச்சாத்திடவில்லை.

ஆனாலும் அதற்கான பெயர்கள் பல்வேறு மட்டங்களிலும் பிரேரிக்கப்பட்டு பொது வேட்பாளரின் பெயர் இன்னும் ஒரு வாரத்தில் இறுதி செய்யப்படுமென்று, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

06

அரச அதிகாரிகளுக்கு கடும் எச்சரிக்கை;

## தேர்தல் காலத்தில் சமூக ஊடகங்களில் முறைகேடா?

நிரூபணமானால் 3 வருட சிறைவாசம்




அரச அதிகாரிகள் தமது பணி நேரத்தில் தனிப்பட்ட சமூக வலைத்தள கணக்கு அல்லது வேறெந்த கணக்கை

06

## அரச ஓய்வூதியக்காரர்களுக்கு செப்டெம்பர் முதல் 3,000 ரூபா

இடைக்கால கொடுப்பனவாக வழங்க தீர்மானம்



அரசாங்க சேவையில் அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் தற்போது வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவுக்கு மேலதிகமாக 3,000 ரூபாவை வழங்க

06

## நிரந்தர அரச அதிபர்களை நியமிக்குமாறு கோரிக்கை

ஜனாதிபதிக்கு சி.வி. அவசர கடிதம்



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர அரச அதிபர்களை உடனடியாக நியமிக்கக் கோரி அவசர கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு

06



# ரணிலின் வெற்றியை ஏன் ஆதரிக்க வேண்டும்?

## விளக்குகின்றனர் பொதுஜன பெரமுன கட்சியினர்



### நாட்டை முன்னேற்றும் திட்டங்களுக்காக அவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்



பாராளுமன்ற பிரதி சபாநாயகரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான அஜித் ராஜபக்ச

கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடி மற்றும் அதனால் ஏற்பட்ட சமூக நெருக்கடி என பல்வேறு நெருக்கடிகளை நாம் எதிர்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்து எம் அனைவரினதும் ஒத்துழைப்புடன் இந்த நாட்டை மீண்டும் வழமைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். எனினும் அவருக்குக் கிடைத்த காலம் இரண்டு வருடங்கள் எனும் குறுகிய காலமேயாகும். இந்த நாட்டில் உள்ள அனைவரின் நம்பிக்கையையும் வென்று, அவர் மிகச் சிறப்பாக அப்பணிகளை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றார். எனவே அடுத்த ஐந்து வருடங்களுக்கு அவருக்கு அதிகாரத்தை வழங்கி அந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்று இந்த நாட்டை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வது அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். அதனால்தான் அவருக்கு ஆதரவளிக்க முடிவு செய்தோம்.

### பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஒரே வேட்பாளர் ஜனாதிபதி ரணில்



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

இந்த நாட்டை பொருளாதார அபிவிருத்தியில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரே வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமேயாகும். அதனால்தான் மொட்டுக் கட்சியைச் சேர்ந்த நாம் அவரை வெற்றிபெறச் செய்ய உறுதிபூண்டிருக்கின்றோம்.

நாட்டில் பொருட்களின் விலையை தொடர்ந்து அதிகரிக்கச் செய்த பணம் அச்சிடுவதைத் தடை செய்வதற்கு மத்திய வங்கியின் மூலம் புதிய சட்டமூலத்தைக் கொண்டு வந்தவர் அவரேயாகும்.

எந்தவொரு அரசாங்கத்தினாலும் நினைத்தவாறு அதிக வட்டி விகிதத்தில் கடன் வாங்க முடியாதவாறு கடன் கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் அவர் நிறைவேற்றினார். அது மாத்திரமல்ல, இதற்குப் பிறகு பொய்யான அரசியல் வாக்குறுதிகளை வழங்கி வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கிக் கொள்ள முடியாதவாறு நிதி முகாமைத்துவ சட்டத்தையும் அவர் கொண்டு வந்தார்.

இதன்பிரகாரம், இதற்குப் பிறகு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு பாராளுமன்றத்தில் தனியான அலுவலகமும் உள்ளது.

அதேபோன்று, இதுவரை பயணித்து வந்த பொருளாதாரப் பாதையை மாற்றுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அவர் பொருளாதார பரிமாற்றச் சட்டத்தை நிறைவேற்றினார்.

அதேபோன்று, ஊழல் மோசடிகளில் ஈடுபதைத் தடுப்பதற்கு கடுமையான ஊழல் தடுப்புச் சட்ட மூலத்தையும் அவர் நிறைவேற்றிக் கொண்டார். நாம் அவரை வெற்றி பெறச் செய்வோம்.

### நம் நாட்டைப் பற்றிச் சிந்தித்தே தீர்மானத்தை மேற்கொண்டோம்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும், ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளருமான பிரசன்ன ரணதுங்க

எமது அரசியல் நோக்கத்திற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக அன்று நாம் செயற்பட்டோம். அப்போதெல்லாம் நான்தான் அவருக்கு எதிராக அதிகம் பேசினேன். எனினும் அரகல போராட்டத்தோடு நாட்டில் ஏற்பட்ட நிலைமையினை நாம் பார்த்தோம். போராட்டத்தை நியாயப்படுத்தாவிட்டாலும், ஜனநாயகம் அற்றதாக, போராட்டம் நடக்கும் போது, மக்களும் அப்படித்தான் நடந்து கொள்கின் றனர். அன்று எங்கள் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்ட போராட்டத்தின் மோசமான பக்கத்தைப் நாம் பார்த்தோம். அந்த போராட்டத்துக்குப் பிறகு இந்த நாட்டைப் பொறுப்பேற்க எவரும் இருக்கவில்லை.

என்றாலும், அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இந்நாட்டைப் பொறுப்பேற்றார். அந்த நேரத்தில் நாங்கள் நிபந்தனையின்றி ஒத்துழைப்பை வழங்க இணங்கினோம். மக்களிடம் இருந்த போராட்ட மனப்பான்மை மாற்றப்பட்டது. அதற்கான பின்னணியை ஜனாதிபதியே உருவாக்கினார். எனவே நாங்கள் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம்.

பொருளாதார நெருக்கடியின் போது அந்த சவாலை ஏற்க முடியாது என்று மற்ற கட்சி தலைவர்கள் கூறினர். மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களோடு இணைந்து அவர் இரண்டு வருடங்களில் நாட்டை இந்த இடத்திற்கு கொண்டு வந்தார்.

### இந்த ஆட்சி கவிழ்ந்தால் நாடு மீண்டும் நெருக்கடிக்குள்



நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

ஜனாதிபதிக்கு ஆதரவினை வழங்குவது தனிப்பட்ட சலுகைகளைப் பெறுவதற்கான வேலை என்று பலர் விமர்சிக்கின்றனர். எனினும் இந்த இணக்கம் உடைந்து போனால் என்ன நடக்கும் என்று இவ்வாறு பேசும் இவர்களுக்கு தெரியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாமல் இந்த நாட்டினால் ஒரு மாதம் கூட முன்னேற முடியாது.

அப்படி நடந்தால், ஏற்படப் போகும் ஆபத்தை யாரும் புரிந்து கொள்ளவில்லை. நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்படுவதோடு, சுகாதார வசதிகள், பொருட்கள் மற்றும் சேவைகள், ஐ.எம்.எஃப், உலக வங்கி மற்றும் கடன் வழங்குபவர்களுடனான இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் மீண்டும் நெருக்கடிக்குள் சென்றுவிடும்.

நாங்கள் இன்னும் சுமார் ஆறு பில்லியன் கடனை செலுத்தவில்லை. இந்த நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் நாம் இன்னும் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை தொடர்ந்து ஆட்சி செய்யாவிட்டால், முதல் ஆறு மாதங்களில் வரிசை யுகத்திற்கான அறிகுறிகள் தென்படும். அதனால்தான் எங்களில் பெரும்பாலோர் அவருக்கு ஆதரவளிக்க முடிவு செய்தோம்.

### பெரும்பான்மை மக்களின் தேர்வும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாகும்.



கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சரான டாக்டர் ரமேஷ் பத்திரன

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பதாலேயே அவருக்கு ஆதரவளிக்க தீர்மானித்தேன். நான் இந்த முடிவை எடுப்பதற்கு முன், கிராம மட்டத்தில் கட்சி ஆதரவாளர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினேன். அதில் பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

பொதுஜன பெரமுன தனியான வேட்பாளரை நிறுத்த தீர்மானித்திருப்பது, நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்திற்காக என்றால், இந்த நேரத்தில் செய்ய வேண்டிய முக்கியமான விடயம் வேட்பாளர் ஒருவரை நிறுத்தாமல் இருப்பதேயாகும்.

### தொடர்ந்தும் பரீட்சித்துப் பார்க்க இயலாது



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி

குறுகிய அரசியல் அனுகூலங்களைப் பார்க்காமல் இந்நாட்டின் நிலைமையை நோக்கினால் இந்த நாடு பொருளாதார ரீதியாக மிகவும் ஆபத்தான நிலையிலேயே உள்ளது. அந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட வேண்டுமானால், பல்வேறு துறைகள் தொடர்பில் பரந்த நோக்கினையும், அனுபவத்தையும் கொண்ட தலைமைத்துவம் தேவையாகும். இந்த நாட்டில் இருந்த நிலைமைகளோடு கடந்து சென்ற இரண்டு வருட காலத்தினுள் நல்ல முன்னேற்றத்தைப் பெற்றுத் தருவதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தினால் முடிந்துள்ளது.

இந்த சூழ்நிலையில், எங்களால் தொடர்ந்தும் சோதனைகளைச் செய்ய முடியாது. எனவேதான் இந்த தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதே நாட்டுக்காக எடுக்கக்கூடிய சிறந்த தீர்மானம் என நான் நம்புகிறேன்.

### நாட்டைக் காப்பாற்றிய தலைவருக்கு நன்றியுடன் இருக்க வேண்டும்



தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்

இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தினுள் நாட்டில் நிலவிய நெருக்கடிகளிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே முடிந்தது. அந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் அந்தச் சவாலை ஏற்று நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து இந்த நாட்டு பொருளாதாரத்தை ஸ்திர நிலைக்குக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது அவரது வேலைத்திட்டங்களினாலாகும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

எம். எஸ். முஸப்பிர்

## நாட்டைப் பற்றிச் சிந்தித்த சட்ட மூலம்

### பேராசிரியர் பிரதிபா மஹனாம



பொருளாதார மாற்றச் சட்ட மூலத்தைக் கொண்டுவருதற்கு பல விடயங்கள் காரணமாக அமைந்துள்ளன. நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து அந்த இணக்கப்பாட்டிற்கு அமைய செயற்படுவதாக இருந்தால், எமக்கு அந்த ஒப்பந்தம் மட்டும் போதாது. அதற்குக் காரணம், ஒப்பந்தங்களிலிருந்து தரப்பினர் விலகலாம். எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நோக்குக்கு அமைவாக, இலங்கைக்கு ஏற்ற எதிர்காலப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இலங்கை 1966ஆம் ஆண்டு பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள போதிலும், இன்னமும் பொருளாதார உரிமைகள் அரசியலமைப்பில் கூட இல்லை. இது தனியார் துறை, அரச துறை மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் அனைவரையும் ஒரே இடத்திற்கு கொண்டுவருவதற்கு உகந்த ஒரு சட்டமூலமாகும். இதனைப் பற்றி தற்போது சர்வதேச அளவில் பேசப்படுறது. இதற்குக் காரணம், கடந்த செப்டெம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இது தொடர்பில் கவனத்தைச் செலுத்தியதாகும்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, அனைவரும் இணக்கத்தைத் தெரிவித்த சட்டமூலமாகும். அனைத்து அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டைப் பற்றிச் சிந்தித்த சட்டமூலமாகவே இதை நான் பார்க்கிறேன். இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவது மாத்திரம் போதாது; இதை ஒரு செயல்முறையாக மாற்ற வேண்டும். இந்தச் சட்டத்தின் மூலம் மக்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்தி, சர்வதேச உறவுகள் மூலம் முன்னேற வேண்டும் என்றே நான் கூறுகிறேன். காலத்திற்கு காலம் அரசியல் வாக்குறுதிகள் வரும்; அவை மீண்டும் மறைந்து விடுகின்றன. இது நாட்டின் சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது; அவை அரசுடன் முன்னேறிச் செல்கின்றன என்பதை நாம் காட்ட வேண்டும். அனைத்துப் பொருளாதாரத் திட்டங்களையும் ஒரு குறிப்பிட்ட மையப்படுத்தப்பட்ட இடத்திற்குக் கொண்டுவருவதற்கு இதன் மூலம் வாய்ப்புள்ளது.

## முக்கியத்துவம் மிக்க சட்டமூலம்



மக்கள் வங்கியின் தலைவர் பட்டய கணக்காளர்

**சுஜீவ ராஜபக்ஷ**

உண்மையில், இந்தச் சட்டமூலம் அண்மைய காலத்தில் நிறைவேற்றப்பட்ட மிகவும் முக்கியமான சட்டமாகவே நான் பார்க்கிறேன். தொழில் துறையினராக நாம் தனிப்பட்ட முறையில் எதிர்பார்த்த விடயம் இந்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது..

நாட்டின் பொருளாதாரம் எந்த திசையில் எந்த வகையில் பயணிக்கின்றது என மிகத் தெளிவாக இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமாகவே நான் பார்க்கிறேன். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, நமது அரசியல் பாதை, அரசியல் கருத்துக்கள், தொலைநோக்கு ஆகியவை முன்வைக்கப்படுகின்றன. மற்றொரு அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் அது முற்றாகவே மறுபக்கத்திற்கு மாற்றமடையும் சந்தர்ப்பங்களை நாம் பார்க்கின்றோம்.

எனினும் இங்கு நான் கண்ட விடயம் என்னவென்றால், இந்தச் சட்டத்தின் காரணமாக எமது நாட்டில் நிலையான அபிவிருத்தி ஏற்படுகின்றது. அதேபோன்று நாட்டின் செழிப்பு, உற்பத்தித் திறன் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. அதேபோன்று சமூகச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5% ஆக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான விடயமாகும். அதேபோன்று, அதை எப்படி செய்வது என்பது தொடர்பில் பேசும்போது, இந்நாட்டு இளைஞர் யுவதிகள் வெளிநாடுகளுக்குச் செல்வது பெரும் நெருக்கடியாக மாறியுள்ளது.



# பொருளாதார பரிமாற்ற சட்டமூலம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதேன்?

## இனங் காணப்பட்டுள்ள முதலீட்டு வலயங்களை உருவாக்குவது முக்கியம்

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரசன்ன பிரேமதாச**



இந்தச் சட்டமூலத்தை நாட்டை நேசிக்கும் அனைத்து தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். இலங்கை போன்ற நாடுகளின் அபிவிருத்தியில் வெளிநாட்டு முதலீடுகள் மிகவும் முக்கியமானதாகும். முதலீட்டுச் சபை போன்ற நிறுவனங்கள் இதனைவிடவும் தீவிரமாகச் செயற்பட வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள், பெண்களின் உழைப்பு பங்களிப்பு, வெளிநாட்டு தொழில்முனைவு போன்றவை மேம்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும். நாட்டின் நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பில் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு, அனைத்து தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். செயற்திறன், உற்பத்தித்திறன் போன்றவற்றை அதிகரித்துக் கொள்ள வேண்டியதோடு, தொழில்நுட்ப துறையில் இருந்து ஏற்றுமதி துறையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதிலிருந்து அதிகளவில் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தொழில்நுட்ப துறையை விரிவுபடுத்துவதில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பெரும் பொறுப்பு உள்ளது. அதேபோன்று, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்குத் தேவையான சட்ட நடைமுறைகள் மிகவும் சிக்கலானவை. அவற்றைத் துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருப்பமை பிரச்சினைக்குரிய விடயமாகும். எனவே, இச்சட்டத்தின் மூலம் பொருளாதார ஆணைக்குழுவை உருவாக்குவது மிகவும் காலத்திற்கேற்ற நடவடிக்கையாகும்.

இந்தச் சட்ட மூலத்தில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும் என இனங்காணப்பட்டிருப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். பெண்களின் தொழில் முயற்சியை அதிகரிப்பதன் மூலம் பெண்களின் உழைப்பு பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். 2023ஆம் ஆண்டில் உலகளாவிய தொழில்முனைவோர் கண்காணிப்பு அறிக்கையின் பிரகாரம், உலகளாவிய ரீதியில் ஆண்களை விட அதிகமான பெண்கள் சுயதொழில் செய்பவர்கள் என அவதானிக்கப்பட்டுள்ளது. நிறுவப்பட்ட தொழில்களை நடத்திச் செல்லும் அனைத்து தொழில்முயற்சியாளர்கள் மூவரில் ஒருவர் பெண்ணாகும். சிங்கப்பூர் திறந்த மற்றும் பாரியளவிலான வர்த்தகத்தைக் கொண்ட பொருளாதாரத்தை முன்னெடுத்துச் சென்று அபிவிருத்தியை நெருங்கியுள்ளது. எனவே, இந்தச் சட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள முதலீட்டு வலயங்களை உருவாக்குவது முக்கியமாகும். திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் இவ்வாறான உத்தேச வலயங்களை உருவாக்குவதன் மூலம் நாம் பெரும் பொருளாதார நன்மைகளை அடைந்து கொள்ள முடியும். திறந்த முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் தடையற்ற சந்தைப் பொருளாதாரக் கொள்கைகள் இதற்கு முக்கியமானவை. டிஜிட்டல் புதிய கண்டுபிடிப்புக்கள், மருந்து உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு மற்றும் இணைய பாதுகாப்பு போன்ற துறைகளில் முதலீடுகளை நாட்டிற்குப் பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

## பொருளாதார சட்டங்கள் மாற்றம் பெறவேண்டும்

**சாரங்க அழகப்பெரும – தலைவர், கைத்தொழில் அபிவிருத்திச் சபை**



உண்மையிலேயே, இந்தச் சட்டமூலத்தின் மூலம் எமது நாட்டில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இலகுவாகச் சொல்லப்போனால், இதற்காக சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கை கட்டமைப்புக்கள் கண்டிப்பாகத் தேவை. பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புக்கள் தேவை. அதை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். உலகில் உள்ள புதிய சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் செயற்பட வேண்டியது அவசியமாகும். அதைச் செய்வதே ஜனாதிபதியின் நோக்கமாகும். எனவே, இந்த பொருளாதாரம் தொடர்பான சட்டதிட்டங்களை மாற்ற வேண்டும். அதற்கான சட்டக் கட்டமைப்பை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, சீனா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இருந்து அதிக முதலீடுகளைக் கொண்டு வர முடியும். தற்போது ஏனைய நாடுகளிலிருந்து முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு சட்டங்களும் தடைகளும் உள்ளன. அதேபோன்று எமது நாட்டின் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். பெண்களின் உழைப்புப் பங்களிப்பு 34% அளவிலேயே உள்ளது, இந்த அளவு அதிகரிக்க வேண்டும். பொதுவாக இது 50% ஆக இருக்க வேண்டும். நாட்டின் பொருளாதார மாற்றம் தொடர்பாக இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

## ஒப்பந்தம் முறையாக பாதுகாக்கப்பட வேண்டும்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க



பொருளாதார பரிமாற்றச் சட்டத்தில் முக்கியமாகப் பேசப்படும் விடயம் என்னவெனில், ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மிகவும் முக்கியமான பொருளாதார இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகும். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகளை நீண்ட காலத்திற்குப் பாதுகாத்தல், கடன் சுமையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 வீதமாகப் பராமரித்தல், செலுத்தும் இருப்பு பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% என்ற அளவில் பராமரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை 5 வீதத்திற்கு குறையாத மட்டத்தில் பராமரித்தல் போன்ற விடயங்கள் இதனுள் அடங்குகின்றன. மொத்த பொருளாதார ஸ்திரத்தன்மைக்குப் புறம்பாக மூன்று முக்கிய இலக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த இலக்குகளை எடுத்துக் கொண்டால் அண்மைய கடந்த ஆறு, ஏழு தசாப்த காலத்தினுள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணக்கூடிய மூன்று அடிப்படை பண்புகளை அடைவது தொடர்பான இலக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பொருட்கள் மற்றும் சேவைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக கொண்டு வரப்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தி 21.5% ஐ தாண்டியுள்ளது. அதை அடைவதற்கான இலக்குகள் இங்கே உள்ளன. பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேலை செய்யும் வயதுடைய பெண்களில் 34% வீதமானோர் பொருளாதாரத்தில் பங்களிக்கின்றனர். இந்தத் தொகையை 50% ஆக உயர்த்த அரசு இலக்கு வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். . தொழிலாளர் பங்கேற்பை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான ஒரே வழி பெண்களின் உழைப்புப் பங்கேற்புதான். மொத்த தொழிலாளர் பங்களிப்பு 55% வீதம் என்பதோடு, இதனை 75% ஆகக் கொண்டு வருவது மிகவும் முக்கியமாகும். பொருளாதார வளர்ச்சிக்கு முதலீட்டு விநியோகத்தை விரிவுபடுத்துவது முக்கியமாகும். . இலங்கையில் முதலீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 32% ஆகும். அரசின் முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதம் ஆகும். மீதமானவை தனியார் முதலீடுகளாகும். இந்த அளவு எமக்குப் போதுமானதாக இல்லை. அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற வகையில் கடன் பெறுவதன் மூலம் நாம் நெருக்கடிக்குள் சென்றிருக்கின்றோம்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

எம். எஸ். முஸப்பிர்

# இலங்கையில் பிரபலமான 'பொடி ஹாமுதுரு'



**இலங்கையின் பொடி ஹாமுதுரு என்றால், கிராமங்களிலுள்ள பன்சலைகளின் சிறிய தேரர்கள் நினைவுக்கு வந்தாலும் கூட, பெயர் போன ஒரேயொரு பொடி ஹாமுதுரு என்றால் அனைவரினதும் நினைவுக்கு வருவது கங்காராமவின் கலபொட ஞானிஸ்ஸர தேரரேயாகும்.**

கலபொட ஞானிஸ்ஸர தேரரைப் போன்று, அரசியல் வாதிகள் மிக நெருக்கமான உறவைக்கொண்டிருந்த தேரர் ஒருவர் இந்நாட்டு வரலாற்றில் இருப்பாராயின், அது ஹேன்பிடகெதர ஞானிஸ்ஸர தேரர் அல்லது அண்மைய காலம் வரைக்கும் செயற்பட்ட மாதுளுவாவே சோபித தேரராகத்தான் இருக்க வேண்டும்.

1943 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி மாத்தறை கலபொட பிரதேசத்தில் பிறந்த கலபொட ஞானிஸ்ஸர தேரர், தனது 10 ஆவது வயதில் துறவரம் பூண்டார். அந்நேரம் அவர் கபுதுவ பாடசாலையில் தரம் நான்கில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

**இது அன்று பொடி ஹாமுதுருவோ தான் துறவறம் பூண்ட கடந்த கால நினைவை மீட்டிய நிகழ்வாகும்.**

நான் வித்யோதய கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தேன். அந்தக் காலத்தில் என் தேவையாக இருந்தது கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொள்வதல்ல. கண் தெரியாத தலைமை தேரரைப் பார்த்துக் கொள்வதிலேயே நான் பாடுபட்டேன். எனது சிறிய வயதிலேயே என்னிடம் விஹாரை பொறுப்பளிக்கப் பட்டது. அந்த வயதில் பாரிய பொறுப்பு கிடைப்பதும் மிகவும் அபூர்வமானதாகும்.

ஞானிஸ்ஸர தேரர் கடந்த வெள்ளிக்கிழமை உயிர் துறந்தபோது அவருக்கு வயது 81. என்றாலும் எந்தளவு வயோதிபராக இருந்த போதிலும் அவரை அனைவரும் அழைத்தது சின்ன ஹாமுதுரு என்றேயாகும். ஞானிஸ்ஸர தேரர் ஒருமுறை நான் இலங்கை தீபத்தில் சேவையாற்றியபோது தனக்கு சின்ன ஹமுதுருவோ என்ற பட்டம் வழங்கப்பட்டதாக கூறினார்.

1960 ஆம் ஆண்டில் எனது தலைமை தேரரின் கண்கள் தெரியாமற்போனது. அப்போது எனக்கு வயது 16 ஆகும். தலைமைத் தேரர் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டதனால், 16 வயதிலேயே நான் விஹாரையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

அதுமாத்திரமல்ல, பிரித், நேர்ச்சை, புண்ணிய சேவைகள், சமூக சேவை போன்றவற்றை செய்து கொண்டே எனது கல்வியையும் தொடர வேண்டியிருந்தது. இதற்கிடையில், கண் தெரியாத தலைமை தேரரையும் கவனித்துக் கொண்டேன்.

எனவே, எங்கள் தலைமைத் தேரர் உயிருடன் இருக்கும்போதே நான் கங்காராமாதியாக என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளலாமா? நான் அவ்வாறு சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. தலைமைத் தேரர் இருக்கும்போதே, நான் விஹாரையின் சிறிய தேரரானேன். 1984 ஆண்டு தலைமைத் தேரர் மறைந்தார். அதன் பின்னரே, விகாராதிபதியாக நான் பதவி உயர்வு பெற்றேன். எனினும் எல்லோரும் என்னை வழக்கம் போன்று பொடி ஹாமுதுரு (சின்ன துறவி) என்றே அழைத்தனர்.

இன்றும் பலருக்கு எனது பெயர் கலபொட ஞானிஸ்ஸர என்பது தெரியாது. ஆனால் பொடி ஹாமுதுரு (சின்ன துறவி) எனச் சொன்னால் நாடு முழுவதும் தெரியும். கங்காராம கலபொட ஞானிஸ்ஸர தேரர் எனச் சொன்னதும் எமது நினைவுக்கு வருவது லேக் ஹவுஸ் ஸ்தாபகர் டீ. ஆர். விஜேவர்தனவின் பரம்பரையும், ஜே. ஆர். ஜயவர்தனவின் பரம்பரையும் மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரம்பரையுமாகும்.

இந்த வரலாற்றைத் தேடிச் செல்லும்போது ஹெலேனா விஜயவர்தன மற்றும் பிலிப் விஜயவர்தன முஹந்திரம் ஆகியோருக்கு ஏழு பிள்ளைகள் இருக்கின்றனர். அந்தப் பிள்ளைகளுள் ஒருவராக இருப்பது லேக்ஹவுஸ் ஸ்தாபகர் டீ. ஆர். விஜயவர்தனவாகும். டீ. ஆர். விஜயவர்தனவின் மகன் தற்போதைய விஜய பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகர் ரஞ்சித் விஜேவர்தனவாகும். டீ. ஆர். விஜயவர்தனவின் மகளது மகனே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாகும். அதிகாரத்தில் இருந்தாலும், அதிகாரமின்றி இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பராக இருந்தார் பொடி ஹாமுதுரு. 2011ஆம் ஆண்டில் எந்த ஊடகங்களுக்கும் தெரிவிக்காமல் பொடி ஹாமுதுரு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்காக போதி பூஜையினை நடத்திய கதையும் உள்ளது. ரணில் விக்கிரமசிங்க போன்ற உலகறிவும், பொருளாதார அறிவும், அரசியல் அறிவும் உள்ள தலைவர் கட்சியை விட்டு வெளியேறினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படப்போகும் அழிவை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி என்பது அனைவருக்குமான கட்சியாகும். எனவே அனைவரின் கருத்துக்களையும் கேட்க வேண்டும். அன்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன ஒரு தேரரிடம் "எனக்கு புத்தரின் போதனைகள் தெரியாது. எனக்குச் சொல்லித் தாருங்கள். தேரர்களுக்கு அரசியலைத் தெரிந்து கொள்ள விருப்பம் என்றால் நான் சொல்லித் தருகிறேன்" என்றார். இந்த இடத்தில் எனக்கு அந்த கூற்று நினைவுக்கு வருகிறது.

ஒரு கட்சியினுள் யாராவது ஒரு கருத்து வேறுபாட்டை உருவாக்கினால், அது ஒரு உத்தியாகும். அதைவிட அது ஒரு பயங்கரவாதமுமாகும். அன்று ரணில் பிரதமராகி விஹாரைக்கு வந்தபோது நான் ரணிலின் பெயரை சொல்லவில்லை. சஜித் பிரேமதாசவின் பெயரையே கூறினேன். அவர்களுக்கு ஏதாவது புரிய வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு கூறினேன். ஆனால் அவருக்கு புரிந்ததா என்று எனக்கு தெரியவில்லை.

**மரணிக்கும் போது அவருக்கு வயது 81 ஆகும்**

ரணில் விக்கிரமசிங்க சமயச் சடங்குகளையும் நற்பண்புகளையும் அறிந்த நல்லவர். அவரது பாட்டி ஹெலேனா விஜயவர்தன அம்மையார்தான் களனி விஹாரையை புனரமைத்தவர். இன்று அதன் நிர்வாக சபையின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார். அவர் சங்கத்தினரை மதிக்கும் ஒருவர். இவ்வாறானதொரு தலைவர் கிடைத்தமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த பாக்கியமாகும்.

இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத ஒரு நபராக பொடி ஹாமுதுரு இருப்பார். 1972 இல் இலங்கை குடியரசாக மாறியபோது பொடி ஹாமதுருவிற்கு வயது 29 ஆகும். 1972 இல் இலங்கை குடியரசாக மாறியபோது விழா நடத்த இடமிருக்கவில்லை. அப்போது பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் இருக்கவில்லை.

இறுதியில், றோயல் கல்லூரியின் புதிய அரங்கில் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. புதிய அரங்கில் வைபவம் இடம்பெற்றதுடன், ஜனாதிபதி வில்லியம் கொபல்லவவின் உத்தியோகபூர்வ இல்லமான அரச இல்லத்தில் ஆசீர்வாதம் வழங்கும் விழாவில் உணவு வழங்கப்பட்டது. அஸ்கிரி, மல்வத்து மகா நாயக்க தேரர்கள், பலாங்கொட ஆனந்த மைத்திரி தேரர், வித்யோதய வித்யாலங்கார பரிவேனாதிகாரி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர். எனினும் ஜனாதிபதி வில்லியம் கொபல்லா அரச இல்லத்தில் பன்சில் வழங்கி எச்சரிக்கை உபதேசம் செய்வதற்கு அழைப்பு விடுத்திருந்தது சிறு வயதாக இருந்த பொடி ஹாமுதுருவையாகும். அப்போது திருமதி பண்டாரநாயக்காவுக்கு பொடி ஹாமுதுரு மூன்று எச்சரிக்கைகளை விடுத்திருந்தார்.இந்து லங்கா ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்ட சந்தர்ப்பத்தில் கொழும்பில் முதலில் கறுப்பு கொடியை பறக்கவிட்டது கங்காராமயவாகும். ஜே. ஆர். இந்தியாவின் பொறியில் சிக்கியுள்ளார் என்றே பொடி ஹாமுதுருவோ அடிக்கடி கூறிவந்த கதையாகும்.

இந்து லங்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஜே. ஆர். ஜயவர்தன மூன்று தடவைகள் இந்தியாவுக்குச் சென்றார். அன்றே சென்று அன்றே மீண்டும் திரும்பினார். அந்த மூன்று சந்தர்ப்பத்திலும் நானும், களனி விஹாரையின் வத்தள சீலாரதன தேரரும்தான் பிரித் ஓதி ஆசீர்வாதம் வழங்கி எச்சரிக்கை விடுத்து அனுப்பினோம். என்றாலும் நான்காவது தடவையாகவும் ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றார். அப்போது அவர் இந்தியாவில் ஒரு முடிச்சில் சிக்கிக் கொண்டார்.

ஜே.ஆர். நான்காவது தடவையாக இந்தியாவுக்குச் சென்ற நேரம்தான் பங்களாதேஷில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. அந்நேரம் ராஜிவ் காந்தி ஜே. ஆரிடம் "சேர் வெள்ளப் பெருக்கைப் பார்ப்பதற்கு பங்களாதேஷ் போவோமா" எனக் கேட்டுள்ளார்.

ரஜீவ் காந்தி சொன்னதை ஜே. ஆர். செய்தார். அன்று பங்களாதேஷ் சென்று இலங்கைக்கு வர ஜனாதிபதியால் முடியாது போனது. அன்றிரவு அவர் இந்தியாவில் தங்கியிருந்தார். எப்படியோ அன்றிரவு அவர் இந்தியாவின் முடிச்சு ஒன்றில் சிக்கிக் கொண்டார்.

**மரணிக்கும் போது அவருக்கு வயது 81 ஆகும். பொடி ஹாமுதுருவோ என்ற பெயருக்குப் பின்னால் ஒரு அற்புதமான கதையும் உள்ளது.**

அதனால்தான் அவர் அடிபணிந்து ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. அவ்வாறின்றி அவர் ஒரு போதும் இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு ஒப்பமிடப்போவதில்லை.

ஜே.ஆர் ஒரு முடிச்சில் சிக்கியதை நான் நன்கறிவேன். ஏனென்றால் நான்தான் அவருக்கு எப்போதும் பிரித் ஓதி இந்தியாவுக்கு அனுப்பினேன். ஜே. ஆரின் உணர்வுகளை நான் நன்கு அறிவேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான தினம், விஹாரையிலுள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பூட்டுப் போட்டு பூட்டிவிட்டு, இதற்குப் பின்னர் கடவுளுக்கு தீபம் ஏற்றப்போவதில்லை என தேரர்கள் தங்களுக்குள் கூறிக்கொண்டனர்.

எனினும் கடற்படை வீரர் விஜித ரோஹண விஜயமுனி அன்று ராஜீவ் காந்தியைத் துப்பாக்கியால் தாக்கியதைக் கேள்விப்பட்டவுடன், பொடி ஹாமுதுரு விஹாரையைத் திறந்து விளக்குகளை ஏற்றத் தொடங்கினார். இன்று மாதுலுவாவே சோபித தேரர் பொடி ஹாமுதுருவினால் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்ட கதை பலருக்கு தெரியாது. இந்தியஇலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக ஊர்வலம் சென்ற தேரர்களில் பிரதானமானவர் மாதுலுவாவே சோபித தேரராகும்.

அன்றைய தினம், சிலர் அவரை மகாபோதியில் தடுத்து வைத்து தீ வைக்கப் போகிறார்கள் என்ற செய்தி பொடி ஹாமுதுருவிற்கு கிடைத்தது. அக்குழுவினர் முயற்சித்தது சோபித தேரருக்கு தீ வைத்துவிட்டு அவர் தீக்குளித்து இறந்ததாக செய்தி பரப்புவதற்கேயாகும்.

பொடி ஹாமுதுரு பிரதமர் ஆர். பிரேமதாசவுடன் தொலைபேசியில் உரையாடி சம்பவம் தொடர்பில் விளக்கமளித்துள்ளார். அதன் பின்னர் பிரதமர் பிரதி பொலிஸ்மா அதிபர் குணதிலக்கவுடன் ஒரு குழுவை அனுப்பி சோபித தேரரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

கங்காராமவின் கலபொட ஞானிஸ்ஸர தேரர் இல்லையென்றால் ரணசிங்க பிரேமதாச இந்நாட்டின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகியிருக்க முடியாது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னைய நாள், ஜே.வி.பியினால் வாக்களிக்கச் செல்லும் மக்களைக் கொல்லப் போவதாக தடை விதித்தது. ஜே.வி.பி.யின் கொலைக் கட்டளைக்கு அஞ்சிய பொது மக்கள், மறுநாள் வாக்களிப்பதைத் தவிர்த்து வீட்டிலேயே இருக்க முடிவு செய்தனர். ஜே.வி.பி. உத்தரவையடுத்து ஆர். பிரேமதாச உடனடியாக ஒரு குழுவை கங்காராமவுக்கு அனுப்பினார்.

நாம் என்ன செய்தோம். ஜே.வி.பி.யினர் அடித்தைப் போன்ற போஸ்டர் ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்த போஸ்டர் கங்காராமவிலிருந்தே எழுதப்பட்டிருந்தது. "ஜே.வி.பி. தடையை நீக்கிவிட்டது. வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களியுங்கள். இப்படிக்கு மக்கள் விடுதலை முன்னணி" என அந்த போஸ்டரில் அச்சிடப்பட்டிருந்தது. நான் அந்த போஸ்டரை ஒரு மில்லியன் அச்சிட்டேன். மறுநாள் காலையில், மக்கள் பார்த்தபோது, நாடு முழுவதும் வாக்களிக்க அழைப்புவிடுக்கும் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. அது ஜே.வி.பி.யால் ஒட்டப்பட்ட போஸ்டர் என்றே மக்கள் நம்பினார்கள். இதனைக் கண்டு மக்கள் அச்சமின்றிச் சென்று வாக்களித்தனர்" என பொடி ஹாமுதுருவோ இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார். புதிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு ஜனசவிய யோசனையை வழங்கியவரும் இந்த பொடி ஆமதுருவேயாகும்.

*வஜிர லியனகே*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*






# இலங்கை வங்கி

## பெறுமதியான ஆதனங்களின் விற்பனை

| ஆதனத்தின் இலக்கம் | ஆதனம் அமைந்துள்ள நகரம் | விவரமும் அமைவிடமும் | ஆதனத்தின் வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 426 | ஊறுபொக்க | "ஒவிட்டவத்த" பெரலபனாத்தர வடக்கு ஊறுபொக்க. | காணியும் வீடும் | 1 ரூ 23.0 பே |
| 444 | வாரியபொல | M/S ஜயலங்கா ஆடைத்தொழிலகம் "அம்பகஹமுல்லவத்த" இல.60, விலகட்டு பொத்த, வாரியபொலவில் அமைந்துள்ளது. | காணியும் தொழிலகம் | 2 ரூ 37.3 பே |
| 451 | மாவத்தகம | மீதென்வல பல்லேகமவில் அமைந்துள்ள "சியம்பலகஹமுல்லஹேன தற்போது வத்த" | காணியும் வீடும் | 1 ரூ 1.0 பே |
| 479 | குருநாகல் | உயந்தனவில் அமைந்துள்ள "உயந்தனவத்த அல்லது சவுந்தரவள்ளிவத்த மற்றும் தும்முலங்க" | காணியும் கட்டடமும் | 15.0 பே |
| 512 | வத்தளை | இல.114, அரசாங்க வீட்டுத் தொகுதி, ஹேகித்தவில் உள்ள "ஹெடவகக கஹகுருந்துவத்தை" ("ஹேகித்த வத்தை") | காணியும் வீடும் | 4 .4.1 பே |
| 516 | கிளிநொச்சி | கராச்சியில் அமைந்துள்ள "கிளிநொச்சிகாடு" | காணியும் கட்டடமும் | 3.45 பே |
| 518 | மாத்தறை | கம்புறுகமுவையில் அமைந்துள்ள விதானகே கொரட்டுவ அல்லது போஹேகொரட்டுவ | வெற்றுக் காணி | 1 ஏ 0.8 பே |
| 519 | குளியாப்பிட்டிய | ஹெட்டிமுல்ல வீதி, ஹிந்தியமுல்ல சந்தியில் அமைந்துள்ள "கொன்கஹமுல்ல பில்லேவ மற்றும் தலுபொத்தஹேன, மீகஹவத்த, அம்பகஹமுல்லவத்த மற்றும் லோலுகஹமுலவத்தை" | வெற்றுக் காணி | 1 ஏ 2 ரூ 17.6 பே |
| 523 | நாவலப்பிட்டிய | பல்வாகமவில் அமைந்துள்ள "இம்புல்பிட்டிய வத்தையில் பிரிக்கப்பட்ட பகுதி" | வெற்றுக் காணி | 10.15 பே |
| 524 | கலவானை | மெனிக் வெளி மற்றும் கோல்டன் வெளி தேயிலைத் தொழிற்சாலை தெல்கொடவில் அமைந்துள்ள "மெனிக்வெளி தோட்டம்" | காணியும் தொழிற்சாலையும் | லொட் 8 - 2 ஏ 3 ரூ 39.5 பே லொட் 9 - 1ஏ 2 ரூ 2.7 பே |

மேற்குறிப்பிட்ட ஆதனங்களுக்கான விலைக்கோரல்களை சமர்ப்பிக்க ஆர்வமாகவுள்ள தரப்பினரிடமிருந்து (தொடர்புபட்ட முதன்மை தரப்பினர் மாத்திரம்) விலைக்கோரல்கள் கோரப்படுகின்றன.

2024.08.16 ஆம் திகதி வரையில் இதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்படும் என்பதுடன், மீளளிக்கப்படாத வைப்பாக 2,000/- ரூபாவையும் (18% பெ.சே.வரி மற்றும் 25% சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி மேலதிகமாக அறவிடப்படும்) மற்றும் மீளளிக்கப்படும் வைப்பாக 50,000/- ரூபாவையும் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் இதன்பொருட்டு வைப்புச் செய்யலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை தொடர்புடைய ஆதன இலக்கத்துடன் **"ஆதனம்/06/2024"** எனப் பெயரிட்டு அரக்கு முத்திரையிட்ட தபாலுறையிலிட்டு 2024.08.20ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறியத்தருகின்றோம்.

2024.08.20ஆம் திகதி விலைக்கோரல் திறக்கப்படும்போது விண்ணப்பதாரர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விலைமனுக்கோரல்களை ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான முழு உரிமையையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**மேலதிக விவரங்களை கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக வார நாட்களில் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

முகவரி :
இலங்கை வங்கி,
கையகப்படுத்தப்பட்ட ஆதனப் பிரிவு
3ஆம் தளம், தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

தொலைபேசி : உதவிப் பொது முகாமையாளர் (நிறுவன அறவீடு) - 011-2386080 / 011-2203410
சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 / 011- 2203429 / 076-9627068
உதவி முகாமையாளர் - 011 - 2203470 / 071 - 8418898
மின்னஞ்சல் - mgrforeclosed@boc.lk

* **தயவு செய்து www.boc.lk என்ற வலைத்தளத்திலுள்ள Special Notices என்பதன் கீழ் Properties for Sale என்பதனையும் அலுவலக Facebook பக்கத்தினையும் பார்வையிடவும்.**

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




## National Anti-Human Trafficking Task Force (NAHTTF)
## மனித விற்பனைக்கெதிரான தேசிய செயலணி
## எதிர்காலத்தை வடிவமைக்க உதவும் ஐந்து வருட திட்டம் (2026-2030)

**2026-2030 ஆண்டுகளுக்காக எமது அடுத்த தேசிய மூலோபாய செயற்றிட்டத்தை மனித விற்பனைக்கெதிரான தேசிய செயலணியானது உருவாக்குகின்றது. பொது மக்களிடமிருந்து சிறந்த ஆலோசனைகள் கிடைக்குமென நாம் நம்புகின்ற அதேவேளை உங்களின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். எமது தற்போதைய முன்னெடுப்புக்களை விளங்கிக் கொள்வதற்காக எமது www.nahttf.gov.lk என்ற இணையதளத்திலிருந்து NAHTTF 2021-2025 NSAPI பதிவிறக்கம் செய்யவும்.**

**உங்கள் தொனிப்பொருள்: மனித விற்பனையை ஒன்றாக இணைந்து நாம் முறியடிப்போம்.**

மேலதிக தகவலுக்காக www.nahttf.gov.lk என்ற இணையத்தை பார்வையிடவும்.
NAHTTF பாதுகாப்பு அமைச்சு

**உங்கள் ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்கான முறை:**

- பதவி: NAHTTF, பாதுகாப்பு அமைச்சு
- மின்னஞ்சல்: nahttfsrilanka@gmail.com
- WhatsApp: 0112102570 / 0768447700

உங்கள் ஆலோசனைகளை எமது உருவாக்கலுக்காக பகிர்ந்து கொள்ளுங்கள்.

1. **தடுத்தல்:**
   - மனித விற்பனையை நிறுத்துவதற்கான புத்தாக்க மூலோபாயங்கள்
   - செயல்வலுப்பெறும் கல்விசார் மற்றும் பொது மக்கள் விழிப்புணர்வு கருத்தரங்குகள்

2. **பாதுகாத்தல்:**
   - பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆதரவு சேவைகளை மேம்படுத்தல்
   - புனருத்தாபனம் மற்றும் மீளிணைவு நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தல்

3. **வழக்கு தொடர்தல்:**
   - சட்டரீதியிலான சட்டக அமைப்புக்கள் மற்றும் சட்ட அமுலாக்கலை வலுப்படுத்தல்.
   - குற்றவியல், நீதி செயற்பாடுகளின் செயல்வலுவை அதிகரித்தல்

4. **பங்காண்மை:**
   - அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் வலுவான ஒத்துழைப்புகளை கட்டியெழுப்புதல்.
   - மனித விற்பனைக்கெதிராக போராடுவதற்காக பொதுமக்கள்- தனியார் பங்காண்மைகளை வளர்த்தல்




**உங்கள் கருத்துக்களை அறிந்துகொள்ள விரும்புகின்றோம்**

**சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதி: 2024 ஆகஸ்ட் 31**

# ஜனாதிபதியின் வடக்கு விஜயம்













## மக்கள் உரிய நேரத்தில் முடிவெடுப்பார்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

**பொருளாதாரத்தை நிலைநிறுத்தக்கூடிய வலுவான குழுவை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்**

**தேர்தல் நெருங்கும் போது பலர் அங்கும் இங்கும் தாவித்திரிவதை வரலாறு முழுவதிலும் நாம் பார்த்திருக்கின்றோம்.**

**ஆயுதப் போராட்டத்திலிருந்து விலகி, ஜனநாயக ஓட்டத்தில் இணைந்து, வளர்ச்சி பெறுவது இந்த நாட்டின் ஜனநாயகத்தின் நல்ல அறிகுறியாகும்.**

**பெரும்பான்மையானோர் எதிர்பார்த்திருந்த ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. நீங்கள் பல வருட அனுபவத்தைக் கொண்ட ஒரு அரசியல்வாதியாக இந்த முறை ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

உண்மையிலேயே இது ஒரு தீர்க்கமான சந்தர்ப்பமாகும். இந்த ஜனாதிபதித் தேர்தலானது எமது நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றது. பாதாளத்திலிருந்து மீள்வதற்கும் மீள வேண்டிய பாதை தொடர்பிலும் ஜனாதிபதி தீர்மானம் ஒன்றை வழங்க வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள், கட்சி வேறுபாடுகளின்றி மாற்றத்தை வேண்டி வீதியில் இறங்கினார்கள். அந்த மாற்றம் இடம் பெறவில்லை. எனினும் முன்னாள் ஆட்சியாளர் வீட்டிற்கு செல்ல வேண்டியேற்பட்டது. இன்னமும் நாட்டு மக்கள் அந்த மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அந்த மாற்றத்தைச் செய்வதற்கு மக்கள் எதிர்பார்த்தார்கள். எனினும் நிதி இல்லை என்ற பிரச்சினையை முன்வைத்து அந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஜனநாயக உரிமை இல்லாமல் போனது.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் வந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதும் கடினமான போராட்டத்தின் பின்னராகும்.

**அந்த சந்தர்ப்பம் என்ன என்று தெளிவுபடுத்த முடியுமா?**

இந்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் முன்னால் பிரதானமாக மூன்று வழிகள் உள்ளன.

ஒன்று, நாட்டை அதலபாதாளத்திற்குள் தள்ளிய குழுவினர், மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். அதனூடாகப் பயணிப்பதா என மக்கள் சிந்திக்க வேண்டும். இரண்டாவது தேசிய மக்கள் சக்தி. அது மார்க்சிஸ்ட் கட்சியாகும், மார்க்சிஸ்ட் கொள்கைகளால் நாட்டை காப்பாற்ற முடியும் என்கிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளும் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளும் ஒன்றே என அக்கட்சியின் செயலாளர் டில்வின் சில்வாவே தெரிவித்துள்ளார். உலகெங்கிலும் தோல்வியை நிரூபித்த, நிரூபிக்கப்பட்ட கொள்கைகளின் ஊடாகவே அவர்கள் பயணிக்கின்றார்கள். 40 ஆண்டுகால சோசலிசம் வாதம் கிழக்கு ஐரோப்பா, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, பல்கேரியா மற்றும் யூகோஸ்லாவியாவை விட்டு நீங்கியது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, வறுமை அதிகரித்ததை அவர்கள் கண்டறிந்தனர். எனவே, அந்த ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பி முறையை மாற்றினர்.

இன்று இந்தியா, சீனா, வியட்நாம் போன்ற நாடுகள் அந்த சிந்தனைகளிலிருந்து விலகியிருப்பதை காண முடிகிறது. எனவே அந்த வழி மிகவும் தோல்விகரமானது. மக்கள் அதனையும் புரிந்து கொள்வார்கள்.

3ஆவது வழிதான் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் காட்டும் வழி. இந்த அரசியலில் நாங்கள் ஒரு புதிய சக்தியாக இருக்கிறோம். உள்நாட்டு ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் இருந்து தொடங்கிய கட்சி. இன்று நாம் ஜெர்மனி, ஸ்கண்டிநேவியா, மலேசியா போன்ற நாடுகளின் முன்னேற்றமடைந்த பாதையின் ஊடாக அந்நாடுகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே பயணிக்க வேண்டும்.

எனவே, நாம் சுட்டிக்காட்டும் நாட்டின் பொருளாதார நெருக்கடியை நீக்கும் பாதையில் மக்கள் பயணிப்பார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை உள்ளது. மக்கள் செயற்கையான பேரணிகளை விட்டுவிட்டு சரியான நேரத்தில் புத்திசாலித்தனமான முடிவை எடுப்பார்கள்.

**ஆளுங்கட்சியைச் சேர்ந்த 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்கள். இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயம்தானே?**

புதிதாக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க 92 பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இணைந்துள்ளார்கள் என்பதல்ல. ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு வாக்களித்தவர்கள்தானே அங்கிருக்கின்றார்கள்.

ஒன்லைன் சட்டத்திற்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கும் கைகளை உயர்த்தியவர்கள்தான் இதற்குப் பின்னால் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்தும் தமது ஊழல் மோசடிகளை மறைப்பதற்கும், இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கும்தான் செயற்படுகின்றார்கள். தமது பாதுகாவலராக ஜனாதிபதியை வைத்துக் கொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சியே இதுவாகும்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கைகளைப் பலப்படுத்தச் செல்வார்களா?**

நான் ஏற்கனவே கூறியதைப் போல கடந்த இரண்டு வருடங்களாகவே ஐ.ம.சக்தியிலிருந்து 15 பேர் அரசுடன் இணையப் போகிறார்கள், 20 பேர் இணையப் போகிறார்கள் கூறினார்கள்தானே. எங்கே எவராவது அவ்வாறு சென்றார்களா? தேர்தல் நெருங்கும் போது ஒருவர் இருவர் அங்கும் இங்கும் தாவித்திரிவதை வரலாறு முழுவதிலும் நாம் பார்த்திருக்கின்றோம். அது ஒரு பொதுவான விடயம். என்றாலும் ஐ.ம. சக்தியிலிருந்து ஒருவரும் செல்லவில்லையே.

**மக்கள் விடுதலை முன்னணிக்கு பாரிய வரவேற்பு சமூகத்தில் ஏற்பட்டிருக்கின்றதுதானே? இந்த வளர்ச்சியை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

மக்கள் விடுதலை முன்னணி இன்று தேசிய மக்கள் சக்தியாக களமிறங்கியிருக்கின்றது. இந்த வளர்ச்சி தொடர்பில் நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றோம். மொட்டு கட்சியினால்ல விரக்தியடைந்த மக்களின் வாக்குகள் இந்தக் கட்சிக்குச் செல்வதோடு, எமக்கும் கிடைக்கும். ஆயுதப் போராட்டத்திலிருந்து விலகி

தொடர்சி 19 பக்கம்

தாரக விக்ரமசேகர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்



## கீழ் மட்ட வாக்காளர் இல்லாமல் யாரும் ஆட்சிக்கு வர முடியாது!

### பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே

**நாம் வெற்றி பெறுவது பெரிய விடயமல்ல. காரணம் கிராம மட்ட மக்கள் மஹிந்த ராஜபக்ஷ அல்லது எமது கட்சியைக் கைவிட்டுச் செல்லவில்லை.**

**69 இலட்சம் வாக்குகளால் நாம் வெற்றி பெறுவோம் என நான் கூற வரவில்லை. எனினும் எம்மால் குறிப்பிட்ட மட்டத்தில் வெற்றி பெற முடியும்.**

**நாங்கள் நம்பிக்கை வைத்திருப்பது கீழ் மட்ட வாக்காளர்களிடமே அன்றி, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அங்கும் இங்கும் மாறிக் கொண்டிருப்பவர்கள் மீதல்ல.**

**எமது கொள்கையாக இருக்க வேண்டியது எமது சொத்துக்களை அப்புறப்படுத்தல் அல்லது விற்பனை செய்வதல்ல.**

**ஜனாதிபதித் தேர்தலில் நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவர் என்ற வகையில் பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்காக அவரோடு இணைந்து கொண்டுள்ளனர். நீங்கள் உள்ளிட்ட சிலர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வராமைக்கான காரணம் என்ன?**

நாம் ஜனாதிபதிக்கு நாட்டின் முதல் பிரஜையாக ஆவதற்கு உதவி செய்தோம். அவர் ஜனாதிபதியான தன் பின்னர் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கினோம். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை அவருக்கு வழங்கி அவரது பயணத்தில் எம்மால் வழங்கக் கூடிய அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்கினோம். எமது கட்சியின் கொள்கைகளில் சில சில குறைபாடுகள் இருந்தாலும் நாம் நாட்டைப் பற்றிச் சிந்தித்தே அந்த சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பை வழங்கினோம்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாம் கட்சி என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடாத்தினோம். கட்சி என்ற வகையில் நாம் எவ்வாறு ஒத்துழைப்பை வழங்குவது என்பது தொடர்பில் பேசினோம். அதேபோன்று அவரது கருத்துக்கள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை நடாத்தினோம். கட்சித் தலைவர்களிடையே அப்போதுதான் இந்த நெருக்கடி ஏற்பட்டது.

கட்சித் தலைவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டு செல்லும் போது அவர் எமது கட்சியைச் சேர்ந்த சிலரோடு தனியாகப் பேச்சுவார்த்தையை நடாத்தினார். அப்போது கட்சிக்கு என்ன நடக்கும்? எம் இரு தரப்பினரிடமும் இருந்த சில சில குறைபாடுகள் தொடர்பில் பேசி முன்னேறிச் செல்லவே முற்பட்டோம்.

கட்சி என்றால் கட்சித் தலைவர்கள் பேசி ஏதாவது தீர்மானங்களை எடுத்து அதனை கட்சியின் ஏனையவர்களுக்கு அறிவிப்பார்கள். இதுதானே பொதுவான நடைமுறை. அந்த நிலைக்குச் செல்லும் வரை ரணில் விக்கிரமசிங்க பொறுமை காக்கவில்லை. இதனால் கட்சியினுள் பெரிய நெருக்கடி ஏற்பட்டது.

**ஜனாதிபதியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்பார்ப்புள்ளதா?**

நாளை என்றாலும் எம்மால் மீண்டும் பேச்சுவார்த்தையை நடத்த முடியும். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும் இங்கு நடந்திருப்பது ஜனாதிபதி எமது கட்சியின் தலைமைத்துவத்தை மறந்து விட்டு வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தியதாகும்.

எனினும் இப்போது நடந்திருப்பது, எங்கள் கட்சியின் செயல்பாட்டை அதிகரிப்பதற்கு நாம் செயல்படுவதுதான். எனவே கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கட்சி உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த பிரச்சினை தற்போது பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இது மிகவும் எளிமையாகப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்கக் கூடிய பிரச்சினை. கட்சி எடுத்த அந்த நடைமுறைகளுக்கு அப்பால் செல்ல முடியும் என நான் நினைக்கவில்லை.

**அப்படியென்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வேட்பாளர் ஒருவர் வருவார் என்பது உறுதியாகிவிட்டதா?**

ஆம். வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த கட்சி தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 07ஆம் திகதி அந்த வேட்பாளர் யார் என்பதை அறிவிப்போம்.

**உண்மையிலேயே இரு தரப்பினருக்கிடையில் சிறந்த புரிந்துணர்வுடன் இரண்டு வருட காலம் செயற்பட முடியுமானால் இந்தப் பேச்சுவார்த்தைக்கு என்ன நடந்தது?**

நாம் மிகவும் தூய்மையான முறையில்தான் இந்தப் பேச்சுவார்த்தைக்குச் சென்றோம். ஒன்று, எமது கட்சியைச் சேர்ந்த சிலர் அதிக எதிர்பார்ப்புக்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவறான பாதையில் அழைத்துச் சென்றுள்ளார்கள். அல்லது ரணில் விக்கிரமசிங்க இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் சரியான புரிந்துணர்வைக் கொண்டிருக்கவில்லை. கட்சி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் அந்தக் கட்சியில் இருப்பவர்களைக் கூட்டி அவர்களது ஆதரவினைப் பெற்றுக் கொள்ள நேரிட்டால் கண்டிப்பாக அங்கு குழப்பங்கள் ஏற்படும்தானே.

**வேட்பாளர் ஒருவரை நிறுத்தி பொதுஜன பெரமுனவினால் வெற்றி பெற முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

நிச்சயமாக ஆம். நாம் வெற்றி பெறுவது பெரிய விடயமல்ல. காரணம் கிராமிய மட்ட மக்கள் மஹிந்த ராஜபக்ஷ அல்லது எமது கட்சியைக் கைவிட்டுச் செல்லவில்லை. எனவே வெற்றி என்பது எமக்கு ஒரு பிரச்சினையே அல்ல. ஏற்கனவே கிடைத்த 69 இலட்ச வாக்குகள் என்ற வெற்றியை எம்மால் பெற முடியும் என நான் கூற வரவில்லை. எனினும் எம்மால் குறிப்பிட்ட மட்டத்தில் வெற்றி பெற முடியும்.

**நீங்கள் அவ்வாறு கூறினாலும், மக்கள் விடுதலை முன்னணி ஒரு பக்கத்தில் சவாலாகியுள்ளது. மற்ற பக்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி. உங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் குழு. இவற்றுக்கு மத்தியில் மொட்டுக் கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தி இலகுவாக வெற்றி பெற முடியும் என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

ஒவ்வொரு முறையும் ஜனாதிபதித் தேர்தல் என்பது இரு தரப்பு போர் அல்லது மும்முனைப் போர் போன்றதுதானே. இம்முறை அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது மிகவும் சாதாரணமானதுதானே. இது நாம் அவ்வளவாக யோசிக்க வேண்டிய விடயம் அல்ல.

தொடர்சி 19 பக்கம்

தாரக விக்ரமசேகர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்




# பொருளாதார சவாலை வெற்றிகொள்வதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவம் அவசியம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

**'பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வந்து–கொண்டிருக்கும் சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானது. எனவே, அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும்' என வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். 'கயிற்றுப் பாலத்தில் ஆரம்பித்த ஜனாதிபதியின் பயணத்தை முடிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்' என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். அமைச்சர் எமக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:**



**கே: கடந்த இரண்டு வருடங்களில் கடன் மறுசீரமைப்பு மற்றும் எச்சரிக்கைகளை விடுத்ததைத் தவிர ஜனாதிபதி எதனையும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டுகின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள், மருந்துத் தட்டுப்பாடு, உரத் தட்டுப்பாடு ஆகியவற்றை நீக்கியது யார்? மின்வெட்டை நிறுத்தி டொலரின் பெறுமதியை 1000 ரூபாவிலிருந்து 300 ரூபா வரை குறைத்தது யார் என்ற கேள்விக்கான பதிலை அவர்கள் முதலில் கூற வேண்டும்.

**கே: ஆனால் மேலும் கடன் வாங்குவதன் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதைத் தள்ளிப்போடுவது மற்றும் நாட்டிற்கு ஒரு வெற்றி என்று அழைப்பது ஆகியவை உண்மையில் நாட்டுக்கு நல்ல சமிக்ஞைகளா?**

பதில்: நாட்டின் கடனை ஒரு கணம் ஒதுக்கி வைப்போம். நீங்கள் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு வங்கியில் கடன் வாங்கி, பணக் கஷ்டம் அல்லது நோய் காரணமாக அதைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்றால், வங்கி உங்கள் வீட்டை ஏலம் விடப் போகிறீர்கள் என்றால், முதலில் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீடிப்பு மற்றும் நிவாரணம் பெற வங்கியிடம் பேசுவீர்கள் இல்லையா? வங்கி ஒப்புக்கொண்டு, நீடிப்பைப் பற்றி உங்கள் குடும்பத்தினருக்குத் தெரிவித்தால், அந்த நேரத்தில் அவர்களுக்கு அதுவே சிறந்த செய்தி அல்லவா? அப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சுடன் மற்றைய குடும்ப விஷயங்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கலாம். இதுவே நாட்டுக்கும் நடந்துள்ளது.

**கே: நமது நாடு இவ்வளவு மோசமான நிலையில் இருந்ததாக நீங்கள் கூறுகிறீர்களா?**

பதில்: ஆம், நமது நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது. எங்களால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்று ஒப்புக்கொண்டபோது, நாங்கள் உலகளவில் தனிமைப்படுத்தப்பட்டோம். உலகமே நம்முடன் பழக அஞ்சியது. கடன் மறுசீரமைப்பு தொடர்பான உலகளாவிய ஒப்பந்தத்திற்குப் பிறகு எங்களுக்கு சர்வதேச வரவேற்பு கிடைத்தது. வீட்டை இழக்கும் மனிதனைப் போலவே நாங்களும் விளிம்பில் இருந்தோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய சூழலுக்கு நன்றி செலுத்தும் வகையில் இன்று எவரும் சர்வதேச அளவில் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.



**'கயிற்றுப் பாலத்தில் ஆரம்பித்த ஜனாதிபதியின் பயணத்தை முடிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்'**

**கே: இருப்பினும், ஜனாதிபதி பின்பற்றும் சில பொருளாதாரக் கொள்கைகள் நம் நாட்டின் சமூக–பொருளாதார சூழலுக்கு பொருந்தவில்லை என்ற கடுமையான விமர்சனமும் காணப்படுகின்றது அல்லவா?**

பதில்: நமது நாட்டில் பயன்படுத்தப்படும் முதன்மையான நாணயம் இலங்கை ரூபாயாகும். கொவிட்19 தொற்றுநோயால் தூண்டப்பட்ட பொருளாதார நெருக்கடி நேரடியாக நமது டொலர் வருமானத்தைப் பாதித்தது. அப்போதுதான் வெறும் ரூபாயைக் கொண்டு வாழ முடியாது என்பதை உணர்ந்தோம். எரிபொருள், எரிவாயு, மருந்து மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு டொலர்கள் தேவைப்பட்டன. இவையே மக்களின் அடிப்படைத் தேவைகளாகும். கடலில் நங்கூரமிட்ட எரிபொருள் மற்றும் எரிவாயுக் கப்பல்கள் நாம் டொலர்களைத் திரட்டும்வரை காத்திருந்தன என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? நம் பக்கெட்டில் உள்ள ரூபாய்களை வைத்து அவற்றை வாங்க முடியுமாக இருந்ததா?

2028 முதல், இந்த வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பை நாம் ஏற்க வேண்டும். எனவே, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் டொலர்களை உருவாக்கும் இயந்திரம் தேவை. அதற்கு முதிர்ந்த, அனுபவம் வாய்ந்த, சர்வதேச அங்கீகாரம் பெற்ற தலைவர் தேவை. எங்களின் ஒரே மற்றும் சிறந்த தெரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

உலகை எளிதில் ஏமாற்ற முடியாது. இதற்கு முன்னர் 16 சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களைப் பெற்று உலகை ஏமாற்ற முயற்சித்தோம், நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டோம்.

உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட சமூகபொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளை கடைப்பிடிக்கும் தலைவர்களை உலகம் சமாளிக்க விரும்புகிறது.

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் தனது கடமைகளை நிறைவேற்றியிருந்தால், ஏன் வேறொருவர் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது?**

பதில்: பொருத்தமான வேட்பாளர் இருந்தால், அது சாத்தியமாகும். ஆனால் தற்போது வேறு யாரையும் அந்த இடத்தில் வைத்துப் பார்க்க முடியாது. மேலும், அவரை தேர்தலில் அமோகமாக தோற்கடித்து அரசியல் குப்பைத் தொட்டியில் தள்ளியது இந்நாட்டு மக்களே என்பதை மறந்து விடக்கூடாது. ஆனாலும் இதே நபர் தன்னை அப்படி நடத்தியவர்களுக்கே மூச்சு விடக்கூடிய இடத்தை உருவாக்கியுள்ளார். அப்போது அவரை எப்படி நடத்தினோம் என்று வெட்கப்பட வேண்டும்.

எனவே, நாம் ஏறிய ஏணியை உதைக்கும் முன், எப்படி இறங்கப் போகிறோம் என்பதை ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும்.

**கே: அவருக்கு எப்போதும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்கிறீர்களா?**

பதில்: நான் கூறுவது அவர் அடுத்த ஐந்து வருடங்களாவது ஆட்சியில் இருக்க வேண்டும். அவரே சொல்வது போல், இலங்கை என்ற குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு இதுவரை கயிற்றுப் பாலத்தில் கவனமாக நடந்து வந்திருக்கிறார். எனினும், அந்தப் பயணம் இன்னும் முடியவில்லையென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**கே: கயிற்றுப் பாலத்தின் எஞ்சிய பகுதியை கவனமாக கடப்பதாக தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க கூறுகின்றாரே?**

பதில்: ரணில் விக்கிரமசிங்க கயிறுப் பாலத்தை கவனமாகக் கையாள முடியும் என்பதை நிரூபித்து பாதியிலேயே வந்துவிட்டார்.

அப்படியானால் மீதியை வேறு ஒருவரிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்? 'புதரில் இருக்கும் பறவையை விட கையில் இருக்கும் பறவையை நம்புவது நல்லது' என்று ஒரு பழமொழி உண்டு. நாட்டுக்காக அப்படிச் சிந்திப்பதே புத்திசாலித்தனம் என்று நினைக்கிறேன்.

**கே: ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர நாட்டை மீளக் கட்டியெழுப்பக்கூடிய வேறு எந்தத் தலைவரும் இல்லையென்று கூறுகின்றீர்களா?**

பதில்: முதல் விடயம் என்னவென்றால், பணம் நிறைந்த திரைசேரியுடன் ஒரு நாட்டை முன்னெடுத்துச் செல்வதும், திரைசேரியில் டொலரோ, ரூபாவோ இல்லாத நாட்டை முன்கொண்டு செல்வதும் சமமான விடயங்கள் அல்ல. எல்லாவற்றையும் மீறி, அவரைத் தவிர அந்த சவாலை ஏற்க எந்தத் தலைவரும் இல்லை. இரண்டாவது விடயம் என்னவென்றால், காலியான திரைசேரியை அவர் கைப்பற்றி நாட்டை நடத்தும் போது, டொலர்கள் மற்றும் ரூபாய் இரண்டையும் நிரப்பி, இன்று பணவீக்கத்தை 70 சதவீதத்திலிருந்து ஒற்றை இலக்கத்திற்குக் கொண்டு வந்தார். இது எளிதான காரியமாக இருக்கவில்லை. அதற்கு சரியான அரசியல் தலைமை தேவை. யார் என்ன சொன்னாலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை வெற்றிகொள்வதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கியது போன்று, இந்த பொருளாதார யுத்தத்தை வெற்றிகொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தலைமைத்துவம் முக்கியமானது. அந்தக் காலத்தில் இரு தலைவர்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றியதால், இதை நான் நன்கு அறிவேன்.

# வயநாடு நிலச்சரிவு அனர்த்தம்: உயிரிழந்தோர் எண்ணிக்கை 300 ஐ தாண்டுமென அச்சம்!

**இந்தியாவின் கேரள மாநிலம் வயநாடு பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 300 ஐயும் தாண்டுமென்று அஞ்சப்படுகின்றது. உயிரிழப்புகளின் எண்ணிக்கை நேற்று 300 ஐ நெருங்கியது. அப்பகுதியில் மீட்பு பணி தொடர்ந்து நடந்து வருகிறது. காணாமல்போன 225 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.**



கேரள மாநிலம் வயநாட்டில் உள்ள முண்டக்கை, சூரல்மலை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவால் ஏராளமான மக்கள் மண்ணில் புதைந்தனர்.

இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணியில் உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

தேசிய, மாநில பேரிடர் மீட்புப் படையினர், கேரள பொலிஸார், தீயணைப்புப் படையினர் ஆகியோருடன் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படை வீரர்களும் களமிறங்கி தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விமானப்படை ஹெலிகொப்டர்களும் மீட்புப் பணியில் இணைந்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 1,000 இற்கும் மேற்பட்ட மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு தேசிய பேரிடர் மீட்புப் படையினர் அனுப்பி வைத்துள்ளனர்.

நிலச்சரிவு ஏற்பட்ட முண்டக்கை பகுதி மிகப்பெரிய அளவில் அழிவைச் சந்தித்துள்ளது. அங்கு நூற்றுக்கணக்கான வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ளன. அப்பகுதியில் வீடுகள் இருந்த தடயமே இல்லாமல் மண்மூடி காணப்படுகிறது. அனைத்து இடங்களும் சேற்று மண், மரங்கள், பாறைகளால் மூடப்பட்டுள்ளன. புதையுண்ட பலரை மீட்புப் படையினர் தொடர்ந்து தேடி வருகின்றனர்.



முண்டக்கை பகுதியை சேர்ந்த 225 பேரின் நிலை குறித்து தெரியவில்லை. அவர்கள் மண்ணில் புதையுண்டனரா, ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனரா என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் கதறி அழுதபடி உள்ளனர். பலர் மாயமான நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. முண்டக்கை பகுதியில் 500க்கும்மேற்பட்ட வீடுகள் இருந்த நிலையில், தற்போது 50 வீடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

வயநாடு, மலப்புரம், பத்தனம்திட்டா, இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, கோழிக்கோடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய 9 மாவட்டங்களில் கனமழை தொடரும் அபாயம் உள்ளதால், மலையடிவார பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வயநாடு நிலச்சரிவில் நூற்றுக்கணக்கானோர் இறந்த சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. இதுவரை இடம்பெறாத அளவுக்கு நிலச்சரிவு நடந்துள்ளதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.

கேரள மாநிலம் குன்றுகள் மற்றும் மலைத் தொடர்களால் ஆனது. இதுபோன்ற பகுதிகளில் உள்ள மலைச்சரிவு 20 பாகை வரை செங்குத்தாக இருப்பதால் கனமழை பெய்தால் நிலச்சரிவு தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

தொடர்மழை காரணமாக மண் மிருதுவாகி அரிப்பு ஏற்படுவது எளிதாகிவிட்டது.

காடுகளில் உள்ள பாரம்பரிய மரங்கள் அடியாழம் வரை வேர் பரப்பி மண்ணை இறுகப் பற்றிக்கொள்ளக்கூடியவை. ஆனால் இறப்பர் போன்ற மரங்களின் வேர்களால் அவ்வளவாக மண்ணை இறுக பற்றிக்கொள்ள முடிவதில்லை.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வணிக நோக்கத்துக்காகத் தோட்டப்பயிர்கள் பெருமளவில் விளைவிக்கப்படுவதால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

வயநாடு மாவட்டத்தில் தற்போது நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் இப்படி ஒரு விபத்து நடக்கும் என்பதை பல ஆய்வாளர்கள் தொடர்ச்சியாக எச்சரித்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பகுதியில்ல் கடந்த 20 ஆண்டுகளில் நிலப்பயன்பாடு அதிகளவில் மாற்றமடைந்துள்ளது. குறிப்பாக இயற்கையாக அமைந்த மலைச்சரிவுகள் மற்றும் மலைமுகடுகளைத் தோண்டி, பிளந்து கட்டடங்களை எழுப்பி அப்பகுதியின் நில அமைப்பியலே மாற்றப்பட்டுவிட்டது. பெரும் அளவில் மரங்கள் வெட்டப்பட்டதன் விளைவாக மண்ணை இறுகப்பிடிக்கும் வேர்கள் இல்லாததன் காரணமாக, 'நிலச்சரிவை தாங்கும்' (Immunity towards landslide) திறனை மண் இழந்திருக்கிறது. இத்தன்மையை இழந்த நிலப்பரப்பில் அதிதீவிர மழைப்பொழிவு மணல் அரிப்பையும், இவ்வாறான மணல் சரிவையும் அடிக்கடி ஏற்படுத்தும் என்று எச்சரிக்கின்றனர் ஆய்வாளர்கள்.

தோண்ட தோண்ட சடலங்கள் கிடைப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று மீட்புக்குழுவினர் தெரிவிக்கின்றனர். இந்த நிலச்சரிவு ஏற்பட்டு இரண்டு மணி நேரத்தில், அதாவது அதிகாலை 4.30 மணியளவில் மற்றொரு நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் மேப்பாடி, சூரல்மலை, முண்டக்கை, வைத்திரி, வெள்ளேரிமலை, பொத்துகலு உள்ளிட்ட கிராமங்கள் கடுமையாக பதிக்கப்பட்டன.

மக்கள் உறக்கத்தில் இருந்த போது இந்த நிலச்சரிவு ஏற்பட்டதால், என்ன நடக்கிறது என்பதை உணர்வதற்கு கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. மேற்குறிப்பிட்ட பகுதியில் இருந்த வீடுகள் அனைத்தும் மண்ணால் மூடப்பட்டிருக்கின்றன. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் 3 கிராமங்களை சேர்ந்த சுமார் 1000 பேர் மண்ணுக்கடியில் புதைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

எஸ்.சாரங்கன்...

# 2024 முதல் 6 மாதங்களுக்குள் 6,463 மில். டொலர் நாட்டுக்குள்

## மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிப்பு




2024 ஜனவரி முதல் ஜூன் இறுதி வரை முதல் 6 மாதங்களில் 6,463 மில்லியன் அமெரிக்க டொலரை நாடு மொத்த அந்நிய செலாவணியாக பெற்றுக்கொண்டுள்ளதாக, மத்திய வங்கி அறிவித்துள்ளது. அதாவது மொத்தம் ஒரு கோடியே 93 இலட்சத்து 89 ஆயிரம் ரூபா (1,93,89,000) என இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதே காலகட்டத்தில் சுற்றுலா துறையிலிருந்து சேவை துறைக்கான வரவுகள் 1,762 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேபோல் வெளிநாட்டு ஊழியர்களின் பணம் அதே காலகட்டத்தில் 3,144 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இந்த 6 மாத காலப்பகுதியில் சுற்றுலா பயணிகளூடாக 1,557 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக காட்டப்பட்டுள்ளது.

இந்த மதிப்பு முறையே 2023 இன் முதல் 6 மாதங்களில் 1,561 மில்லியன் அமெரிக்க டொலர், வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் 2,823 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் சுற்றுலா வருவாய் 875 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு




எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சி தமது பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக, அக்கட்சியின் தேசிய தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி) தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்த காலகட்டத்தில் தனிமனிதனாக நின்று நாட்டை மீட்டெடுக்க வேண்டுமென்ற தூர நோக்குடன் பொறுப்பெடுத்த மாமனிதர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

நாட்டை பொறுப்பெடுத்து நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார வீழ்ச்சியை உடனடியாக நிவர்த்தி செய்து, அனைத்து ஏற்றுமதி, இறக்குமதி தடைகளை நீக்கி வட, கிழக்கிலுள்ள காணி பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுத்து அதே போன்று வறுமைக் கோட்டிலுள்ள தரம் ஒன்று முதல் 12வரையான பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை வழங்கி நாட்டை நடுநிலைமையான நிலைக்கு கொண்டு வந்த எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எமது ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி பூரண ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும்" என்றார்.

# தமிழக மீனவரின் சடலம் இந்திய கடற்படையினரிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பில் உயிரிழந்த தமிழக கடற்றொழிலாளரின் சடலம் கடல் மார்க்கமாக இராமேஸ்வரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை காயமடைந்து மீட்கப்பட்ட இரண்டு கடற்றொழிலாளர்களும் தமிழகத்தை சென்றடைந்துள்ளனர். காயமடைந்த இருவரையும் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலத்தையும் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்திய கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு பொறுப்பேற்றனர்.

## ஜனாதிபதி தேர்தல் சூடுபிடிப்பு;

# வேட்பாளராக இதுவரை 14 பேர் கட்டுப்பணம்

ஜனாதிபதி தேர்தலுக்காக நேற்று முன்தினம் (02) வெள்ளிக்கிழமை வரை 14 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை சேர்ந்த 8 பேரும் ஏனைய அரசியல் கட்சிகளை சேர்ந்த ஒருவரும் மற்றும் வாக்காளர் ஒருவரால் பரிந்துரைக்கப்பட்ட 5 வேட்பாளர்களும் அடங்குகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, ஒஷல ஹேரத், ஏ.எஸ்.பி.லியனகே, சஜித் பிரேமதாச, பி.டபிள்யூ.எஸ்.கே.பண்டாரநாயக்க, விஜேயதாச ராஜபக்ஷ, கே.கே.பியதாச, சிறிதுங்க ஜயசூரிய, அஜந்த டி. சொய்சா, கே.ஆனந்த குலரத்ன, சரத் மனமேந்திர மற்றும் சீலரதன தேரர் மற்றும் பத்தரமுல்லையைச் சேர்ந்த அக்மீமன தயாரதன தேரர் ஆகியோரே கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்றுக்கொள்வது எதிர்வரும் 13ஆம் திகதிவரை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணிவரை மேற்கொள்ளப்படும். ஆட்சேபனை செய்வதற்கான அவகாசம் ஒகஸ்ட் 14ஆம் திகதி நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைகிறது.

# தனது மறைந்த உறுப்பினர்களை நினைவுகூர்ந்த பேராதனைப் பல்கலை பழைய மாணவர் சங்கம்

பேராதனைப் பல்கலை பழைய மாணவர் சங்கம் தனது மறைந்த உறுப்பினர்களை அண்மையில் நினைவு கூர்ந்தது. இதனை முன்னிட்டு பேராதனைப் பல்கலைக் கழக பழைய மாணவர் சங்க, கொழும்புக் கிளையின் சமூக மற்றும் நலன்புரி உபகுழு, 59/1, வனவாசல வீதி, களனியில் உள்ள பரமித முதியோர் இல்ல முதியவர்களுக்கு கடந்த ஜூலை 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்னதானம் வழங்கியது.

தற்போதைய உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளை வேண்டியும் இந்த அன்னதானம் வழங்கப்பட்டது.

இச் சங்கத்தின் மறைந்த உறுப்பினர்களுக்கு ஆன்ம சாந்தி வேண்டியும் இதன்போது பிரார்த்தனை நடத்தப்பட்டது. அன்றைய தினம் பௌத்த மதகுரு ஒருவரால் மேற்கொள்ளப்பட்டதர்மஉபதேசத்தைத் தொடர்ந்து 50 வயோதிபர்களுக்கு தானம் வழங்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் பாலித சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

## பொது வேட்பாளர் ரணில்...

கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளன.

பெருந்தோட்டத்துறை மக்களினது கோரிக்கைகளில் கவனம் செலுத்தும் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதாலேயே இம்முறை ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியே அனைத்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களினதும் நம்பிக்கை எனவும் அதற்காகவே கிராம மட்டத்தில் கட்சியினர் ஒன்றுதிரண்டு வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனைத்து கட்சிகளினதும் பொது வேட்பாளராகவே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கியுள்ளதாகவும், அரசியல் விமர்சகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இனப் பிரச்சினை விரைவில்...

முயற்சியாளர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்தார். தேர்தல் மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, அவற்றை நிறைவேற்ற கடன் பெற்றதாலேயே நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதே தவறை மீண்டும் நடக்க அனுமதிக்காமல் புதிய பொருளாதார மற்றும் அரசியல் முறையில் முன்னேறிச் செல்வதற்கு பங்களிப்பது நாட்டிலுள்ள அனைத்து கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஏனையவர்களின் பொறுப்பாகும் என்பதையும் வலியுறுத்தினார்.

இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் எனவும், பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல் மற்றும் பாலின சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன் தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் காலங்களில் தமிழ் நாட்டில் ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியுடன் மற்றவர்களுக்கு இல்லாத வாய்ப்புகள் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் வரி விதிக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் அதன் பின்னர் வந்த அரசாங்கம் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வரிகளை குறைத்தது. இது அரசாங்க வருவாய் குறைவதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, அந்த தவறை நாம் மீண்டும் செய்ய முடியாது. ஒரு நாடாக நாம் முன்னேறும் போது, நமது அரசியல் முறைமையையும் மாற்ற வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பிரதமர் பதவியை ஏற்க எவரும் தயாராக இருக்கவில்லை. நாட்டின் தலைமை பொறுப்பை ஏற்கும் திறன் கொண்ட ஒருவரை கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஜனாதிபதி வெளியேறிய பின்னர், நான் பதவி விலகுவதாக சொன்னேன். ஆனால் யாரும் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பானது கடன் வாங்குதல் மற்றும் போலி வாக்குறுதிகளையே அடிப்படையாக கொண்டிருந்தது என்பது அப்போது புரிந்தது.

நமது அரசியல் முறைமையை கருத்தில் கொண்டு வலுவான தீர்மானங்களை எடுக்க வேண்டும். நல்ல எதிர்காலத்துக்காக நாட்டுக்கு புதிய அரசியல் முறைமையொன்று தேவை. அந்த அரசியல் முறைமையை தலைமைத்துவத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தக்கூடாது. பொறுப்பை ஏற்கக்கூடிய தைரியமான தலைவர்களே நாட்டுக்கு தேவைப்படுகின்றனர். அத்தோடு இந்த பயணத்தை நாம் அனைவரும் ஒன்றாக செல்ல வேண்டும்.

இதேவேளை நாட்டில் ஒரு பாதியாக இருக்கும் பெண்களுக்கு பாராளுமன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம் தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்கு கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும்.

மேலும் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் ஒன்றாக அபிவிருத்தி செய்ய வேண்டும். நான் அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இருந்த போதிலும் பின்னர் அது பின்தங்கிப் போனது. இப்போது போர் முடிந்து விட்டது. எனவே யாழ்ப்பாணத்தையும் வட மாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளது.

வறுமை ஒழிப்பு, விவசாய நவீனமயமாக்கல் போன்ற பிராந்திய அபிவிருத்திக்காக மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்.

தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பனவற்றை வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கின்றோம். பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் வகையில் மாகாண சபைத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்து, மாகாண சபையிலும் பாராளுமன்றத்திலும் ஒரே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பணியாற்றுவதற்கு இடமளிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதன் மூலம் மத்திய அரசும், மாகாண நிர்வாக பொறிமுறையும் இணைக்கப்படும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, விவசாயம் ஆகியவற்றில் யாழ்ப்பாணம் பெரும் திறனை கொண்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இந்தியாவுடன் தரைமார்க்க இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டு வலயங்களை அபிவிருத்தி செய்து நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பை பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளோம்'' எனத் தெரிவித்தார்.

## தமிழ் மக்களின் தாகங்கள்...

போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"குடிநீர் தாகத்தை போன்று எமது மக்கள் பல்வேறு தாகங்களோடு காணப்படுகின்றனர். அதாவது அரசியல் சமவுரிமை பற்றிய தாகம், அபிவிருத்தி ஊடான அழகிய தேசத்தை கட்டியெழுப்பும் தாகம், அன்றாட பிரச்சினைகள் தொடர்பாக தீர்வுக்கான தாகம் போன்றவற்றுடன் எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எதிர்காலத்தில் மக்கள் எம்மோடு அணிதிரளும் பட்சத்தில் அனைத்து வகையான தாகங்களுக்கும் நியாயமான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் காலத்தில்...

பயன்படுத்தி அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பாரபட்சம் காட்டுவது போன்ற பிரசாரம் செய்வது கடுமையான குற்றமாகுமென, தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அவ்வாறானவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறையாத அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாமெனவும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் உரிமைகளை இழந்த அரச அதிகாரிக்கும் இந்த நடைமுறை பொருந்துமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை விளம்பரப்படுத்த அல்லது பாரபட்சம் காட்டுவதற்காக ஒருவரின் தனிப்பட்ட சமூக ஊடக கணக்கு அல்லது வேறு ஏதேனும் கணக்கை பயன்படுத்துதல் மற்றும் ஏதேனும் விளம்பரம் அல்லது அறிக்கையை வெளியிடுவதும் அதே குற்றத்தின் கீழ் கருதப்படுவதாகவும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு ஊழியர் மட்டுமன்றி இந்த சுற்றறிக்கை அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் பொருந்துமென்றும் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை கருத்திற்கொண்டு இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரச மற்றும் அரை அரச ஊழியர்கள் (Semi Government), கட்சிகள் அல்லது தனிநபர்களை ஊக்குவித்தல் அல்லது பாரபட்சம் காட்டுவதை தடுப்பதற்காகவே இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 5 இன் கீழ் இலக்கம் 8 IV மற்றும் இல. 17 இன் கீழ் 'மிக முக்கியமானது' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது.

# எங்கள் கருத்து...

## சாதுர்யமாக சிந்திப்பார்களா தமிழ் மக்கள்?

இதுவரைகாலமும் பெரும்பான்மை தேசிய கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்து பயன் ஏதும் பெறாததாலேயே அவ்வாறு தமக்கான பொது வேட்பாளரை நிறுத்தப்போவதாக வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் கூறுகின்றனர். இலங்கையின் அரசியல்யாப்பில் சிறுபான்மையைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதி பதவி வகிக்க முடியாது என கூறப்படாத போதும், சிறுபான்மையினத்தவர் ஒருவர் ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டுமானால் பெரும்பான்மையினத்தவர்களின் ஆதரவு நிச்சயம் வேண்டும். ஆனால் தமிழ் தரப்பினர் வேண்டுவது அவ்வாறான ஜனாதிபதிப் பதவியை அல்ல. மாறாக தமது ஒற்றுமை உலகறியப்பட வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர். இதுதான் அவர்களது தூரநோக்கற்ற சிந்தனையாக இருக்கின்றது. 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் பகிஷ்கரித்ததன் மூலம் மற்றைய வேட்பாளரை அமோக வெற்றியடையச் செய்தவர்கள். கடந்த முறை அதாவது 2019இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே கொண்டு ஜனாதிபதியாக வந்தவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. சிறுபான்மையினர் தமக்கு வாக்களிக்கவில்லையென்பதை அவர் பதவியேற்பின்போது சுட்டியும் காட்டினார்.

இம்முறை நிலைமைகள் அவ்வாறல்ல. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச. மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரும் ஏறக்குறைய சம பலத்துடன் மோதுபவர்கள். இன்றுள்ள நிலைமைகளில் சிறுபான்மைக் கட்சியினரின் வாக்குகள் அவர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக அமையும்.

ஜனாதிபதி வேட்பாளர்களில் ஐக்கிய இலங்கைக்குள் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கடப்பாட்டினை ரணில் அடிக்கடி வலியுறுத்து வந்திருக்கிறார். அதுமாத்திரமல்ல நாடு பெருளாதார ரீதியாக நலிவுற்றிருக்கும் நிலையிலும், ஐ.எம்.எப் ஒப்பந்தங்களின் பிரகாரம் நாட்டை பொருளாதார ரீதியாக ஸ்திரமடையச் செய்யவும் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கான வாக்குகள் இம்முறை சிறுபான்மையினரது வாக்குகளாகவே அமையும். அதன் மூலம் அவர்கள் தங்கள் பேரம் பேசும் சக்தியை மீண்டும் நிலைநிறுத்தலாம் என்பதில் ஐயமில்லை. இந்நிலையில் 2005 ஆம் ஆண்டில் விட்ட தேர்தலை பகிஷ்கரித்தல் என்ற தவறை மீண்டும் விடாமலும் பொதுவேட்பாளரை நிறுத்தாமலும் சாதுர்யமாக சிந்திப்பார்களா தமிழர்கள்?

## கங்காராம விகாராதிபதி...

திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் காலமானார்.

ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல நாயக்கரின் புகழ் பெற்ற சீடர் தலைமுறையில் இருந்து வந்த இவர், இந் நாட்டில் அனைவராலும் 'கங்காராம பொடி ஹாமுதுருவோ' என்று அழைக்கப்பட்டார்.

கங்காராம என்றதும் 'கங்காராமபொடிஹாமுதுருவோ என்று அன்னாரின் பெயர் உச்சரிக்கப்பட்டதும் கங்காராம விகாரையுமே பௌத்த மக்களுக்கு நினைவில் தோன்றும். அவர் அந்தளவுக்கு கங்காராம விகாரையின் தற்போதைய நவீனத்துக்கு முன்னோடியாக செயற்பட்டமையே இதற்கு காரணமாகும்.

கங்காராம விகாராதிபதியின் இறுதிக்கிரியை நாளை திங்கட்கிழமை இடம்பெறுமென்று, ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## தமது சொத்து விபரங்களை...

புதிய சொத்து பிரகடன சட்டத்தின் பிரகாரம் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து பொதுப் பிரதிநிதிகளும் சொத்து பிரகடனங்களை சமர்ப்பித்து இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சட்டமூலத்தை சமர்ப்பித்ததோடு, இதன்படி ஒவ்வொரு வருடமும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைத்து அதிகாரிகளும் தமது சொத்துகள் மற்றும் கடன்களை பிரகடனப்படுத்த வேண்டும்.

முன்னர் அரசியல்வாதிகளின் சொத்து பொறுப்பு அறிக்கைகள் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றம், மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் புதிய சட்டத்தின்படி அந்த சொத்து பொறுப்பு அறிக்கைகள் அனைத்தும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் இணையத்தளத்துக்கு சென்று சொத்துப்பத்திரம் வைத்திருப்பவர்கள் மற்றும் சமர்ப்பிக்காதோர் பற்றிய தகவல்களை தெரிந்துகொள்ளலாம் என, பிரேமநாத் சி.தொலவத்த எம்.பி. தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவிர எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தித் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் தமது சொத்து பிரகடனங்களை சமர்ப்பித்தோரில் உள்ளடங்குகின்றனர்.

## அரச ஓய்வூதியக்காரர்களுக்கு...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அரசாங்க சேவையில் ஓய்வூதியக்காரர்களுக்கு மொத்தமாக 5,500 ரூபா இடைக்கால கொடுப்பனவாக வழங்கப்படுமென்றும், அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர் சம்பளத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை பரிசீலித்து தொடர்புடைய எதிர்கால திருத்தங்களை செய்வதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி யூ.ஆர்.செனவிரத்ன தலைமையில் நிபுணர் குழு அண்மையில் நியமிக்கப்பட்டதாகவும் மீளாய்வின் அடிப்படையில் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட சம்பள கட்டமைப்பை அமுல்படுத்தும்வரை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு இந்த இடைக்கால கொடுப்பனவை வழங்கவுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க சேவை ஓய்வூதியக்காரர்களில் தற்போது சுமார் 7 இலட்சம் பேர் ஓய்வூதியம் பெறுவதாகவும் இதற்கமைய 2024ஆம் ஆண்டில் இந்த இடைக்கால கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் 8.4 பில்லியன் ரூபா மேலதிக செலவீனத்தை சுமக்க நேரிடுமென்றும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடன் நிர்வகிப்பதில் சவால்கள் இருந்த போதிலும், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள் தற்போது எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்கம் வழங்கும் விரைவான குறுகியகால தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் அரசாங்க ஓய்வூதியக்காரர்களின் கூட்டு தேசிய அமைப்பின் அதிகாரிகளுக்கிடையில் நேற்று முன்தினம் (02) காலை விசேட சந்திப்பு நடைபெற்றதுடன், ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கி சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வீதத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## நிரந்தர அரச அதிபர்களை...

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர அரச அதிபர்களின் நியமனம் தொடர்பாக ஏற்கெனவே பாராளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரனால் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதப்பட்டிருந்த போதும் அதை நிறைவேற்றாது, தரம் போதாமை காரணமாக பதில் அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் 3 நாள் பயணமாக வடபகுதிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சந்தித்ததுடன், தீர்க்கமான பேச்சுகளிலும் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கியுள்ளதால் அவசரமாக நிறைவேற்றக்கூடிய சில கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் அவர்கள் முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் நிரந்தர அரச அதிபர்களை நியமிக்குமாறு கோரியே இந்த அவசர கடிதத்தை ஜனாதிபதிக்கு சி.வி.விக்கினேஸ்வரன் இரண்டாவது தடவையாகவும் அனுப்பி வைத்துள்ளார்.


# ரணிலுக்கு ஆதரவளிக்கும் இளம் அமைச்சர்கள்

சுயேட்சை வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்துள்ளது. இதேவேளை, ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிப்பதா அல்லது தனி வேட்பாளரை முன்வைப்பதா என்ற செய்தியை நாட்டுக்கு முன்வைப்பதாக பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை ஹோமாகம சென்ற ஜனாதிபதி ரணில், அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜயகமு ஸ்ரீலங்கா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கொழும்பு திரும்பிய அவர், கட்சியில் பலரைச் சந்தித்தார். திங்கட்கிழமை காலை ஜனாதிபதி தேர்தல் வழிநடத்தல் குழுவை சந்திப்பதற்காக ஜனாதிபதி ரணில் அரசியல் அலுவலகத்திற்கு வந்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தீர்மானம் அன்று மாலை அறிவிக்கப்படவுள்ள நிலையில் அது குறித்தும் பேசப்பட்டது.

“சார், மறுபுறம், வேலை எல்லாம் தயாராகவுள்ளது. பொஹொட்டுவின் அரசியல் சபையில் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. தனி வேட்பாளருக்கு அதிக இடம் உள்ளது" என அங்கிருந்த மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். "வரும் எந்தவொரு முடிவையும் முன்னோக்கி நகர்த்துவதற்கு தேவையான திட்டங்களை உருவாக்கவும்." அது ஜனாதிபதியின் முடிவு. மாலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின்னர் அமைச்சர்கள் மீண்டும் கூடி கலந்துரையாடியதுடன் மற்றுமொரு அமைச்சர்கள் குழு, அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்னவை அழைத்து என்ன செய்வது என்று கேட்டனர். உடனடியாக இது தொடர்பில் ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்த அவரிடம், பிளவர் வீதியிலுள்ள தனது அரசியல் காரியாலயத்திற்கு வருமாறு தெரிவிக்குமாறும் தினித்துக்கு ஜனாதிபதி அறிவித்தார். தினித் சிந்தக உடனடியாக இந்தச் செய்தியை அமைச்சர்களுக்குத் தெரிவித்தார். அரசியல் சபைக்கு சென்ற மற்றொரு குழுவினர், தலைமை செயலர் சாகலவைத் தொடர்பு கொண்டு பிளவர் வீதியிலுள்ள அலுவலகத்துக்கு வந்தனர். சாகல மற்றும் தினித்தின் செய்தியின் ஊடாக அன்றிரவு ஜனாதிபதியின் அரசியல் காரியாலயத்தில் சுமார் 70 பேர் கொண்ட அமைச்சர்கள் குழு ஒன்று கூடியது. அங்கு ஆளும் கட்சியின் எம்.பி.க்கள் குழுவை பாராளுமன்றத்தில் கூட்டுவதற்கு மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தனர். இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்திற்கு வரவழைக்குமாறு உடனடியாக பாராளுமன்ற, அரசாங்க கட்சி அலுவலகத்தின் ஊடாக செய்தி வெளியிடப்பட்டது. பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு முன்னர் வழமை போன்று அன்றைய தினம் அமைச்சரவை கூட்டமும், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது. ஜனாதிபதித் தேர்தல் அரசியல் சூடுபிடித்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலின் போது அபிவிருத்திப் பணிகள் மற்றும் பொது மானியங்களை வழங்குவதை இடைநிறுத்துமாறு, தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க சிறப்பான பதிலை வழங்கினார். பல வருடங்களாக பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களை விடுவிக்க அரசாங்கம் செயற்படும் போது, அதை நிறுத்துவதால் மக்கள் மீண்டும் அசௌகரியங்களுக்கு உள்ளாவார்கள் என்பதே செயலாளரின் பதில். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் அனுப்பப்பட்டுள்ள நீண்ட கடிதத்தின் சுருக்கம் இதுவாகும். இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் மற்றுமொரு கடிதத்தில் பதில் பொலிஸ் மாஅதிபர் இல்லாத காரணத்தினால், பாதுகாப்பு தொடர்பில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் தேர்தல் விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் ஆகியோரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி செயலாளர் சமன் மற்றவர்கள் முன்வைக்கும் விடயங்களை தமக்குத் தெரிவிக்குமாறு இரு தரப்பினரையும் கேட்டுக் கொண்டார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு பாதுகாப்பு தொடர்பில் தேவையான அனைத்து விடயங்களையும் எழுத்து மூலம் அறிவிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார். அவர்களின் அறிவிப்பின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர் சமன், ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடியதுடன், வேட்புமனு தாக்கல் செய்யும் நாளில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு தேவையான பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்தார்.



அத்துடன், தேர்தல் முறைப்பாடுகள் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தேவையான பொலிஸ் அதிகாரிகளை அனுப்புமாறும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் அனுப்பியதோடு, அதன் பிரதியொன்றையும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் அனுப்பியுள்ளார். செவ்வாய்க்கிழமை, ஜனாதிபதி அரசியல் விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தினார்.

பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாட ஆரம்பித்துள்ளனர். இதேவேளை, சாரணர் இயக்கத்தின் ஆண்டு நிறைவு நிகழ்விலும் ஜனாதிபதி ரணில் கலந்து கொண்டார். மாலையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழு கூடிய போது, அதில் பங்கேற்க வேண்டாம் என கட்சி அறிவுறுத்திய போதிலும், பொதுஜன பெரமுன உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் 92 பேர் இதில் கலந்து கொண்டனர். மேலும் ஐந்து எம்.பி.க்கள் ஏற்கனவே வெளிநாட்டில் இருப்பதால் வரமுடியாது என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக செயற்படுமாறு பொதுஜன பெரமுனவின் அடிமட்ட உறுப்பினர்கள் எம்.பி.க்களிடம் கோரிக்கை விடுப்பதாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அநுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேனவினால் கூட்டப்பட்ட சபையில் மக்கள் தெரிவித்த கருத்துக்கள் இதற்கு சிறந்த உதாரணம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஈரானில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்ட செய்தியை ஜனாதிபதி ரணில் புதன்கிழமை காலை அறிந்தார். ஏற்கனவே ஈரான் சென்றிருந்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் பாதுகாப்பு குறித்து உடனடியாக கேட்டறிந்தார். தேவைப்பட்டால் அவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு விசேட விமானம் ஒன்றை அனுப்புமாறும் ஜனாதிபதி ரணில் செயலாளர் சமன் ஏகநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். சபாநாயகரை உடனடியாக இலங்கைக்கு அழைத்து வருவதற்கு தேவையான ஏற்பாடுகளை தயார் செய்த சமன் ஏகநாயக்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை வியாழக்கிழமைக்குள் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அன்று பிற்பகல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஜனாதிபதியை சந்தித்தனர்.

ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதன் மூலம் மத்திய கிழக்கில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில், நாட்டின் பாதுகாப்புக்கு செயற்படுவதற்காக 3 குழுக்களையும் நியமித்துள்ளார். வியாழன் காலை அமைச்சர்கள் குழுவொன்று ஜனாதிபதி ரணிலைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வந்துள்ளது. இங்கு சமூக வலைத்தளங்களில் தற்போது பரவி வரும் ஒரு தகவல் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு தெரிவித்துள்ளனர். அதாவது சஜித்தும் நாமலும் ஊடக உரிமையாளர் ஒருவரின் வீட்டில் சந்தித்து கலந்துரையாடிய விடயம்தான் அது. “நாங்களும் ஜூலை முதல் வாரத்தில் இதைப் பற்றி அறிந்தோம். ஆனால் இந்த விடயம் உண்மை என்று நாங்கள் நம்பவில்லை. ஆனால் இப்போது நடப்பதை வைத்து, இந்தக் கதை உண்மைதான் என்பதை நாங்களும் உணர்கிறோம்." மொட்டு பாராளுமன்ற உறுப்பினர் அதனை தெரிவித்தார். “சஜித் இந்த விவாதத்திற்கு ஜி.எல் உடன் சென்றுள்ளார்.

ஆரம்பத்திலிருந்தே இருந்த கபீர், ஹர்ஷ, எரான் போன்றவர்களை மறந்துவிட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர் வஜிரவும் அதில் இணைந்து கொண்டார். “சஜித் ஜனாதிபதி என்றும் நாமல் எதிர்க்கட்சித் தலைவர் என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைகள் காரணமாக தம்மிக பெரேரா மொட்டுக் கட்சி வேட்பாளராக போட்டியிட முடியாது என்று கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த தனக்குக் கிடைத்த தகவலை கூறினார். “ரணில் ராஜபக்ஷ" என்ற முத்திரை அகற்றப்பட்டு "சஜித் ராஜபக்ஷ" என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ராஜபக்ஷவின் பெயரை இப்போது அடிக்கடி சொல்லாதது ஏன் என்று நானும் நீண்ட நாட்களாக ஆராய்ந்து வருகிறேன். அவர்தான் "சஜித் ராஜபக்ஷ" ஆகிவிட்டாரே." என்று பேராசிரியர் ஆஷு மாரசிங்க கூறியதும், அனைவரும் ஆரவாரம் செய்தனர். இந்தக் கதை உண்மையா பொய்யா என்பதை பாராளுமன்ற உறுப்பினர் நாமலே கூற வேண்டும். ஷெஹான் சேமசிங்க சிரித்துக் கொண்டே கூறினார்.

எல்லாக் கதைகளையும் கேட்ட ஜனாதிபதி ரணில், “எல்லோரும் நன்றாக வேலை செய்ததால்தான் நாங்கள் இந்த இடத்திற்கு வந்துள்ளோம் அன்று ஜே.ஆருடன் காமினி, லலித், பிரேமதாச போன்றவர்கள் இருந்தது போல, என்னுடன் கஞ்சன, ஷெஹான், ரமேஷ் போன்ற நல்ல இளைஞர்கள் உள்ளனர். என சிரித்துக் கொண்டே சொன்னார்.ஜனாதிபதி ரணில் வார இறுதியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தார்.



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்





# இஸ்மாயில் ஹனியேயின் படுகொலையும் மேற்காசியாவின் அரசியல் பதற்றமும்

சர்வதேச அரசியல் களம் ஒரு புதிய திசையை நோக்கி பயணிக்க தொடங்கி இருக்கின்றது. இது என்றும் இல்லாதவாறு மேற்காசிய அரசியலில் பதற்றத்தையும் போரையும் அதற்கான உத்திகளையும் தீவிரப்படுத்தி வருகின்றது. குறிப்பாக அண்மையில் ஹமாஸ் அமைப்பினுடைய அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டது ஒரு பாரிய நெருக்கடியை மேற்காசிய அரசியலில் ஏற்படுத்தியிருக்கின்றது. இத்தகைய நெருக்கடியில் இருந்து விடுபட முடியாத பகைமையின் எல்லைக்கு அரபுலகம் சென்றுள்ளது. இதன்போது ஏற்படக்கூடிய விளைவுகள் அனைத்தும் மேற்காசியா மட்டுமின்றி உலகளாவிய அரசுகளின் ஏகாதிபத்திய சக்திகளையும் நெருக்கடிக்கு உள்ளாக்க ஆரம்பித்துள்ளது. இக்கட்டுரையும் மேற்காசியாவில் ஏற்பட்டிருக்கின்ற பழிவாங்கும் அரசியல் தொடர்பில் தெளிவையும் புரிதலையும் ஏற்படுத்த முயல்கிறது.

1962 இல் பிறந்த இஸ்மாயில் ஹனியே அராபிய மொழியியலில் காஸாவில் அமைந்துள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார். அவரது ஆரம்ப காலப்பகுதி மனித உரிமைகளையும் மனிதாபிமான நடவடிக்கைகளையும் அதிகம் முதன்மைப்படுத்துவதாக விளங்கியது. அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் இஸ்ரேலிய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளார். அதன் விளைவாக 1987ஆம் ஆண்டு இஸ்மாயில் ஹனியே ஹமாஸ் அமைப்பின் படைப்பிரிவில் இணைந்து கொள்கின்றார். 1993ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கு எதிரான போரில் இஸ்மாயில் ஹனியே பாரிய பங்காற்றியதோடு அவருடைய தலைமைத்துவம் ஹமாஸ் அமைப்பில் முதன்மை பெறத் தொடங்கியது. அன்றிலிருந்து அவர் மரணிக்கும் வரை தனித்துவமான தலைவராகவும் அதேநேரத்தில் ஹமாஸ் அமைப்பினுடைய கொள்கை வகுப்பாளராகவும் போரியல் உத்திகளை வகுப்பவராகவும் காணப்பட்டார்.

இவர் மீதான படுகொலை ஈரானிய தலைநகரான தெஹ்ரானில் அவரது வாசஸ்தலத்தில் வைத்து நடைபெற்றுள்ளது என்பது அதிர்ச்சியான செய்தியாக ஈரானியர்களுக்கு மட்டுமல்ல அராபியர்களுக்கும் உள்ளது. இஸ்ரேலிய இராணுவமும் அதனுடைய புலனாய்வுப் பிரிவும் திட்டமிட்டு இப்படுகொலையை மேற்கொண்டதாக ஈரானிய தரப்பும் அரபுலகமும் குற்றம் சாட்டுகிறது. இத்தகைய படுகொலை கடந்த மே மாதம் (19திகதி) ஈரானிய ஜனாதிபதி இஸ்மாயில் ரைசியின் படுகொலைக்குப் பின்னர் ஈரானை அதிகம் பதற்றத்துக்குள்ளாக்கி இருக்கின்றது. ஈரானில் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மசூத் பெசெஷ்கியன் இஸ்ரேல் மீதான குற்றச்சாட்டு, வலிமையான பதில் தாக்குதலுக்கும், பழிவாங்கலுக்கும் வழிவகுத்துள்ளது என்றார். அதனை வெளிப்படுத்தும் விதத்திலேயே ஈரானிய ஜம்கராம் பள்ளிவாசலில்; பறக்க விடப்பட்டிருக்கும் சிகப்பு வர்ணத்தாலான கொடி உணர்த்துகின்றது. ஈரானிய உயர் தலைவர் அயதுல்லா அலி கொமேனி ஹனியேவின் படுகொலைக்கு பழிவாங்க வேண்டியது தெஹ்ரானின் கடமை என்றுரைத்துள்ளார்.



இத்தகைய படுகொலை மேற்காசிய அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் ஒரு மாற்றத்திற்கான சூழலை ஏற்படுத்துமா என்ற கேள்வியை உருவாக்கி இருக்கின்றது. பதிலைத் தேட வேண்டிய பொறுப்பு தவிர்க்க முடியாது அதன் அடிப்படையில்.

முதலாவது, மேற்காசியாவில் எழுந்திருக்கும் போர் பதற்றம் மூன்றாவது உலகப்போருக்கான அடிப்படையை ஏற்படுத்துமா என்பது அதிகம் விவாதிக்கப்படுகிறது. அத்தகைய சூழலை நோக்கி ஏகாதிபத்தியங்கள் செயற்படாத போதும் அல்லது செயல்படுவதற்கான அனுமதியை வழங்காத போதும் ஈரானின் அணுகுமுறை இஸ்ரேல் மீது ஹமாஸ் மற்றும் ஈரானின் நகர்வுகள் போரை உலகப்போராக மாறுவதற்கான சூழமைவை அல்லது கொதிநிலையை கொண்டிருக்கின்றது என்று அளவீடு செய்து கொள்ள வேண்டியுள்ளது. காரணம் ஏகாதிபத்தியங்கள் மூன்றாம் உலக யுத்தத்தை சமரசம் செய்ய முயற்சித்தாலும் அந்த சமரசத்தில் இன மோதல் சார்ந்த எழுந்திருக்கின்ற பாரிய வன்முறைக்குரிய குரோத உணர்வுகள் பரஸ்பரம் பலஸ்தீனர்களையும் ஈரானியர்களையும் யூதர்கள் மீது ஏவிவிடுவதற்கும் யூதர்கள் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இஸ்மாயில் ஹனியே மீதான படுகொலை அடிப்படையாக அமைய வாய்ப்புள்ளது. ஹனியே மட்டுமன்றி ஹிஸ்புல்லா அமைப்பையும் அதன் இராணுவ தளபதிகளையும் இலக்கு வைத்து மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது இஸ்ரேல் மீது ஹமாஸ் ஹிஸ்புல்லா ஈரான் அவர்களோடு இணைந்து செயல்படும் கிளர்ச்சிக் குழுக்களின் படைப்பிரிவு செயற்பட முனைகின்ற போது உலகளாவிய போருக்கான முனைப்புகளை இது ஏற்படுத்த வாய்ப்பைக் கொண்டுள்ளது.

இரண்டாவது இரு தரப்புக்குமான போரானது நீடிப்பதற்கும் நிலையான சூழலை முதன்மைப்படுத்துவதற்கும் அதிக வாய்ப்பைக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு ஒரு நீண்ட நிலையான போர் முகம் மேற்காசியாவில் தீவிரமடையும் போது, அதனை ஆதாரமாகக் கொண்டு அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற தரப்புகளாக ஏகாதிபத்திய அரசுகள் காணப்படுகின்றன. இதன் விளைவு உலகப்போரை நோக்கி நகர்த்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும், அதற்கான காரணம் ரஷ்யாவும் சீனாவும் மறைமுகமாக ஆயுத உதவிகளையும் போரியல் உத்திகளையும் வழங்குகின்ற அதேவேளை, அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேல் பக்கம் செயல்படுகின்ற போது, இரு ஏகாதிபத்திய சக்திகளுக்கும் இடையில் மோதலுக்கான முன் ஆயத்தங்கள் மேற்காசிய களத்தில் உருவாகத் தொடங்கி இருக்கின்றது.

இது எதிர்காலத்தில் நீடித்து நிலைத்திருக்குமாயின் படிப்படியாக அரசுகளையும் ஏகாதிபத்தியங்களையும் மோத வைப்பதற்கான ஒத்திகை உருவாக்கும். அத்தகைய சூழல் ஏற்படுகின்ற போது, பாரிய போருக்கான வாய்ப்பை மேற்காசியா வழங்கும் என்ற சந்தேகம் வலுவானதாக மாறி வருகின்றது.

மூன்றாவது, இரு தரப்புக்களின் நெருக்கடிமிக்க சூழலையும் போரியல் தலைமைகளையும் தலைவர்களையும் இலக்குகளையும் முதன்மைப்படுத்துகின்ற போராக அது அமைகின்ற போது இராணுவ ரீதியில் தொழில்நுட்பம் சார்ந்த போராக மாறுவதற்கான வாய்ப்பை தனக்குள்ளே அது கொண்டிருக்கின்றது குறிப்பாக தொழில்நுட்ப ஆயுதங்களினுடைய பிரயோகம், இந்தப் போரின் ஊடாக மேலெழத் தொடங்கியிருப்பது. இந்த போரின் முக்கியமான தாக்குதல்களும் அதன் விளைவுகளும் தொழில்நுட்ப போருடன் கூடிய முனைப்புகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

இது மேலும் தீவிரமடைந்து தொழில்நுட்பம் சார்ந்திருக்கக் கூடிய ஆயுத பலத்தை கொண்டிருக்கும். தேசங்களின் கட்டுப்பாட்டுக்குள் இந்த போரின் இருப்பு செயற்படக் கூடிய வாய்ப்பை பிரதிபலிக்கின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியல் கட்சிகள் களமிறக்க போகின்ற பொதுவேட்பாளர் யார்?

## வடக்கில் இன்னுமே முடிவுக்கு வராத சர்ச்சை!

**ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்துவது, யார் யாரை வேட்பாளர்களாகக் களமிறக்குவது என்பதில் தென்னிலங்கை அரசியல் களம் பரபரப்படைந்திருக்கும் நிலையில், தமிழ் பொது–வேட்பாளர் என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு வடபகுதியில் சில அரசியல் கட்சிகள் இன்னமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.**

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை இம்முறை களமிறக்குவது தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் சிலவற்றுக்கும், ஏழு தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கடந்த 22 ஆம் திகதி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள போதும், இதுவரை பொதுவேட்பாளர் யார் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

பொதுவேட்பாளரைத் தெரிவு செய்வதில் சிக்கல்கள் காணப்படுகின்ற போதும், விரைவில் ஒருவர் தெரிவு செய்யப்படுவார் என யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்பது பற்றித் தமது கட்சி இன்னமும் முடிவு செய்யவில்லையென்றும், அரசியல் ரீதியான முன்னேற்றங்களை ஆராய்ந்து யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற முடிவு எட்டப்படும் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். தமிழ் மக்களைத் தொடர்ந்தும் நலிவடையச் செய்யும் நோக்கிலேயே தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை ஒரு சில அரசியல் தரப்புக்கள் தூக்கிப்பிடித்துக் கொண்டிருப்பதாக அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய சுமந்திரன் சாடியுள்ளார். அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நடைபெறக்கூடிய பொதுத்தேர்தலில் உதிரியாக இருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் கபட நோக்கமே இந்தத் தமிழ் வேட்பாளர் விவகாரம் என ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் விமர்சித்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு விமர்சனங்களைச் சந்தித்துள்ள தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் தமிழ் மக்கள் மத்தியில் எந்தளவுக்கு எடுபடப் போகின்றது என்ற கேள்வி தற்பொழுது எழுந்துள்ளது. பிரதான தமிழ்க் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி பொதுவேட்பாளர் விடயத்துக்கு ஆரம்பத்திலிருந்தே உத்தியோகபூர்வமான ஆதரவை வழங்கவில்லை.



## தமிழரின் அரசியலை பலவீனமாக்கும் நாடகமா?




அது மாத்திரமன்றி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியும் இவ்விடயத்தை எதிர்த்துள்ளது. இந்த நிலையில் இதற்கு யார் ஆதரவு வழங்கி வருகின்றனர் என்று பார்த்தால், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளவர்கள், தமிழ் மக்கள் கூட்டணயின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்ற ஏழு கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் காணப்படுகின்றனர்.

இதுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசியல் தரப்பினரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்காத நிலையில், தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளை உலகிற்கு எடுத்துக் கூறும் நோக்கத்திலேயே பொதுவேட்பாளர் களமிறக்கப்படவிருப்பதாக விக்னேஸ்வரன் உள்ளிட்ட அதற்கு ஆதரவு வழங்குவோர் மீண்டும் மீண்டும் கூறி வருகின்றனர்.

இதனை நடைமுறை ரீதியில் அவர்கள் செயற்படுத்தப் போகின்றனர் என்பது பற்றிய எந்தத் தெளிவுபடுத்தல்களும் முன்வைக்கப்படாமல், ஒரு சில அரசியல் கட்சிகளும், ஒரு சில சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்த பொதுவேட்பாளர் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். ஆகக் குறைந்தது தமிழ் மக்கள் இது விடயத்தில் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்பதை அறிவதற்கு சிறியதொரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் காய்நகர்த்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்றால் இல்லை. கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்துக் கூட்டணியொன்றை அமைக்க எடுத்த முயற்சியின் நீட்சியாகவே இதனைப் பார்க்க முடியும்.

சரி… இவர்கள் கூறுவதைப் போன்று தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும்? உலக நாடுகள் நேரடியாக வந்து தமிழருக்கு எந்தத் தீர்வுகளையும் வழங்காது என்பது ஏற்கனவே நாம் கண்ட உண்மை. இவ்வாறான பின்னணியில் பொது வேட்பாளரை களமிறக்கி தமிழர்கள் முன்வைக்கப் போகும் செய்திக்கு எவ்வாறு உலக நாடுகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். இது வெறும் கண்துடைப்பு மாத்திரமே. மக்களை உசுப்பேற்றி உசுப்பேற்றி தொடர்ந்தும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வைத்திருப்பதே அவர்களின் நோக்கமாகும்.

மறுபக்கத்தில், ஜனாதிபதித் தேர்தல் களத்தில் போட்டி அதிகமடைந்துள்ளது. ஆரம்பத்தில் மும்முனைப் போட்டிக்கான வாய்ப்புக்களே இருந்தபோதும், இது தற்பொழுது பலமுனைப் போட்டியாக மாறியுள்ளது.

பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு அப்பால், விஜேயதாச ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் வேட்பாளர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அரகல போராட்டக்காரர்களின் வேட்பாளர் என பலரும் போட்டியிடுவதால் வாக்குகள் சிதறுவதற்கான வாய்ப்புகளும் அதிகம். அவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளரே ஜனாதிபதியாகத் தெரிவாக முடியும்.

பலமுனைப் போட்டி என்பதால் வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலையில் வடக்கு, கிழக்கிலிருந்து பொதுவேட்பாளரைக் களமிறக்கி மேலும் வாக்குகளைச் சிதறடிப்பதால் எந்தப் பயனும் யாருக்கும் கிடைக்கப் போவதில்லை. எனவே, முற்போக்கான முறையில் சிந்தித்து, சகல வேட்பாளர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தி தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கு ஆதரவாக இருக்கும் ஒருவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்ததாக அமையும்.

**பி.ஹர்ஷன்...**

---

## உச்சகட்ட போர்ப் பதற்றத்தில் மத்திய கிழக்கு!

# இஸ்மாயீல் ஹனியேயின் படுகொலைக்கு கடும் பதிலடி கொடுக்கப்படுமென ஈரான் சபதம்!

**மத்திய கிழக்கில் போர்ப் பதற்றப் பரபரப்பு தீவி–ரமடைந்துள்ளது. எந்த வேளையிலும் போர் மூளக்கூ–டிய அபாயம் உருவாகியுள்ளது. ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவரும் பலஸ்தீனின் முன்னாள் பிரதமருமான அப்துல் சலாம் இஸ்மாயில் ஹனியே–வும், லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் இரண்டாவது தளபதி புவாட் சாகரும் கடந்த புதன்கிழமை கொல்லப்பட்டிருப்பது இதற்கு அடி–த்தளமாக விளங்குகிறது.**



ஹிஸ்புல்லாஹ்வின் இரண்டாம் தளபதியின் படுகொலையைப் பொறுப்பெடுத்த இஸ்ரேல், தமது கட்டுப்பாட்டிலுள்ள கோலன்குன்றின் மஜ்தல் ஷம்ஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 12 சிறுவர்கள் கொல்லப்படுவதற்கும் 30 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைவதற்கும் காரணமாக செயற்பட்டவரும் அமெரிக்காவால் தேடப்பட்டவரும் இவர் என்றுள்ளது. ஆனால் ஹிஸ்புல்லாஹ் இத்தாக்குதலுக்கு தாம் பொறுப்பல்ல என்று மறுத்து வருகின்றது. எனினும் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவரின் படுகொலைக்கு எவரும் உரிமை கோரவில்லை. என்றாலும் இஸ்ரேலின் கலாசார அமைச்சர் அமிக்கேய் எலியாஹு, 'ஹனியேயின் மரணம் 'உலகத்தை ஒரு சிறந்த இடமாக மாற்றுகிறது' என்று 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈரான், துருக்கி உள்ளிட்ட பல நாடுகள் இஸ்மாயீல் ஹனியேயின் படுகொலைக்கு இஸ்ரேலைக் குற்றம் சாட்டியுள்ளன. ஆன போதிலும் அதற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு தரப்பு மறுப்பு தெரிவித்துள்ளன.

ஹமாஸ் தலைவர் மீதான தாக்குதலுக்கு எதிராக ரஷ்யா, சீனா, கட்டார் உள்ளிட்ட உலகின் பல நாடுகள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. ஈரானின் உயர் பாதுகாப்பு சபையும் அவசரமாகக் கூடி சில தீர்மானங்களை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

'ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயீல் ஹனிய்யா எமது அன்பான விருந்தாளி, அவர் எமது மண்ணில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரது படுகொலைக்கு எதிராக கடுமையாக பதிலடி கொடுக்கப்படும். அதற்கு பழிவாங்குவது இஸ்லாமிய குடியரசின் கடமை' என்றுள்ளார் ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் செய்யத் அலி காமெனெய்.

அதேநேரம் எமது மண்ணில் இப்படுகொலை நடத்தப்பட்டுள்ளது. அதற்கு பழிவாங்கும் உரிமை எமக்குள்ளது என்று ஐ.நாவிலும் ஈரான் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஈரானின் பாரம்பரிய நகரான கும்மிலுள்ள ஜம்கரான் பள்ளிவாசலில் சிவப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. அவ்வாறு கொடி ஏற்றப்படுவது யுத்தத்தை எதிர்கொள்வதற்கும் தயாராவதற்கும் அறைகூவல் விடுப்பதற்குமான ஈரானின் வழக்காகக் கருதப்படுகிறது. இது நீண்டகாலமாக ஈரானில் பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரியமாக உள்ளது. ஈரானின் முன்னணி தளபதியான ஜென்ரல் காஷிமி சுலைமானி 2020 ஜனவரியில் கொல்லப்பட்ட போதும் இக்கொடி ஏற்றப்பட்டமை தெரிந்ததே.

இப்போர்ப் பதற்றத்திற்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹுவுடன் தொடர்பு கொண்டு ஹனியேயின் படுகொலை காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த உதவாது என்பதோடு யுத்தநிறுத்தத்துக்கான முயற்சிகளை வலியுறுத்தியுள்ளார். ஆனாலும் ஈரானும் அதன் ஆயுதக் குழுக்களும் இஸ்ரேலுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கத் தயாராகி வரும் இச்சூழலில் இஸ்ரேலை நாம் பாதுகாப்போம் என்றுள்ள அமெரிக்கா 12 யுத்தக் கப்பல்களையும் போர் விமானங்களையும் அவசர அவசரமாக மத்தியகிழக்குக்கு அனுப்பியுள்ளது.

இஸ்ரேலும் போருக்கான ஆயத்தப்படுத்தல்களைத் துரிதப்படுத்தியுள்ளதோடு, படையினரின் விடுமுறைகளையும் இரத்துச் செய்துள்ளது. அமைச்சர்களுக்கும் வைத்தியசாலைகளுக்களுக்கும் செய்மதித் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன என இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்தன. இந்நிலையில் உலகின் பல நாடுகளதும் விமானங்கள் இஸ்ரேல், லெபனானுக்கான விமான சேவைகளை நிறுத்தியுள்ளன. துருக்கி ஈரானுக்கான விமான சேவையையும் நிறுத்தியுள்ள அதேநேரம் பிரான்ஸ் ஈரானிலுள்ள தம் பிரஜைகளை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளது. ஹனியேயுக்கான தமது அனுதாபச் செய்தியை நீக்கியமைக்காக துருக்கி இன்ஸ்ட்டாகிராமைத் தடை செய்துள்ளது. இவ்வாறு உச்சகட்ட போர்ப் பரபரப்புக்கு இஸ்மாயில் ஹனியே, புவாத் சாகரின் படுகொலைகள் வித்திட்டுள்ளன.

ஈரானின் புதிய ஜனாதிபதியான மசூட் பெஸ்கியானின் பதவி ஏற்பு வைபவத்தில் விஷேட விருந்தாளிகளில் ஒருவராக இஸ்மாயீல் ஹனியே கடந்த செவ்வாய்க்கிழமை கலந்து கொண்டிருந்தார். அவ் வைபவத்தில் ஹனியே உள்ளிட்டவர்கள் முன்வரிசை ஆசனம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஈரானின் புதிய ஜனாதிபதி, ஆன்மிகத் தலைவர் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார் இஸ்மாயீல் ஹனியே.

அதன் பின்னர் அன்றைய தினம் இரவு இப்பதவி ஏற்பு வைபவத்தில் பங்குபற்றிய ஹனியே உள்ளிட்ட விஷேட விருந்தினர்கள் தெஹ்ரானின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முன்னணி இராணுவ வீரர்களுக்கான விஷேட இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அந்த இல்லத்தில் ஹனியே தங்க இருந்த அறையின் மீது தெஹ்ரானின் உள்ளூர் நேரப்படி 2.00 மணியளவில் வான்வழி வழிகாட்டப்பட்ட ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதன் ஊடாக இஸ்மாயீல் ஹனியேயும் அவரது மெய்ப்பாதுகாவலர் வசீம் அபு சபானும் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஈரானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்மாயீல் ஹனியேயும் அவரது மெய்ப்பாதுகாவலரும் கொல்லப்பட்டிருப்பதை புதனன்று காலையில் உறுதிப்படுத்திய ஈரான் இஸ்லாமிய புரட்சிகரப் படையினர் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் சுமார் 20 பேர் சந்தேகத்தின் பேரில் விசாரணக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனபோதிலும் துருக்கியிலும் பாகிஸ்தானிலும் வெள்ளிக்கிழமை துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் ஹனியேயின் மறைவையொட்டி ஈரானில் மூன்று நாட்கள் துக்க தினமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் வியாழனன்று காலையில் ஹனியேவுக்கு இறுதி ஜனாஸா ஊர்வலம் தெஹ்ரானில் நடத்தப்பட்டதோடு, ஆன்மிகத் தலைவர் அலி காமெனெய் தலைமையில் தெஹ்ரான் பல்கலைக்கழக வளாகத்தில் ஜனாஸா தொழுகையையும் நடத்தப்பட்டது. அதன் பின்னர் டோகாவிலுள்ள முகம்மத் இப்னு அப்துல் வஹாப் பள்ளி வாசலில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு லைசைல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது

இந்நிலையில் தமது தந்தையின் படுகொலை குறித்து ஹனியேயின் மகனான அப்துல் சலாம் ஹனியே குறிப்பிடுகையில், 'எனது தந்தையின் கொலை இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீனர்களின் எதிர்ப்பை முடிவுக்கு கொண்டு வராது. பலஸ்தீனின் சுதந்திரத்திற்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம். என் தந்தை தனது தேசபற்று பயணத்தின் போது நான்கு படுகொலை முயற்சிகளில் இருந்து தப்பியுள்ளார், இப்போது அவர் எப்போதும் விரும்பும் தியாகத்தை அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ளான். அவர் தேசிய ஒற்றுமையை நிலைநாட்ட மிகவும் ஆர்வமாக இருந்தார். அனைத்து பலஸ்தீன பிரிவுகளின் ஒற்றுமைக்காகவும் பாடுபட்டார். இப்படுகொலை எதிர்ப்பைத் தடுக்காது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். பலஸ்தீனம் சுதந்திரம் அடையும் வரை போராட்டம் தொடரும்' என்றுள்ளார்.

அதேநேரம் காஸா மீதான இஸ்ரேலின் யுத்தம் ஆரம்பமான பின்னர் தாம் குடும்ப உறுப்பினர்களில் 60 பேரை இழந்திருப்பதாக ஹனியேயே ஒரு தடவை குறிப்பிட்டிருந்நதார். குறிப்பாக கடந்த நோன்பு பெருநாள் தினத்தன்று, காஸாவில் தம் உறவினர்களது இல்லங்களுக்கு சென்ற ஹஸேம், அமீர், முஹம்மது ஆகிய ஹனிய்யாவின் மூன்று மகன்களும் அவரது மூன்று பேரப்பிள்ளைகளும் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

அதேநேரம் கடந்த ஜூன் மாதம், வடக்கு காஸாவின் ஷாதி அகதிகள் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் ஹனியேவின் குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் அவரது 80 வயது மதிக்கத்தக்க சகோதரியும் அடங்கி இருந்தார்.

காஸா யுத்தத்தில் இவ்வாறு இழப்புக்களை சந்தித்து வந்த ஹனியே மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவரும் கொல்லப்பட்டுள்ளார்.

1948 இல் இடம்பெற்ற பலஸ்தீன் இஸ்ரேல் யுத்தத்தின் போது அஸ்கலான் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து காஸாவின் சாட்டி முகாமில் தங்கியிருந்த குடும்பத்தில் 1962 ஆம் ஆண்டில் பிறந்த ஹனியே, 1987 இல் காஸா இஸ்லாமிய பல்லைக்கழகத்தில் கற்று அரபு இலக்கிய பட்டதாரியானார். இவர் முதலாவது இந்திபாதா மக்கள் எழுச்சி போராட்டத்தில் பங்குபற்றியதோடு, மூன்று தடவைகள் சிறைத் தண்டனையும் பெற்றவராவார். ஹமாஸின் ஸ்தாபக தலைவர் அஹ்மட் யாஸீனுடன் இணைந்து செயற்பட்ட இவர், 1999_ 2004 வரை யாஸீனின் பிரத்தியேக செயலாளராக செயற்பட்டுள்ளார்.

2006 முதல் பலஸ்தீன அதிகார சபையின் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று பிரதமராகப் பதவி ஏற்றார். 2017 இல் ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் இறக்கும் வரை அப்பதவியை வகித்தார். காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளிலும் முக்கிய பங்கு வகித்து வந்தவருமாவார். புவாத் சாகர் ஹிஸ்புல்லாஹ்வின் தலைவருடன் நெருங்கிச் செயற்பட்டவராவார்.





**மர்லின் மரிக்கார்...**

## தெஹ்ரானில் ஹமாஸ் தலைவரும், பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாஹ் தளபதியும் படுகொலை!



# எதிர்கால தொழில் எதிர்பார்ப்பை உண்மையாக்குவதற்கு கற்க வேண்டிய தொழிற்பயிற்சி கற்கையொன்றை தேர்வுசெய்வது எவ்வாறு?

தொழில் வாய்ப்பை பெறும்போது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருப்பது தற்காலத்தில் மிக முக்கியமானது என்பதோடு அது எதிர்காலத்தில் அவசியமான ஒன்றாக இருக்கும். இங்கு பாட-சாலை கல்வியை கற்கும் மாணவர்கள் போன்று பாடசாலை கல்வியை நிறைவு செய்து தொழில் வாய்ப்புக்காக தயாராகி வருகின்றவர்கள் தெரிந்திருக்க வேண்டிய விடயங்கள் சிலது பற்றி அலசுவது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தொழில் வாய்ப்புக்காக நேர்முகப் பரீட்சையில் அதனை எதிர்கொள்கின்ற அபேட்சகர்கள், விண்ணப்பித்துள்ள வேலைக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக தேவையான தொழில் வழங்குவோர் கோரும் தொழில் தகைமையை உறுதி செய்வது முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினையாக உள்ளது. அதனால் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற அனைவரும் தமது திறமைக்கு, விருப்பம் மற்றும் தொழில்களுக்குத் தேவையான தொழில் பயிற்சி கற்கை ஒன்றை கற்று குறித்த ஆட்சேர்ப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு,

- தமது தொழில் விருப்பு, ஆளுமை பண்புகள், திறமையை அடையாளம் காண்பதற்கான உளவியல் சோதனைகளுக்கு முகம்கொடுப்பது தொழில்முறை ஆலோசனையை பெற்றுக்கொள்ளல். (Psychometric Test Career Key, Career Interest Test etc) (தொழில் வழிகாட்டல் நிலையம் மற்றும் பிராந்திய செயலாளர் அலுவலகத்தின் மூலம்)
- தொழில் ஒன்றை பெற்றுக்கொடுக்கும்போது அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி கற்கை ஒன்றை கற்றல்.



மஞ்சுல விதானபத்திரண
பணிப்பாளர் (தொழில்துறை உறவுகள் பிரிவு)
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு

- தேசிய தொழில் தகைமை முறையின் மூலம் NVQ சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்ளல்.
- தேசிய தொழில் தகைமை சான்றிதழை பெற்றுக்கொண்டு தொழில் ஒன்றில் ஈடுபட்டு ஓர் ஆண்டு அனுபவத்தைக் கொண்ட திறன் கடவுச்சீட்டு (Skills Passport) ஒன்றை பெற்றுக்கொள்ளல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனைத்து மாணவர்களும் பாடசாலை காலத்தில் அல்லது அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் தொழிலுக்கு பிரவேசிப்பதற்கு முன்னர் தமது விருப்பு, ஆளுமைப் பண்பு, திறமைக்கு பொருந்தும் தொழில் இலக்கு ஒன்றை கட்டியெழுப்பி அதற்காக தமது

- ஆற்றல்கள் - Strengths
- பலவீனங்கள் - Weakness
- சந்தர்ப்பங்கள் - Opportunities
- தடங்கலை - Threads

அடையாளம் கண்டு தொழில் சந்தையில் உச்ச வாய்ப்பு ஒன்றை கொண்ட தொழில் துறைகளுக்கு தமது ஆற்றல்களை மேம்படுத்தி பலவீனங்களை குறைத்து, தடங்கல்களை முறியடித்து, சந்தர்ப்பங்களை பயன்டுத்தி நெருங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இரண்டாவது சுய விமர்சனத்திற்கு அமைய தமக்குப் பொருந்தும் சரியான தொழில் பயிற்சி ஒன்றை பெற்றுத் தரும் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்திருக்கும் NVQ சான்றிதழை பெற்றுக்கொடுப்பதற்கான கற்கைகளுக்கு அங்கீகாரம் பெற்றிருக்கும் பயிற்சி நிலையம் ஒன்று மற்றும் பயிற்சி கற்கை ஒன்றை தேர்வு செய்தல் வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யும் நிலையம் தனியார் துறை அல்லது அரச துறை பயிற்சி நிறுவனம் ஒன்றாக இருக்க முடியும். அதன்படி பதிவு மற்றும் அங்கீகாரத்தை பெற்றிருக்கும் பயிற்சி நிறுவனங்களின் விபரம் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையதளத்தின் www.tvec.gov.lk NVQ Courses மூலம் உறுதி செய்ய முடியும். இங்கு பிரதானமாக அரச நிறுவனங்களான

- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTASL)
- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA)
- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET)
- தேசிய இளைஞர் சேவை மன்றம் (NYSC)
- விவசாயத் திணைக்களம்
- பல்கலைக்கழக கல்லூரி (University College)
- சமுத்திரவியல் பல்கலைக்கழகம் (Ocean University)
- மற்றைய அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் தொழில் பயிற்சி கற்கைகள்
- மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகாரத்தை பெற்றிருக்கும் தனியார் துறை தொழில் பயிற்சி நிறுவனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தல் வேண்டும்.

அனைத்து நிலையங்களும் கற்கை விபரங்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து இந்த விபரங்களை பரீட்சித்து அந்த நிறுவனங்களில் இருக்கும் பயிற்சி கற்கை ஒன்றில் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்ளல், உங்களுக்கு எதிர்கால தொழில் வாய்ப்புகளை, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக அமையும்.

அதனால் போலியான விளம்பரங்கள், புலமைப்பரிசில்கள், online முறைகள் மூலம் மாத்திரம், மிக குறுகிய காலத்தில் பெற்றுக்கொடுக்கும் டிப்ளோமா அல்லது சான்றிதழ் கற்கைகளை கற்பதற்கு பதிவு செய்வதற்கு பணம் செலுத்துவதற்கு முன் அந்த நிறுவனங்கள்/ கற்கைகள் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவைப் பெற்றிருப்பதாக உறுதி செய்வது, நீங்கள் செலுத்தும் பணத்திற்கு, செலவிடும் காலத்திற்கு, உழைப்புக்கு பெறுமதி கிடைக்கும்

செயலாக இருக்கும். அதனால் அங்கீகாரம் உள்ள தொழில் பயிற்சி கற்கை ஒன்றை கற்று பெற்றுக்கொள்ளும் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் உங்கள் எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்கு வழிவகுப்பதாக அமையும்.

முறையான வழிகாட்டலைக் கொண்ட தமது திறமைக்கு, எதிர்பார்ப்புக்கு பொருந்தும் பயிற்சிக் கற்கை ஒன்றை கற்று உங்களின் எதிர்கால தொழில் வாய்ப்புகளை நெருங்குவதற்கு தயாராகும்படி கோரிக்கை விடுக்கிறோம்.











**சவால்களை வென்று - வெற்றியாளராகுங்கள்.**
**தொழில் கல்வி மூலம் - தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்.**








லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 25 வருடங்களுக்கும் மேலாக பணிபுரிந்த ஊழியர்களைக் கௌரவிக்கும் 'நீண்ட சேவை' விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் இடம்பெற்றது. இதன் போது கௌரவிக்கப்பட்ட ஊழியர்கள் லேக் ஹவுஸ் பணிப்பாளர் சபையுடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படம். முன்வரிசையில் (இடமிருந்து) ஜனக ரணதுங்க (பணிப்பாளர் சட்டம் மற்றும் நிருவாகம்), கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன (பணிப்பாளர் நிதி), லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், ஆசிரியர் பீட பணிப்பாளர் சிசிர பரண தந்திரி, மஞ்சுளா மகும்புர (பணிப்பாளர் செயல்பாடுகள்)



வடக்கன்குளம், ஜாய் பல்கலைக்கழக வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 164ஆவது திருவள்ளுவர் சிலையை, விஜிபி குழுமங்களின் தலைவரும், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனருமான டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைமையில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார். இவ்விழாவில், ஜாய் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் S.A. ஜாய் ராஜா, விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலாளர் விஜிபி ராஜாதாஸ் மற்றும் பல்வேறு தமிழறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதிநவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக் கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு' - 0112 201700. 051098




## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

எங்கள் நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர்கள், வாகன சேவை தொ ழில்நுட்ப வல்லுநர்கள், கார் கழுவும் தொழில்நுட்ப வல்லுநர்கள், இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் சக்கர சீரமைப்பு தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. யுனிக் சேர்விஸ் பிளேஸ், கொழு ம்பு வீத, பிலிமதலாவ, கண்டி.07739 62008, 0812069760. 052158




### 316 வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

புடவை உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் எங்கள் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு இன்றே விண்ணப்பிக்கவும். 1. ஜூகி இயந்திரம் இயக்குபவர்கள்/ உதவியாளர்க ள் (juki Machine Operators/ Helpers) 2. பொதி செய்யும் உதவியாளர்கள் (Packing Helpers) 3. சாய இயந்திரம் இயக்குபவர்கள்/ உதவியாளர்க ள் (Dye Machine Operators/ Helpers) 4. ஸ்டெண்டர் இயந்திர ம் இயக்குபவர்கள்/ உதவியாளர்க ள் (Stenter Machine Operators/ Helpers) 5. விடுதி காப்பாளர் (Hostel Warden-Age: 45-50) 6. ஓட்டுனர் - கனரக வாகனங்கள்/ இலகுரக வாகனங்கள் (Driver - Heavy Vehicles / Light/ Vehicles) குறைந்த விலையில் உணவு, இலவச தங்கு மிட வசதி, நேர்முகதேர்வுக்கு கிழமை நாட்களில் கீழ்கண்ட முகவரிக்கு நேரில்வரவும். Cliftex Industries (Pvt) Ltd இல. 18, வெலிய முன வீதி, ஹேகித்த வத்தளை, தொலைபேசி 076-6200300. 052387




### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

களனியில் அமைந்துள்ள ரெஸ்டுரண்ட் இற்கு அப்பம்/ கொத்து, ரைஸ் பாஸ்மார் தேவை. அதற்கு உதவியாளரும் தேவை. 071 - 4093775 052167

கிருளப்பனை பேக்கரிக்கு வேலை தெரிந்த பேக்கரி பாஸ் மற்றும் வெயிட்டர் தேவை. தொ.பே. 071-6406659. 051802

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கமத்தொழில் நன்கு தெரிந்தவர்கள் உணவு, தங்குமிடத்துடன் வேலைக்குத் தேவை. களுபோவில. 0777 126910. 052383

குருநாகலிலுள்ள தோட்டமொன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு தொழிலாளர் தேவை. தொலைபேசி: 071-1961738. 050888

குருநாகல் தோட்டமொன்றில் வேலை செய்வதற்கு 45-55 வயதிற்கு இடைப்பட்ட குடும்பம் தேவை. தேசிய அடையாள அட்டை திருமண சான்றிதழ், பொலிஸ் அறிக்கை பதிவை உறுதி செய்யும் சான்றிதழ்கள் கட்டாயமாகும். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். 070 3685168, 074 0103299. 051645




### 325 தொழில்துறை பொது

எமது தொழிற்சாலையில் சேவைக்காக 18 வயது முதல் 40 வயதிற்கிடைப்பட்ட ஆண்கள், தொழிற்சாலை ஊழியர்களாக சேர்த்துக் கொ ள்ளப்படுவர். மாதாந்த சம்பளம் ரூ.40, 000/ - மேலதிக மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் ரூ.50, 000/ - இற்கு மேல் பகல் உணவுடன் தங்குமிடம் இலவசம் முகாமை யாளர் ஐஸ் கியூப் தனியார் நிறுவனம், இல.9, புதிய வீதி, ஹூணுப்பிட்டிய, வத்தளை - 0776819009 052215

தங்கியிருக்கக்கூடிய தகைமையான தாதி/ தகைமையான கண் காணிப்பாளர் (பெண்)/ வீட்டுப் பணிப்பெண் கொழும்பு- 08 இற்குள் தேவை. வயது 45இற்குக் கீழ் அழையுங்கள் - 070 5363099. 052409

திவுலப்பிட்டியவில் அமைந்துள்ள ஒரு ஏற்றுமதி தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர்கள், சாரதிகள் மற்றும் தொழிலாளர்கள் தேவை. உண வு மற்றும் தங்குமிடம் வ ழங்கப்படும். விசாரிக்கவும்.0115922722, 0 716305184, 0714066455 052176

நிட்டம்புவ வத்துபிட்டிவலவில் அமைந்துள்ள புத்தாக்க நிலையத்திற்கு கையுதவியாட்கள் ஆண்/ பெண் சுப்பர் வைசர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தங்குமிடம் வழங்கப்படும். உணவு சலுகை விலையில் 40000 - 60000 சம்பளம் 071 0695001/ 071 0695005/ 071 0695004 051890

## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

மதுரங்குளி 40 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு 1 ஏக்கர் 65 இலட்சம், நீர், மின்சாரம் - 2 சிறிய வீடுகள் பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் 2 உ ட்செல்லல் வழிகள் (20 ஏக்கரில் 2 துண்டுகள் வழ ங்கப்படலாம்) தொலைபேசி 0776852342 052297




### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கல்கிசை, பார்ன்ஸ் அவெனியூ வில் முழுமையான தளபாடங்களுடன் AC ஆடம்பர 3 படுக்கையறை 1570 சதுர அடி கடல் காட்சியுடன் அபாட்மென்ட் உடனடியாக விற்பனைக்கு COC மற்றும் உறுதிகள் தயார் நிலையில் விலை 55 மில்லியன் மற்றும் விலைமனுக்கள் மேலதிக விபரங்களுக்கு முகவருடன் தொடர்பு கொள்ளுங்கள். (0776700667) 051157

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

களுத்துறை நாகஸ்சந்தி பிரதான காலி வீதிக்கு 200M AC அறைகள் 2 உடன் 6 அறைகள் (தளபாடங்களுடன்) இரு மாடி வீடு - 12 பேர்ச் 29 மில்லியன். 0762800093 0703880243 052326

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

புத்தளம் - சிலாபம் பிரதான பாதைக்கு முகப்பாக (தென்னை) 17 - 50 ஏக்கர் விற்பனைக்கு. கொள்வனவாளர்கள் மட்டும் அழையுங்கள் - 070 3496204. 051805

### 630 வீடு சொத்து காலி மாவட்டம் விற்பனைக்கு

ஹிக்கடுவ, பத்தேகம 40.68பேர்ச் நேஷன் டி ரஸ்ட் வங்கி யி னால் சுவீக ரிக்கப்பட்ட வீடு மற்றும் காணி விற்பனைக்கு. விலை விசார ணை கள் 2024.08.18 இற்கு மு ன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை - 20.34 மில்லியன் - 0772361243 052427

### 634 வீடு சொத்து மட்டக்களப்பு மாவட்டம் விற்பனைக்கு

புன்னக்குடா கடலுக்கு முகப்பாக 135 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகள் - 0705646706 051354

பொருளாதார பரிமாற்ற... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

# சட்டமூலத்தை எவரும் எதிர்ப்பதற்கான வாய்ப்பில்லை

## பேராசிரியர் சிறிமல் அபேரத்ன – கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவு



பொருளாதார பரிமாற்ற சட்டத்தின் மூலம் குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதாரப் பயணம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மைக்கு பொருந்தும் கொள்கைகள் தேவையாகும். இவை மக்களுக்கு மிகவும் முக்கியமானவையாகும். இப்போது, பொருளாதாரம் மீண்டும் பழைய நிலைமைக்குத் திரும்பி விட்டது, நாம் வழமைக்குத் திரும்பி விட்டோம் ஆனால் நாம் அடுத்த பொருளாதார நெருக்கடியைத் தடுத்துவிட்டோம் என்று அது பொருள்படாது. அதேபோன்று இன்னும் பாரிய எதிர்பார்ப்புக்கள் உள்ளன. அடுத்த 25 ஆண்டுகளில் வளமிக்க நாடாக மாறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பான அடிப்படை பயணப் பாதை பொருளாதார பரிமாற்ற சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள அடிப்படை கூறுகள்: அதாவது, பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, ஏற்றுமதி மேம்பாடு, முதலீடுகள், வறுமை போன்ற விடயங்கள் அனைத்தும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்தினை எதிர்ப்பதற்கான வாய்ப்புக்கள் எவருக்கு இல்லை என்றே நான் நினைக்கிறேன். இதற்குக் காரணம் இன்றைய அரசியல் சூழலினுள் பொருளாதாரப் பாதையை சரியாகப் பார்ப்பதே தவிர பல்வேறு அரசியல் கருத்துகளுக்குப் பின்னால் ஓடாமல் இருப்பதுதான். இது ஒரு பெரிய போக்காகும். இது போன்ற இணக்கங்கள் சர்வதேச சமூகத்தால் சாதகமான முறையில் பார்க்கப்படுகின்றன. வெளிநாட்டு முதலீடுகள் எமது நாட்டிற்கு வருவதில்லை. எமது நாடு வணிக ரீதியாக மிகவும் பலவீனமாக உள்ளது. அயல் நாடுகளிடையே எமது நாடு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு விடயங்களில் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். ஆனால், இத்தகைய முதலீடுகளில் நம்பிக்கை இல்லாததற்குக் காரணம், நாம் மிகவும் பிளவுபட்டிருக்கிறோம். இவ்வாறான விடயங்களில் பொது இணக்கப்பாடு கிடைப்பது என்பது முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பொறுத்தது, அது பொருளாதாரத்தை வெல்வதற்கு மிகவும் முக்கியம் என்பதனாலாகும். இது மிகவும் நல்ல போக்காகும், அந்த போக்கின் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரம் அடுத்த 20 ஆண்டுகளினுள் மிகச் சிறந்த இடத்திற்கு செல்ல முடியும்.

ரணலின் வெற்றியை... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

## நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றப்பாதையில் செலுத்தியவர் தற்போதைய ஜனாதிபதியாகும்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசாநாயக்க



சரிந்த பொருளாதாரத்தை மிகக் குறுகிய காலத்தினுள் மறுமலர்ச்சிக்குக் கொண்டு வந்தவர் தற்போதைய ஜனாதிபதியாகும். நாட்டில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு வலுவான அடித்தளத்தையிட்டு, பொருளாதார மாற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் 5.8 வீதத்திற்குச் சென்றது. இது சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட மிக வேகமான வளர்ச்சியாகும். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நாடு மீண்டும் வழமைக்குக் கொண்டு வரப்பட்டது. அதனால்தான் நாங்கள் அவரை ஆதரிக்கிறோம்.

## நாட்டுக்கு நல்லது செய்யாதவர்களை நியமிப்பதில் எந்த பயனும் இல்லை

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன



அவரிடம் நாட்டை ஒப்படைத்ததும் மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களேயாகும். ஒரு ஜனாதிபதியாக அவர் மிகச் சிறந்த செயற்பாடுகளை நாட்டிற்காகச் செய்துள்ளார். நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து அடைந்திருந்த நேரம் நாட்டைக் கட்டியெழுப்ப முன்னுரிமை வழங்கியதும் அவரேயாகும். இரண்டு வருடங்கள் எனும் குறுகிய காலத்தினுள், விரிவடைந்து சென்ற அரசியல் ஸ்திரத்தன்மையைப் பலப்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்கியதும் அவரேயாகும். அவற்றுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவருக்கு சர்வதேச ஒத்துழைப்புகளும், வலுவான உறவுகளும் உள்ளன. இந்த நேரத்தில் பரிசோதனைகளைச் செய்து பார்ப்பது சாத்தியமில்லை. இந்த நேரத்தில் நாட்டுக்கு நல்லது செய்யாதவர்களை நியமிப்பதில் எந்த பயனும் இல்லை.

## வேற்றுமையினுள் இணக்கப்பாட்டை நடைமுறையில் நிரூபித்தவர் ரணில்

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த



பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 92க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிதான் இருக்க வேண்டும் என அவருக்கு ஆதரவினை வழங்க ஆயத்தமாக உள்ளனர். அவர் சுயேச்சை வேட்பாளராகவே போட்டியிடுகிறார். எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கான வாய்ப்புள்ளது. குறுகிய அரசியல் இலக்குகளுக்கு அப்பால் சென்று கோட்பாடாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றே நாம் கூறி வருகின்றோம். நாங்கள் குழப்பமடையத் தேவையில்லை. பொதுஜன பெரமுனவின் கட்சி ஆதரவாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என விரும்புவார்கள் என்றே நாம் நம்புகின்றோம்.

## நாட்டை மீட்ட தலைமைத்துவம் தொடர்ந்தும் தேவைப்படுகின்றது

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



கடுமையான பொருளாதாரச் சரிவைச் சந்தித்த நாடு, இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வரப்பட்டது ஒரு அதிசயமாகும். உலகில் இவ்வாறான பொருளாதார சரிவை சந்தித்த எந்த நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் ஸ்திரத்தன்மையை அடைந்ததில்லை.

அறிவு, அனுபவம் மற்றும் உலக உறவுகளின் அடிப்படையில் வீழ்ந்த நாட்டை மீட்கக்கூடிய ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்வதே சரியானதாகும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அந்தத் தலைமையைத் தேர்ந்தெடுப்பது நியாயமானதும் சரியானதுமான முடிவு என்றே நான் நினைக்கிறேன்.

தற்போது அரசின் பணிகள் குறித்து பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். கடுமையான பொருளாதாரச் சரிவைச் சந்தித்த நாடு இரண்டாண்டுகள் என்ற குறுகிய காலத்தில் ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது அதிசயம்தான்.

## சர்வதேச ஒத்துழைப்புள்ள தலைவர் ரணில் மட்டுமே

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே



பொருளாதாரச் சரிவைச் சந்தித்த நாடு மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கும் இந்தத் தருணத்தில் நாம் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளோம். இந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒருவரிடம் நாட்டைக் கொடுக்காவிட்டால் நாம் மீண்டும் அதல பாதாளத்திற்குச் சென்று பழைய இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலையே ஏற்படும். இந்த நேரத்தில் அனுபவம் வாய்ந்த ஒரு தலைவரே எமக்குத் தேவை. நேரடியான முடிவுகளை எடுக்கக்கூடிய மற்றும் சர்வதேச ஆதரவைப் பெறக்கூடிய தலைவர் ஒருவரே எமக்குத் தேவை. வேறு எந்த வேட்பாளர்களிடத்திலும் இந்த தகுதியும் அரசியல் முதிர்ச்சியும் இல்லை. சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதி செயற்பட்ட விதம் மிகவும் பாராட்டத்தக்கது. எமது ஜனாதிபதி சீனா, ஜப்பான் ஆகிய நாட்டுப் பிரதமர்களிடம் பேசி ஓராண்டு குறுகிய காலத்தில் செய்ததை யாராலும் செய்ய முடியாது. அதுதான் அரசியல் முதிர்ச்சி. அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் திறன் அவருக்கு மட்டுமே உள்ளது.

## நாட்டை முன்னேற்றவே இந்த தீர்மானம் எடுத்தோம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன



அரசியல் ரீதியான முடிவுகளை எடுக்கும்போது நாட்டைப் பற்றி சிந்தித்தே முடிவுகளை எடுக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பது நாம் மிகவும் சிரமப்பட்டு கடின உழைப்புடனும் கட்டியெழுப்பிய கட்சியாகும். இந்த நேரத்தில் மக்களின் நிலைப்பாட்டை கட்சி புரிந்து கொள்ளவில்லை. எனவே, விருப்பமில்லாமல் நாட்டைப் பற்றி சிந்தித்து இந்த முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது.

இரண்டு வருடங்களுக்கு முந்தைய வரலாற்றைப் பார்த்தால் நம் நாடு எங்கே இருந்தது என்பது புரியும். அவ்வாறிருந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானித்தது அப்போது அரசாங்கமாக இருந்த பொதுஜன பெரமுன அரசாங்கமாகும். அதன்பிரகாரம் மொட்டுவின் ஒத்துழைப்புடன் அவரால் இந்த நாட்டை மீட்க முடிந்தது. அவர் ஜனாதிபதியாக தனது பணியைச் சிறப்பாகச் செய்தார். நாம் பாராளுமன்ற உறுப்பினர்களாக அவருக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கினோம். அவ்வாறு இந்த நிலைக்கு கொண்டு வந்த நாட்டை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு சென்று அழிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு நாம் வந்துள்ளோம்.

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

POWDER GRANULE PACKING MACHINE FOR SALE
BRAND NEW - MADE IN MALAYSIA
VERTICAL FORM FILL AND SEAL PACKING MACHINE FOR POWDERS AND GRANULAR PRODUCTS.
Capacity 10g -100g with gas flushing facility suitable for packing tea, spice powders, FMCG industry, Soya nuggets, etc.
EURO ASIA PACKAGING (PVT) LTD
201/A, LAKE ROAD (PIRIVENA JUNCTION), BORALESGAMUWA.
Contact : 0777 325 688/ 0772 441 064

HOUSE FOR SALE IN KATUBEDDA
A spacious two-storey house with 2,700 square feet of living space. This fully furnished home features three bedrooms, each with an attached bathroom and is equipped with three air conditioners. Situated on a 7- perch plot, the property includes a garage with parking for two cars and a servent's toilet. The house has clear deeds and is conveniently located just 500 metres from Galle Road
For inquiries, please contact Mr. Roy between 8 am and 5 pm on
+94 (77) 798 1575

Sun Lanka SANY
Brand New stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

ECOMMERCE BUSINESS CLOSING DOWN
ALL ITEMS FOR SALE IN BULK @ Mt Lavinia
BELOW COST PRICE
Phone accessories/ Kitchen gadgets/ kids items/ cosmetic jewellery/ storage racks and many more items for sale
Website and facebook page also available
Contact : 0777 598 738

URGENT
FOR SALE BANDARAGAMA
100 Perch Land facing Kaluthara main road. Ideal for commercial or residential use. 20ft. wide access road attached to one side of the land.
0777 916 872/ 0716 032 872

LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD (WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

COMMERCIAL LAND FOR SALE IN ALAWWA
- District : Kurunegala
- Hayleys owned Commercial Property
- Land Area - 5 acres, 29 perch
- 7 Large buildings including warehouse, Loading bay and offices
- Faced to Alawwa - Nelumdeniya road and Bordering Maa Oya Reservoir
- 850 metres to Kurunegala - Colombo Main Road
INTERESTED BUYERS CONTACT :
+94 76 689 7713 / +94 77 232 7436

FOR SALE NAWINNA, MAHARAGAMA
11.5 perches, 20 - feet carpeted road access. 2 storey, 6 bedrooms, 3 bathrooms, office & maid's room, 2 garages.
3000 sqft. Teak doors & windows, solar water, jacuzzi. 5 minutes to Maharagama Town.
APPOINTMENT 0761 928 455

வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்

Mitsubishi Montero V6 2004 brand new imported, 3000cc V6 Petrol, beige interior with 7 seater, sunroof, line AC, Tiptronic transmission, 4wd, alloy wheels, 6 airbags, Android multi media player etc, immaculate condition, home used 07778 40 141
kus - 1

Hyundai H1 Starex 2015 model registered 2018 wp PJ full option, 2500cc common rail turbo Diesel, 6 speed manual transmission, Dual AC, 7 seater, fridge, brand new 17" alloys & tires, only done 42000km Rs 12 million 0777840141
kus - 2

Sangyoung Rexton 2014 imported & maintained through Micro Cars, fully loaded version, black leather interior with electric memory seats, Tiptronic transmission, 4wd, Dual AC, 18" alloy wheels, new tires, Lenovo android multi media player with R cam, multi function steering, cruise control, Sunroof, first owner immaculate condition Rs. 11,800,000/-. 32A Mirihana Road Nugegoda. 0779 232 207, 0779 232 207
kus - 3

Toyota Hilux 2011 HL2 brand new imported, 2500cc intercooler Turbo diesel, Manual transmission, 4wd, Rs 10,800,000/- first owner, 0777 840 141
kus - 4

Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8,475,000 0777 840 141
kus - 5

தினகரன் வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்
Kumara - 077 7 270 683

DON'T TXT & DRIVE

Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

# ஜனாதிபதி ரணிலின் வெற்றிக்காக அணிதிரளும் அரசியல் பிரபலங்கள்!

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 21ஆம் திகதி வாக்குப்பதிவு இடம்பெறுமென்றும், ஓகஸ்ட்(இம்மாதம்) 15ஆம் திகதி வரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய முடியும் என்றும் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் மத்தியில் தேர்தல் பரபரப்பு தொற்றிக் கொண்டுள்ளது.**



ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா, இல்லையா என்ற சந்தேகங்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு முற்றுப்புள்ளியை வைத்திருப்பது அரசியல் வட்டாரங்களில் வரவேற்பைப் பெற்றுள்ளது. தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட உடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா தேர்தல்கள் செயலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடப் போவதாகக் கூறி இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டதையடுத்து, ஜனாதிபதி இத்தேர்தலில் போட்டியிடுவாரா என்ற கேள்விக்கும் புற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மறுபக்கத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருப்பதுடன், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் முன்னாள் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ ஆகியோரும் இந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர்.





எதிர்க்கட்சித் தலைவருடன் கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தாத போதும், நீதி அமைச்சராகவிருந்த விஜேயதாச ராஜபக்ஷவின் அறிவிப்பு அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி வழங்கப்பட்டதன் பின்னணியில் இவ்வாறானதொரு முயற்சி இருக்கலாம் என்ற ஊகங்கள் வெளியாகியிருந்த நிலையில், தனது அறிவிப்பின் மூலம் இந்த ஊகங்களுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். தேர்தலில் போட்டியிடுவதால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாகவும் அறிவித்திருந்தார். எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவது போன்ற தகவல்களைப் பின்னர் அறிவிப்பதாகவும் கூறியிருந்தார் விஜேயதாச ராஜபக்ஷ.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு ஜனாதிபதித் தேர்தலை ஒட்டியதாக முன்னெடுக்கப்படும் அரசியலை சூடுபிடிக்க வைத்துள்ளது. நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவிருப்பதாகவும், இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுத்துமூலம் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அது மாத்திரமன்றி, பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெறுவதற்காக ஐ.தே.கவின் பிரமுகர்கள் பலரும் கடும் முயற்சி எடுத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை கூடிய பொதுஜன பெரமுனவின் மத்திய குழுக் கூட்டத்தில் தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ வின் வீட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்திய குழுவைச் சேர்ந்த 82 பேர் கலந்துகொண்டிருந்ததுடன், இதில் 11 பேர் மாத்திரம் தனியானதொரு வேட்பாளரைக் களமிறக்கும் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தவர்களில் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் பலரும் அடங்குகின்றனர். ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான தொடர்பு 2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்டதொன்றாகும்.

நாடு நெருக்கடியானதொரு சூழ்நிலையை எதிர்கொண்ட போது, அந்தச் சவாலை வெற்றிகொள்ள தனியொருவராக முன்வந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க பொதுஜன பெரமுன முடிவெடுத்தது. பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் எடுத்த இந்தத் தீர்மானத்துக்கு கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் கட்டுப்பட்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதிப் பதவியின் கீழ் பணியாற்றுவதற்கு முன்வந்தனர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் மற்றும் கொள்கைகள் மூலம் நாடு படிப்படியாக முன்னேறி வந்துள்ளமையால், ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தலைப்பட்டனர். ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பல யோசனைகளுக்கு பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் தனியானதொரு வேட்பாளரைக் களமிறக்க பொதுஜன பெரமுன எடுத்திருக்கும் தீர்மானம் அக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.



## 92 எம்.பிக்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிசபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் 116 பேர் ஜனாதிபதியை நேரில் சந்தித்து வழங்கிய ஆதரவு

இதுவரை காலமும் தமது அரசாங்கத்தை வெற்றிகரமாக முன்கொண்டு செல்ல ஒத்துழைப்பு வழங்கிய தலைவருக்கு ஆதரவு வழங்காது, தனியானதொரு வேட்பாளரைக் களமிறக்க அக்கட்சி எடுத்த முடிவுடன் பெரும்பாலான பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் இணங்கவில்லை. இதனால் பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உள்ளடங்கலாக 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்படத் தீர்மானம் எடுத்துள்ளனர்.

அது மாத்திரமன்றி, பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த தமது ஆதரவை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில், பொதுஜன பெரமுன பாரியதொரு சவாலை எதிர்கொண்டுள்ளது. பொதுஜன பெரமுன கட்சியானது குறுகிய காலத்திற்குள் உருவாக்கப்பட்டு பாரியதொரு அரசியல் சக்தியாக மாறியதொன்றாகும்.

இதில் உள்ள உறுப்பினர்கள் இதன் பலமாகப் பார்க்கப்பட்ட நிலையில், நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முக்கியஸ்தர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாத நிலையில், எவ்வாறு அவர்கள் பிரசாரங்களை முன்னெடுக்கப் போகின்றனர் என்ற கேள்வி எழுந்துள்ளது.

## பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியுடன் இணைந்துள்ளதால், அக்கட்சியின் அடுத்தகட்ட நகர்வு என்ன?

பொதுஜன பெரமுனவின் மக்கள் ஆதரவு எந்தளவுக்கு உள்ளது என்பதைப் பரிசோதிப்பதற்கான தேர்தலாக இது அமையப் போகின்றது என்பதே அரசியல் ஆய்வாளர்கள் பலரின் கருத்தாக உள்ளது. பொதுஜன பெரமுனவினால் நிறுத்தப்படும் வேட்பாளர் கணிசமான வாக்குகளைப் பெறத் தவறும் பட்சத்தில், எதிர்வரும் பொதுத்தேர்தலில் அது அவர்களின் வாக்கு வங்கியைக் கணிசமாகப் பாதிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

மறுபக்கத்தில், ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் பொதுஜன பெரமுனவின் இந்த முடிவு அரசியல் ரீதியாக சாதக, பாதகங்களைக் கொண்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வாக்குகளை அவரால் பெற்றுக்கொள்ள முடியுமாயின், ஒரு வேட்பாளர் வெற்றி பெற மொத்தம் பதிவான வாக்குகளில் 50 சதவீதத்திற்கு மேல் பெற வேண்டும் என்ற இலக்கை இலகுவில் அடைந்துவிட முடியும்.

இதற்கு அனைத்துத் தளங்களிலிருந்தும் ஒவ்வொரு வாக்கும் முக்கியமானதாகும். அதேநேரம், பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்பட்டிருந்தால், தமிழ், முஸ்லிம் வாக்குகளை அவருக்குப் பெற்றுக் கொள்வதில் சிக்கலான நிலைமை தோன்றக் கூடும். இருந்தபோதும், சுயேச்சையாகக் களமிறங்கும் ஜனாதிபதியின் தீர்மானத்தின் காரணமாக சிறுபான்மை வாக்காளர்களின் கவலைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு அதிக உணர்திறன் கொண்ட தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும்.

இதனால் வாக்கு வங்கியை அதிகரிக்க முடியும். அதாவது, சமீபத்திய அரசியல் தீர்மானங்கள் ஜனாதிபதியின் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன என்றே கூறலாம். பொதுஜன பெரமுனவின் தலைவர்களின் ஆதரவு இன்றி அக்கட்சியின் ஆதரவாளர்களிடமிருந்து பெருமளவான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் ஜனாதிபதிக்கு சிரமங்கள் இருந்தாலும், அடிமட்டத்தில் பணியாற்றும் கட்சி உறுப்பினர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கான ஆதரவை அதிகரிக்க முடியும்.

இவ்வாறான அரசியல் முன்னேற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால், ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவார்கள் என்ற எதிர்பார்ப்புகள் வலுத்துள்ளன. இது பற்றிக் கடந்த சில வாரங்களாகவே பேச்சுக்கள் அடிபட்டு வருகின்ற போதும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதிக்கு வழங்கிவரும் ஆதரவின் அடிப்படையில் எதிர்க்கட்சியில், அதாவது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் அதன் கூட்டணியில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளின் உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதியின் பக்கம் திரும்புவதற்கான சாத்தியம் அதிகரித்து வருகின்றது.

நாட்டை இக்கட்டான சூழ்நிலையிலிருந்து பாதுகாத்து ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்திய தலைவர் என்ற அடிப்படையில், இந்த சாதகமான முன்னேற்றத்தை மேலும் நீடிப்பதற்கு அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் வலுத்து வருகின்றமை இந்த மாற்றத்துக்கான காரணமாக அமைகின்றது.

இருந்தபோதும், நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் என்பது அனைத்து அரசியல் சக்திகளுக்கும் மிகவும் சவால் மிக்கதொன்றாகவே அமையப் போகின்றது.

பாரியதொரு மக்கள் போராட்டத்தின் பின்னர் நடத்தப்படும் பிரதான தேர்தல் இதுவென்பது புரிகின்றது.

கடந்த காலங்களைப் போன்று தேர்தல் குறித்த ஊகங்களுக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளன. அது மாத்திரமன்றி, போட்டியிடும் வேட்பாளர்கள் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொள்வார்களா என்றதொரு கேள்வியும் இங்கு காணப்படுகின்றது. இதுபோன்ற சவால்கள் மற்றும் வாய்ப்புகள் மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் களம் பரபரப்படைந்து வருகின்றது. எதிர்வரும் நாட்கள் அரசியல் பரபரப்பு மிக்க நாட்களாக இருக்கும்.

---




# கிழக்கிலங்கையின் புகழ்பூத்த இலக்கியவாதி வ.அ. இராசரத்தினம்

05–06–1925இல் வஸ்தியாம் பிள்ளை அந்தோனியா தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர் வ.அ. இராசரத்தினம். றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் பின்னர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையிலும் கல்விகற்றவர். 1946இல் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சியைப் பெற்றார். 1952இல் மேரிலில்லி திரேசா என்பவரைத் திருமணம் புரிந்தார்.

இவரது முதலாவது சிறுகதை 'மழையால் இழந்த காதல்' 1948ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் வெளிவந்தது. இருப்பினும் இவரது அனேகமான படைப்புகள் ஈழகேசரியிலேயே வெளியாகின.

வ.அ. மொறட்டுவையில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் பிரெஞ்சு, ஆங்கில, ரஷ்ய மொழிகளிலான முப்பது மொழிபெயர்ப்புக் கதைகளை எழுதியுள்ளார்



இவரது நூல்களாக துறைக்காரன் (நாவல்), கொழுகொம்பு (நாவல்), கிரௌஞ்சப் பறவைகள் (நாவல்), ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (குறுநாவல்), ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது(நாவல்) தோணி (சிறுகதைத் தொகுதி), பூவரசம்பூ (மொழிபெயர்ப்புக் கவிதை), மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு (சரித்திரம்), இலக்கிய நினைவுகள் (நினைவுக் கட்டுரைகள்) என்பன வெளிவந்துள்ளன.

இவரது தோணி (சிறுகதைத் தொகுதி), மண்ணிற் சமைந்த மனிதர்கள் (நாவல்) ஆகியன இலங்கை தேசிய சாகித்திய விருதுபெற்றவை.


உலகத்தரமான புகழ்பெற்ற அவரது தோணி சிறுகதை தோன்றிய பின்னணிபற்றி இவர் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். 'நான் கடலோரத்தில் பிறந்தவன்.

எனது முன்னோர் திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையில் வத்தை ஓடியவர்கள். அதிகமான நேரங்களில் நான் கடற்கரையிலே தான் தங்குவேன். கடற்கரையில் பிறந்த நான், கடற்கரையை அனுபவித்த நான் கடலோரக் கதைகளை எழுதும்போது அதிக கலைத்துவம் மிளிர்கிறது. மூதூரை பற்றிக் கதைகள் வந்த அளவுக்கு இலங்கையில் வேறெந்த ஊரைப் பற்றியும் அத்தனை கதைகள் வெளிவரவில்லை."

இவரது பவளவிழா மூதூரில் 05–08–2000 அன்று இடம்பெற்றது. ஈழத்து நவீன இலக்கியவாதியொருவருக்கு எடுக்கப்பட்ட முதலாவது பவளவிழா என்ற சிறப்பினை அவ்விழா பெற்றுக்கொண்டது.

அதற்கு முன்னர் பவளவிழா வயதினை எய்திய எவரும் விழாக் கொண்டாடியதாக வரலாறில்லை.

தோணி சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் வ.அ. பின்வருமாறு எழுதியுள்ளார். 'தேசிய இலக்கியம், மண்வளம், யதார்த்தம் என்ற




கோஷங்களை முற்போக்கு எழுத்தாளர்கள் எழுப்புவதற்கு முன்னரே அக் கோஷங்களுக்கு இலக்கணமான கதைகளை நான் எழுதினேன். எந்தக் கோஷத்தினரோடும் 'எடுபட' நான் விரும்பவில்லை. ஏனென்றால் என்னை ஈழத்துப் பூதந்தேவனாரின் தம்பி என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன்!

வ.அ. இராசரத்தினம் 22–02–2001 அன்று அமரரானார்.

# குமாரவேல் நாயனார் இலங்கை வருகின்றார்



சீர்வளர்சீர் குமரவேல் நாயனார் வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலின் 37 ஆவது ஆண்டு ஆடிப்பூர மகோற்சவத்தில் கலந்து கொள்வதற்காக ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதி (06.08.2024) தமிழகத்திலிருந்து இலங்கை வருகை தரவுள்ளார்.

இவர் பகையில்லா உள்ளம் பட்டினியில்லா வயிறு, நோயில்லா உடல் என மக்களை நடைமுறைப் படுத்தி வருபவரும், சித்தர்கள் மகாபொற்சபை மடாலயம் உருவாக்கி சுமார் 23 ஆண்டு காலமாக தமிழ் சித்த மரபோடு சித்தமருத்துவம், ஆலயமரபு வழிபாடு, கும்பாபிஷேக பணிகள் மற்றும் யந்திர பூஜைகள், ஆகமவழிபாடு, சித்தர்கள் வழிபாடு ஆகியவற்றை நடத்தி வருபவருமாவார்.

மயூராபதி ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலயத்தில் நடைபெறும் தேர்த் திருவிழா நிழ்விலும் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இவர் ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தாயகம் திரும்புகிறார். மருத்துவ முகாம் அமைத்து மக்களை நல்வழிப்படுத்துதல் உடல், மனம் செம்மைப்படுத்துதல், கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு இயற்கை மருத்துவம் புரிதல் போன்ற பணிகளிலும் இவர் ஈடுபடுகின்றார்.

# தேயிலையின் எதிர்காலம்

## சர்வதேச தரநிர்ணய அமைப்பு நடத்திய விசேட கூட்டம்



சர்வதேச தரநிர்ணய அமைப்பின் (ISO) தேயிலை குறித்த தொழில்நுட்பக் குழுவின் (ISO TC 34/ SC 8) 30ஆவது பொதுக்குழு கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றதுடன், 10 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தேசிய தரநிர்ணய அமைப்புகளைப் (NSBs) பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய BESPAFOOD திட்டத்தின் ஆதரவுடன் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் (SLSI) இவ்விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதுமாத்திரமின்றி, ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் (UNIDO) ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டமானது, COVID19 தொற்றுநோய்க்குப் பிறகு நடைபெறுகின்ற முதலாவது நேருக்கு நேர் நிகழ்வு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள உறுப்பு நாடுகளுக்கு தேயிலைத் துறையைச் சார்ந்த புதிய தரநிலைகள் மற்றும் ஆராய்ச்சி பற்றி விவாதிக்கவும், வளர்ச்சி முன்னேற்றத்திற்கு ஏற்ப இருக்கும் தரநிலைகளை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கின்ற ISO/TC 34/SC 8 கூட்டமானது அந்தந்த நாடுகளின் சந்தை போக்குகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ப செயல்படவும் வாய்ப்பளிக்கிறது.

இதுதொடர்பில் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி சித்திகா ஜீ சேனரத்ன கருத்து தெரிவிக்கையில், "இந்த முக்கியமான கூட்டத்தை நடத்துவது இலங்கைக்கு கிடைத்த பெருமையாகும். இலங்கையில் தேயிலை உற்பத்தி துறையானது ISO தரநிலைகளுடன் முழுமையாக செயல்படுகின்றது. அதேபோல, தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் நிலையான தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு நாடாக நாம் ஒரு முக்கியமான பணியைச் செய்து வருகின்றோம்." எனத் தெரிவித்தார்.

உலகளாவிய தேயிலை உற்பத்திக்கான பல்வேறு சர்வதேச சந்தை அளவுகோல்களைப் பற்றிய முக்கியமான விவாதங்களையும், மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக இம்முறை ISO கூட்டம் நடைபெற்றது.

குறிப்பாக, தேயிலைத் (Camellia sinensis) துறையில் தரநிலைப்படுத்தல், பல்வேறு வகையான தேயிலைகளுக்கான தொகுப்பு தரநிலைகள், தரத்தை பரிசோதிக்கும் முறைமைகள் (உணர்வு மற்றும் கலவை உட்பட), சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (போக்குவரத்து உட்பட), சர்வதேச வர்த்தகத்திற்கு தேயிலை தரத்தில் தெளிவை வழங்குதல் மற்றும் தேயிலை தரத்தின் நுகர்வோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல் ஆகியவை இதன்போது விவாதிக்கப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

அதுமாத்திரமின்றி, இரசாயனவியல் பகுப்பாய்வு மூலம் தேயிலையை வகைப்படுத்தும் முறையை அறிமுகப்படுத்துதல், வெள்ளை தேயிலையை தரப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல், மசாலா சாய் தூளின் தன்மைகளை வரையறுத்தல் மற்றும் கறுப்பு தேயிலைக்கான சொல்லகராதியை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இம்முறை கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய சில தலைப்புகளாகும்.

அதேபோல, திடமான வடிவில் உடனடி தேநீருக்கான (Instant tea) தரநிலைகளை திருத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்வு குறித்து UNIDO வின் சிரேஷ்ட சர்வதேச தொழில்நுட்ப நிபுணர் கலாநிதி கயிரோ விலமில் டியஸ் கருத்து தெரிவிக்கையில், 'இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் BESPAFOOD திட்டத்தின் முக்கிய தூண்களில் விவசாய உணவுத் துறைக்கான சர்வதேச தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் ஆதரவளிப்பது ஒன்றாகும்.

உள்ளூர் விவசாய உணவு மதிப்புச் சங்கிலியை இலங்கையிலும், இலாபகரமான சந்தைகளை வெளிநாட்டிலும் அணுக இது உதவும் என தெரிவித்தார்.

2024 கொழும்பு சர்வதேச தேயிலை மாநாடு நடைபெறுகின்ற காலப்பகுதியில் தான் தேயிலை தொடர்பான 30ஆவது ISO/ TC/SC 8, கூட்டமும் நடைபெற்றதால் உலகெங்கிலும் உள்ள தொழில்துறையின் முன்னணி பங்குதாரர்களை ஒன்றிணைப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

# தேயிலைத் தோட்டங்களில் வெளியார் உற்பத்தி முறைமை

(கடந்த வாரத் தொடர்)

இவ்வழிகாட்டல் குறிப்புகள் விமர்சிக்கப் படத்தக்க அம்சங்களைக் கொண்டுள்ளன. சம்பளப் பட்டியலிலுள்ள தோட்டத் தொழிலாளர் குடும்பத்தாருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பது சரியானது. அதேவேளை ஓய்வுபெற்ற தொழிலாளர்களை குறிப்பிடாமல் விட்டுள்ளனர். இன்றும் கூட தோட்ட முகாமையாளர்கள் இவர்களை 'கைக்காசு' வேலைக்கு அமர்த்துவதனை ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்ளவில்லை.

'நீண்ட கால குத்தகை அடிப்படை 'என்பதற்கான கால வரையறை குறிப்பிடப்படாமல் விடப்பட்டுள்ளது. பிராந்திய கம்பெனிகள் அரசாங்கக் காணிகளை குத்தகைக்கு பெற்றுள்ளன .இவற்றுக்கு 'உப குத்தகைக்கு' கொடுக்கும் அதிகாரம் சட்டபூர்வமாக உண்டா என்பதில் தெளிவில்லை.

காணி வாழ்வாதாரத்திற்கான வருவாயினைத் தரும் வரையில் தோட்டத்தில் கூடிய நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும் எனும் விதி, கைவிடப்பட்ட, செழிப்பற்ற காணி எவ்வாறு வாழ்வாதார வருவாயைத் தரும் என யோசிக்க வேண்டியுள்ளது.

தோட்ட நிர்வாகம் காணிகளுக்கு உள்ளீடுகளை வழங்கி அதற்கான கொடுப்பனவுகளை உற்பத்தியாளர்கள் வருவாயில் இருந்து பெற்றுக் கொள்ளும் ஏற்பாட்டில் இவ் உள்ளீடுகளின் விலையினை மட்டுமா, விலைக்கு மேலான லாபத்தினையுமா உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டும் என்பதில் தெளிவின்மை உண்டு.

நட்டத்தை மட்டுமே காட்டும் கம்பெனிகளின் ஐந்தொகைப் பதிவுகளை வெளியிடும் கம்பெனிகள் தேயிலை ஆணையாளர் குறிப்பிடும் பசுந்தேயிலையின் விலையினை பகிரங்கப் படுத்துமா என்ற வினாவும், தேயிலை ஆணையாளர் யாருக்குச் சார்பானவராக இருப்பார் என்ற வினாவும் எழுகின்றது.

நிர்வாகத்தினர் காணி உரிமைத் தொகைக்காக ஒரு தொகையினை உற்பத்தியாளர்களிடம் பெறுவது கம்பெனிகளின் பொறுப்பினை அவர்கள் மேல் சுமத்துவதாகாதா? தோட்டக் காணிகளுக்கு பங்காளர்களாக இருக்கும் தொழிலாளருக்கு அல்லவா இவ்வுரிமைத் தொகை கொடுக்கப்பட வேண்டும்.

வெளியார் பயிர்ச் செய்கை முறையினை ஆதரிப்போர் இதன் மூலம் தொழிலாளர்களின் வருமானம் கூடி, வாழ்க்கை நிலை உயரும் என்று கூறுகின்றனர். தேயிலை ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர்கள் ஆய்வு செய்த எல்கைடுவ கம்பனிக்குச் சொந்தமான செலகம தோட்டத்தில் இது சாத்தியமானதாகக் கூறியுள்ளனர். வலப்பனைப் பிரதேச மஹா ஊவா தோட்டத்தில் இம்முறையாலேயே பாதிக்கப் பட்டதாக தொழிலாளர்கள் முறையிட்டுள்ளனர். இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படாதவாறு பாதுகாப்பு பொறிமுறை அவசியமாகின்றது.



இந்த முறைமையின் அமுலாக்கத்தின் போது தொழிலாளர்களின் வேலைப்பளு கூடுவதோடு, சிறார்கள் உட்பட முழுக் குடும்பத்தினரும் வேலையில் ஈடுபட வேண்டிய சாத்தியம் பற்றியும், பிற சமூக நடவடிக்கைகள் முடமாவதற்குமான சாத்தியம் பற்றியும் எதிர்வு கூற வாய்ப்புண்டு. மேலும்,தோட்டத்திற்குள் வேலையில் உள்ளோர், இல்லாதோர் என இரு பிரிவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.தவிர, தோட்டத்திற்குள் பதிவில் உள்ளோர், இல்லாதோர் என இரு பிரிவுகள் ஏற்பட்டு அவர்களிடையே முரண்பாடுகள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அதற்கும் மேலாக பதிவில் உள்ளோரின் வேலை நாட்கள் குறைந்து வருமானம் வீழ்ச்சியால் வறுமை கூடும் அபாயமும் உண்டு.

இந்த முறைமை தொழிலாளர்கள் அனுபவித்து வந்த அற்ப,சொற்ப சலுகைகளையும் இல்லாமல் ஆக்கியுள்ளது. இதில் முதன்மையானது ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதிகள், ஓய்வுக் கொடுப்பனவு ஆகியவை இல்லாமல் போனதாகும். ஓய்வுகால வரப்பிரசாதங்களாக இருந்துவந்த இந்த சேமிப்புகள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. புகுத்தப்பட்டுள்ள முறையில் எதிர்காலத்திற்கான சேமிப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை .

எதிர்கால சேமிப்பு நிர்மூலமாகப் பட்டுள்ளதோடு, தொழிலாளர்களின் உழைப்பால் கொழுத்த முதலீட்டாளர்கள் செய்து வந்த சேமநல ஏற்பாடுகள் யாவும் பறிபோயுள்ளன. பராமரிப்புச் சூழல் துப்புரவு, மரண ஆதரக் கொடுப்பனவு, பிரசவ சகாய நிதி உட்பட சகல ஏற்பாடுகளும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

பிரித்துக் கொடுக்கப்படும் காணி, மயான பூமியையும் உள்ளடக்கியுள்ளபோது சவ அடக்கத்திற்கான இடமும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்த காலத்தில் இருந்த ஏற்பாடுகள் யாவும் இல்லாமல் போயுள்ளன. கடைசியாக செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில், அது நடைமுறைப் படுத்தப்படும் கட்டத்தில் இந்த முறைமை நடைமுறைப் படுத்தப்படும் என்ற ஷரத்து உள்ளது. அதனைக் கிரகிக்க நிதானம் அற்ற தொழிற்சங்கத் தலைவர் ஒருவரே ஒப்பந்தத்தில் முதலாவதாக ஒப்பம் இட்டுள்ளார். தமக்கான புதை குழியைத் தோண்டச் செய்யும் பாசறையான அத் தொழிற்சங்கம் இவ்வாறான அவச் செயல்களுக்கு தனி உரிமை பெற்றது.

இம்முறைமையினை தொழிலாளர்களுக்குச் சாதகமாக அமைப்பதற்கு பின்வரும் ஏற்பாடுகள் அவசியமாகின்றன.

1 அ) குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைய வேண்டும்.

ஆ) ஒப்பந்தம் காணி சீர்திருத்த ஆணைக்கு குழுவுக்கும், காணியைப் பெறும் தொழிலாளிக்கும் இடையிலானதாக இருக்க வேண்டும்.

இ) உள்ளீடுகளையும், பிற வசதிகளையும் கம்பெனிகள் வழங்குவதற்குப் பதிலாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு அப் பொறுப்புகளை ஏற்க வேண்டும்.

2) தோட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் சகல தொழிலாளர் குடும்பங்களுக்கும் சம பரப்பளவான காணி கொடுக்கப்படவேண்டும்.

3) தேயிலைச் செய்கைக்கு முன்னுரிமை கொடுக்கும் அதேவேளையில் கோப்பி, மிளகு போன்ற ஊடு பயிர்களைப் பயிரிட அனுமதிக்கவும் வேண்டும்.

4) நடைமுறையில் உள்ள வீடமைப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரப்பளவு நெகிழ்ச்சி உள்ளதாக மாற்றப்பட வேண்டும்.

5) குத்தகை உரித்து பின் சந்ததியினருக்கு, அவர்கள் இல்லாத விடத்து விரும்பியோருக்கு கை மாற்றப்படக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

6) தொழிலாளர்கள் குடும்பங்களில் இருந்து மேனிலை அடைந்துள்ள மலையகத்தாருக்கும் காணி ஒதுக்கீடு செய்யப்படக் கூடிய ஏற்பாடுகள் ஒப்பந்தத்தில் இடம் பெற வேண்டும்.

7) குத்தகைக் காலம் வரையறை செய்யப்பட்டு, முடிவில் காணி குத்தகைக் காரர்களுக்கு உரித்தாக்கப்படக் கூடிய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

பீ.மரியதாஸ்.

# தலைமுறைகளை இணைத்த 'மலையகம்; இங்கிருந்து எங்கே?'

## இனிதே நடைபெற்ற ஹட்டன் நூல் அறிமுக விழா

பீ.மரியதாஸின் நாளிதழ்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான "மலையகம் இங்கிருந்து எங்கே? எனும் எச்.எச். விக்கிரமசிங்கவின் முயற்சியில் கிடைத்த நூலின் அறிமுக விழா ஹட்டன் சமூகநல நிலையத்தில் கடந்த ஞாயிறு 26ஆம் திகதி க. மெய்யநாதனின் ஒழுங்கமைப்பில் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

அரங்கு நிறைந்த விழாவில் ஹட்டனிலும் இராகலையிலும் அறுபதுகள் தொடக்கம் இன்றைய தலைமுறையினர் வரை மலையகம் குறித்த அக்கறைமிக்கவர்களும் பீ.மரியதாஸோடு ஊடாடியவர்களும் கலந்து கொண்டனர். லண்டனிலிருந்து மு.நித்தியானந்தனின் குரல்வழி இணைப்பில் நூலாசிரியரின் பரிமாணமும் நூலின் வலிமையும் சபைக்கு உணர்த்தப்பட்டது.

மலையகம் 200 காலப்பகுதியில் வெளிவந்த நூல்களில் இந்த நூலின் தனித்துவம் பற்றி சிலாகித்த தலைமை வகித்த சு.முரளிதரனின் உரையை அடுத்து அறிமுக உரையை வழங்கிய நூலாசிரியரின் மாணவரும் முன்னாள் ஆலோசகருமான பி.அருண்மொழிச்செல்வன் மரியதாஸின் நிழலில் கடந்த தருணங்களை முன்வைத்தார். மரியதாஸ் ஏற்பாடு செய்த தியாகி டெவன் லெட்சுமண் குறித்த கவியரங்கத்தை அதில் குறிப்பாக முன்வைத்தார். வெளியீட்டுயுரையை நிகழ்த்திய விக்கிரமசிங்க நூலாக்க முயற்சியின் பின்னணியை விளக்கியதோடு அதில் மு.நித்தியானந்தனின் வகிபாகத்தையும் ஆர். இராமலிங்கத்தின் (லண்டன்) அனுசரணையையும் அடிக்கோடிட்டார்.





மலையக எழுச்சியில் மௌனமான மற்றும் பலமான வகிபாகத்தை கொண்ட ஹைலண்டஸ் கல்லூரியின் முன்னாள் அதிபரும் சட்டத்தரணியுமான ஏ.எஸ். குமார் முதல்பிரதியை பெற்றுக்கொண்டதோடு ஹட்டன் சமூகநல நிலைய பொறுப்பாளர் அருட்தந்தை பிரேம்குமார் சிறப்புப்பிரதியை பெற்றுக்கொண்டு தனது மனப்பதிவினை பகிர்ந்து கொண்டார்.

நூல் குறித்து திறனாய்வை காத்திரமாக முன்வைத்த கொட்டகலை ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபரும் போராதனை பல்கலைக்கழக கல்வித்துறை வருகைதரு விரிவுரையாளருமான ஜே.சற்குருநாதன் நூலின் சிறப்பு பற்றிக்கூறினார். குறிப்பாக மலையக வரலாற்றாசிரியர்கள் மலையக இடதுசாரி தளங்கள் குறித்த தீண்டாமையும் அந்த குறையை நீக்க இடதுசாரி இயக்கமும் மலையகமும் (1930 – 2023) என்ற மரியதாஸின் கட்டுரை வர்க்க ரீதியான சிந்தனை முன்னெடுப்புக்கு மலையகம் எவ்வாறு முகம் கொடுத்தது என்பது பற்றி கூறுவதையும் சுட்டிக்காட்டினார். மேலும் அதில் மலையக இடதுசாரிகளாக குறிப்பிடத்தக்க எல். சாந்திகுமார் மற்றும் பி.ஏ. காதர் ஆகியோரின் பங்களிப்புகள் பதிவு செய்தமை பற்றிய ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்.





கருத்துரைகள் வரிசையில்; நூலாசிரியரின் கல்லூரி சகபாடியான பேராசிரியர் தை. தனராஜ் நூலோடு ஒட்டியும் நூலாசியர் சார்ந்தும் கருத்துகளை தெரிவித்த போது தனதும் மரியதாஸினதும் சபையிலிருந்த சிலரினதும் கடந்தகால அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். ஹட்டனில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமை வகித்த அரசியல் கூட்டத்தில் கலந்து உரையாற்றியமையால் பொறியில் சிக்கிக்கொண்டதை குறிப்பிட்டார். அரசியல் கூட்டங்களில் அரசாங்க அலுவலர் கலந்து கொள்ளக்கூடாது எனத் தெரிந்து கொண்டும் பங்கேற்று, அதன் காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்தமையால் அதை ஈடுசெய்ய, ஹட்டன் மல்லியப்பு பிரதேசத்தில் ஒரு பிரத்தியேக கல்வி நிறுகத்தை அமைத்ததையும் அதில் தானும் மரியதாஸும் செயற்பட்டதையும் குறிப்பிட்டார். முன்னாள் பரீட்சைத் திணைக்கள பிரதி ஆணையாளரும் ஒலிபரப்பாளருமான போல் அந்தனி, தான் எழுபதுகளில் ஹைலண்டஸ் கல்லூரியில் பணியாற்றிய போது இணைந்து செயற்பட்ட நாகலிங்கம் மற்றும் சரவணப் பிரகாசம் என்பவர்களோடு எவ்வாறு தாளலய நாடகத்தை உருவாக்கி, அதனை மலையகத்துக்கு அறிமுகப்படுத்திய பின்னணியை முக்கிய தகவலாக பரிமாறிக் கொண்டார். ஓய்வுநிலை மேலதிக கல்விப் பணிப்பாளர் க.மெய்யநாதன் சுருக்கமாக தனக்கும் மரியதாஸுக்குமுள்ள ஆத்மார்த்த நட்பை உரையில் வெளிப்படுத்தினார். முன்னாள் நகரசபை உறுப்பினரும் கல்வியியலாளருமான எம்.ஆர். விஜயானந்தன் மரியதாஸின் மொழிப்புலமையை சிலாகித்தார்.





வீரகேசரி வாரவெளியீட்டு பிரதி ஆசிரியர் சிவலிங்கம் சிவகுமாரன் சமகால மலையக நிலைமைகளை சுருக்கமாக பகுப்பாய்வு செய்து நூல் தலைப்பின் பொருத்தப்பாட்டை வியந்தார். முத்தாய்ப்பு உரையாக மு.சிவலிங்கம் தானும் மரியதாஸ{ம் 14 வயதை கடந்து ஹைலண்டஸ் கல்லூரில் அனுமதி கேட்டு வந்த போது 'ஓவர் ஏஜ்' தடையாக அமைந்ததும் பின்னர் ஆசிரியர் செபஸ்தியன் எவ்வாறு அவர்களுக்கு அனுமதி பெற்றுக்கொடுத்தார் என்பதையும் விளக்கினார்.



ஏற்புரையில் மரியதாஸ் நூல் வெளிவரக் காரணமாக இருந்த விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்ததோடு தனக்கும் தன்னோடு சேர்ந்தவர்களுக்கும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைக்க அக்காலத்து அரசியல் கோட்டா முறை பயன்படுத்தப்பட்டமை குறித்தும் அதன்போது தான் ஒரு தலை வணங்காத் தனத்தோடு செயற்பட்டதையும் சுவாரஸ்யமாக பகிர்ந்து கொண்டார். ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எம். அகிலன் நன்றியுரை வழங்க அறிமுகவிழா இனிதே நிறைவேறியது.














எச். எச் விக்கிரமசிங்க




## எதிர் நீச்சல்



தோல்வி என்னிடம்
தோற்று போய் கிடக்கிறது
துரத்தி துரத்தி விரட்டியதும்
என்னோடு ஓடமுடியமால்
அலுத்துபோய் விட்டது
தோல்வி

என்னை கூறுபோட்ட
வாழ்க்கைக்கும்
தோல்விக்கும் போட்டி
நீயா நானா என்று

பெற்ற கடன் அடைக்கவில்லை
வளர்த்த கடன் முடியவில்லை
பாதியிலே பட்டகடன்
மீதியிலே நிற்கிறது

பற்றி எரியும் பாசம்
அழவைத்து பார்க்கும் அன்பு
நாயாய் மதிக்கும் நட்பு
நோகடிக்கும் நேசம்

இன்னும்தான் எனக்கு
முட்டாள்தனமாய்
பழகத் தெரியவில்லை
வளைவு, நெளிவு , சுழிவுகளை
கற்றறிந்தவர்களிடம்

பழமை மறந்த பரதேசிகளிடம்
நேர்மை பார்க்காதே என,
அறிவு
அடிக்கடி அடித்து சொல்கிறது,
மண்ணாங்கட்டி மனசு
மறந்து போய் அடம்பிடிக்கிறது

நம்பக்கூடாதவர்கள்
நன்றி மறப்பவர்கள்
அவர்கள்
துரோகிகளின்
அடையாளம்


காயங்களின் தழும்புகளில்
கத்தி தீட்டும் வார்த்தைகளை
அலட்சியமாய்
வீசிவிட்டுப்போகும்
மானிடங்கள்,
ஏளன பார்வையால்
எச்சில் வீசி வீசிவிட்டு
போகும் புன்னகை பூக்கள்

ரெண்டு பட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்
இது
கூத்தாடிகள்
குதூகலிக்கும் காலம்
குதூகலிக்கட்டும்

நான் சுனாமியில் நீந்தி
சுழியோடியவன்
இந்த ஈனபிறவிகளிடம்போய்
எதிர் நீச்சல்
போடவேண்டி இருக்கிறது!

ஏ . யெல் . ஜபீர்

## உயிர்களை நேசிப்போம்



உயிர்களை நேசிப்போம்
உறவுகளை சுவாசிப்போம்
அணிலாடும் முன்றில்
அணிவகுக்கும் எறும்புகள் பார்

தத்திவரும் தவளைகள் பார்
பறந்து வரும் பறவைகள்பார்
ஒருபிடிசோறு வைத்திடுவோம்
எமை நம்பும் ஜீவன்கள்
எம் உயிரென காத்திடுவோம்

அற்றைத்திங்கள்
அவ்வெண்ணிலவில்
அன்றொருகாலம்
கூடிவாழ்ந்தோம்

முற்றத்து மண்ணில்
பழங்கதைகள் சொல்லும்
பாட்ட ன்பாட்டியுடன்

இற்றைத்திங்கள்
இன்றொரு காலம்
முதியோரில்லம்
அனுப்பிவைத்தோம்
பாசம் தேடும் வளர்க்கும்
பாசமரங்களின்

உயிர் வலி அறிவாயோ
உயிரென நேசித்தால் அவரை
தனியிடம் அனுப்பலாமா

நாளை என்றொருகாலம் நமக்கும் உண்டு
உணர்ந்து நடந்தால்
இன்பம் பெருகும் வாழ்வில்

இணுவில் வாகீசன்

## பதவி

படித்து பட்டம்
பெற்றவர்களே – உங்கள்
பதவிக்காக எங்கள் படிப்பை
பாழ்படுத்த எண்ணாதீர்கள்
பட்டுப் போவீர்கள்
வீணே நீங்கள்!

அறையின் பிரச்சினையை
அம்பலத்திற்கு
இழுக்காதீர்கள் தன்
மானம் காற்றில் பறக்கிறது
மாணவியரின் கல்வியே
கெட்டிடுது

நிர்வாகம் என்னவென்று
தெரியாமல்
நின்றவர் போனவரெல்லாம்
நிலை தடுமாறாதீர்கள்
நிம்மதியாய் எங்களை
கற்க விடுங்கள்

மாணவியரின் கல்வியே
முக்கியம்

நமக்குள் வேண்டும் ஐக்கியம்
நேர்மையை யாவரும்
போற்றுங்கள்
நிலை தடுமாற்றத்தைத்
தவிருங்கள்

சாலைகள் தோறும் நீங்கள்
சாத்தான்களாய்
தோன்றாதீர்கள்
சப்தமிட்டுத் திரியாதீர்கள்
சாந்தமாய் எதனையும்
சிந்தியுங்கள்

சட்டத்தைக் கையில்
எடுக்காதீர்கள்
சமத்துவமாய் எதனையும்
தீர்த்திடுங்கள்

சச்சரவின்று மாணவிகள்
கற்றிடவே
சமரசத்தை யாவரும்
போற்றிடுங்கள்

தமிழ் மகளிரைப்
போற்றிடுங்கள்
தரம் ஓங்கிட முயற்றிடுங்கள்
தன்மானத்தைக் காத்திடுங்கள்
தமிழ் வாழ உழைத்திடுங்கள்

பதுளை எஸ்.செல்வராஜா

## தேர்தல் வருது

தேர்தல் வருது
தேர்தல் வருது
தெருக்கள் எங்கும்
துரத்தி வருது

ஆரூடமும்
பஞ்சமில்லை
ஆண்டவன் எழுதியது
மட்டும் நடக்கும்
இதுவுண்மை

ஏகப்பட்டோர்
கட்டுப் பணமாம்
வாக்குச் சீட்டுகளும்




நீளமான தாம்

பொதுத்தேர்தல்
கதைகளும் அதற்குள்
ஊசலாடுது
அரசியல் மைதானமும்
அரங்கேறி நிற்குது

கட்சித்தாவல்
கட்டுப் பணம் செலுத்தல்
காற்றிலே கலந்து
வருது
காற்றாற்று வெள்ளமாய்
காதிலும். படுகுது

யாருக்கு வருமோ
வெற்றி
தெரியவில்லை
பூனைக்கு மணி
கட்டுவதும்
புரியவில்லை

பிரச்சாரம்
இனித் தொடங்கும்
தேர்தல் குண்டுகளும்
விண் நோக்கிச் செல்லும்
வாக்குறுதி க்கும்
பஞ்சமில்லை இனி

நலிந்த பொருளாதாரம்
உயர்ந்திட வேண்டும்
நன்நோக்காய்
நாமிதனை கொள்ள
வேண்டும்
பாங்காக வாக்கினை
அளிப்போம்
பண்போடு இதனை
செய்திடுவோம்

தோப்பூர்.எஸ்.சிராஜ்தீன்
நற்பிட்டிமுனை

## சோளமென பொரியும் மனம்

கட்டுக்கடங்கா புரவியென
திமிறும் அலைகளின்
பேரிரச்சல்களையும் அனுசரித்து
நிதமும் கடற்கரை முன்றலில்
நண்பர்கள் சகிதம் கூடிக் கலைகிறோம்

தலை கோதி விடுவதும்
இதமாக தழுவி விடுவதுமென
எதுவித எதிர்பார்ப்புகளுமற்று
தன் கர்மமாற்றுகிறது காற்று

நடு நிசியையும் கடந்து
துணைக்கு பருவமடைந்த
மகளையும் அழைத்துக்கொண்டு
சோளப்பொரி விற்று திரிகிறாள்
வயது முதிர்ந்த அம்மா

தன் குடிசையின்
உலை கொதித்தடங்கவென
சோளப் பொரிக் கத்தைகளை
கூச்ச நாச்சமற்று
ஏந்தி வந்திருக்கக் கூடும்


ஆகக் குறைந்த பட்சம்
ஒரு கத்தையாவது வாங்கி ருசிக்க
அவாவுறுகிறதென் மனம்

பத்துப் பதினைந்துபேரிருக்கும்
மா சபையில்
ஆளால் சாட்டிக் களர்தலில்
நான் மட்டும் எப்படி வாங்கி
கொறிப்பதெனத் தயங்கி
உடன் தவிர்த்து விடுகிறேன்

இப்படி ஒவ்வொரு முறையும்
மௌனம் சாதித்து
தேவையில்லையென்று சொல்தலில்
சோளமென பொரிகிறதென் மனம்

ஜமீல்

## தியாகம்



கோடித் தியாகங்களுக்குள்
கூடு கட்டி வாழ்கிறது
மானிடம்

பிறப்பு முதல் இறப்பு வரை
யார் யாரோ செய்த தியாகங்களால்
சுடர் விட்டெழுந்த சுடராய்
இன்று மானிடம்

தாயின் கருவறையில்
தனக்கென இடம்பிடித்து
இருளையும் ஏற்று
இன்பமாய் வாழ்ந்து
இனி இதுவே வாழ்வெனும்
முடிவில் தங்கி

முற்றாய் சுகம் காண்கையில்
முழுவதுமாய் உன்னை வெளியேற்ற
உடல் வலி பொறுத்து

உதிரம் சிந்தி
உயிர் ஆழம் சென்று
உன்னைப் பெற்றெடுக்க
எடுக்கும் சிரத்தை
எத்தனை தியாகம் கொண்டது
எதற்கும் ஈடாகும் தியாகமா அது

கோடித் தியாகங்களுக்குள்
பின்னிப் பிணைந்தது வாழ்க்கை

விடியல் தொடக்கம்
இரவு வரை
வீழாது குடும்பத்தை தாங்க
மண்ணுக்கும் விண்ணுக்குமிடையில்
போராடிக் களைத்து
வியர்வையில் குளித்த படி
அன்றைய நாள் முடிய
நாளும் தினமும்
உன்னைப் பற்றியே சிந்தித்து
அதில் பல அல்லல்களை சந்தித்து
அசைபோடும் சவால்களுக்குள்
அத்தனையும் பொறுத்திடும்
தந்தையின் தியாகத்துக்கு

ஈடேது இங்கே

இப்படித்தான் உன்னை
பெற்றவர்கள் தொடக்கம்
உனக்காய் அத்தனையும்
செய்வோர் வரை
சொல்லியும் சொல்லாமலும்
காட்டப்படும்
எத்தனை தியாகங்களின்
வெளிப்பாடு நீயென
சற்றேனும் சிந்தித்துப் பார்

வாழ்வின் அர்த்தம் புரியத் தொடங்கும்
வாஞ்சையுடன் உன்னையது
அணைத்திட அழைக்கும்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

## உள்ளத்தரசி

உள்ளத்தரசி என்று நான் மொழிகையில்
உரித்துடை பெண்ணரசி யாரென்பீரோ?
பள்ளத்தே வீழ்ந்திடாதெனையே
பக்குவமாய் வழிநடத்தி பாசம் பொழிந்து
அள்ளியே அணைத்தெனை அறவழிசென்று
அன்பைப் பரிமாறி என்னவளான
இல்லத்தரசி என்னில் பாதியாய் மாறி
இல்லறம் பேணிக் காத்தவள், அவளே!

ஒன்றாய் என்னுடன் கூடியே வாழ்ந்து
ஒருபோதும் என்மீது சினமே கொள்ளாது
கன்றாக எனையவள் தாய்ப்பசு போலவே
காத்துநிதம் காதலைப் பொழிந்திட
நன்றாக வாழ்ந்தோம்; நன்மைகள் புரிந்திட
நலமே கூடி நமையது காத்திட
கொன்றெ பழகிய கோரப்புயல்போல்
கொடிதாம் நோய்க்கவள் இரையானாளே!

மெல்லவே உடல்மெலிந்து வருந்தினாள்
மருந்துகளே உணவுபோல் அமைந்திட
சொல்லவே முடியா பெருந்துயர் வாட்டவே
சிதறுண்ட மணிச்சரம் போன்றவளும்
வல்லமை குறைந்த குழந்தையாக, நான்
வாய்விட்டு அழுகையில் பதறித்துடித்து
கிள்ளையாய் எனையவள் அள்ளியணைத்து
காதலுக்கோர் இலக்கணமானாள் அவளே!

இன்றோ அவள் இல்லை என்னருகிலே
இதயம் அழுகிறது வாய்மூடியே
தென்றலாய் வாழ்ந்தவளே புயலுக்காளாக
தெரிந்த மருத்துவம் யாவும் புரிந்தோம்
நன்றாக எல்லாம் நடக்குமென நம்பி
நிர்க்கதிக் குள்ளாளோம் அவள் பிரிவினால்
என்றுதான் தீருமோ எம் கவலை யாவும்
இனிதான சொர்க்கம் அவள் வீடாகுமே!

கவிஞர் யாழ் அமீர்

## கல்வி

கல்வி நம்வாழ்வின்
தீபமென்று
கற்று உயர்ந்தி
டுவோம் செல்வ
மென்று
கணிதம், அறிவிய
லும் கற்றிடவே
கடலை
போலறிவை வளர்த்
திடுவோம்
நூலின் மழையி
னிலே நனைந்த
தாலே
நுட்ப அறிவுகளை
பெற்றிடுவோம்
வெறுமை

நிலைமாறி உயர்ந்
தேநாம்
வெற்றி முத்தங்
கள் பெற்றிடு
வோம்
இனிதாய் திறம்ப
டவே கல்விகற்று
இலக்கை நோக்கி
யேநாம் வென்றிடு
வோம்
பாவச் செயல்களில்
நாம் விடுபட்டு
பாதை வகுத்தேநாம்
சென்றிடுவோம்

★★ மா காய் – காய்

முஹம்மது எஸ். முகுசீன்
விக்டோரியா – அவுஸ்திரேலியா

## பெரிதாக ஒன்றும் தேவையில்லை



கணவனைப் பராமரித்து
பிள்ளைகளைப் பயிற்றுவித்து
பெற்றோரைக் கவனித்து
வீட்டாருக்குச் சமைத்துக் கொடுத்து
பாத்திரங்ளைக் கழுவி சுத்தம் செய்து
வீட்டைத் துப்புரவு செய்து
தோட்டத்தை சுத்தம் செய்து
உடைகளைக் கழுவி
உலர்த்தி அழுத்திக் கொடுத்து

இப்படித் தன்னைத் தானே
சுற்றிக்கொண்டு
பிறரையும் சுற்றி வரும் அவளுக்கு
தன்னை உருக்கி
தன்னை சார்ந்தவர்களுக்கு
ஒளி எழுப்பும் அவளுக்கு
தன் தோற்றம் மறந்து
பிறரை அழகுபடுத்தும் அவளுக்கு
தன்னை மறந்து
பிறரை நினைவு படுத்தும் அவளுக்கு

பெரிதாக ஒன்றும்
தேவையில்லை

கணவனின் கனிவான
ஒரு வார்த்தை போதும்
அரிதாகிப் போன
ஒரு அரவணைப்பு போதும்
இடையிடையே சிறு
சிறு அன்பளிப்பு போதும்
களைப்புகள் அனைத்தும்
களைந்து போக

உடலும் உள்ளமும் உற்சாகம் பெற
இன்னல்கள் நீங்கி இன்பம் துளிர
இயங்க மறுத்த இயக்கம்
இதமாய் பெருக

ஷஹாமா ஸனீர்
சீனன்கோட்டை

## எந்த அகழியிலும்...

உன் ஜீவிதத்துள் சந்திப்புகள்
பலவாறு இருக்கும்
ஒரு காலம் வரும்
சில மனிதர்கள் வருவார்கள்
உனது இதயத்தினுள் நுழைந்து
உன்னை ஆட்டி வைப்பார்கள்
உனது புத்தி
உனது உள்ளம்
உனது ஆன்மா
எல்லாவற்றிலும் பரபரப்பை
ஏற்படுத்திச் செல்வார்கள்

உனக்குள் ஏதோ ஒரு சுடர்
உனக்குள் ஏதோ மின்னல் கீற்று
உனக்குள் ஒரு சுகந்தக்காற்று
உனக்குள் ஒரு அடைமழை
உனக்குள் ஒரு ஆனந்த தாண்டவம்
உனக்குள் ஏதோ ஒரு மாற்றம்
உனக்குப் பிடித்தமாய் ஏதோ ஒன்று
மாறி மாறி உனக்குள் நிகழும்
மாறி மாறி உனக்குள்ளவை
அதிசயங்கள் நிகழ்த்தும்

இவர்தாம்
இவர்களேதாம்
பின்னொரு பொழுதில்
உன் வாழ்வின் நிரந்தர
நேசத்திற்கோ
அதன் பின்னரான அதீத
எதிர்பார்த்தலில்
உருவான நிரந்தர வடுவிற்கோ
காரணமாக இருக்கக்கூடியவர்கள்.

நேசம் என்ற
ஜென்ம அளவுகோலுடைந்து
விடுகையில்
முற்றும் துறந்த,
எல்லாம் மறந்த
உன் வாழ்வின் சுவடுகளில்
சலித்து வெறிச்சோடிய
இருளின் பாதையில்
எந்தப் புள்ளியிலும்
எந்த அகழியிலும்
உன்னையவர்கள்
ஞாபகப்படுத்திக்கொண்டே
இருப்பர்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

## ஸ்ரீ மயூராபதி அம்மன் கோயில் திருவிழாவில் பங்கேற்கும் சிவசேனா மாநில செயல் தலைவர்



ஸ்ரீ மயூராபதி பத்திர காளியம்மன் கோயில் வருடாந்த திருவிழா பாற்குட பவனி விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ் நாட்டு சிவசேனா மாநில செயல் தலைவர் க. சசிகுமார் இம்மாதம் 7ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு ஆர்.எஸ்.எஸ்.இல் இணைந்து முழுநேர சேவகராக பணியாற்றி, சமுதாய பணிகள் செய்து வருவதுடன், கடந்த 25 ஆண்டுகளாக கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி, வறிய பல மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை இலவசமாக வழங்கினார். பல சிவாலயங்களில் திருப்பணி செய்து குடமுழுக்கும் இவர் செய்துள்ளார்.

அத்துடன் கடந்த 2023ஆம் ஆண்டில் இலங்கையில் தீபாவளி பண்டிகையின் போது மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3,000 குடும்பங்களுக்கு வேஷ்டி, சட்டை, புடைவைகளை இவர் வஸ்திரதானம் செய்வதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு சேவை செய்வதே இவரின் குறிக்கோளாக் கொண்டு செயற்படுகிறார்.

இலங்கை வாழ் மக்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும் சுபீட்சமாக வாழவும் கதிர்காமத்தில் யாக பூஜை செய்தவர்.

## மலையகம் இங்கிருந்து எங்கே? மாத்தளையில் வெளியீட்டு விழா




ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர் பீ.மரியதாஸ் எழுதிய மலையகம் இங்கிருந்து எங்கே? வரலாற்று ஆய்வு நூலின் மற்றும் ஒரு வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் பிற்பகல் நடைபெறவுள்ளது.

மாத்தளை சுவாமி விபுலானந்தர் கலாமன்றமும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் முத்தமிழ் விழாவில் மலையகம்: இங்கிருந்து எங்கே? என்ற நூலினை புத்தசாசன மத விவாகார மற்றும் கலாசார அமைச்சர் விதுரவிக்கிரமநாயக்க முன்னிலையில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வை. அநிருத்தனன் வெளியிட்டு வைக்கின்றார்.

கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் சார்பில் எச்.எச் விக்கிரமசிங்க பதிப்பித்த இந்நூலின் பிரதிகளை மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய தலைவர் விக்னேஸ்வரா சர்வானந்தா, மாத்தளை காந்திசபைத் தலைவர் சண்முகம் சந்திரசேகரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.சிவஞானம், லொற்றி கழகத்தின் உதவிஆளுநர் ஆர். ஸ்ரீதரன், கே.பெசன் அதிபர், தேசபந்து எஸ்.கேசவன், விபுலானந்த கலாமன்ற செயலாளர் தியாகராஜா சத்தியசீலன் ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர்.

இதன் மற்றொரு வெளியீட்டு விழா இம்மாதம் 18ம் திகதி பதிப்பாளர் ஒளிவண்ணன் தலைமையில் சென்னையில் நடைபெறுகிறது.

# இலங்கை வங்கியின் 85ஆவது ஆண்டு பூர்த்தி



இலங்கை வங்கியின் 85ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இலங்கை வங்கியின் லேக்ஹவுஸ் கிளையில் நடைபெற்ற வைபவத்தின் போது பிடிக்கப்பட்ட படங்கள். இலங்கை வங்கி வேக்ஹவுஸ் கிளை முகாமையாளர் உதித்த பெரேரா மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# டிஜிட்டல் கண்டுபிடிப்புகளின் ஆற்றலை வெளிப்படுத்தவுள்ள TAGS விருதுகள்

இலங்கையின் பட்டயக்கணக்காளர்கள் நிறுவனம் (CA ஸ்ரீலங்கா) 59வது ஆண்டாக பெருநிறுவன அறிக்கையிடலில் சிறந்து விளங்குவதைக் கொண்டாடும் மதிப்புமிக்க TAGS விருதுகள் 2024க்கான விண்ணப்பங்களை கோருவதை பெருமையுடன் அறிவிக்கிறது. நிதி மற்றும் நிதி அல்லாத அறிக்கையிடலில் புதுமை மற்றும் சிறந்த நடைமுறைகளின் கலங்கரை விளக்கமாக, TAGS விருதுகள் 12 டிசம்பர் 2024 அன்று கொழும்பில் உள்ள ஷங்ரிலா ஹோட்டலில் பிரமாண்டமான விழாவாக நடைபெறும்.

TAGS விருதுகள், (வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றைக் குறிக்கும்), 1964 ஆம் ஆண்டு முதல் ஆண்டு அறிக்கை விருதுகள் என அறியப்பட்டது, நிதி மற்றும் நிதியல்லாத அறிக்கையிடலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களைக் கொண்டாடுவதற்கும் அங்கீகரிப்பதற்குமான பாரம்பரியத்தைத் தொடர்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள், ப்ளூசிப் நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், SMEகள், NPOகள், NGOக்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை உருவாக்கும் பிற நிறுவனங்கள் உட்பட, பரந்த அளவிலான நிறுவனங்களுக்கு இந்தப் போட்டி திறக்கப்பட்டுள்ளது.

2024 TAGS விருதுகளுக்கான "டிஜிட்டல் எட்ஜ் என்ரிச்சிங் கோர்ப்பரேட் ரிப்போர்ட்டிங் எக்ஸலன்ஸ்", கோர்ப்பரேட் அறிக்கையிடலில் AI மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளின் உருமாறும் திறனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.



2024 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் CA இலங்கையின் துணைத் தலைவர் திஷான் சுபசிங்க, TAGS விருதுகள் குழுவின் தலைவி சமிலா குரே மற்றும் TAGS விருதுகள் குழுவின் மாற்றுத் தலைவர் நிஷானி பெரேரா ஆகியோர் கலந்துகொண்டு இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டது.

செய்தியாளர் மாநாட்டின் போது, கொழும்பு பங்குச் சந்தை (CSE) யின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க மற்றும் தலைவர் டில்ஷான் விரசேகர ஆகியோர் முன்னிலையில் 2024 TAGS விருதுகளின் மூலோபாய பங்காளியாக CSE உத்தியோகபூர்வமாக இணைந்தது.

# 10 வருட அடையாளம்: Olu Tropical Water இன் பயணம்

இலங்கையின் முதலாவதும் மற்றும் ஒரே உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட mineral water brandஆன Olu Tropical Water, கொழும்பில் ஜூலை 24ஆம் திகதி தனது 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. பங்குதாரர்கள் மற்றும் பங்குபெறுவோரை இந்த மைல்கல் நிகழ்வைச் சிறப்பிக்க அழைப்பு விடுத்தது. வாடிக்கையாளர் நல்வாழ்வு, சுற்றுச்சூழல் உணர்வு மற்றும் தயாரிப்பு நேர்மை ஆகியவற்றிற்கான ஒரு தசாப்த அர்ப்பணிப்பை நினைவுகூறும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

2014ஆம் ஆண்டு உயர்தர, உள்ளூர் மூலப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட Mineral Water Brandஆக அறிமுகப்படுத்தப்பட்ட Olu Water, இலங்கையின் இயற்கை புனிதத்தன்மை மற்றும் பாரம்பரியத்தை தூய்மை மற்றும் நிலைத்தன்மையின் மூலம் வெளிப்படுத்தும் ஒரு தயாரிப்பின் அபிலாஷை தூரநோக்குப் பார்வையில் இருந்து உருவானது. மத்திய மலைநாட்டின் அரிய மேகக் காடுகளில் இருந்து பெறப்பட்ட ஒவ்வொரு போத்தலும், இலங்கையின் பண்பாட்டிற்கு இணையாக, சுவை மற்றும் தரத்தை வழங்குகிறது.



தேசிய மலரான 'Olu'இன் பெயரிடப்பட்ட இந்த வர்த்தக நாமம் (Brand), தூய்மை மற்றும் உறுதியின் அடையாளமாக திகழ்கிறது. கடந்த தசாப்தத்தில், Olu Tropical Water, இலங்கையின் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும், உலகளாவிய நிலைத்தன்மை அமைப்புக்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலமும், தெற்காசிய பானத் தொழிலில் ஒரு முன்னோடியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இதன் மூலம் உண்மையிலேயே தனித்துவமான, இன்னும் உண்மையான இலங்கையின் தயாரிப்பை உருவாக்கியுள்ளது.

# வங்கி காப்பீட்டு கூட்டாண்மைக்காக கைகோர்க்கும் SLIC ஜெனரல், RDB

ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) நிறுவனம் பூரண காப்பீட்டை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு அதிக அணுகல் மற்றும் வசதியை உறுதி செய்வதற்காக அபிவிருத்தி நிதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட முன்னணி நிதி நிறுவனமான பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் (RDB) ஒரு மூலோபாய வங்கி காப்பீட்டு பங்காளித்துவத்தில் இணைந்துள்ளது.

இரு நிறுவனங்களினதும் உயர் மட்ட நிர்வாகப் பிரதிநிதிகளின் முன்னிலையில், அண்மையில் களனியில் உள்ள RDB தலைமை அலுவலகத்தில் இந்த சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடப்பட்டது.

இந்த மைல்கல் நிகழ்வு, கிராமப்புற மக்களுக்கு அணுகக்கூடிய சிக்கன விலையில் காப்பீட்டு சேவைகளை வழங்கி கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது.



இந்த வங்கி காப்பீட்டு கூட்டாண்மை மூலம், SLICGLஇன் பல்வேறு வகையான காப்பீட்டு சேவைகளை RDBஇன் நாடு தழுவிய கிளை வலையமைப்பு மூலமாக பெற்றுக்கொள்ளலாம். இன்றுவரை, நாடு முழுவதுமான 272 கிளைகள் ஊடாக RDB ஆனது ஆறு மில்லியனுக்கும் அதிகமான விசுவாசமான கணக்கு வைத்திருப்பவர்களைக் கொண்டுள்ளது.

இப்போது வாடிக்கையாளர்கள் தங்கள் வழக்கமான வங்கிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் போது மோட்டார், தீ மற்றும் பொதுக் காப்பீட்டுக் கொள்கை கள் உள்ளிட்ட காப்பீடு களை வசதியாகப் பெறலாம்.

பிரஜைகளின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதுமையான, நம்பகமான, வசதியான மற்றும் அணுகக்கூடிய காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதற்கான SLICGLஇன் உறுதிப்பாட்டுடன் இந்த இணைவு ஒத்துப்போகிறது.

# இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களின் பிள்ளைகளின் பாடசாலை கல்விக்கு உதவும் சியெட் களனி



இலங்கையின் மொனராகலை மாவட்டத்தில் வாழும் இறப்பர் விவசாய சமூகத்தின் பாடசாலை செல்லும் பிள்ளைகள், நாட்டின் இயற்கை இறப்பரின் மிகப்பெரிய உள்நாட்டு பாவனையாளர்களில் ஒன்றான சியெட் களனி ஹோலடிங்ஸின் சமூகப் பொறுப்புணர்வு முயற்சியின் சமீபத்திய பயனாளிகளாகியுள்ளனர்..

மொனராகலை, நக்கல, வித்யார்த்த மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 120 மாணவர்களுக்கு, தேவையான பாடசாலைப் பைகள், பாடசாலை சப்பாத்துகள் (காலணிகள்) மற்றும் அப்பியாசப் பயிற்சி புத்தகங்களை நிறுவனம் வழங்கியதுடன், இதன் மூலம் நிறுவனம் அதன் மிக முக்கியமான பங்குதாரர் குழுக்களில் ஒன்றிற்கு தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

இலங்கையின் நியூமேடிக் டயர் தேவைகளில் பாதியை உற்பத்தி செய்யும் சியெட் களனி ஹோல்டிங்ஸ், வேலைக்கு அமர்த்தியுள்ள 10,000 விவசாய குடும்பங்களான உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து அதன் இயற்கை இறப்பர் தேவையில் 100 சதவீதத்தை பெறுகிறது.இவ்வருட ஆரம்பத்தில் மத்துகம வலயத்திலுள்ள இரண்டு பாடசாலைகளிலும், குருவிட்ட பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளிலும், எல்பிட்டியவிலுள்ள பாடசாலையொன்றிலும் இதேபோன்று பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பொருட்களும் சியெட் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டன.

# NDB யின் தங்கக் கடன்கள் மூலம் நெகிழ்வான நிதித் தீர்வுகள்

இலங்கையின் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார நிலப்பரப்பில், விரைவான மற்றும் நம்பகமான நிதித் தீர்வுகளுக்கான அணுகல், தனிநபர்கள் மற்றும் வர்த்தகங்களின் வாழ்வாதாரத்தில் கணிசமாக பாதிப்பினை ஏற்படுத்தும்.

NDB வங்கியின் தங்கக் கடன்கள் ஒரு முக்கிய நிதி ஆதாரமாக விளங்கும் நிலையில் அது குறுகிய கால நிதி தேவைப்படுபவர்களுக்கு பொன்னான வாய்ப்பை வழங்குகிறது.

அடகுவைத்தல் அதாவது, தங்க நகைகள், தங்க பிஸ்கட்கள் அல்லது தங்க நாணயங்களை வைத்து ரொக்கமாக முன்பணங்களைப் பெறும் நடைமுறை, உடனடி நிதியைப் பாதுகாப்பதற்கான மிகவும் பயனுள்ள மற்றும் வசதியான முறைகளில் ஒன்றாக நீண்ட காலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.NDBயின் தங்கக் கடன்கள், விரைவான, நம்பகமான மற்றும் ரகசியமான பரிவர்த்தனைகளை வழங்கும் இந்த வசதியை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.



89 கிளைகளின் வலையமைப்புடன், நாடளாவியரீதியில் எளிதாகக் கிடைக்கும் அடகுச் சேவைகள் மூலமாக, நகர்ப்புறங்கள் முதல் கிராமப் பகுதிகள் வரையிலான பரந்தளவிலான வாடிக்கையாளர்களுக்கு இவ்வடிப்படைச் சேவை கிடைப்பதை NDB உறுதி செய்கிறது.NDBயின் தங்கக் கடன்களின் தனித்துவமான நன்மைகளில் ஒன்று, திருப்பிச் செலுத்துவதில் அதன் நெகிழ்வுத்தன்மை ஆகும். வாடிக்கையாளர்கள் தங்கள் அடகு வைக்கப்பட்ட பொருட்களை மீட்பதற்காக பகுதியளவு பணம் செலுத்தக்கூடிய வசதியும் உள்ளதால் அவர்களின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு நெகிழ்வான அணுகுமுறையை வழங்குகிறது.

# சமூக நலன் பேணும் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், சமூகத்தின் நலனை மேம்படுத்தும் தனது அர்ப்பணிப்பை தொடரும் வகையில் தனது HOPE திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. உள்ளூர் சமூகங்களின் அபிவிருத்தி தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கான யூனியன் அஷ்யூரன்ஸின் வழிமுறையாக HOPE திட்டம் அமைந்திருப்பதுடன், தேசத்தின் திரண்ட முன்னேற்றத்துக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தின் பிந்திய நடவடிக்கை வெல்லவாய எதிலிவெவ மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இதர சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மொனராகலை மாவட்டத்தின் எதிலிவெவ மகா வித்தியாலயம், வெஹெரயாய மகா வித்தியாலயம் மற்றும் பலஹருவ கனிஷ்ட பாடசாலை ஆகியவற்றுக்கு ஆறு மாத காலப்பகுதிக்கு மாதவிடாய் கால தூய்மை அணையாடைகளை விநியோகித்திருந்தது. இதனூடாக சுமார் 800 க்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறுவர்.மேலும், தேசிய விளையாட்டு போட்டி 2024 இல் சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தியிருந்த எதிலிவெவ மகா வித்தியாலயத்தின் 50 மாணவர்களுக்கு அன்பளிப்பு வவுச்சர்களையும் யூனியன் அஷ்யூரன்ஸ் கையளித்திருந்தது. வலய மட்டத்தில் இந்தப் பாடசாலை முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# Kitchen & Bedroom இனால் புதிய இலச்சினை அறிமுகம்

இடவசதி திட்டமிடல் மற்றும் உள்ளக வடிவமைப்பை கட்டியெழுப்பல் போன்றவற்றில் கீர்த்தி பெற்ற, பல தசாப்த கால அனுபவத்தையும் கொண்ட Kitchen & Bedroom, அண்மையில் தனது புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது.



தமது வாழிடப் பகுதியில் எதிர்பார்க்கும் சொகுசான வசதிகளை நிறைந்திருக்கச் செய்வது எனும் தொனிப்பொருளுக்கமைய இந்த புதிய இலச்சினை அமைந்துள்ளது.

நவநாகரீகத்தைப் போலவே, உள்ளக அலங்கார வடிவமைப்பு தொடர்பிலும் அதிகளவு பேசப்படுவதுடன், கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கு அப்பால் சென்று, நபர் ஒருவரின் உணர்வுகள் மற்றும் உளவியல் நலனிலும் உள்ளக அலங்கார வடிவமைப்பு தாக்கம் செலுத்துகின்றது. சிறந்த வடிவமைப்புகளுடனான, பிரத்தியேகமான உள்ளகப் பகுதியை கொண்டிருப்பது என்பது, சௌகரியமான, சிறந்த செயற்திறனைக் கொண்ட, கலையம்சங்கள் நிறைந்த வாழிடத்தை வழங்குவதாக அமைந்துள்ளது.

Kitchen & Bedroom ஐச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த அலங்கார வடிவமைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களினூடாக, விஞ்ஞானத்தையும், கலையையும் ஒன்றிணைத்து, வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், வாடிக்கையாளர்களின் பகுதிகளில் இவை பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், 90 சதவீதத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் தமது வெவ்வேறு உள்ளக அலங்காரத் தேவைகளுக்காக மீண்டும் மீண்டும் அவர்களை நாடுவதனூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

Kitchen & Bedroom குரூப் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. மொஹமட் ருஷ்மி ஸாகுவாஃப் குறிப்பிடுகையில், "உள்ளக அலங்கார வடிவமைப்பு மற்றும் இடவசதி திட்டமிடல் ஆகியவற்றில் முன்னோடியாக திகழ்வதனூடாக, தொழிற்துறையின் புதிய மற்றும் பிந்திய தெரிவுகளை நாட்டில் அறிமுகம் செய்வதற்கான எமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், எமது புதிய இலச்சினை அறிமுகம் அமைந்துள்ளது" என்றார்.

# சமூக ஊடக அறிக்கைகளுக்கு மறுப்புத் தெரிவிக்கின்றது Lanka Hospitals Corporation PLC (Lanka Hospitals) நிர்வாகம்

200 வெளிநாட்டவர்கள் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தவறான சமூக ஊடகத் தகவல்களை பதிவிட்டு பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்த சில நபர்கள் திட்டமிட்ட முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட சமூக ஊடக பதிவை நிர்வாகம் மறுத்துள்ளதுடன், 2017ஆம் ஆண்டிலும் தமது வைத்தியசாலையுடன் தொடர்புடைய இதேபோன்றதொரு பதிவு சமூகத்தில் பீதியையும் குழப்பத்தையும் தூண்டும் வகையில், வெளியிடப்பட்டது என்பதையும் பொதுமக்களுக்கு அது அறிவுறுத்தியுள்ளது. நாட்டிலேயே மிகவும் அங்கீகாரம் பெற்ற மற்றும் அதிக விருதுகளைப் பெற்ற மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனையாக, லங்கா ஹொஸ்பிடல், தங்கள் மருத்துவமனையை நாடி வரும் நோயாளிகள் மற்றும் அவர்களைப் பார்வையிட வருவோரின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும், பொது மக்களுடனான தங்களது தொடர்புகளை உறுதிப்படுத்துவதே தங்களது நோக்கங்களில் ஒன்றாகும் என்பதையும் வலியுறுத்துகிறது.

கொரோனா தொற்றுக் காலத்தில், எந்தவிதமான சமரசங்களும் இன்றி நோயாளிகள் அல்லது பொதுமக்களின் பாதுகாப்பையும் பாதிக்காமல் 14,000க்கும் மேற்பட்ட கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வெற்றிகரமாக தமது மருத்துவமனை சிகிச்சை அளித்துள்ளது என்றும் மருத்துவமனையின் உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவப் பராமரிப்புப் பணியாளர்கள், தற்செயலான நோய்த்தொற்றுகள் சம்பந்தப்பட்ட எந்தவொரு எதிர்பாராத சூழ்நிலையையும் கையாளுவதற்கு ஏற்ற வகையில் விரிவான பயிற்சி பெற்றவர்கள் என்றும் அந்த அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தினகரன் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளில் கடந்த 50 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், கரவெட்டி நிருபராக தொடர்ச்சியாக பணியாற்றி வரும் எஸ். தில்லைநாதனுக்கு அண்மையில் Editors Guild வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. அதனைக் கௌரவிக்கும் முகமாக அவருக்கு கடந்த 31 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை சபையர் ஹோட்டலில் ஊடக நண்பர்கள் ஒரு விருந்து உபசாரத்தை வழங்கி கௌரவித்தபோது.....

# இனிய நந்தவன வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா




இனிய நந்தவன வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா, எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு, முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் கம்பீரக் குரலோன் சி.நாகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும் ஹாஷிம் உமர் பௌண்டேஷன் நிறுவுனருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், வவுனியா தமிழ் விருட்சம் தலைவர் சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது ஏற்புரையை இளையகவி திரியாயூரன், அறிமுகவுரையை யோ. புரட்சி, வாழ்த்துரையை ரயூலா திருச் செல்வன், நயப்புரையை எழுத்தாளர் வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா, எற்புரையை கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோர் நிகழ்த்துவர். இனிய நந்தவனம் சஞ்கிகையின் யாழ்ப்பாணம் ஆலோசகர் யாழ்ப்பாவாணன் நன்றியுரையாற்றுவார்.

# இஸ்லாமிய விவகாரங்களுக்கான 9 ஆவது மாநாடு!



இஸ்லாமிய விவகார அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கிடையிலான மாநாடு சவூதி அரேபியாவில் நடைபெற்று வருகின்றது.

இஸ்லாமிய விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தும் சவுதி அரேபியா, கடந்த வருடம் இஸ்லாமிய விவகாரங்களுக்கான 8 ஆவது மாநாட்டினை புனித மக்கா நகரில் நடத்தியிருந்தது.

அதன்படி, இவ்வருடத்துக்கான மாநாட்டை, புனித மக்கா நகரில் இரு ஹரம்களின் சேவகரான மன்னர் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் மேற்பார்வை, அழைப்பு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் நடைபெறுகிறது.

பத்து அமர்வுகளைக் கொண்ட இம்மாநாட்டினை முழுமையாக சவுதி அரேபியாவின் நிதியில் அழைப்பு, வழிகாட்டல் மற்றும் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சகம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது.

இந்த 9 ஆவது மாநாடு நேற்று (03 சனிக்கிழமை) ஆரம்பமான நிலையில், நாளை மறுதினம் 5 ஆம் திகதி (திங்கள்) வரை நடைபெறவுள்ளது.

இவ்வாறான மார்க்க விவகார மாநாடுகள், விசேட ஒன்று கூடல்கள், ஆழ்ந்த கலந்துரையாடல்கள் என பல வகையான நிகழ்வுகள் இரு ஹரம்களின் சேவகரான மன்னர் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மது இப்னு சல்மான் ஆகியவர்களின் ஆட்சிக் காலத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாநாடானது "நடுநிலைமை மற்றும் சமநிலையைக் கட்டியெழுப்புவதில் இஸ்லாமிய விவகார அமைப்புகளின் பங்களிப்புகள்" எனும் தொனிப் பொருளில் 60 நாடுகள் உள்ளடங்கலாக இஸ்லாமிய விவகார பொறுப்புதாரிகள், ஆளுமைகள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டின்போது, மத சொற்பொழிவுகளை புத்தாக்கம் செய்தல், நடுநிலைப் போக்கை பலப்படுத்துவதில் அதன் பங்களிப்பு, தீவிரவாதம், பயங்கரவாதம் போன்றவற்றினால் இஸ்லாமிய சமூகத்திற்கு ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுத்தல், பயங்கரவாத செயற்பாடுகளில் இருந்து எமது சமூகத்தை பாதுகாப்பதன் அவசியம் மற்றும் சகவாழ்வு, விட்டுக் கொடுப்பின் பெருமானம் தகவல்களை பகிர்ந்து கொள்ளல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது.

இஸ்லாமிய விவகார மற்றும் அழைப்புப் பணியகத்தின் அமைச்சரும், இம்மாநாட்டின் நிறைவேற்று குழுவின் தலைவருமான அஷ்ஷெய்ஹ் கலாநிதி அப்துல் லதீப் இப்னு அப்துல் அஸீஸ் ஆலுஷ்ஷெய்ஹ், இரு ஹரம்களின் சேவகரான மன்னர் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மத் இப்னு சல்மான் ஆகியோருக்கு தனது நன்றி மற்றும் பாராட்டுக்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



ஏ. சீ. தஸ்தீக் மதனி
பணிப்பாளர் தாருல் ஹிக்மா
சவளக்கடை

# தொண்டைமானாறு செல்வச் சந்நிதி வருடாந்த மஹோற்சவம் இன்று

கரவெட்டி தினகரன் நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று(04) மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பிரதான திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.அதன்படி, 5 ஆம் நாள் காலை திருவிழா, எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறும். அதனைதொடர்ந்து, இரவு 7 மணிக்கு சதுர்த்தி விநாயகப் பெருமானுடன் முருகப் பெருமானும் எழுந்தருள்வார்கள். 15ஆம் நாள் தேர்த்திருவிழா 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணிக்கும், தீர்த்தத்திருவிழா 19ம் திகதி திங்கட்கிழமை காலை 08 மணிக்கும் நடைபெறும். தீர்த்தத்திருவிழாவன்று மாலை 6.30 மணிக்கு மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவு பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 20 ஆம் திகதி செவ்வாய்கிழமை மாலை 6.30 மணியளவில் தொண்டர் பூசை நடைபெறுவதுடன் மகோற்சவ தினங்களில் சந்நிதி சுற்றாடலில் அமைந்துள்ள அன்னதான மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையின் விவசாயத்துறையில் கவனம் செலுத்தும் சக்திமான்



இலங்கையின் விவசாயத்துறையை இயந்திரமயமாக்கும் முயற்சிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதில் சக்திமான் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, உலகில் உணவு உற்பத்திச் சவால்களை வென்றெடுப்பதற்கும் இலங்கையின் பொருளாதார சவால்களை வெல்வதற்கும், சக்திமான் தற்போது முன்வந்திருக்கின்றது.

இலங்கையின் விவசாயத்துறையை இயந்திரமயப்படுத்தும் முயற்சிகள், 10 சதவீதமான அளவிலேயே உள்ள நிலையில், விவசாயத் துறையை இயந்திரமயப்படுத்தலில் சக்திமானின் இயந்திரங்கள் கணிசமான பங்களிப்பினைச் செய்யவுள்ளன.

அதன்படி, நாட்டின் விவசாயத் துறையில் நிலவும் ஆட் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் சூழலுக்கு இசைவான இயந்திரங்களையும் சக்திமான் வழங்குகின்றது.

இதுதொடர்பான பத்திரிகையாளர் மாநாடு அண்மையில் நீர்கொழும்பில் நடைபெற்றபோது, சக்திமான், இலங்கையின் விவசாயத்துறைக்கு ஆற்றவுள்ள பங்களிப்புகள் விளக்கப்பட்டன. இந்தியாவின் முதற்தர விவசாய இயந்திர உற்பத்தியாளரான சக்திமான், உலகின் 100 நாடுகளுக்கு 107 விதமான விவசாய இயந்திரங்களை விநியோகித்துள்ளது. அதன் நிலைபேறான விவசாயத்தை நோக்கிய முயற்சியில் சுமார் 100 விஞ்ஞானக் குழுக்கள் பணியாற்றுகின்றன.

சக்திமானின் பாரிய வீச்சுக் கொண்ட உற்பத்திகள் இலங்கையில் பெரிதும் விரும்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாவனல்லையில் புதிய CC TV கண்காணிப்பு பிரிவு திறந்துவைப்பு




மாவனல்லை நகர பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டுள்ள புதிய CC TV Unit கண்காணிப்பு பிரிவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த 1 ஆம் திகதி, கேகாலை பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் ராஜபக்ஷ தலைமையில் கனேதன்னையில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ், மாவனல்லையில் 11 இடங்களில் பாதுகாப்பு கெமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

இதற்காக ஐக்கிய வர்த்தக சங்கம், சிங்கள வர்த்தக சங்கம் மற்றும் லயன்ஸ் கழகம் என்பன ஒத்துழைப்பு வழங்குகின்றன.

மாவனல்லை பொலிஸ் பொறுப்பதிகாரி லசந்த கலுஆரச்சி, பிரதேச செயலாளர் விஜானி ரத்னசேகர லயன்ஸ் தலைவர் அமீனுல்லா உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பதிவு : அமீர் ஹுசைன்



சவூதி அரேபியாவில் நடைபெறவிருக்கும் மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச புனித அல்குர்ஆன் மனனப் போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும், இளம் ஹாபிழ் அப்துல் ரவூப் முஹம்மத் ஷிபாக், இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியை கொழும்பிலுள்ள தூதரக அலுவலகத்தில் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய முதலாவது ஆய்வு நூல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் முன்னாள் தகவல் அதிகாரியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் எழுதிய இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூலான "திதுலன தாரக்கா" என்ற நூல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவுக்கு நூலாசிரியரால் கையளிக்கப்பட்டது.

ஊடகத்துறை அமைச்சில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. இலங்கை இலக்கிய வரலாற்றில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி எழுதிய முதலாவது ஆய்வு நூலாக இந்நூல் பல்கலைக்கழக பேராசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



# இலங்கையை சுற்றி வரும் சஹ்மியின் சாதனைப் பயணம் கிழக்கு மாகாணத்தில் அமோக வரவேற்பு!




இலங்கையை கரையோரமாக, நடைபவனியில் சுற்றிவரும், பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத்துக்கு, கிழக்கு மாகாணத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி, தனது நடைப்பயணத்தை ஆரம்பித்த சஹ்மி ஷஹீத், நேற்று (03) கிழக்கிலங்கையிலிருந்து, வடமாகாணத்தில் கால்பதிப்பதற்காக, நிலாவெளியிலிருந்து தனது 22 ஆவது நாள் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

நிலாவெளி மக்களின், பிரார்த்தனை மற்றும் பலத்த உற்சாகத்துடன் அவர் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார். இவர் கிழக்கு மாகாணத்தில் கால்பதித்த போது, வரலாறு காணாத மூவின மக்களும் ஒன்று திரண்டு அவரை வரவேற்றிருந்தனர்.

இப்பாரிய வரவேற்பு குறித்து சஹ்மி ஷஹீத் தெரிவிக்கையில், கிழக்கு மக்கள், இன, மத வேறுபாடின்றி தனக்கு வழங்கிய மாபெரும் வரவேற்பினை தான் ஒருபோதும் மறக்க மாட்டேன் எனவும், உண்மையில் தான் இதுபோன்றதொரு வரவேற்பை எதிர்பார்க்கவும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தன்னை சொல்லாலும் செயலாலும், பொருளாலும் ஊக்குவித்த அனைத்து மக்களுக்கும் தனது நன்றியையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சஹ்மியின் பயணத்திற்திற்கு பூரண அனுசரணை வழங்கும், சிமி ஹோல்டிங் நிறுவனத்தின் உரிமையாளரான அல்ஹாஜ் இஜ்லான் யூசுஃப் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

'சஹ்மியின் இப்பயணத்திற்கு, இலங்கையின் மூவின மக்களும் வழங்கும் ஆதரவிற்கு முதலில் நான் நன்றி கூறுகிறேன். சஹ்மியின் இச்சாதனைப் பயணம் எமது பேருவளை மண்ணிற்கு கிடைத்துள்ள ஓர் பெருமை என்றே நான் கூறுகிறேன். ஏனென்றால் இவ்வாறானதொரு துணிச்சல் முயற்சியில் இதுவரை எவரும் ஈடுபட்டதாக நான் அறியவில்லை' என அவர் குறிப்பிட்டுள்ளார்.



களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பமான ஷஹ்மியின் சாதனைப் பயணம், காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களை வெற்றிகரமாக சென்றடைந்துள்ள நிலையில், அடுத்தகட்டமாக முல்லைத்தீவு கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், அனுராதபுரம், புத்தளம், கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டத்தை சென்றடையவுள்ளது.

சஹ்மியின் வருகையை எதிர்பார்த்து, வடமாகாண மக்களும் அவரை வரவேற்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.


ஷஹ்மியின் சாதனைப் பயணத்தின் இறுதிக் கட்டமாக, கொழும்பு மாவட்டத்தில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டு, இறுதியில் களுத்துறை மாவட்டத்தில் கால்பதிக்கும்போது, அங்கிருந்து பேருவளை வரை ஆரவாரமான வாகனப் பேரணிகளோடு சஹ்மியை பேருவளை மண் வாரியணைத்து வரவேற்பதற்கு பேருவளை தயாராகி வருகின்றது.

அத்துடன், தன் சொந்த மண்ணான பேருவளை நகரில் கால்பதிக்கும்போது, ஷஹ்மிக்கு பாரிய வரவேற்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக, ஷஹ்மியின் இப்பயணத்தின் பூரண அனுசரணையாளர், சிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் அல்ஹாஜ் இஜ்லான் யூசுஃப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிந்தித்து செயற்படுவார்களா ஆட்சியாளர்கள்?

## இந்தியா ஒரு நோக்கு
### வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்





இந்திய மக்களைவை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர், தேர்தல் முடிந்துவிட்டது. இனி நாட்டைப் பற்றி சிந்திப்போம் என பிரதமர் நரேந்திர மோடி கருத்து தெரிவித்திருந்தார்.

ஆனால், 2024 - 2025 ஆண்டுக்கான பட்ஜெட் அறிவிப்பில், தங்கள் அரசைக் காப்பாற்றிக் கொள்ளவும் கூட்டணி கட்சிகளை திருப்திப்படுத்துவதற்காக மட்டுமே அறிவிப்புகள் இருந்ததாகவும், அதில் நாட்டைக் காப்பாற்றும் அறிவிப்புகள் எதுவும் இல்லை எனவும் எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்து வருகின்றன.

அரசை பொதுவாக நடத்துமாறும், தோற்கடித்தவர்களை பழிவாங்குவதில் குறியாக இருந்தால், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அரசை நடத்தினால், நீங்கள் தனிமைப்படுத்தப்படுவீர்கள் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருப்பது நாடு முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

பா.ஜ.க தலைமையிலான அரசை விமர்சித்துள்ளதுள்ள தமிழக முதலமைச்சர்,

பா.ஜ.க தலைமையிலான அரசு மூன்றாவது முறையாகவும் வெற்றி பெற்றதன் பின்னர் ஒவ்வொரு விடயத்திலும் விருப்பு வெறுப்புடனே செயல்படுவதாக இந்திய மக்களும் கொந்தளிப்பில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மக்களைவத் தேர்தலுக்கு முன்பு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்திருந்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அதில் தமிழ் நாட்டிற்கு சுமார் 6000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பா.ஜ.க கூறி வந்தது.

ஆனால், அந்த இடைக்கால பட்ஜெட்டில் எந்தெந்த திட்டங்களுக்கு, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படையாக கூறவில்லை.

தேர்தலுக்குப் பின்னர், மீண்டும் பா.ஜ.க தலைமையில் ஆட்சி அமைந்தால், இடைக்கால பட்ஜெட்டில் சொல்லப்பட்ட நிதி விபரங்களின் தன்மைகள் முழுமையாக முழு பட்ஜெட்டில் விபரிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால், அவ்வாறு எதுவுமே இல்லை என்கின்றபோதே, மத்திய அரசின் பழிவாங்கும் போக்கு அம்பலமாகின்றது. அதாவது நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் கூட்டணிக்கு தமிழகத்திலிருந்து சில எம்பிக்கள் கிடைப்பார்கள் என மணக்கணக்குப் போட்டது பா.ஜ.க தலைமை.

எனினும், நரேந்திர மோடி அரசின் 10 ஆண்டு கால ஆட்சியினை ஏற்கவில்லை என்பதற்கான அடையாளமாக தி.மு.க கூட்டணிக்கு 40 இடங்களையும் வாரி வழங்கியது தமிழகம். இதனை பா.ஜ.க தலைவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

ஆதனால்தான், இந்த பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயர்கூட பதிவாகக் கூடாது என தமிழ் நாடு புறக்கணிக்கணிக்கப்பட்டிருக்கின்றது.தேர்தலின் வெற்றி, தோல்வியை வைத்து ஒரு மாநில மக்களை பழிதீர்ப்பது ஆரோக்கியமானதாகக் கருத முடியாது என பொருளாதார அறிஞர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, பா.ஜ.க கூட்டணியை தோற்கடித்த எல்லா மாநில மக்களையும் வஞ்சிப்பதாகவே அவர்களின் போக்கையும் நடவடிக்கையும் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக, கடந்த வாரத்தில் கேரள மாநிலம் வயநாட்டில் மழை வெள்ளதால் மிகப்பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளையும், உறவுகளையும் இழந்துள்ளனர். நிலச்சரிவில் சிக்கி நூற்றுக்கணக்கில் மக்கள் இறந்திருக்கிறார்கள்,

துயரத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு இழப்பீடு வழங்க மத்திய அரசிடம் கேரள அரசு 5000 கோடி இழப்பீடு வேண்டும் என கோரிக்கை வைத்தபோது மத்திய அரசு இந்த நிதியைத் தர மறுத்து விட்டது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 2 இலட்சம் ரூபா மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்தது.

மக்கள் துயரத்தில் இருக்கும்போது பிரதமரோ அல்லது வேறு அமைச்சர்களோ அங்கே வந்திருக்க வேண்டும். ஆனால், ஆளும் கட்சியிலுள்ள எவரும் அங்கே வரவில்லை. காரணம் கேரள மக்கள் பா.ஜ.கவுக்கு வாக்களிக்கவில்லை.

அத்துடன், வயநாடு ராகுல் காந்தி வெற்றி பெற்ற தொகுதி இதையும் ஒரு காரணமாக வைத்து நரேந்திர மோடி அரசு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட வயநாடு மக்களை பெரிதாக கண்டு கொள்ளவில்லை, இதுவே வெறுப்பு அரசியல் நடத்துகிறார்கள் என்பதற்கு சாட்சியாக அமைந்திருக்கின்றது.

இந்நிலையில், துயரத்தில் இருக்கும் மக்களுக்கு ஆறுதல் சொல்லாமல், தாங்கள் கேரள அரசுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்தோம் எனவும், ஆனால் அவர்கள் அதனை கவனத்திற் கொள்ளவில்லை எனவும் உள்துறை அமைச்சர் அமித்ஷா குறிப்பிட்டிருக்கின்றார்.

அமித்ஷாவின் அந்த எச்சரிக்கையில், பெருமழை வரலாம் என மட்டுமே சொல்லப்பட்டிருப்பதாகவும் நிலச்சரிவு வருவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை எனவும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் பதிலடி கொடுத்திருக்கிறார்.

இந்நிலையில், பா.ஜ.கவுக்கு இதுதான் பழிவாங்கும் நேரமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதுவே தங்கள் அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் பீஹாரிலோ, ஆந்திராவிலோ இப்படி ஒரு துயரம் நிகழ்ந்திருந்தால் மத்திய அரசு வேடிக்கைப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நேர்த்தியான சொற்களால் நெஞ்சில் இனிக்கும்
# 'நிதர்சனத்தின் நிழல்'



'நிதர்சனத்தின் நிழல்' 124 பக்கங்களில், 120 கவிதைகளைகளோடு, அழகான முகப்பட்டையோடு, ஏட்டுலாக் கனவாக்கத்தின் வெளியீடாக , கடந்த ஜுலை மாதம் மலர்ந்திருந்தது.

'ஆஷிக் ஹுசைன் என்பவர் பணிப்பாளராகச் செயற்படுகின்ற ஏட்டுலாக் கனவாக்கம்' எழுத்தாளர்களின் கூட்டமைப்பாக, எழுத்தாளர்களின் பலமாக, தேசிய ரீதியில் இணைப்பாளர்களை ஏற்பாடு செய்து கொண்டு, ஹெம்மாதகமையில் இருந்து செயற்படத் தொடங்கியிருக்கின்றது.

"இலைமறை காயாக மறைந்து கிடக்கும் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் புத்தக வடிவமாக்கி, அவர்களின் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொடுத்தல்" என்ற அதன் பிரதான இலக்கை நிறைவேற்றும் வகையில் ஏட்டுலாக் கனவாக்கம் வெளியிட்டுள்ள முதல் நூல் இதுவாகும். நூலின் ஆசிரியர் முபீதா அமீன் ஆவார்.

நாவல், சிறுகதை, திறனாய்வு, இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், நவீனத்துவ, பின் நவீனத்துவ இலக்கியங்கள், நாட்டாரியல் என்று எழுதி ஈழத்து இலக்கியப் பரப்பிற்கு வளம் சேர்த்து வரும் எழுத்தாளர்களைத் தந்திருக்கின்ற அக்கரைப்பற்று மண்ணில் இருந்து, புது வரவாக இந்நூலின் மூலம் எழுத்துலகுக்குள் நுழைந்திருக்கின்றார் முபீதா.

கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளுகின்ற "புதுக்கவிதை" இவரின் வரிகலாகின்றது. உள்ளதை உணர்ந்தவாறு சொல்ல வருகின்றன இவரின் வரிகள்.

'நிதர்சனத்தின் நிழல்கள் ' மூலம் முபீதா, மனித விழுமியங்களைப் பாட விழைகிறார். அன்பு,காதல், பண்பாடு, நம்பிக்கைகள் குறித்ததான மையக் கருக்களில் நிதர்சனப் பார்வையில் அவரின் கவிதைகள் அமைந்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

**"அன்பின்**
**ஆழமாய்**
**இதயத்தின்**
**ஈரமாய்**
**உறவின்**
**ஊற்றாய்**
**எண்ணத்தில்**
**ஏற்றமாய்**
**ஐயமின்றி**
**ஒன்றிணைய**
**ஓருயிராய்**
**ஔடதமானது"** காதல் என்று தனது முதல் கவிதை நூலில் அகர வரிசைக் கவிதை தருகிறார் முபீதா.

> நூல்:– நிதர்சனத்தின் நிழல்
> நூலாசிரியர்:– முபீதா அமீன்.
> வெளியீடு:–ஆஷீக் ஹுசைன்,பணிப்பாளர்,ஏட்டுலாக் கனவாக்கம்,
> F8/1,ஹிஜ்ரா கம,
> ஹெம்மாதகம.
> விலை:–ரூபா 500/–

**"ஒருநாளில்**
**கொண்டாடித் தீர்ப்பது**
**காதலல்ல.**

ஹலாலான நேசம் கொண்ட இரு ஆன்மாக்களுக்கு என்றுமே காதலர் தினம் தான்" என்று 'காதலர் தினம்' என்ற கவிதையில் குறிப்பிடுகின்றார்.

'ஹலாலான நேசம்', 'ஆன்மாக்களுக்கு' என்ற சொற்கள் இக்கவிதையில் கூர்ந்து அவதானிக்கத் தக்கவை.

'ஹலாலான' நேசம் என்று அழுத்தம் கொடுக்கும் போது ,ஹறாமான நேசம் (கூடா நட்பு) குறித்து முபீதா மறைமுகமாக எச்சரிப்பதனையும் உணர முடிகிறது.

'ஆன்மாக்களுக்கு' என்றே அவர் கூறுகிறார் (உடல்களுக்கு என்று கூற வில்லை) என்பதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**ஹலாலான நேசம்,**
**"நீ**
**என் அன்புத் தேடலின்**
**வசந்தம்.**
**ஆதலால்**
**ஜீவன் தேடி**
**வா"** என்று அழைப்பு விடுக்கின்றார் கவிஞர் இன்னுமொரு கவிதையில்.

கருத்தாழம் மிக்க வரிகளின் மூலம், நம்பிக்கையை ஊட்டுகின்ற,செயலூக்கம் தரும் கவிஞராகவும் முபீதா வெளித்தெரின்றார்.

**'சிறகுகள் இருக்கும் வரை**
**பறவைகள் என்றும் தோற்பதில்லை**
**நம்பிக்கை வேரூன்றி விட்டால்**
**வாழ்க்கை என்றும் வெற்றியே'** என்று கவிதை தருகின்றார் அவர்.

முபீதா அமீன், நேர்த்தியான சொற்களில் அறிவுரை தருபவராக, உயர்ந்த கருத்துகளைத் தரும் படைப்பாளியாக புதுக்கவிதை உலகில் அறிமுகமாகிறார். பெரும்பாலான அவரின் கவிதைகள் ஒத்திசைப்பு பெற்று அமைந்திருக்கின்றன.

எனினும்,சில கவிதைகள் ஜனரஞ்சக, புதுக்கவிதைக்காரர்களின் கவிதைகளை ஒத்ததாக வெறும் சொல்லடுக்குகளாகக் காணப்படுவதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இச் சொற்களை ஏன் இப்படி மேலிருந்து கீழாக அடுக்கவேண்டும் என்பதற்கு ஜனரஞ்சகப் பாணிப் புதுக் கவிதைக்காரர்களிடம் பதிலெதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

முபீதா வின் அகர வரிசைக் கவிதையை அகர வரிசை எழுத்துகளைக் குறித்துக் காட்டுவதற்காக வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால், ஒரு மரபு போல ஜனரஞ்சக புதுக் கவிதைக்காரர்கள் சொற்களை ஒன்றின் பின் ஒன்றாக வரிசைப்படுத்துகின்றனர்.

ஒரு வசனத்தை தனித்தனிச் சொற்களாகப் பிரித்து வைத்து விடுகின்றனர். இந்த மரபை முபீதாவும் பின்பற்றுவதைப் பார்க்க முடிகின்றது.

**"உருவங்கள்**
**எப்படி**
**இருந்தாலும்**
**உள்ளங்கள்**
**உண்மையாக**
**இருப்பதே**
**உளப்பூர்வமான**
**அழகு!"**( அழகின் உச்சம்)

"முபீதா அமீன் தனது கவிதைகளை சமூகம் சார்ந்த வெளிப்பாட்டுத் தளத்தில் பொதுவாக நிறுவி விடுகிறார். வாழும் சமூகத்தின் மனிதப் பிரதி நிதிகள் யாவரும் இவரின் கவிதைக்குள் பாத்திரங்களாக வந்து செல்கிறார்கள். சமூகத்தின் பல்வேறு குணங்களையும் அவ்வப்போது சுட்டிக்காட்டுகிறார் " என்று முபீதா அமீனின் முதல் நூலுக்கு அணிந்துரை தந்திருக்கின்ற தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக், கவிதையின் வெளிப்பாட்டுமுறையில் எளிமை சார்ந்த யுக்தியைக் கையாள்பவராக முபீதா அமீனை எடுத்துக்காட்டிப் பாராட்டுகின்றார்.

அதேவேளை, கவிதைகள் வெற்று வசனங்களாவது குறித்தும், சொற்களின் உடைப்புக்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். கவித்துவத்தின் புதிய நுட்பங்கள் குறித்தும் ஆராய வேண்டும். தொடர்ச்சியான வாசிப்பும் தேடலும் வாய்க்கின்றபோது இவரே இவை பற்றி மறு பரிசீலனை செய்யக்கூடும். இப்பரிசீலனையே அவருக்கு கவிதையுலகில் அழியா இடத்தைப் பெற்றுத் தரும் என குறிப்பிட்டு வாழ்த்துத் தெரிவிக்கின்றார் விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக்.

முபீதா அமீனை நாமும் வாழ்த்துகிறோம். படிமம் குறியீடு, தொன்மம், அங்கதம், முரண் போன்ற உத்திகளிலும் தேர்ந்து கொண்டு, இன்னும் பல நூல்களை அவர் தரவேண்டும்.

ஏட்டுலாக் கனவாக்கத்திற்கும் நமது பாராட்டுக்கள்.

நூலாக்கும் நல்ல பணி தொடர வேண்டும்..

*பாவேந்தல் பாலமுனை பாறூக்*


## இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

**இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் இலங்கையின் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன**

| | |
|---|---|
| செயலாளர் பதவி | - 01 பதவி |
| ஆய்வு அலுவலர் பதவி | - 01 பதவி |
| நூலகர் பதவி | - 01 பதவி |
| மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழிநுட்பவியலாளர் பதவி | - 02 பதவிகள் |
| முகாமைத்துவ உதவியாளர் பதவி (தொழில்நுட்பம் சாராதது) | - 02 பதவிகள் |
| சாரதி பதவி | - 03 பதவிகள் |

மேலதிக தகவலுக்கு - http://www.judgesinstitute.lk/ மற்றும் 02.08.2024 திகதியிட்ட வர்த்தமானியைப் பார்க்கவும்.

விண்ணப்ப இறுதித் திகதி: 02.10.2024

**பணிப்பாளர்,**
**இலங்கை நீதிபதிகள் நிறுவகம்,**
**இல.80 (5வது மற்றும் 6வது மாடிகள்),**
**அதிகரண மாவத்தை,**
**கொழும்பு 12.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் மருத்துவ நிபுணர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Psychiatrist
2. Oncologist
3. Vascular & Transplant Surgeon
4. Pediatrics Surgeon
5. Clinical Hematologist
6. Microbiologist
7. Cardiac Anaesthetist
8. Judicial Medical Officers

**தகைமைகள்** : இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PGIM) MD சபைச் சான்றிதழ் சகிதம் அரசாங்க அல்லது தனியார்துறை வைத்தியசாலைகளில் மருத்துவ நிபுணராகவிருத்தல்.

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 118,800.00 - 12x3645.00 - 162,540.00 மாதாந்தம். இதற்கு புறம்பாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்:**
நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2024-08-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

2024-08-01.



## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
### பொதுப் பட்டமளிப்பு 2023 (II)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு 2023(ஐஐ) 28 ஒகஸ்ட் 2024 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (மஹுஜணர்) நடைபெறவுள்ளது. பட்டம்பெற இருப்போருக்கான பட்டதாரி விண்ணப்ப படிவம் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பட்டதாரி விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 07 ஒகஸ்ட் 2024 ஆகும்.

மேலதிக தகவல்களை **https://ou.ac.lk/2023convo2/** எனும் இணையத்தளத்திற்கு சென்று பார்வையிட முடியும்.

விசாரணைகளுக்கு : 011-2881040 / 461 / 350

பதிவாளர்
04 ஒகஸ்ட் 2024

## இலங்கை இராணுவம்
### விலைமனுக்கோரல்

1. பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் (கிழக்கு) கணக்கியல் பணிகளை நிர்வகிக்கும் பல்வேறு இடங்களில் பின்வரும் சேவைகள் மற்றும் தேவையான கொள்முதல்களுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பாதுகாப்பு படைத் தலைமையகம் (கிழக்கு) சார்பாக இலங்கை இராணுவத்தின் பிராந்திய (கொள்முதல்) குழுவின் SFH (E) தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | இடம் | கோப்பு இல. | உருப்படி இல. | அலகு | அளவு | அண்ணளவாக ஒப்பந்தின் மதிப்பீடு 15% வட் வரி உட்பட | மீளச் செலுத்தப்படாத விண்ணப்பக் கட்டணம் (ரூ) சதம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | [illegible] (Angunuwel pelessa) | [illegible]/451/ 24(337) | "Cement - 50 Kg bag (with Transport to Agunuwelpalassa ammo Dump) (Comply to SLS-107/ SLS-1253/ SLS-1247) | Bag | 1027 | 2,208,050.00 | - |

2. இந்த வழங்கல்களுக்காக வெளியிடப்படும் கொள்முதல் ஆவணங்களை பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் (கிழக்கு) 2024.08.04 ஆம் திகதி முதல் 2024.08.25 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1600 மணி வரை இந்த முகாமில் நேரடியாக வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம். இன்றுவரை இந்த அலுவலகத்தை நீங்கள் பார்வையிடலாம், மேலும் மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ள முடியும். அனைத்து மனுக்களும் 2024.08.26 ஆம் திகதி காலை 1000 மணிக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகம் (கிழக்கு), இராணுவ முகாம், வெலிகந்தயில் மனுக்கள் திறக்கப்படும்.

3. தொடர்புடைய பொறியியல் பொருட்களின் பொருத்தமான வகைப்பாடுகளுக்கான அனைத்து விவரங்களையும் www.promise.lk மற்றும் www.army.lk என்ற இணையத்தளங்களைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பாதுகாப்புப் படைத் தலைமையகம் (கிழக்கு).
தொலைபேசி இல : 027-3281937, 077-611 54 70

பாதுகாப்புப் படைத் தலைமையகம் (E)
இராணுவ முகாம்,
வெலிகந்த.



# உணர்வோடு உறவாடி....



விடியலை பறைசாற்றும் வீட்டுச்சேவல் கூவும் சத்தங்களுடன்; சில் வண்டுகளின் ரீங்கார ஓசை விடிந்து விட்டதை கோடிட்டுக் காட்டியது.

முந்தல் ஆற்றின் களப்பில் பரந்து, விரிந்து கிடக்கும் பூசந்தியிலிருந்து பட்டுவரும் ஈரக் காற்றானது உடலில் பட்டதும், உடலெல்லாம் சில்லிடும் அந்த கொடுமையை தாங்க முடியவில்லை.

ஆற்றோரமாக அலங்கோலத்துடன் காட்சியளித்த வீட்டின் மூலையில் தெள்ளப்பாவை குறட்டை விட்டபடி நித்திரையில் மூழ்கியிருந்தான்.

உடல் முழுவதையும் போர்த்தியிருந்த தெள்ளப்பாவுக்கு குளிர்காற்று ஜில்லென்று உடலில் பட்டதும் நித்திரையை விட்டெ
ழுந்தான்.

முந்தல் ஆற்று பூசந்தியில் அமைந்திருக்கும் தொட்டக்களி கழிமுகத்தை நோக்கி வள்ளங்கள் குல்லாத் தோணிகளில் தொழிலாளர்கள் மரக்கோலை ஊன்றியபடி நான் முந்தி நீ.. முந்தி என்று விரைந்து போகின்றார்கள்.

சோம்பல் முறித்த தெள்ளப்பாவை உத்வேகம் ஆட்கொள்ள, அவனால் சும்மா அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை.

தனது வள்ளத்தை தயார்படுத்திய தெள்ளப்பா மீன் பிடிப்பதற்கான கூட்டு வலை, கச்சால், ஜம்பர், சவுல், துடுப்பு, மரக்கோல் இந்தியாதி□ இந்தியாதி சாமான்களை எடுத்த வண்ணம் தனது வள்ளத்தை ஆற்றில் தள்ளினான்.

அப்பாவின் அதீத நம்பிக்கையையும்.. தீவிர தொழில்வாண்மையும் கண்ட மகன் சடையன்.. அப்பா..! என்னப்பா.. நேரம் கெட்ட இவ்வேளையில் காற்றும் மழையும் சோமாரியாக பெய்ய போவுது. அதுக்குள்ள தொழில் சம்பாத்தியமென்று ஒழைக்க நிக்கிறீங்களே. அத்துடன் பாருங்க பனியும், குளிரும் வாட்டி வதைக்கிறது. சோளக் காற்று "சோ" வென்று அடிக்கப் பாக்குது. ஒங்களால இந்த வள்ளத்தில் போய் தொழில் செய்ய முடியுமா..? அப்பா என்றான்.

அட மகன்! இதகேளு. எம்ம படைச்ச கடவுள் படியளக்காமலா போவப் போறான். ஏதோ..! நாமும் எல்லோரும் போல வல போட்டா மீன் படாமலா போகப்போவுது..! என நினைத்துக் கொண்டு வல போடும் போது, மரக்கோல் ஊன்றிய கம்பு அடிபட்டு படுகாயத்துடன் நிலை தடுமாறி நின்றான் தெள்ளப்பா.

தெள்ளப்பா நிலைதடுமாறி ஒரு மாதிரி கரை வந்தடைந்தான். கணவன் படுகாயமடைந்திருப்பதைக் கண்ட மனைவி பூவாச்சி கண்ணீர் மல்கி நின்றாள். காலநிலை சரியில்லை தொழிலுக்கு போகாதங்க..! போகாதங்க என்று கெஞ்சி மண்றாடினேன். எனது சொல்லைக் கொஞ்சமென்றாலும் கேட்டீர்களா? நான் சொல்லும்போது கேட்டிருந்தால் இந்தக்காயம் வந்திருக்குமா? என தன் கணவனிடம் விம்மியவாறே பேச்சுக் கொடுத்தாள் பூவாச்சி. அடியே கல்மனம் கொண்ட பூவாச்சி ஒனக்கு நா சொல்வது கேக்குதாடி...? எங்கயடி உனக்கு அது தெரியப்போவுது. நான் பட்டபாடும் அடைந்த வேதனையும் ஒருபக்கம் பனியும் குளிரும் வாட்ட மறுபக்கம் என்னை படாதபாடுபடுத்தியது. அது மட்டுமாடி?

இந்தாபாரு என்ர பசியைப் போக்க..கஞ்சித்தண்ணீர் இருந்தா தரமாட்டியா..? நா வெறுங்கொடலுடன் நிற்கிறனடி.

கணவன் தெள்ளப்பாவின் பச்சாதாபக் குரலைக் கேட்ட மாத்திரமே.. அரக்கப்பறக்க வாய்க்கு ருசியான மீன் பொரியலுடன் சோற்றை அமுதமாகப் பகிர்ந்தாள் பூவாச்சி.

அப்பா இந்த மரக்கோலை ஊன்றி ஒங்களால போகமுடியுமா? அப்பா! ஏன் இப்படி கஷ்டப்படுறீங்க. இது தேவையா? கொஞ்சம் காத்து பனி ஓய்ஞ்சா.. வள்ளத்த ஊன்றி போங்க அப்பா..! என மகன் சடையான் இறைஞ்சி கேட்டு நின்றான்.

மகன் சொல்லுவது சரிதான் என்பதை உள்வாங்கிய பூவாச்சி..! ஓ.. ஓ.. நல்லா.. சொல்லப்பா..! ஒன்ர அப்பாவுக்கு காதுல ஏறும்வரை, சொல்லு. நானும் விடிஞ்ச பொழுதிலிருந்து சொல்லிவாரன். கொஞ்சம் பொறுங்க.. பொறுங்க என்று கெடுபுத்தி சொல் கேளாது என சும்மாவா சொன்னாங்க. ? இப்ப வந்து படுகாயத்துடன் நின்றார்.

மரக்கம்பு அடிபட்ட படுகாயத்துடன் வந்து நிற்கும் கணவனின் பரிதாப கோலத்தைக் கண்டு மனத்துயரடைந்த பூவாச்சி.. நமது சொல்ல கேட்டிருந்தா இந்த காயம் ஏற்பட்டிருக்காது என மனதுக்குள் நினைத்தாள்.

களைப்புடன் வந்து உணவு உண்ட பின்னர் தெள்ளப்பா தன்னைச் சுதாகரித்தவனாகக் காணப்பட்டான்.

முந்தல் கடற்பரப்பில் தோட்டக்களி கழிமுகம் இறால், வளத்தில் பெயர்போன இடம். இதைச்சுற்றி வர இறால் பண்ணைகள் காட்சியளிக்கின்றன. இப்பண்ணையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களால் இரசாயன நீர் வந்து கலப்பதால் இயற்கையாக உற்பத்தியாகும் இறால், மீன்கள் என்பன மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் கூட்டுவலைத் தொழில் முன்னர் போல வருமானம் தரும் தொழிலாக இல்லை. இத்தொழிலை கை விட்டு போடுவலை போட்டு மீன் பிடிப்பது நல்லதுதான். வருமானத்தை கூடுதலாக தரும் தொழிலாக இருக்கும் என நினைத்து அதை முன்னெடுப்பது நல்லது என தனது மனைவி பூவாச்சியின் கவனத்துக்குக் கொண்டுவந்தான் தெள்ளப்பா. இது நல்ல யோசனை என்ற கருத்தை உள்வாங்கிய பூவாச்சி, சரியென பச்சைக் கொடி காட்டி விட்டாள்.

கூட்டுவலைத் தொழில் தனது பரம்பரைத் தொழில் என்ற எண்ணம் அவனது மனதை வேகப்படுத்தியது. வந்தவன் போனவனெல்லாம் இப்பகுதியில் தொழில் செய்ய வெளிக்கிட்டிட்டினம். எந்த முறையில் மாற்றங்கள் பாதிக்காத வகையில் இத்தொழிலை முன்னெடுக்க வேண்டும் என்ற தீராத யோசனையில் காணப்பட்டான்.

ஆனால் இந்த தோட்டக்களி கழிமுகத்தில் வந்தவன், போனவனும் இதைப்பற்றி ஒன்றும் அறியாத புரியாதவனெல்லாம் இத்தொழிலை செய்ய முன்வந்து விட்டதுடன் இது சண்டியனுக்கும் காடையனுக்கும் ஏத்த இடமா போச்சி பாரு. இதை நாம கை விடுவது சாலச் சிறந்ததென்று நினைத்து தனது மனத் துயரை வெளிப்படுத்தினான்.

அடியே..! பூவாச்சி நம்மட ஊர்த் திருவிழா வருவுது எம்மாத்திரம் செலவு போவும் என்பது ஒனக்கு தெரியுமாடி! அதுவும் ஒரு நாள் கொண்டாட்டமாடி நம் முன்னோர்கள் பதினெட்டு நாள் உற்சவத்த வச்சிருக்காங்க. பாரு நம்ம திரௌபதியாத்தாளுடைய தீமிதிப்பு பெருவிழா என்றா சொல்லவா முடியும். அதுவென்றும் இதுவென்றும் கொண்டாட்டம் களைகட்டும். நம்ம ஊர் விழாவோட மற்ற ஊர் திருவிழாவ ஒப்பிட முடியாது. நம்ம இவ்விழாவானது மற்றைய இனக் குழுமத்திற்கு பக்தியின் நெறிமுறையை எடுத்துச் சொல்லும் விழாவாச்சி பாரு.

சரிங்க நீங்க சொல்வது கேக்குது. ஆனா ஒங்கட நெலமையை பார்த்தாத்தான் எனக்கு கவலையா இருக்குதுங்க.

ஏண்டி! பூவாச்சி இப்படியெல்லாம் சொல்லுற.?

வேற நா எப்படித்தான் சொல்ல? இந்த காலங்களில் நீங்க கொரங்கு புத்தியுடன் தண்ணிய உள்ளவிட்டு நடந்து கொள்ளுவீங்க. அந்த கன்றாவி எனக்கு கொஞ்சமும் பிடிக்காதுங்க என்று கூறி முடிக்குமுன்னே..!

ஏண்டி பூவாச்சி நீ விதாண்டாவாதமா பேசுறா? என தொள்ளப்பா கடிந்து கொண்டான்.

அடியே..! நா.. வந்து ஒன்னு கேட்கிறன். திருவிழாக் காலமென்றால் நாலு பேருடன் சேர்ந்து ஒன்றாகக் கூடி குலாவி போத்தலுடன் பொரித்த மீனை ஒரு கடி கடித்து விட்டேனென்றால் பூவாச்சி அந்த இன்ப லோகத்த ஒனக்கு என்னவென்று சொல்ல?

சரிங்க..! ஒங்கட வண்டவாளத்த இத்துடன் நிறுத்துங்க. இதக் கேட்டு கேட்டு காது புளிச்சு போச்சு விடிந்தா தீமிதிப்பு விழாங்க.

அதிகாலையில் ஊர் சனங்கள் எல்லாம் அரக்கப் பரக்க எழுந்து நீராடி ஆலயத்தில் குவிவார்கள். விழாவின் மூலத்தீ எடுக்கும் காட்சியைக் காண முண்டியடித்து நிற்பார்களே அந்த கண்கொள்ளாக் காட்சியை பார்த்தாலே நம்ம ஒடம்பெல்லாம் புல்லரிக்கும்.

எல்லா அடியார்களும் தத்தம் நேர்த்திக்கடனை முறைப்படி கடைப்பிடித்தனர்.

இதற்கு விதிவிலக்காக தெள்ளப்பா நடந்து கொண்டான். தான் வழமையாக நடந்து கொள்ளும் கொள்கையில் விடுபடாமல் சாராயத்தை உள்ளே விட்டு தீயில் இறங்கினான்.

தெய்வக் குற்றத்துக்கு ஆட்பட்ட தெள்ளப்பா கால் தவறி தீக்கிடங்கில் விழுந்தான். படுகாயத்துடன் அவனை மீட்டெடுத்தார்கள் சக அடியார்கள்.

"தாயே! ஆத்தாளே, நான் செய்த குற்றத்தை மன்னித்து அருளம்மா. அடுத்த முறை நான் உன் சன்னதியில் நேர்மை தவறாமல் என் நேர்த்தியை நெறிபிறழாமல் செய்வேன் தாயே" என சாஷ்டாங்கமாக வணங்கி நின்றான். என் நேர்த்தியை அப்பழுக்கற்ற முறையில் நிறைவேற்றுவேன் என தன் மனதில் துதித்துக் கொண்டவனாக நின்றான்.

காலச்சக்கரம் எவ்வித விக்கினமுமின்றி நகர்ந்தது. வீட்டின் முன் அமைக்கப்பட்ட ஓலையினால் வேயப்பட்ட ஒச்சாபின் கீழ் ஆழ்ந்த யோசனையில் தன் தொழிலை நினைத்து கவலைப்பட்டவனாக நின்றான் தெள்ளப்பா.

பக்கத்து வீட்டு செல்வமணி போடுவலை போட்டு அவனுக்கு மீன் அம்பிடுவதைப் பார்த்து இவனுக்கு இருப்புக் கொள்ள முடியவில்லை. ஒடைஞ்ச தெப்பமும் பீத்தலான வலையையும் கொண்டு தன் கண் முன்னாலேயே அவன் இறுமாப்புடன் மீன்களைக் கொண்டுபோவதைப் பார்த்து தெள்ளப்பாவுக்கு மனதில் கிலேசம் துளிர்விட்டதுடன் அவன் ஒருவித அச்ச உணர்வோடு காணப்பட்டான். தெள்ளப்பா கண்ணுற்ற தன் ஆப்த நண்பனை நாடி! ஏண்டா..!! மச்சான் செல்வமணி இன்றைக்கு தொழில் எப்படியப்பா ? நீ மாத்திரம் மீன்களைப் பிடித்து அள்ளிக் கொண்டுவார! ஏதாவது சூனியம்; கீனிய மொறையில மீன் பிடிக்கிறியாப்பா? அந்த உன் ரகசியத்தை என்கிட்டயும் கொஞ்சம் செல்லன் பாப்போம்.

ஓய் தெள்ளப்பா! மீனை பிடிக்க கிரமமான முறை இருக்கு. முக்கியமா கஷ்டப்பட வேண்டும். கண்ணில் எண்ணவிட்ட மாதிரி விழித்துக் கொண்டிருக்க வேண்டும். அது இது வென்று சாக்குப் போக்கு சொல்லக்கூடாது.

எம்மட முழுக்கவனமும் மீன்கள் சுழி போடும் இடத்தில் இருக்க வேண்டும். வலை போட்டு பாடடித்து நின்றால் தப்பாமல் மீன்களை அவக்கண்டு பிடித்து விடலாம் என புத்தி புகட்டினான்.

இதைக்கேட்ட தெள்ளப்பா நண்பர் செல்வமணியுடன் சேர்ந்து மீன்பிடிக்க சென்றான்.

ஆற்றில் இருவரும் பிடித்த மீன்களுடன் கரையேறி மீன் சந்தைக்குச் சென்று மீன்களை கூறு போட்டு வித்து கையளவு காசை பெற்றுக் கொண்டார்கள். அன்றைய தினம் மீன்விலை மிகக் குறைவுதான் என்றாலும் மீனை வாங்க சனங்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றார்கள். அடே..! மச்சான் செல்வமணி! ஒடம்பும் கொஞ்சம் சவுத்தா இருக்குது பாரு. வல போட்டு இழுத்தேன் பாரு ஒடம்பும் மாச்சலாக இருக்கிறது. நம்மட செல்லம்மா வீட்டுக்கு போய் கொஞ்சம் குடிப்பமா?

சரியென்று தெள்ளப்பா தலையசைக்க, இருவரும் உள்ளே சென்றார்கள்.

ஓய்... செல்வமணி எப்படி வாழ்க்கையை கொண்டு நகர்த்துகிறா? "ஐயோ என்ர மவள் கலா இருக்கிறாளே? அவள் ஒத்தக்காலில் நிற்கிறா. அவன் தான் வேணுமெண்டு பிடிவாதமா இருக்கிறா மச்சான். நா.. எவ்வளவோ சொல்லி பாத்துட்டேன். சொல்வழி கேக்க மாட்டேங்குறா.

இந்தா பாரு செல்வமணி! இந்த காலம் பொல்லாத காலமப்பா! நான் புடிச்சது தான் சரி என்பார்கள். அது நல்லதா கெட்டதா என்று யோசித்து புத்தியுடன் நடக்க மாட்டாங்க.

சரிதான் மச்சான் நீ சொல்லுவது. நாம் சொல்லு கேட்டு நடந்தோம். அவங்கட சொல்லை தெய்வ வாக்காக எண்ணினோம். கீறின கோட்டை தாண்ட மாட்டோம். ஒனக்கு இதுதான் எதிர்காலத்துக் ஏற்றவள் என கோட்டை வரைந்தால் அதற்கு கீழ்பணிந்து நடந்தோம். அதனால் தான் நம்மளை நாலு பேர் மதிக்கிறாங்க. நாமும் பெரியோரை கனம் பண்ணி நடந்து கொள்கின்றோம்.

இப்ப பாரு தெள்ளப்பா பெரியவர்கள் யார் என்று சொன்னா அவங்களுக்கு கொம்பா முளைச்சிருக்கு என்று கேட்கிற காலம் மச்சான் இது.

செல்வமணி கருத்துக்களை உள்வாங்கியதுடன் வீட்டை நோக்கி நடை பயின்றான். களைகட்டிய அவனது வீடு சோபை இழந்து காணப்பட்டது. அங்கே தன் மகளைக் காணாத மனைவி வீட்டின் மூலையில் தனி மரமாக நின்றாள்.

தெள்ளப்பா இல்லம் அடைந்ததும் தன் மனைவி பூவாச்சி தனது கணவனை மனமுவந்து வரவேற்று நின்றாள்.


நண்பர்கள் இருவரும் வழமை போல் வேண்டா வெறுப்பாக தொட்டக்களி கழிமுகத்தை நாடி சோகத்துடன் நகர்கின்றார்கள்

கலாபூஷணம்
உடப்பூர் வீரசொக்கன் ...

உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல உங்கள் கவிதைகளையும் 200 சொற்களுக்கு மேற்படாமலும், அவ்வாறே நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

_ஆர்_

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:132



திரு/திருமதி.செல்வி ....................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ....................................
....................................
....................................

.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 132
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 132

### இடமிருந்துவலம் கீழ்

1. அறிவுரை
5, ஓர் உறுப்பு
7. இதுவும் ஒரு பறவைதான் (குழம்பியுள்ளது)
8. காற்று
9. நாட்காட்டியுடன் இணைந்தது
11. ஓர் உள்ளுறுப்பு
12. ஒருவகை உணவுப் பண்டம்
15. வயதில் மூத்த நிலை
16. ஒரு மலர்
18. ஒரு காட்டு மிருகம் (திரும்பிவிட்டது)
19. ஒரு நீர்நிலை
20. இதுவும் ஒரு உணவு
21.ஒருவகை விளையாட்டு (திரும்பியுள்ளது)
23. தற்காலிகமாகத் தங்கும் வாடகை இல்லம் (குழம்பியுள்ளது)
24. திருமணமாகாத பெண்

### மேலிருந்து கீழ்

1. நிலத்திலிருந்து காற்றினால் மேலெழும் மண் துகள்
2. இனிப்புச் சுவை
3. போதை தரும் பானம்
4. நீதிமன்றில் வழக்குத் தொடுப்பவர் (தலைகீழ்)
5. பாதுகாப்பு
6. நீர்ச் சொட்டு
10. அறுசுவைகளுள் ஒன்று
11. கேள்விக்குரிய விடை
13. நடுப்பகுதி (குழம்பியுள்ளது)
14. தலைமுடி
15. மருந்தாகப் பயன்படும் தாவரம்
17. இளைஞன் குழம்பிவிட்டான்
19. கடல்வாழ் உயிரினம்
20. அரைப்பங்கு
21. நாயின் குணம் இதுதான் (தலைகீழ்)
22. பழம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 131

### விடைகள்

#### இடமிருந்துவலம்

1. மேதாவி
4. சுவாசம்
8. கர்ணன்
10. தட்டை
11. கடம்
13. மாடி
14. சாம்பல்
15. பனி
16. விடுமுறை
19. கறி
21. ஆமை
22. தமையன்
24. தடை
26. சாம்பல்
27. வன்னி

#### மேலிருந்து கீழ்

1. மேன்மை
2. தார்
3. விகடம்
5. வாடை
6. சட்டி
7. மாதம்
9. பணம்
12. கல்வி
14. சனி
15. பரதம்
17. ஆடு
18. முதன்மை
19. கயல்
20. பன்றி
23. சாமை
25. வடை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எச்.எம்.எம் தாஹா,** இல 66, உடவெல, 2ஆம் மைல் கல், பசறை வீதி, பதுளை | **என்.கே. வேணி** 25/10 சேர்ச் வீதி, பலாங்கொடை | **என்.எஸ்.ராஜீவ்,** பிரதேச செயலகம் முசலி மன்னார் |

### பாராட்டு பெறுவோர்

**1. ஜீ. துவாரகன்**
பெரியநீலாவணை

**2. ராஜினி சிவஞானம்**
மட்டக்களப்பு

**3. எம்.எச்.ஏ. முப்லிஹா**
கிண்ணியா

**4. கே.எம்.எம் பாரூக்**
மாத்தளை

**5. எம்.ஏ. ஏ. அத்தாஸ்**
மாத்தறை

**6. சி. அருந்ததி**
பதுளை

**7. ஏ.சீ. சிறிதரன்**
கொழும்பு 06

**8. எம். அகஸ்டின்**
லுனுகலை

# மக்கள் உரிய நேரத்தில்

**4 ஆம் பக்க தொடர்...**

ஜனநாயக ஓட்டத்தில் இணைந்து, வளர்ச்சி பெறுவது இந்த நாட்டின் ஜனநாயகத்தினுள் முக்கியமான நல்ல அறிகுறியாகும்.

**சஜித் நாமல் ஆகியோருக்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாக செய்தி வெளியாகியிருந்ததே. இது உண்மையா? அவ்வாறு என்ன பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது?**

எனக்குத் தெரிந்த வகையில் அவ்வாறான எந்த பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை. ஒரு ஜனநாயக கட்சி என்ற வகையில் ஏதேனும் ஒரு பேச்சுவார்த்தைக்குச் செல்வதாக இருந்தால் கட்சியுடன் பேசிவிட்டுத்தான் செல்வார்கள். மக்களின் தலைவர்கள் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்கு முதலாளித்துவ சக்திகளின் நண்பர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான நேரங்களில் இவ்வாறான செய்திகளைப் பரப்புகின்றார்கள். சரியானதைத் தெரிவு செய்யும் அளவுக்கு மக்கள் நல்ல சிந்தனையுடன் இருக்கின்றார்கள்.

**என்றாலும் நாடு உள்ளாகியிருந்த நிலையிலிருந்து தற்போது மீண்டிருக்கின்றதுதானே? மக்களுக்கும் நிவாரணங்கள் கிடைக்கின்றனவே?**

நாம் இன்னும் சர்வதேச கடனை செலுத்த ஆரம்பிக்கவில்லை. அப்படியான ஒரு நிலையே உள்ளது. எனவே, உண்மையிலேயே நிவாரணங்கள் வழங்கப்படுகின்றதா அல்லது வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. பொருட்களின் விலையை குறைத்து மக்களை கவரும் தந்திரம் இது.

தேர்தல் முடிந்ததும் பொருட்களின் விலைகளை இன்னும் அதிகரிக்க வேண்டிவரும். இந்த நிலையை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

**சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை மாற்றுவதாக உங்கள் கட்சியைச் சேர்ந்தோர் கூறியுள்ளார்கள். சர்வதேச ஒப்பந்தங்களில் அவ்வாறான மாற்றங்களை மேற்கொள்ள முடியுமா?**

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்கள் தானே?

அந்நேரம் நாம் எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். அவர்கள் எம்மோடு பேச்சுவார்த்தை நடத்தியது சும்மா அல்லவே. புதிய ஜனாதிபதி ஒருவருக்கு புதிய மக்கள் ஆணைக்கு வாய்ப்பு கிடைக்கும். இந்த ஒப்பந்தத்தை மாற்றி இரு தரப்பினரும் இணங்கக் கூடிய நாட்டிற்கு அதிக நன்மை தரக்கூடிய இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

ஒவ்வொரு புதன்கிழமையும் எமது பொருளாதாரக் குழு கூடிப் பேசி எமது பொருளாதார நோக்கினை வெளிப்படுத்தும்.

# கீழ் மட்ட வாக்காளர் இல்லாமல்

**4 ஆம் பக்க தொடர்...**

**உங்கள் கட்சியின் வேட்பாளராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றதே?**

நாம் இன்னமும் அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ளவில்லை. வரும் 07ஆம் திகதி எமது வேட்பாளரை அறிவிப்போம். தம்மிக்க பெரேரா என்பவர் எமது கட்சியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். அதேபோன்று முன்னாள் அமைச்சருமாவார். எனவே எமது கட்சியின் வேட்பாளர் அவராகவும் இருக்கலாம். அல்லது வேறு ஒருவராகவும் இருக்கலாம்.

**என்றாலும், இந்த நிலை ஏற்படுவதற்கு காரணம், நாமல்ரா ஜபக் ஷ அடிக்கடி கூறி வந்த மொட்டுவிற்கு தனியான வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்ற கருத்தேயாகும் என ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்த உங்கள் கட்சியைச் சேர்ந்த பலர் தெரிவித்துள்ளார்களே?**

எந்த ஒருவராலும், எந்த ஒரு குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியும். எனினும் அதனை சாட்சிகளுடன் நிரூபிப்பதோடு, அதனை ஏற்றுக் கொள்ளவும் வேண்டுமல்லவா. இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நான்கு, ஐந்தாக உடைந்துள்ளது. இந்த தேர்தலின் பின்னர் யார் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ள முடியும்.

**பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளரை நீக்க வேண்டும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறினாரே?**

இந்தக் காலத்தில் இவ்வாறான செய்திகளை எப்படி வேண்டுமானாலும் உருவாக்க முடியுமே. பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்படுவது மாத்தறை மாநாட்டில் அல்லவே. கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் அரசியல் சபையினால்தானே பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்படுகின்றார்.

**நீங்கள் ஒரு முதிர்ந்த அரசியல்வாதி என்ற வகையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சமூக விமர்சகர்களின் கருத்துக்கள் மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமைகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

குறிப்பாக எமது நாட்டில் நிவாரணங்களுக்காகக் காத்திருக்கும் மக்களின் மனப்பான்மை மாற்றப்பட வேண்டும். அதேபோன்று, தனியார்மயமாகும் போது உழைக்கும் மக்களைப் பாதுகாக்கும் நடைமுறைகள் நம் நாட்டில் இல்லை. ஏற்கனவே சதொச மூடப்பட்டு ஏராளமானோர் வெளியே உள்ளனர். நெடுஞ்சாலை தொடர்பான பல நிறுவனங்கள் மூடப்பட்டு பலர் வெளியில் உள்ளனர். பொறியியல் கூட்டுத்தாபனமும் அவ்வாறுதான். தனியார்மயமாக்கலை நாம் எதிர்க்கவில்லை. வெறுமனே சம்பளத்தை வழங்கி ஊழியர்களை வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனினும் ஊழியர்களுக்கு தொழில் பாதுகாப்பு இருக்க வேண்டும். 30 – 35 வயதுடைய ஒருவரால் இன்று வேலையை விட்டுவிட்டு தொழில் ஒன்றைத் தேடுவது எளிதான காரியம் அல்லவே. முதலீட்டாளர்களை வரவழைக்க வேண்டும். என்றாலும் எமது கொள்கையாக இருக்க வேண்டியது நமது சொத்துக்களை அப்புறப்படுத்தல், அல்லது விற்பனை செய்தல் அல்ல.அந்த அனைத்து மனப்பான்மைகளும் ஜனரஞ்சகக் கொள்கையாக செயல்படுத்தப்பட வேண்டும். உள்ளூர் முதலீட்டாளர்கள் இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எமது கட்சியின் கொள்கைகள் உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகும்.


## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல்

1. பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் (கிழக்கு) கணக்கியல் பணிகளை நிர்வகிக்கும் பல்வேறு இடங்களில் பின்வரும் சேவைகள் மற்றும் தேவையான கொள்முதல்களுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பாதுகாப்புப் படைத் தலைமையகம் (கிழக்கு) சார்பாக இலங்கை இராணுவத்தின் பிராந்திய (கொள்முதல்) குழுவின் SFH (E) தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | இடம் | கோப்பு இல. | உருப்படி இல. | அலகு | அளவு | அண்ணளவான மதிப்பீடு 18% வட் வரி உட்பட | மீளச் செலுத்தப்படாத விண்ணப்பக் கட்டணம் (ரூ) சதம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | [illegible] (Trinco-malee ) | [illegible]/451/24(304) | 0.47mm thk 762mm wide (effective width) Zn/Al colour bond trapezoidal ribs profile roofing sheets (G550,AZ150)( colour approved by the Architect) | L.ft | 2040 | 2,305,200.00 | - |
| | | | 0.47mm thk Zn/Al colour bond 450mm wide ridge cap ( colour approved by the Architect) | L.ft | 125 | 73,750.00 | - |

2. இந்த வழங்கலுக்காக வெளியிடப்படும் கொள்முதல் ஆவணங்களை பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் (கிழக்கு) **2024.08.04** ஆம் திகதி **2024.08.25** வரை வாரத்தின் வேலை நாட்களில் **0900** மணி முதல் **1600** மணி வரை இந்த முகாமில் நேரடியாக வருகைத்தந்து பெற்றுக்கொள்ளலாம். இன்றுவரை இந்த அலுவலகத்தை நீங்கள் பார்வையிடலாம், மேலும் மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ள முடியும். அனைத்து மனுக்களும் **2024.08.26** ஆம் திகதி காலை 1000 மணிக்கு **பாதுகாப்புப் படைத் தலைமையகம் (கிழக்கு), இராணுவ முகாம், வெலிகந்தயில்** மனுக்கள் திறக்கப்படும்.

3. தொடர்புடைய பொறியியல் பொருட்களின் பொருத்தமான வகைப்பாடுகளுக்கான அனைத்து விவரங்களையும் **www.promise.lk மற்றும் www.army.lk** என்ற இணையத்தளங்களைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பாதுகாப்புப் படைத் தலைமையகம் (கிழக்கு).
தொலைபேசி இல : 027-3281937, 077-611 5470

பாதுகாப்புப் படைத் தலைமையகம் (E)
இராணுவ முகாம்,
வெலிகந்த.



## சுகாதார அமைச்சு

### அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

## தேசிய போட்டிரீதியான விலை கோரல் – (NCB)

### அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களம் / களஞ்சியசாலை வசதிக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு / குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல்

**கேள்வி இல: SPMC/MKT/01/2024 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்**

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களம் / களஞ்சியசாலை வசதிக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு / குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன மற்றும் பின்வரும் கட்டாயத் தேவைப்பாடுகளைக் கொண்டவர்கள் அதற்கேற்ப விலைக்கூறல்களை முன்வைக்கலாம்.

**கட்டாய தேவைப்பாடுகள்:**

- மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 6,000 முதல் 10,000 சதுர அடி வரையில் இருக்க வேண்டும்.
- கொழும்பு சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள இடங்கள் மற்றும் இரத்மலானைக்கு அண்மையிலுள்ள களஞ்சியசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தண்ணீர், மும்முனை மின்சாரம், தொலைபேசி வசதி போன்ற வசதிகள் களஞ்சியசாலையில் இருக்க வேண்டும்.
- இடப்பரப்பினுள் கொள்கலன்கள் (20 அடி) நுழைவதற்கும் நகர்த்துவதற்குமான அகலமான பாதையுடன் நெரிசல் இல்லாத பிரதேசத்தில் இருக்க வேண்டும்.
- களஞ்சியசாலையின் கூரை உயரம் சுமார் 12 அடியாக இருக்க வேண்டும்.
- நிலமும் களஞ்சியசாலையும் வெள்ள அபாயங்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதுடன் சதுப்பு நிலமாக இருக்கக்கூடாது.
- பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான வசதிகள்.
- ஃபோர்க்லிஃப்ட் களஞ்சியசாலையினுள் நகரக்கூடியதாக இருக்க வேண்டும்.
- போதுமான காற்றோட்ட வசதி மற்றும் வெளிச்சம் இருக்க வேண்டும்.
- பொருட்களை நகர்த்துவதற்கு மாடி கட்டிடத்திற்கு மின்னுயர்த்தி (லிஃப்ட்).
- இடப்பரப்பினுள் வளிச்சீராக்க வசதி இருக்க வேண்டும். (இல்லையென்றால் விலைமனுதாரர் விலையை A/C உடன் குறிப்பிட வேண்டும் மற்றும் ஒப்பந்தத்திற்கு முன் வசதியை வழங்க வேண்டும்)

களஞ்சியசாலை ஏதேனும் விருப்ப வசதிகளைக் கொண்டிருந்தால், தயவுசெய்து உங்கள் முன்மொழிவுகளில் தனித்தனியாக குறிப்பிடவும். அந்த விருப்ப வசதிகள் மதிப்பீட்டின் போது மேலதிக நன்மையாக இருக்கும்.

அரச மருந்துப் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல தோட்டம், இரத்மலானை என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் இணக்க அறிக்கையை இலவசமாகப் பரிசோதித்து பெற்றுக்கொள்ளலாம்

வளமுள்ள விலைமனுதாரர்கள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட இணக்க அறிக்கையை முறையாக பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன் 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களம் / களஞ்சியசாலை வசதிக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு / குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல் - கேள்வி இல: **SPMC/MKT/01/2024** 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தல்'' எனத் தலைப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் 15ஆம் திகதி அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும்.

ஏதேனும் தெளிவுபடுத்தல்களை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - பெறுகைகள் மற்றும் திட்டமிடல் அவர்களிடமிருந்து 2637574, 2635353, மற்றும் 2636966 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட்,**
**இரத்மலானை, இலங்கை.**

**தொலைநகல் இல.: (00) 94-11-2634771**
**தொலைபேசி இல.: (00)94-11-2635353/ (00) 94-11-2637574/ (00) 94- 11- 2623298**

**இணையதளம்: www.spmc.gov.lk**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இலக்கம் | தலைப்பு |
| MOE/STHRD/SB/E68: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடம் சூரியசக்தி முறைமை II என்பதன் பெறுகை (''பொருட்கள்'') |
| MOE/ STHRD/SB/FAS/F1 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான ஆய்வுகூட தளபாடங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOE/ STHRD/SB/FAS/F2 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான தளபாடங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2024 செப்டெம்பர் 03ஆம் திகதி 10:00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து **(ADB)** கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் **(ADB)** வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்காக (``பொருட்கள்'') தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். ஒப்பந்தம் கையளிக்கப்படும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 90 நாட்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். இல. ரூபா | கடந்த மூன்று வருடங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப்பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. இல. ரூபா |
|---|---|---|
| **MOE/STHRD/SB/E68:** | | |
| Lot 1-Solar PV System and EV Charging Unit | 27,120,000.00 | 67,800,000.00 |
| **MOE/ STHRD/SB/FAS/F1:** | | |
| Lot 1- Laboratory Furniture for the Department of Food Science Technology-Set 01 | 4,088,000.00 | 10,220,000.00 |
| Lot 2- Laboratory Furniture for the Department of Food Science Technology-Set 02 | 2,960,000.00 | 7,400,000.00 |
| Lot 3- Laboratory Furniture for the Department of Food Science Technology-Set 03 | 3,000,000.00 | 7,500,000.00 |
| Lot 4- General Furniture for the Department of Sport Science and Physical Education-Set 01 | 2,560,000.00 | 6,400,000.00 |
| Lot 5- General Furniture for the Department of Sport Science and Physical Education-Set 02 | 7,392,000.00 | 18,480,000.00 |
| **MOE/ STHRD/SB/FAS/F2** | | |
| Lot 1- Laboratory Furniture for the Department of Natural Resources | 10,080,000.00 | 25,200,000.00 |
| Lot 2- Laboratory Furniture for the Department of Physical Science and Technology | 9,920,000.00 | 24,800,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அதிகாரி,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-3123691**
**மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் மேற்கூறப்பட்ட பெறுகை இலக்கங்களில் குறிப்பிடப்படும் விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2024-08-04ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2024-09-03ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையின் மூலப் பிரதியுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

**பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**STHRDP செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | தலைப்பு |
|---|---|
| MOE/STHRD/SB/E68: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடம் சூரியசக்தி முறைமை II என்பதன் பெறுகை (''பொருட்கள்'') |
| MOE/ STHRD/SB/FAS/F1 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான ஆய்வுகூட தளபாடங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOE/ STHRD/SB/FAS/F2 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான தளபாடங்களின் பெறுகை (''பொருட்கள்'') |

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140** **திகதி: 2024-08-04**

# சிந்தித்து செயற்படுவார்களா ஆட்சியாளர்கள்?

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக் கொண்டிருக்குமா? என்ற கேள்வி அரசியல் நிபுணர்களிடமிருந்து எழுவதும் நியாயம் தானே!

இதனிடையே, மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க எம்பிக்களின் எண்ணிக்கை குறைந்த பிறகும் பிரதமர் நரேந்திர மோடி அரசு பாடம் கற்கவில்லை. இன்னும் அவர்கள் மாயையிலேயே இருக்கிறார்கள் என சோனியா காந்தியும் தனது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார். இயற்கை பேரிடரால் நாடு முழுவதும் பலர் உயிரிழந்து வரும் நிலையில், நிர்வாகத் திறமையின்மையால் இதனை சரியாகக் கையாள முடியாது அரசு திணறுவதாக அவர் விமர்சனம் செய்திருக்கின்றார்.

ஒரு விடயத்தை கூர்ந்து கவனித்தோமானால், ஆளும் பா.ஜ.க தலைமையிலான அரசை எதிர்கட்சித் தலைவர்கள் யாரும் வேண்டுமென்று எவ்விதமான விமர்சனத்தையும் முன்வைப்பதில்லை. அவர்களின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே விமர்சிக்கக் கூடியதாக இருக்கிறது.

பா.ஜ.க கூட்டணியில் இருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியில் உள்ள அன்புமணி ராமதாசிடம் மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கவில்லையே ஏன்? என செய்தியாளர்கள் கேட்டபோது,

தமிழ்நாட்டில் பா.ஜ.க கூட்டணிக்கு 25 இடங்களாவது வெற்றி பெற்றிருந்தால் நிதி கிடைத்திருக்கும், ஆனால், தமிழ்நாட்டு மக்கள் எங்களைப் புறக்கணித்ததால் நிதி ஒதுக்கவில்லை என கூறியிருக்கிறார்.

இதுதான் பா.ஜ.க தலைமையிலான உண்மை முகம்.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சொல்வது போன்று ஒரு நல்லரசு என்பது வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல், வாக்களிக்காத மக்களுக்கும் சேர்ந்தே பாடுபட வேண்டும். இவ்வாறுதான் தமிழக அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி நீங்கள் ஏற்றுக் கொண்ட பதவிப்பிரமாணத்துக்கே முரணாகவே நடந்து கொள்கிறீர்கள். நீங்கள் நடந்துகொள்வது தமிழ்நாட்டை பழிவாங்குவது மட்டுமன்றி, இந்திய நாட்டு மக்களையும் பழிவாங்கும் செயற்பாடு ஆகும்.

உங்கள் நாற்காலியை காப்பாற்றிக் கொள்வதிலேயே அதிக கவனம் செலுத்தி வருகிறீர்கள்.

நாட்டு மக்களின் குரலாக ஒன்று கூற விரும்புகிறேன். நீங்கள் மேலும்மேலும் தவறு செய்கிறீர்கள். இதனால் நிறைய தோல்விகளைச் சந்திப்பீர்கள்.

இந்திய நாடாளுமன்றத்தில் இரு அவைகளும் கொந்தளிப்பது போன்று இந்திய மக்களின் மனங்களிலும் கொத்தளிப்பில் இருக்கிறது.

இதற்கு நீங்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என ஸ்டாலின் தனது எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்.

மூன்றாவது முறையாகவும் ஆட்சி அமைத்திருக்கும் பா.ஜ.க தலைமையிலான அரசு, மீண்டும் தேர்தல் வரும், மக்களை சந்திக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து ஆட்சி நடத்த வேண்டும். இல்லையேல் மக்களால் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதே உண்மை.

## இஸ்மாயில்... (07 ஆம் பக்க தொடர்ச்சி)

இது படிப்படியாக போரின் விளைவுகள் தொழில்நுட்ப ரீதியான ஆயுதங்களையும் இயந்திர மயப்படுத்தப்பட்ட உத்திகளை அதிகம் பிரயோகப்படுத்துகின்ற போராக மாறுகின்ற சூழல் என்பது அணுவாயுத பிரயோகத்திற்கான சூழலாகவே கருதப்படுகின்றது. அத்தகைய நிலை ஏற்படுகின்ற போது உலகம் மீண்டும் ஒரு வரலாற்று துயரை அனுபவிக்க வேண்டிய விளைவை தரக்கூடியதாக அமையும்.

நான்காவது உலகளாவிய ரீதியில் எழுந்திருக்கின்ற ஏகாதிபத்திய போட்டி, போர் பதற்றத்தை தனக்கே உரித்துடைய அரசியல் இலாபங்களோடு நகர்த்த ஆரம்பித்துள்ளது. அவ்வாறு நகர்த்த முயலுகின்ற போது அணு ஆயுதம் பிரயோகப்படுத்த வேண்டிய நிர்பந்தத்துக்குள், ஈரான் அல்லது இஸ்ரேல் அல்லது அவற்றுக்கு பின்னால் இருக்கின்ற ஒரு நாடு முனைகின்ற வாய்ப்பு நிலவுவதாகவே தெரிகின்றது. அடிப்படையில் ஏகாதிபத்தியங்கள் வர்த்தக நலனையும் பொருளாதார வாய்ப்புகளையும் போரியல் உத்திகளையும் சமரசம் செய்ய முயன்ற போதும் அடிப்படையில் அதற்கான வாய்ப்பை மேற்காசிய அரசியல், நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகின்றது. அதிலிருந்து மீண்டு கொள்வதற்கும், அதனை எதிர்கொள்வதற்கும் போர் என்பது ஒரு தீவிரத் தன்மையை பெறவேண்டிய நிலைக்குள் தள் ளப்பட்டிருக்கிறது. மேற்குதேச ஏகாதிபத்தியத்துக்கும் கீழைத்தேச ஏகாதிபத்தியங்களுக்கும் இடையில் ஏற்பட இருக்கின்ற போரானது, அல்லது போட்டியானது, போரை மேலும் தீவிரபடுத்த வழி வகுத்துள்ளது. இத்தகைய சூழலுக்குள் அவதானிக்கப்பட வேண்டிய முக்கியமான யதார்த்தம் சர்வதேச அரசியல் அணுகுமுறையிலும், ஒழுங்கிலும் புதிய அத்தியாயத்தை தொடங்குகின்ற முனைப்போடு மேற்குலக ஏகாதிபத்தியம் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இஸ்ரேல் மேற்குலக ஏகாதிபத்தியத்தோடு இணைந்து பயணிக்கின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அபாயமான ஆபத்துமிக்க உலக தரிசனத்தை ஏனைய கீழைத்தேச ஏகாதிபத்தியங்களும் ஏனைய அரசுகளும், எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இது படிப்படியாக ஒரு அணு ஆயுதப் போர் தயார் படுத்துவதற்கு முனைப்பான செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக வடகொரியா தனது அணுவாயுதத்தை அல்லது அதற்கான தொழில் நுட்பத்தை ஈரானுக்கு வழங்குகின்ற சூழல் என்பது கீழத்திசை ஏகாதிபத்தியங்களில் போருக்கான முனைப்பாகவே தெரிக்கின்றது. இதனை கருத்தில் கொண்டே அணுவாயுத போருக்கான சூழல் அல்லது மீண்டும் ஒரு உலகப் போருக்கான சூழல் தயாராவதாக அளவிடு செய்து கொள்ள முடியும்.

ஐந்தாவது ஈரான் அணுவாயுதத்தை தயார் செய்கின்ற முனைப்போடு பயணிப்பதாகவே மேற்குலக நாடுகளும் அவற்றினுடைய புலனாய்வுத்துறைகளும் வெளிப்படுத்தி வருகின்றன. இத்தகைய வலிமையான சூழல் பலமடையுமாக இருந்தால் மேற்காசியா அணுவாயுதத்தின் களமாக மாறுவதற்கான தன்மையினை பெற்றுவிடும். ஏற்கனவே அணுவாயுத திறனோடு இஸ்ரேல் விளங்குவதனால் ஈரானுடைய அணுவாயுத உற்பத்தியை தடுப்பதற்கான முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றது. காரணம் ஈரானின் அணு ஆயுதம் என்பது அரபு உலகத்தின் அணுவாயுதமாக மாறும் என்ற அச்சம் இஸ்ரேலிடம் காணப்படுகின்றது. இதனால் ஈரான் அணுவாயுத பரிசோதனையில் வெற்றி பெறுமாக இருந்தால் மேற்காசியா ஒரு பதற்றமான சூழலை மட்டுமின்றி மீண்டும் உலகப் போருக்கான சூழலை தருவிக்கக் கூடியதாக மாறும். அதற்கான ஒரு களத்தை நோக்கியதாக மேற்காசிய அரசியல் விளங்குகின்றது. அதனையே சர்வதேச அரசியல் வலுக்கோட்பாட்டாளர்களும் யதார்த்தவாதத்தை முதன்மைப்படுத்தும் அரசுகளும் மேற்கொள்ள முனைகின்றன. அதனால் மீண்டும் உலக போரென்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாக உள்ளது.

---

## இலங்கை முதலீட்டுச் சபை (BIO)

### பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் அழைப்பு விளம்பரம் 2024 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய ‘‘சண்டே ஒப்சேர்வர்’’ மற்றும் ‘‘சிலுமின’’ பத்திரிகைகளிலும் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

**INVITATION FOR BIDS OBTAINING HOUSES ON LEASE BASIS FOR ESTABLISHMENT OF CIRCUIT BUNGALOWS IN ANURADHAPURA & NUWARA ELIYA**

**CONTRACT NO: Q/84/2024**

விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் “சண்டே ஒப்சேர்வர்’’ மற்றும் ‘‘சிலுமின’’ பத்திரிகைகளிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

---

## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல்

இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணிப்பாளர் குழுவினால் நிர்வகிக்கப்படும் இராணுவப் பண்ணையில் உருப்படி வகைப்பாட்டின் கீழ் தெளிப்பான் நீர் வழங்கல் அமைப்பை நிறுவுவதற்குத் தேவையான குழாய் பொருத்துதல்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கல் நிறுவனங்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்கோரலுக்கான கரந்தெனியவிலுள்ள இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடைப் படையின் டெண்டர் குழு (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்களுக்கான கொள்முதல் ஆவணங்கள் **2024.08.07** ஆம் திகதி முதல் **2024.08.28** ஆம் திகதி வரை வார நாட்களில் **0800** மணி முதல் **1600** மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் **2024.08.29** ஆம் திகதி **1100 மணிக்கு** இராணுவ **காலாட்படை மையம்,** விவசாய மற்றும் கால்நடைப் படை, இராணுவ முகாம், கரந்தெனிய எனும் முகவரியில் திறக்கப்படும்.

குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.promise.lk** என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.

**இராணுவ புலனாய்வு காலாட்படை மையம்,**
**தொலைபேசி இலக்கம் - 091 2252683**
**கொள்முதல் பிரிவு,**
**காலாட்படை மையம்,**
**விவசாய மற்றும் கால்நடைப் படை,**
**இராணுவ முகாம்,**
**கரந்தெனிய,**
**அம்பலாங்கொடை.**

SELACINE

---

## பெறுகை அறிவித்தல்

### விடுதிக்காப்பாளர் சேவையை வழங்குதல்

### களனிப் பல்கலைக்கழகம்

களனிப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான (ராகம மருத்துவ பீடம் உட்பட) உள்ளக மற்றும் வெளிவாரி விடுதிகளில் விடுதிக்காப்பாளர் சேவையை வழங்குவதற்காக பதிவு செய்துள்ள மனித வள வழங்கல் நிறுவனங்களிலிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2024.08.27 பிற்பகல் 2.30 வரை என்னால் ஏற்கப்படும்.

கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூபா.1000/- கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்வி மாதிரிப் பத்திரங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய விபரங்களை 2024.08.05 முதல் 2024.08.26 பிற்பகல் 2.30 வரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) இடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை)ஐ சந்தித்து குறித்த விடுதிகளை பரீட்சித்துப் பார்க்கலாம். குறித்தவாறு பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறு வேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு இடது பக்க மேல் மூலையில் “களனி பல்கலைக்கழகத்தின் விடுதி காப்பாளர் சேவை கேள்வி” என்று குறிப்பிட்டு 2024.08.27 பிற்பகல் 2.30 இற்கு முன்பு களனிப் பல்கலைக்கழகத்தின் தளுகம வளாகத்தில் பதிவாளர் அலுவலகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொது நிர்வாக பிரிவிற்கு சொந்தமான கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தியற்றதாக நிரப்பியுள்ள கேள்விப் பத்திரங்கள் மதிப்பீடு இன்றியே நிராகரிக்கப்படும்.

2024.08.27 பிற்பகல் 2.30 இற்கு களனிப் பல்கலைக்கழகத்தின் தளுகம வளாகத்தில் பீடாதிபதி கமிட்டி கூட்ட மண்டபத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**2024.08.04**

---

## மாவட்ட செயலகம் - மாத்தறை

### கேள்விக்கான அழைப்பு

### கிரிந்த புஹூல்வெல்ல பிரதேச செயலகத்தின் பழைய கட்டிடம் பழுதுபார்த்தல் செயற்றிட்டம்

**(அடிப்படை மதிப்பீட்டுத் தொகை வெட் இன்றி ரூ.9,464,848.07)**

**ஒப்பந்த இலக்கம் - DSM/ENG/PRO/2024/02**

கிரிந்த புஹூல்வெல்ல பிரதேச செயலகத்தின் பழைய கட்டிடத்தின் பழுதுபார்த்தல் செயற்றிட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
நிர்மாண காலம் 210 நாட்களாகும்.

02. ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன், கேள்விகளை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி வரை செல்லுபடியாகுமாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) C7 அல்லது C6 தரத்திற்காக கட்டிட நிர்மாணத் துறையில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை மாத்தறை மாவட்டச் செயலகத்தின் பிரதம பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்களை அம் முகவரியிலேயே அலுவலக நாட்களில் 09.00 மணி முதல் 16.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொடர்பு கொள்ளக்கூடிய தொ.பே. இலக்கம் : 041 - 2231504

பெக்ஸ் : 041 - 2222234

04. இச்செயற்றிட்டத்துடன் சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.08.05 முதல் 2024.08.26 பி.ப. 3.00 வரை அலுவலக வேலை நாட்களில் அலுவலகத்தின் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமான ரூ.2000.00 தொகை செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை பொறியியல் பிரிவிற்கு சமர்ப்பித்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்விகள் 2024.08.27ம் திகதி 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு மாத்தறை மாவட்ட செயலகத்தின் 1ம் மாடியில் மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது மாவட்ட செயலாளர், மாத்தறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அனுப்பும் போது உறையின் இடதுபக்க மேல் மூலையில் முலட்டியன பியதாஸ ரத்னாநாயக்க ஞாபகார்த்த பிக்குனிகள் பயிற்சி நிறுவனத்தில் விரிவுரை மண்டபம் IIம் கட்டத்தை, நிர்மாணிக்கும் செயற்றிட்டத்திற்காக கேள்விகளைச் சமர்ப்பித்தல் என்று குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மாத்தறை மாவட்ட செயலகத்தின் 1ம் மாடியில் மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் அறையில் இவ்வேளையில் வருகைதந்துள்ள ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மற்றும் கேள்விதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.08.15 மு.ப. 10.00 இற்கு மாத்தறை மாவட்ட செயலகத்தின் 1ம் மாடியில் மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

07. சகல கேள்வியுடன் கீழ்க்காணும் விதத்தில் கேள்வி பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

- கேள்வி ஆவணங்களின் 09ம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
- மாத்தறை மாவட்ட செயலாளரின் பெயரில் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரூ. 95000/- பெறுமதியான கேள்விப் பிணையொன்றாக இருத்தல் வேண்டும்.
- கேள்விகள் ஏற்றுக் கொள்வதற்காக குறித்த இறுதித் தினம் அல்லது நீடிக்கப்படும் தினம் முதல் 105 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
- கேள்வி ஆவணங்களில் ITB 16ம் பிரிவில் குறிப்பிடப்படும் முகவரகத்திலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றாக இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணை இரத்துச் செய்ய முடியாத மற்றும் பெறுகை நிலையற்ற தன்மைக்கு முன்பு வேண்டுதலின் அடிப்படையில் நிபந்தனையற்ற நிதியாக மாற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**கனேஷ அமரசிங்ஹ**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**மாத்தறை**

---

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### முதலீட்டு சந்தர்ப்பங்கள்

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு உரிமையுள்ளதும் கொழும்பு துறைமுகத்தினுள்ளே அமைந்துள்ள பெறுமதியுள்ள காணிப்பரப்பை சர்வதேச துறைமுகம் தொடர்பான சேவை வழங்கல் நிலையத்திற்கு குத்தகைக்கு வழங்கல்

1. கொழும்பு துறைமுகத்தின் ஆழநீர் கொள்கல முனையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் சர்வதேச துறைமுகங்கள் தொடர்பான சேவை வழங்கல் நிலையமொன்றை செயற்படுத்த விரும்புகிறவர்களிடமிருந்து சாத்தியமான விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது அழைப்பதற்கு விரும்புகின்றது.

2 ஆர்வமுள்ள சாரார் கீழே கூறப்பட்டுள்ளவாறு கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை இதுஅ இடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3. 2024.08.05 ஆம் திகதியன்று ஆரம்பித்து வார நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2024.08.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணி வரையும் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 464ஏ ஆம் இலக்க HQ கொழும்பு கட்டிட 8 ஆம் மாடியின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் காணி முகாமைத்துவ பிரிவு பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை, கேள்வியிடக்கூடிய வரிகள் அல்லது நிருவாக அறவீடுகளின் ஆகுசெலவாக மீளளிக்கப்படாத தொகையாக 100,000 ரூபா அல்லது 325 அஐடொ செலுத்திய பின்னர், பெற்றுக் கொள்ளலாம்.

4. கேள்விப்பிணையின் தொகையானது 1 மில்லியன் அஐடொ என்பதுடன் நிபந்தனையற்ற உத்தரவாதங்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது இதுஅ இன் நிதிப் பிரிவிற்கு ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

5. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

6. ஆரம்ப குத்தகை ஒப்பந்த காலமானது 35 வருடங்களாகும்.

7. உள்ளூர் இறக்குமதி அல்லது உள்ளூர் ஏற்றுமதி மற்றும் பலநாடுகள் ஒன்றிணைந்த உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றிற்கான இதுஅ இற்கான தண்டப்பண விகித பணக்கொடுப்பனவுகள் கேள்வி விண்ணப்பங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

8. விலைமனுதாரரின் நிதி நிலைமையை உறுதி செய்வதற்காக விலைமனுதார் கீழே வழங்கப்பட்டுள்ள தகைமைகளுக்கான ஆகக் குறைந்த தகவுத்திறனையை திருப்திப்படுத்தல் வேண்டும்.

   ஏ) தகுதிக்காக முன்னைய நிதி ஆண்டுகளில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளின் வருடாந்த வருமானது 15 பில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும். அதே காலப்பகுதிக்காக வெளிநாட்டு அமைப்புக்கள் வருடாந்த நிதிப்புரள்வாக 50 மில்லியன் அஐடொ ஐ கொண்டிருத்தல் வேண்டும். கூட்டு ஆதனங்களின் வருமானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் அறிக்கைகள் 15 பில்லியன் ரூபாவை விஞ்சினால் மாத்திரமே கூட்டு ஆதனங்கள் அனுமதிக்கப்படும்.

9. விலைமனுக்கள் பாதுகாப்பு முத்திரைக்குறி இடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “LEASE OF VALUABLE LAND AREA INSIDE THE PORT OF COLOMBO BELONGING TO SRI LANKA PORTS AUTHORITIES FOR THE PURPOSE OF INTERNATIONAL PORT RELATED SERVICE SUPPLY CENTER (Ref. No. SLPA/PREM/03/06/2024)” என குறிப்பிடப்பட்டு இடப்பரப்புக்கள் மற்றும் காணி அபிவிருத்தி பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும்.

**விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முகவரி:**
**பிரதான முகாமையாளர் (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**5 ஆம் மாடி, தலைமையக கொழும்பு கட்டிடம்,**
**இல. 464ஏ, T.B. ஜாயா மாவத்தை**
**கொழும்பு-10.**

10. விலைமனுக்கள் 2024.08.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.08.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு முன்மொழிவுகள் கேள்விச் சபையினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

11. இது தொடர்பான மேலதிக விபரங்கள் 0711732275 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பதில் கடமையாற்றும் பிரதி பிரதான முகாமையாளரிடமிருந்து (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்) பெற்றுக் கொள்ளலாம்.

12. இந்த விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான எந்தவொரு நிகழ்வு தொடர்பாக எந்தவொரு சாராருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கான எந்த கடப்பாட்டையும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ளாது.

# வாரபலன்



04.08.2024 - 10.08.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள். குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சினைகள் நீங்கி அமைதி ஏற்படும். பெண்களுக்கு புத்திசாதுரியம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு திடீர் கோபங்கள் உண்டாகலாம். சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்களின் நட்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

செயல்திறமையால் அனைத்து காரியங்களும் வெற்றி பெறும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச்சுமை குறைந்து காணப்படும். நிலுவையில் இருந்த பணம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன்மதிப்பை பெறுவீர்கள். பிள்ளைகள் மீது அன்பு அதிகரிக்கும். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். கலைத்துறையினர் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியத்தை செய்து முடிப்பார்கள். நண்பர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். மாணவர்கள் தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு மனதை ஒருமுகப்படுத்தி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

நிதானமாக முடிவெடுப்பது அவசியம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கலாம். வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். தேவையான பண உதவி சற்று தாமதமாக கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். உதவிகள் செய்யும்போது ஆலோசித்து செய்வது நல்லது. பெண்கள் அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பது அவசியம். தோழிகளிடமிருந்து உங்களுக்கு சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். கலைத்துறையினருக்கு வருமானம் நன்றாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் தேவை. ஒரு முறைக்கு இருமுறை பாடங்களை படிப்பது நல்லது.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எதிலும் முன்னேற்றம் காணப்படும். எடுக்கும் முயற்சிகள் சாதகமாக இருக்கும். வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். திட்டமிட்டு செய்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகஸ்த்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். உடல் ஆரோக்கியம் அடையும். குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. மனதில் பக்தி உண்டாகும். பெண்கள் எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு மனத்துணிவு அதிகரிக்கும். சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற திட்டமிட்டு பாடங்களை படிப்பதும், தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எதிலும் வேகமாக செயல்படுவீர்கள். எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் மிகவும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். மன வலிமை அதிகரிக்கும். பெண்கள் நட்பு வட்டத்தில் நிதானமாக பழகுவது நல்லது. கலைத்துறையினரின் காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

மனதில் உறுதியுடன் எதிலும் செயல்படுவீர்கள். புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையலாம். உறவினர்கள் மத்தியில் இருந்த பழைய பகைகள் மாறும். பெண்கள் அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும்.வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். மாணவர்கள் எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பார்கள்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்துவீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். இக்கட்டான சூழ்நிலையில் சாமர்த்தியமாக செயற்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள். குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்க மனம் விட்டுப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாக பேசுவது நல்லது. பெண்களுக்கு மன மகிழ்ச்சி உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பாலினத்தவரிடம் பழகும் போது கவனம் தேவை. நினைக்கும் காரியங்கள் தள்ளிப்போகலாம். மாணவர்களுக்கு செயல்திறமை அதிகரிக்கும். உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

வாக்கு வன்மையால் ஆதாயம் பெறுவீர்கள். தைரியம் அதிகரிக்கும். எல்லா விதத்திலும் நன்மைகள் உண்டாகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது கவனமாக பேசுவது நல்லது. பெண்கள் எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவார்கள். கலைத்துறையினருக்கு தடைகள் அகலும். சிக்கல்கள் தீர்வதில் இருந்த தாமதம் நீங்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் ஆர்வம் உண்டாகும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பணவரத்து திருப்தியாக இருக்கும். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தினருடன் கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு மனதில் புது தெம்பும் உற்சாகமும் அதிகரிக்கும். கலைத்துறையினர் யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. மாணவர்கள் பாதியில் நிறுத்திய கல்வி தொடர்பான விஷயங்களை மீண்டும் தொடர்வீர்கள்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சிறந்த திட்டமிடலுடன் எதிலும் ஈடுபடுவது அவசியம். பணவரத்து எதிர்பார்த்ததவிட தாமதமாக வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். சொத்து சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்து வந்த இழுபறி நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக தங்களது வேலைகளை செய்வது நல்லது. குடும்பத்தில் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. பெண்களுக்கு எந்தவொரு விஷயத்திலும் முடிவு எடுப்பதில் தாமதம் உண்டாகும். கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது வெற்றிக்கு உதவும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எந்தக் காரியத்தையும் வேகமாகச் செய்து முடிப்பீர்கள். தேவையற்ற மனச் சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். கெட்ட கனவுகள் தோன்றலாம். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். பெண்கள் யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். வெளிநாட்டு பயணங்களும் இனிதே அமையும். நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். திடீர் செலவுகள் ஏற்படும். விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

எடுக்கும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். இலாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். பெண்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கலைத்துறையினருக்கு மனதில் உறுதியும், துணிவும் நிறைந்திருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

**அருணாசலம் லெட்சுமணன் 46**

# உலகின் பல பகுதிகளிலும் தமிழ்ப் பணி ஆற்றும் அறிஞர்கள் ஒன்று கூடுகின்ற களம்

மலேசியாவில் வாழும் இந்தியத் தமிழர்களின் அரசியல் ஆளுமைகளில் சிலர் பதவி நிலையில் உச்சத்தை தொட்டவர்களாக இருக்கிறார்கள். மலேசியாவில் இடம்பெற்ற நான்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளையும் உத்தியோகப்பூர்வமாக அந் நாட்டில் ஆட்சியிலுள்ள பிரதமர்களே தொடங்கி வைத்துள்ளார்கள். இந்திய தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களின் பங்கேற்பும் திருப்திகரமாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது. அவ் வகையில் இம் மாநாட்டிலும் சம காலத்தில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் இந்திய தமிழரான வி.சிவக்குமாரின் வகிபங்கும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். 2023ஆம் ஆண்டு மலேசிய அரச நிர்வாகத்தில் மனித வளத்துறை அமைச்சராக வ.சிவக்குமார் திகழ்ந்தார். 1970.12.05 பிறந்த சிவக்குமார் பேராக் மாநிலத்தின், பத்து காஜா தேர்தல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜனநாயக செயல் கட்சியின் துணைச் செயலாளர் பதவி நிலையில் நீண்டகால கட்சியின் செயற்பாட்டாளராக விளங்குகிறார். நீதித்தத்துவத் துறை இளங்கலையிலும் வணிக நிர்வாகத் துறையில் முதுநிலை பட்டத்தினை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் செயலாளராக பணிபுரிந்த அனுபவத்துடனேயே 2008ஆம் ஆண்டு பேராக் மாநில துரோனோ தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

13ஆவது, 14ஆவது, 15ஆவது நாடாளுமன்ற தேர்தலில் தொடர்ச்சியாக பத்து காஜா தேர்தல் தொகுதியை தன்வசம் வைத்திருப்பவர் என்பது. இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள் பல சாதனைகளை நிகழ்த்தி வருகிறார்கள். அவ்வாறானவர்களுள் அரசியல் ஆளுமைகள் வரிசையில் பலரை அடையாளம் காணமுடிகிறது. அமைச்சர் வ.சிவக்குமாரில் இன்னுமொரு அவதானம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. 2008ஆம் ஆண்டு பேராக் மாநிலத்தின் சபாநாயகராகவும் பதவி வகித்து சாதனை புரிந்துள்ளார். இவ்வாறு தமிழர் ஒருவர் சபாநாயகர் பதவி வகித்தமை மலேசிய வரலாற்றில் முதல்முறையான சம்பவமாக திகழ்கிறது. பேராக் அரசியல் சாசன நெருக்கடியால் சட்டமன்றில் ஆட்சியில் இருந்த கூட்டணி பெரும்பான்மையை இழந்த காரணத்தினால் பதவியை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சட்டமன்றில் ஏற்பட்ட சிக்கல் நிலைமையில் தற்துணிவோடு சிவக்குமார் தொழிற்பட்ட விதங்கள் பற்றிய அவதானம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 2009ஆம் ஆண்டு சட்ட சபைக் கூட்டத்தை நடத்துவதில் ஏற்பட்ட சிக்கல் நிலையின் காரணமாக சட்ட நுணுக்கங்களை சரியாகவும், லாவகமாகவும் பிரயோகித்து தனது ஆளுமையை நிரூபித்திருக்கிறார். சட்ட சபைக் கட்டடத்தை பூட்டிய நிலையில், சட்ட சபைக்கு அருகில் இருந்த பெரிய மரத்தின் அடியில் முறையான சட்டசபைக் கூட்டத்தை நடத்தியுள்ளார். இக்கட்டான சூழ்நிலையில் இடம் பெற்ற இக் கூட்டத்தை பொதுமக்கள் பலரும் நேரில் பார்வையிட்டும் கூட்டத்தை நடத்துவதற்கும் ஒத்துழைத்த சம்பவமும் மலேசிய அரசியல் வரலாற்றின் முக்கிய தடங்களாகின்றன. இக் கூட்டத்தில் 27க்கு 0 என்ற அடிப்படையில் மூன்று தீர்மானங்களை சபாநாயகர் எனும் நிலையில் நிறைவேற்றினார் என்பதும் கவனிக்கத்தக்கது. கூட்டம் இடம்பெற்ற இடத்திலுள்ள மரம் "மக்களாட்சி மரம்" என பெயர் சூட்டப்பட்டு நினைவுப் பலகையும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆளுமை மிக்க வ.சிவகுமாருக்கு கட்சி சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் என்ற பதவி நிலையையும் கொடுத்துள்ளமை அவதானத்திற்குரியதாகும்.

"மலேசிய மனிதவளத்துறை அமைச்சு" தொழிற்சங்கங்கள், திறன் மேம்பாடு, உடல் உழைப்பு, தொழிற்துறை உறவுகள், சமூக பாதுகாப்பு, தொழில் மற்றும் உடல் நல பாதுகாப்பு, தொழில்துறை நீதிமன்றம், தொழிலாளர் சந்தை தகவல் மற்றும் பகுப்பாய்வு, ஆகிய துறைகளை கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. அவ் அமைச்சை குலசேகரன், சரவணன் ஆகிய இந்தியத் தமிழர்கள் அமைச்சர் பதவியில் இருந்து நிர்வகித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வ.சிவக்குமார் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக செயல்கட்சி, மலேசிய அரசியலில் மிகுந்த தாக்கத்தை செலுத்தும் கட்சியாக திகழ்கிறது. 2015 வரையில் எதிர்க் கட்சிகளில் ஒன்றாக இருந்த நிலையில் இக் காலத்தில் ஆட்சி அமைப்பதற்காக தேசிய நம்பிக்கை கட்சி, மக்கள் நீதிக் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து பாக்காத்தான் ஹரப்பான் கூட்டணியை உருவாக்குவதில் ஜனநாயக செயல் கட்சியும் இணைந்து செயல்பட்டது. தேவன் நாயரை நிறுவனராக கொண்டு ஙா கூ ஹாம் தற்காலிக தேசியத் தலைவராக தொழிற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வ.சிவக்குமாரோடு, இரா.பழனிச்சாமி, எம். குலசேகரன் ஆகிய இந்தியத் தமிழர்களும் அங்கம் வகிக்கின்றமை அவதானத்திற்குரியதாகும். மலாய் இனத்தை சேர்ந்த சிலரோடு சீன வம்சாவளியினரே அதிகமாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. சோசலிச ஜனநாயகத்தை கொள்கையாகக் கொண்ட அரசியல் நகர்வுகளை கோலாலம்பூரை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் அரசியல் கட்சியாகும். தனது கட்சி கொள்கைகளை பரப்பும் தகவல் ஏடாக "ராக்கெட்" எனும் இதழை வெளியிடுகின்றது. பல்லின சமூகமாக வாழும் மலேசிய மக்களை, அவர்களுடைய பண்பாட்டு கலாசாரங்களை ஒன்றிணைப்பதை நோக்காகக் கொண்டு ஜனநாயக செயல்கட்சி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. பினாங்கு, பேராக், கோலாலம்பூர் கூட்டரசு பகுதிகளில்; இக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்து காணப்படுகிறது. இக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக பேராசிரியர் இராமசாமி திகழ்கிறார். பினாங்கு மாநிலத்தின் துணை முதல்வர் என்ற பதவி நிலையிலும், பிணாங்கு பத்து காவான் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகிகிகின்றமை குறிப்பிடத்தக்கது. இக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கஸ்த்தூரி பட்டு என்ற பெண் ஆளுமை மலேசிய பாராளுமன்ற எதிர்க்கட்சியை சேர்ந்த முதலாவது தமிழ் பெண் என்ற அவதானத்தையும் பெறுகிறார்.

11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஏற்பாட்டில் வேறு அணியினர் பங்கேற்றிருந்த தறுவாயில் மலேசிய அரசாங்க அமைச்சரவையின் அமைச்சர் என்ற வகையிலே ஏற்பாட்டுக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். இவ் விடயத்தை பொது வெளியில் எடுத்துக் கூறி ஆரம்பக்கட்டத்தில் ஏற்பாடு செய்தவர்களுக்கு மனதார நன்றித் தெரிவித்த விதம் இவரில் சிறப்பம்சமாகிறது. அத்தோடு உலக நாடுகளில் இருந்து வருகை தந்த பேராளர்களை வரவேற்ற விதமும், அவர் அணுகிய விதமும் சிறந்த



முன்மாதிரியை வெளிப்படுத்தியது. நிகழ்வின் ஆரம்பம், உத்தியோகபூர்வ தொடக்கம், நிறைவு நிகழ்வு ஆகியவற்றில் அமைச்சர் வ.சிவக்குமாரின் உரை இடம்பெற்றது. மலேசிய நாட்டில் தொழிலாளர்களாக புலம்பெயர்த தலைமுறையின் ஆளுமைமிக்க வாரிசின் அடையாளமாக திகழும் சிவக்குமாரின் வகிபங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உணர்த்தப்படுகிறது. நீண்ட உரைகளாக அமைந்த அவரது கருத்துக்கள் கவனிக்கத்தக்கதாகும்.

சகல இனங்களையும், மொழிகளையும் மதிக்கத் தெரிந்த தலைவராக விளங்கும் மலேசிய நாட்டின் தலைவர் அன்வர் இப்ராஹிம், பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை தொடங்கி வைப்பது மகிழ்வளிக்கிறது. இந்த நாட்டில் வாழும் சகல இனத்தவர்களுக்கும் இதய சுத்தியுடனான நம்பிக்கையைக் கொடுக்கும் "நம்பிக்கை அரசாங்கம்" இம் மாநாட்டை நடத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது. உலகெங்கும் வாழும் தமிழர்களை, தமிழ் ஆர்வலர்களை அன்போடு வரவேற்று தமிழ் அன்னையின் பெருமைகளை பறைசாற்ற எடுக்கும் நடவடிக்கைகளால் மகிழ்வடைகிறோம். ஓம்ஸ் பா.தியாகராஜாவின் ஒருங்கிணைப்பில் உருவான மாநாட்டு ஏற்பாடுக்கு அவருடன் உழைத்த அத்தனை பேருக்கும் மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம், என்றார். சிவக்குமாருடன் உரையாடுவதற்கு கிடைத்த சிறு சந்தர்ப்பத்திலும் புலம்பெயர்வின் நிர்ப்பந்தத்தில் ஒன்றுமைப்பட்ட மூதாதையர்களின் வழி வந்தவர்கள் என்ற ஒற்றுமைத் தன்மையை ஞாபகப்படுத்தி கருத்துக்களை பரிமாரிக் கொண்டோம்.

மலேசியாவின் அதிகாரபூர்வ மொழியாக பகாசா மெலாயு மொழி இருந்த போதிலும் ஆங்கிலம், மாண்டரின் அகிய மொழிகளுடன் தமிழுக்கும் அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளமை கவனிக்கத்தக்க விடயமாகும். மலேசிய கூட்டரசு அரசியலமைப்பு சட்டத்திலும் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியர்கள் புலம்பெயர்ந்துள்ள பல நாடுகளில் தமிழ் மொழியின் பயன்பாடுகள் குறைந்து காணப்படுகின்றன. சில நாடுகளில் தமிழ் மொழிப் பிரயோகம் முற்றாகவே இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் மலேசியாவில் தமிழ் மொழி தொடர்பான ஆர்வம் வெகுவாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இடைநிலைக் கல்வியிலும் பல்கலைக்கழக கல்வியிலும் தமிழ் மொழியை ஒரு பாடமாக மலேசியா அங்கீகரித்துள்ளமை கவனிக்கத்தக்கது. மலாயா பல்கலைக் கழகத்தில் இந்திய ஆய்வியல் துறை இருப்பது மிகப் பெரிய அங்கீகாரமாகவே அமைகிறது.

இம் மாநாட்டு ஏற்பாட்டிலும் பங்கேற்பிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வகிபங்கு சிறந்ததாகவே அமைந்திருந்தது. அவ் அமைப்பின் தலைவர் பேராசிரியர் தான்ஸ்ரீ த.மாரிமுத்துவின் பங்கேற்பும், உரையும் நிகழ்வின் காத்திரத்தில் பெரும் பங்காற்றியமை கவனிக்கத்தக்கது. மலாயா பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் என்பதோடு தனிநாயகம் அடிகளாரின் தமிழ் வேட்கையை தொடர்ந்து முன்னெடுப்பதில் மிக நீண்ட காலமாகவே ஈடுபட்டு வருகிறார்.

தற்போதைய மலேசிய நாட்டின் பிரதமர் அன்வர் இப்ராஹிம் இப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக கற்கும் போது பேராசிரியராக கடமையாற்றியுள்ளார் என்பதையும் பிரதமரின் உரையில் பெருமைப்படுத்தினார். உலகப் பொதுமறை திருக்குறளை தனக்கு தெளிவுறுத்தியவர் என நன்றி உணர்வுடன் த.மாரிமுத்துவை அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழுக்கு அணி செய்யும் மாநாடு என்ற வகையில் இவ் ஆராய்ச்சி மாநாடு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. உலகின் பல பகுதிகளிலும் தமிழ்ப் பணி ஆற்றும் அறிஞர்கள் ஒன்று கூடுகின்ற களமாகவும் இம் மாநாடு அமைகிறது. காலத்தின் தேவை கருதி "இணைய காலகட்டத்தில் தமிழ்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறும் இந் நிகழ்வு வரலாற்று சிறப்பு மிக்கதாகும். இம் மாநாட்டை முன்னின்று நடத்துகின்ற அமைப்பின் தலைவர் என்ற வகையில் நிகழ்வின் திருப்தியோடு அனைவருக்கும் நன்றியைப் பகிர்கிறேன் என்று தனதுரையில் த.மாரிமுத்து குறிப்பிட்டார்.

பயணம் முற்றும்...



# படித்ததும் பகர்வதும் 202





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### இலங்கையில் கணினிகளின் பாவனை



இன்றைய உலகில் கணினிகளின் பாவனை பல மடங்கு அதிகரித்து, இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. இலங்கையிலும் கணினிகளின் பாவனை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கணினி மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு குறித்த, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சமீபத்திய வெளியீட்டில், நாட்டின் கணினி எழுத்தறிவு விகிதம் 39.0% ஆகவும், டிஜிட்டல் எழுத்தறிவு விகிதம் 63.5% ஆகவும் உள்ளது என்று தெரிவித்துள்ளது. 20.2% குடும்பங்கள் டெஸ்க்டாப் அல்லது லேப்டாப் கம்ப்யூட்டரை வைத்திருக்கின்றன, அதாவது ஒவ்வொரு ஐந்து குடும்பங்களிலும் ஒருவருக்கு டெஸ்க்டாப் அல்லது லேப்டாப் உள்ளது. நகர்ப்புறங்களில், இந்த சதவீதம் 34.0% ஆகவும், கிராமப்புற மற்றும் தோட்டத் துறைகளில் 18.1% ஆகவும் உள்ளது என்றும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

எல்லா தரத்திலுள்ளவர்களுக்கும், எல்லா வயதினர்களுக்கும் கணினி இன்றியமையாத ஒரு கருவியாக உள்ளது. முன்னரைப் போலன்றி இப்போது அதிக அளவிலான விடயங்கள் கணினிமயப் பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஒவ்வொருவரும் கணினி பற்றிய தமது அறிவை அதிகரித்துக் கொள்ள முயற்சித்தல் தவிர்க்க முடியாத விடயமாக மாறியுள்ளது. மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர் கொள்ள கணினி தொடர்பான அறிவு இன்றியமையாததாக, தவிர்க்க முடியாததாக இருப்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நவீன காலத்தில் வியாபார நடவடிக்கைகள், வங்கி பரிவர்த்தனைகள், அரசாங்க தனியார் துறை தொழில்களுக்கான விண்ணப்பங்கள் போன்ற முக்கிய விடயங்கள் மட்டுமன்றி, வைத்தியர்களுக்கான நேர ஒதுக்கீடு, பஸ், புகையிரத வண்டி, விமான பயணங்களுக்கான பற்றுச் சீட்டுக்கள் ஒதுக்கீடு, அன்றாட தேவைக்கான பொருட்களை முன் பதிவு (Order) செய்தல் போன்ற விடயங்கள் கூட கணினிகள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. ஈமெயில் (email) எனும் மின்னஞ்சல் மூலமே இன்று பல சேவைகளுக்கான மாதாந்த கட்டணப் பட்டியல்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. வங்கி, கடனட்டை, மின்சாரம், தண்ணீர் உட்பட பலவகையான கட்டணப் பட்டியல்களையும் மின்னஞ்சல் மூலம் அனுப்பும் நடைமுறை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இப்போது கணினி மூலம் செய்யக்கூடிய பணிகளில் பெரும்பாலானவற்றை இல்லை அனைத்தையுமே கைபேசிகள் மூலம் செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படுவதால், கணினி அறிவை பெற்றவர்கள் இக்கைபேசிகள் மூலம் உச்ச பயனை பெறக்கூடியதாகவும் இருக்கும்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைகாட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள், மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றுக்கும் செய்திகள், தகவல்கள், படங்கள் அனுப்பி வைப்பதற்கும், அவற்றை தொழில் ரீதியாக மேற்கொள்வதற்கும், பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றுக்கு எழுத்துக் கோர்த்தல் (Type setting), பக்க வடிவமைப்பு போன்றவற்றை தொழில் ரீதியாக செய்வதற்கும், அவற்றின் மூலம் வருமானம் ஈட்டுவதற்கும் கணினி அறிவு துணை செய்கிறது. அது மட்டுமன்றி முறையான கணினித் தகைமை பெற்றவர்கள் உயர்ந்த சம்பளத்தில் நல்ல தொழில் வாய்புகளை பெறவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இவற்றை கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தமது கணினி அறிவை வளர்த்துக்கொள்ளவும் தமது பிள்ளைகளுக்கும் சார்ந்தவர்களுக்கும் முறையான கணினி அறிவை பெற்றுக் கொடுக்கவும் முயற்சிக்க வேண்டும். இது எதிர்காலத்தை வெற்றி கொள்ள வழி ஏற்படுத்தும்.

## நீத்தார் நினைவு

### "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் மௌலவி ரஷீத் எம். ராஸிக் (பஹ்ஜி)



பிரபல சன்மார்க்க அறிஞரும், எழுத்தாளரும், பேச்சாளருமான காலஞ்சென்ற, உடுதெனிய மௌலவி ரஷீத் எம். ராஸிக் (பஹ்ஜி) பற்றிய நினைவுகள், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் ஜனரஞ்சகமான "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், எதிர்வரும் 06ம் திகதி இரவு 8.10 மணியளவில் ஒலிபரப்பாக உள்ளது.

காலி கோட்டை, அல்பஹ்ஜத்துல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரியில் மௌலவி பட்டம் பெற்ற இவர், தெஹிவளை, கல்கிசை, கம்பளை கஹட்டபிட்டிய, கேகாலை, வட்டாரப்பலை, குருநாகல் மல்லவப்பிட்டிய, பேருவளை சீனன்கோட்டை ஜும்ஆ பள்ளிவாசல்களில் பிரதம இமாமாக சுமார் மூன்று தசாப்தங்கள் கடமையாற்றியுள்ளார். இவரது முயற்சியின் பயனாக கேகாலை ஜும்ஆ பள்ளிவாசலின் நவீன கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதை இப்பகுதி மக்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்.

அகில இலங்கை சமாதான நீதவானான இவர், நாட்டின் இன ஐக்கியத்துக்கு அரும் பணியாற்றியுள்ளார். இனங்களுக்கிடையில் நல்லுறவை பேணி வளர்த்திட பெரிதும் உழைத்தார். நாட்டின் யுத்த கால சூழ்நிலையில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதத்தலைவர்களுடனான சமாதானத் தூதுக் குழுவுடன் இணைந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் பங்கேற்றுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பொறுப்பாளர் புலித்தேவன், அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் போன்றவர்களை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியவர்களில் இவரும் ஒருவர்.

மௌலவி ராஸிக் (பஹ்ஜி) சிறந்த மேடைப் பேச்சாளராகவும், புகழ் பூத்த குத்பா பேருரையாளராகவும் புகழ் பெற்றிருந்தார். இவரது மார்க்க உபதேசங்கள் கேட்போர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. சமகால பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணும் வகையிலேயே அவரது பிரசங்கங்கள் அமைந்திருந்தன. எல்லோர் கண்களையும் கலங்க வைக்கும் வலிமை அவரது துஆ பிரார்த்தனைகளுக்கு இருந்தன.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இவரது பங்களிப்பு அளப்பரியது. அல் குர்ஆன் விளக்கம், சிறப்புச் சொற்பொழிவுகள், இஸ்லாமிய நற்சிந்தனை, ரமழான் சிந்தனை, ஸஹர் சிந்தனை, துஆ பிரார்த்தனைகள், குத்பா பேருரைகள் என்று பல்வேறு நிகழ்ச்சிகளில் இவர் பங்களிப்பு செய்துள்ளார். இவரது வானொலி நிகழ்ச்சிகளுக்கு நேயர்கள் மத்தியில் நல்ல வரவேற்பிருந்தது. இப்போதும்கூட முஸ்லிம் சேவை இவரது நிகழ்ச்சிகளை அவ்வப்போது மறு ஒலிபரப்பு செய்து வருகின்றமை குறிபிடத்தக்கது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்து, காலமானவர்களை நினைவுகூர்ந்து வரும் "பாரம்பரியம்" அண்மைக் காலத்தில் அல்ஹாஜ் வீ. ஏ. கபூர், அல்ஹாஜ் எம். எச். குத்தூஸ், அல்ஹாஜ் இசட். எல். எம். முஹம்மத். 'சங்கப்பா' அப்துல் காதர், எஸ். ஐ. எம். ஏ. ஜப்பார், ஈழமேகம் பக்கீர்தம்பி, மௌலவி கலீலுர் ரஹ்மான், மௌலவி அப்துர் ரஹ்மான் போன்ற முக்கியதத்துவம் பெற்றவர்களை நினைவூட்டி கௌரவித்தது. இந்த வரிசையில் இப்போது ரஷீத் எம். ராஸிக் (பஹ்ஜி) மௌலவியை நினைவூட்டுகிறது. ராஸிக் மௌலவியின் அரபுக் கல்லூரி தோழர்களான மல்வானை ஹசன் முபாரக் மௌலவி, வெலிகம பவுஸுர் ரஹுமான் மௌலவி ஆகியோர் அவர் பற்றிய நினைவுகளை மீட்டுகின்றனர். இவ் அரிய பணியை "பாரம்பரியம்" மூலம் தொடர்ந்து செய்து வரும் கலைஞர் எம். எஸ். எம். ஜின்னா, முஸ்லிம் சேவை பொறுப்பாளர் பாத்திமா ரினூசியா ஜவ்பர் இருவரும் பாராட்டுக்குரியவர்கள்.

## புது வரவு

### "சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்"



பதினாறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி, வெளியிட்டுள்ள பன்னூலாசிரியர் கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீனின் நான்காவது கவிதை நூலாக "சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்" வெளிவந்துள்ளது. தனக்கே உரிய தனிப் பாணியில் கவிதைகள் படைக்கும், அஷ்ரஃப் சிஹாப்தீன் பற்றி 'தீரன் நௌஷாத்' இப்படி குறிப்பிடுகிறார்.

சுருக்கென்று குத்தும் – இவரது
குண்டூசி வரிகள் நறுக்காகச் சில நேரம்
நண்டூரிச் செல்வதுண்டு
மந்திரத் தமிழில் எந்திரம் செய்து
தாயகத்துக்குத் தாயத்துக் கட்டுகின்ற
எழுத்துச் சித்தர் இவர்
ஆயின் அநீதி காணில் உக்கிர புத்தர்

"காலம் கடந்து செல்கையில் மனிதர்கள் இயல்பாகவே நிகழ்ந்தவற்றை மறந்து போய்விடுகிறார்கள். நன்மையோ தீமையோ எல்லாவற்றையும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் இலக்கியமாகப் பதிந்து விடுகிறார்கள்.

கடந்த ஐந்து வருடங்களுக்குள் நிகழ்ந்த துயரங்களின் பதிவுகளாகவே இதில் அடங்கியிருக்கும் பெரும்பாலான கவிதைகள் அமைந்திருக்கின்றன.

நிகழ்ந்த எல்லாவற்றையும் பேசியிருக்கிறேனா என்றால் இல்லை என்பதுதான் பதில். ஒரு தனி மனிதனால் எல்லாவற்றையும் பேசிவிட முடியாது. அதற்கு மற்றுமொரு காரணம் நாட்டில் நிலவும் சட்ட திட்டங்கள்.

வெளிப்படையாகப் பேச முடியாத அம்சங்களைக் கவிஞர்கள் வேறு ஒரு விதத்தில் பேசுவார்கள். அப்படியான கவிதைகள் பெரும்பாலானோருக்குப் புரிவதில்லை.

கவிஞர்களுக்கும் வேறு வழியுமில்லை. இந்தத் தொகுதியில் அவ்வாறான ஒரு சில கவிதைகள் இருக்கலாம். சில கவிதைகளுக்கு அடிக்குறிப்புத் தந்திருக்கிறேன். சிலவற்றை எழுதப்பட்ட திகதிகளுக்குள் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களை நினைத்துப் பார்த்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும்." என்று இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ள கவிதைகள் பற்றி நூலாசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

இக்கவி நூலில் உள்ள கவிதைகளின் சுவையை உணர்த்த "சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்" என்ற கவிதையிலிருந்து சில வரிகள். பதமாக.

குழந்தைகள் கைபடாத
குழந்தைகளின் கீறல்கள் அற்ற
சுவர்கள் அகோரமானவை
தெய்வீகமற்றவை
ஒரு குழந்தை
உங்கள் சுவரில் கீறுகிறது என்றால்
அதை அனுமதியுங்கள்
சுவர்களிலாவது
சுவர்க்கங்கள் உருவாகட்டும்!

ஐம்பது தலைப்புகளில் தனது அருமையான கவிதைகளை தொகுத்துத் தந்துள்ள நூலாசிரியர், கடைசி மூன்று பக்கங்களில் நிறைவாக 'வட்டிலப்பம்' போல் சுவையான எட்டு 'குறும்பாக்களை'த் தந்து நிறைவு செய்துள்ளார்.

நூல்: சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் (கவிதைகள்), நூலாசிரியர்: அஷ்ரஃப் சிஹாப்தீன், முதற்பதிப்பு: ஒக்டோபர் 2023, பக்கங்கள்: xii + 102, விலை: ரூபா. 500/=, வெளியீடு: யாத்ரா, தொடர்புகளுக்கு: 0777303818

## கண்டதில் கவர்ந்தது

### "அன்பின் சிறகுகளால்."



இலங்கை ஜமாத்தே இஸ்லாமியின் 70ஆவது தேசிய அங்கத்தவர் மாநாடு கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி (29.06.2024) கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது.

"விழுமிய வாழ்வு, வளமிகு நாடு" என்ற மகுடத்தின் கீழ் இடம் பெற்ற இம் மாநாட்டில் "அன்பின் சிறகுகளால் அகிலத்தின் தாயாய் ஆகுவோம்" என்ற தலைப்பிலான பாடலொன்று வெளியிடப்பட்டு வந்திருந்த பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது.

கவிஞர் புத்தளம் எஸ். ஏ. சீ. பி. மரிக்கார் எழுதிய பாடல் வரிகளை கே. சிவாகரன் மிகச் சிறப்பாக பாடியிருந்தார். அஷ்ஷெய்க் எம். எச். எம். உஸைர் இஸ்லாஹியின் மேற்பார்வையில் பாடலுக்கான ஒளி, ஒலி காட்சி வடிவை பாடலாசிரியரே சிறப்பாக இயக்கியிருக்கிறார். அப்பாடல் வரிகள் உங்களுக்காக இங்கே:

அன்பின் சிறகுகளால் அகிலத்தின் தாயாய் ஆகுவோம்...
கருணை கரங்களினால் கண்ணீரின்
காயம் ஆற்றுவோம்...
பண்பாலும் எம் பணியாலும் மனிதம் மலரவேண்டும்...
நன்மைகள் ஒரு நதிபோல நாட்டில் ஓடவேண்டும்....
மரணம் கடந்தும் நாம் வாழனும்...!
(அன்பின் சிறகுகளால்....)

ஆகாயம் போல வாழ்ந்தால் ஆனந்தம் ஆயிரம்...
பேரன்பின் தேசம் அதை பேசும்...
பல்லினம் சேர்ந்து வாழும் அழகிய தாயகம்...
அதற் கிணை ஈடு எதுவாகும்...?
அறிவும் அறமும் உயர்ந்திட உலகில் எழுவோம்...
காடுகள் உயிர்கள் காத்திடும் அரணாய் திகழ்வோம்...
நானும் நீயும் நாளைக்காக நடமாடுவோம்...
பூக்கள் வாழும் பூமியொன்றை கொண்டாடுவோம்...
(அன்பின் சிறகுகளால்....)

நீதிக்கு ஏங்கும் மக்கள் குரலாய் வாழ வா...
ஆனந்த கண்ணீர் காண்போம் வா...
பாவங்கள் நீங்க மண்ணில் வேதம் ஆக வா..
பாரினில் தீபம் ஆவோம் வா...
இலஞ்சம் ஊழல் இல்லா உலகம் செய்வோம்...
இருளின் திரையை இறைவன் ஒளியால் வெல்வோம்...
மனித நேயம் மலர மண்ணில் வேராகுவோம்...
விழுமியங்கள் வாழ வாழ்ந்து விதியாகுவோம்...

அன்பின் சிறகுகளால் அகிலத்தின் தாயாய் ஆகுவோம்...
கருணை கரங்களினால் கண்ணீரின் காயம் ஆற்றுவோம்...
பண்பாலும் எம் பணியாலும் மனிதம் மலரவேண்டும்...
நன்மைகள் ஒரு நதிபோல நாட்டில் ஓடவேண்டும்....
மரணம் கடந்தும் நாம் வாழனும்...!
(அன்பின் சிறகுகளால்....)

இப்பாடல், தமிழ், சிங்களம் இரண்டு மொழிகளில் தனித்தனியாகவும் அத்துடன் தமிழ் சிங்களம் இணைந்த ஒரு கலவையாகவும் (mix version) உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை https://youtu.be/Hz4nAfJvMqk என்ற இணைப்பில் கண்டு களிக்கலாம்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# மர்மங்கள் நிறைந்த துப்பாக்கி முனை முடிவடையப் போவதுதான் வேதனை!

துர்கா இப்படிச் சொன்னதும்,

சொலமனின் அதரங்களில்,

ஒரு புன்னகை படர்ந்தது.

"நீங்கள் இப்போது என்னை விரும்பாமல் இருக்கலாம் ஆனாலும் போகப் போக அதையும் பழகிக் கொள்வீர்கள்! அதனால் பேசாமல் வாங்க இப்போ பாருங்க பலவந்தமாக உங்களை தூக்கிக் கொண்டு போக என்னால் முடியாதா என்ன ஆனால் அப்படி எதுவும் செய்யாமல் உங்கள் மீது இருக்கும் அன்பினால் தானே இப்படி கெஞ்சிக் கொண்டிருக்கிறேன்"

"இதோபார் இதற்கு மேலும் என்னை பலவந்தமாக கடத்திச் செல்லலாம் என்று கனவு காணாதே!" கொஞ்சம் சத்தமாகவே சொன்னாள் துர்கா.

இப்போது,

அவள்மேனி கொஞ்சம் நடுங்கிக் கொண்டிருந்தது!

"இதோ பார் துர்கா இவ்வளவு நேரமும் நல்லவிதமாகத்தான் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன் இதற்கு மேலும் என் பொறுமையை சோதிக்காதே" கடுமையான குரலில் சொன்னார் சொலமன்.

"ஓ உங்களுக்கு கோபம் வந்துவிட்டது போலும்! உங்களுடைய மிரட்டல்களுக்கெல்லாம் இனிநான் பயப்பட மாட்டேன்!

ம் வேண்டுமானால் என்னை நீங்கள் கொலை செய்து விடுவீர்கள். ஆமாம் அந்த ரகசிய அறையில் இருக்கும் மண்டை ஓட்டை போல் என்னையும் கொலை செய்து விடுவீர்கள்!

துர்கா இப்படிச் சொன்னதும்,

சொலமனின் முகத்தில் திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இப்போது,

இந்த முகத்தில் ஒரு பயங்கரம் தெரிந்தது!

"ரகசிய அறையில் மண்டை ஓடா! ஓ அப்போ அதையும் கண்டுபிடித்து விட்டாயா?" துர்காவின் தோள்பட்டைகளை பயங்கரமான அழுத்திய படியே கேட்டான் சொலமன்.

வேதனை மிகுதியினால் முணங்கினாள் துர்கா.

"உண்மையைச் சொல் அதை எப்படி நீ கண்டு பிடித்தாய்! இந்த விஷயம் பேபி நோனாவுக்கும் தெரியுமா?" கடு கடுப்புடன் கேட்டார் சொலமன்.

"தான் செய்தது பெரிய முட்டாள் தனம் என்பது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது.

அதைக் கண்டுபிடித்த விதத்தை சொல்லும்வரை அவன் தன்னை விடமாட்டான் என்பதையும் துர்கா இப்போது புரிந்து கொண்டாள்!

தன்னைக் கொஞ்சம் சமாளித்துக் கொண்ட துர்கா,

"அதற்கு முன்பு அந்த மண்டை ஓடு யாருடையதென்று சொல்லுங்கள்" என்றாள்.

"அதைப்பற்றி பிறகு சொல்கிறேன் இப்போது என்னுடன் வா!"

அவளை இழுத்துக் கொண்டு முன்னால் சென்றார் சொலமன்.

அதேநேரம்,

மூடியிருந்த கதவு திறந்து கொண்டது.

நீட்டிய கைத்துப்பாக்கியுடன்,

பலநாள் சவரம் செய்யாத முகத் தோற்றத்துடன் ஒரு மனிதன் உள்ளே வந்தான்.

அந்த முகத்தைப் பார்த்ததும்,

அன்று பகல் அறைக் கண்ணாடி வழியாக தெரிந்த அந்த உருவம் நினைவிற்கு வந்தது!

சொலமனின் வலதுகை,

கால்சட்டைப்பைக்குள்ளேயே இருந்தது!

கைத்துப்பாக்கியுடன் அறைக்குள் நுழைந்த அந்த உருவத்தை,

வியப்புடன் நிமிர்ந்து பார்த்தார் சொலமன்.

"நான் சப் இன்ஸ்பெக்டர் நிலாம். உன்னை கைது செய்ய" அவ்வளவுதான் அவரால் பேச முடிந்தது.

துமீல்!

சொலமனின் கால் சட்டைப் பையில் இருந்து வெடிச்சத்தமொன்று வந்தது!

அடுத்து,

வெட்டிச் சாய்க்கப்பட்ட மரத்தைப் போல்,

குப்புற விழுந்தார் சப் இன்ஸ்பெக்டர் நிலாம்.

இதைப் பார்த்ததும்,

பயங்கரமாக அலறினாள் துர்கா!

துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓடிவந்த பேபிநோனா கீழே இரத்த வெள்ளத்தில் விழுந்துகிடந்த சப் இன்ஸ்பெக்டர் நிலாமைப் பார்த்ததும்,

தடுமாறி கீழே விழப்போய்,

அருகில் இருந்த சுவற்றைப் பிடித்துக் கொண்டாள்!

சாக்குக்குள் இருந்து,

கைத்துப்பாக்கியை வெளியே எடுத்த சொலமன்,

கீழே பிணமாக விழுந்து கிடந்த சப் இன்ஸ்பெக்டர் நிலைமையைப் பார்த்து தலையை ஆட்டி சிரித்துவிட்டு,

கைத்துப்பாக்கியை மீண்டும் கால்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டார்.

"என்னடா இப்படி ஒரு அநியாயத்தைப் பண்ணி விட்டாய் இதற்கு இப்போது நானும் சாட்சி சொல்ல வேண்டி வருமே!" அவ்வளவுதான் அவளால் பேச முடிந்தது.

சொலமன் விட்ட ஒரு கன்னத்து அறையினால்,



அவள் ஆடிப்போய் நின்றாள்.

துர்காவைப் பிடித்திருந்த பிடியைத் தளர்த்திவிட்டு,

இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் நிலாமின் பிணத்தைத் தூக்கி தோள்மீது போட்டுக் கொண்ட சொலமன்,

கதவைப் பூட்டிக் கொள்ளும்படி துர்காவிடம் சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

தன்னைப் பாதுகாக்க வந்த சப் இன்ஸ்பெக்டர் நிலாமின் கெதி இப்படியாகிவிட்டதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த துர்கா,

ஜன்னல் கதவைத் திறந்து பார்த்தாள்!

அங்கே,

தான் வேட்டையாடிய பிணத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே செல்லும் சொலமனும்,

அதைத் தொடர்ந்து கார் ஒன்று வெளியே செல்லும் சத்தமும் கேட்டது!

இதுவரையில் பலவிதமான காரணங்களைச் சொல்லி,

துர்காவை மிரட்டிக் கொண்டிருந்த பேபி நோனாவின் நிலைமையும் இப்போது மோசமாகத் தானிருந்தது!

எதையோ புலம்பிக் கொண்டும், சில சமயம் எவரையோ திட்டிக் கொண்டும்,

அசல் பைத்தியக்காரியைப் போல் இப்போது அவள் உருமாறியிருந்தாள்!

இது சிரிக்கக் கூடிய சந்தர்ப்பமாக இருந்திருந்தால்,

அவளுடைய செய்கைகளைக் கண்டு,

துர்கா வாய்விட்டுச் சிரித்திருப்பாள்!

"அடக் கடவுளே, இது ஒரு கொலை அல்லவா இப்போது எங்களையும் சேர்த்து அல்லவா பொலிசுக்கு கொண்டு போவார்கள்! இந்த பாவியின் பணத்தைக் கண்டு நான் ஏன் மயங்கினேனோ தெரியவில்லை! உனக்கும் உன்புருஷனுக்கும் இடிதான் விழ வேண்டும்! துப்பாக்கி சூடுபட்டு இறந்து போனவன் என்னத்துக்காக இங்கே வந்தானோ தெரியவில்லை!" பேபி நோனாவின் புலம்பலைக் கேட்டு,

துர்காவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது!

"ஏய் இதோ பார் இதற்கு மேலும் நீ புலம்பிக் கொண்டிருந்தால் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது! பணக்கார காமவெறியர்களுக்கு அப்பாவிப் பெண்களை பலி கொடுக்கும் உன்னைப் போன்ற கிழட்டு சனியன்களுக்கு இப்படி நடந்ததும் போதாது! எங்கே போச்சி உன்னுடைய ஆலவட்ட பேச்செல்லாம்! இப்போ சொல்லு உனக்கு பைத்தியமா எனக்கு பைத்தியமா? என் கண் எதிரில் நிக்காம தொலைஞ்சி போ! படபடப்போடு பேசினாள் துர்கா!

"ஐயோ சின்னம்மா நீங்க என்னை மன்னிக்கோணும். நடந்த இந்த கொலைக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்பது உங்களுக்கு தெரியும்தானே! சொலமன் ஐயா பிணத்தையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டார். இனி அவர் இங்கு வரமாட்டார். நான் குற்றமற்றவள் என்று நீங்கள் சாட்சி சொல்லுவீங்க தானே சின்னம்மா? அவர் எனக்கு தருவதாகச் சொன்ன அந்த பத்தாயிரம் ரூபாவை நான் உங்களுக்குத் தருகிறேன்.

எனக்கு பணம் எதுவும் வேண்டாம்! என்னைக் காப்பாத்துங்க நான் உங்கட கால்ல விழுந்து கும்பிடுறேன்" செல்லியபடியே,

துர்காவின் காலில் விழுந்தாள் பேபிநோனா!

சட்டத்தைக் கண்டு அவள் அஞ்சுவதைக் கண்டு அவள்மீது அனுதாபம் ஏற்பட்டாலும்,

கருணை எதுவும் ஏற்படவில்லை!

"ம் சரி இந்த கொலை சம்பந்தமாக உனது விடுதலைக்காக என்னால் முடிந்ததைச் செய்ய முடியும்! ஆனால் இந்த துப்பாக்கிமுனையால் என்னை கைதியாக வைத்திருந்ததைப் பற்றி என்ன சொல்லப் போகிறாய்? அதேபோல் கீழே உள்ள அந்த ஸ்டோர் ரூமில் இருக்கும் மண்டை ஓடு பொலிஸாரிடம் சிக்கினால் அதற்கு நீ என்ன சொல்லப் போகிறாய்?

"மண்டை ஓடா?" புருவங்களை வில்லாக்கினாள் பேபி நோனா?

"ஆமாம் இந்த வீட்டுக்குள் இன்னும் யாரோ ஒருவரையும் கொலை செய்து விட்டு மறைத்து வைத்திருக்கிறார்கள்!"

துர்கா இப்படிச் சொன்னதும்,

பேபி நோனா மயக்கம் போட்டு துர்காவின் கட்டிலின் மீது விழுந்தாள்,

இதனால்,

பதறிப்போன துர்கா,

என்ன செய்வதென்று தெரியாமல்,

அறைக்குள் அப்படியும் இப்படியும் உலாவ ஆரம்பித்தாள்!

இப்போது என்ன செய்வது!

இப்போது என்ன செய்வது!

ஒரு முடிவிற்கு வர முடியாமல் அவள் மனம் தவித்துக் கொண்டிருந்தது!

அவள் எந்த அளவுக்கு சிந்தனையில் மூழ்கியிருந்தாள் என்றால்,

அறைக்குள் மீண்டும் வந்து,

சொலமன் எட்டிப் பார்த்ததைக் கூட அவள் கவனிக்கவில்லை!

பெண்கள் இருவரும் அமைதியாக இருப்பதைப் பார்த்துவிட்டு,

எதையோ முணுமுணுத்தபடியே வெளியே வந்த சொலமன்,

ஸ்டோருமை நோக்கி நடந்தார்!

இப்போது,

அவன் மனம் எண்ணியது

ம் இப்போது சிரஞ்சீவியும் சிந்துஜனும் மட்டுமல்ல தோமஸும் இங்கே வரலாம் வரட்டும் வரட்டும் இந்த துப்பாக்கி முனையில் தான் உங்களுக்கு சமாதி கட்டப் போகிறேன்!||

எண்ணியபடியே,

இரண்டு சாக்குகளில் இருந்தும் இரண்டு கைத்துப்பாக்கிகளை வெளியே எடுத்து,

அவற்றிற்குள் தோட்டாக்கள் இருக்கின்றனவா என்று பரீட்சித்துப் பார்த்தான்.

பிறகு,

ஸ்டோர் ரூமிற்குள் சென்று மறைந்து கொண்டார்!

அதேநேரம்,

மீண்டும் சுயநினைவு பெற்ற பேபிநோனா,

ஏதோ வாகனம் வரும் சத்தம் கேட்டு,

ஜன்னலைத் திறந்து பார்த்தாள்

கார் ஒன்று வந்து நின்றது.

"வந்து விட்டா கொலைகாரன் மீண்டும் வந்து விட்டான்!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் பேபி நோனா.

மெல்ல எழுந்து வந்து,

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள் துர்கா!

காரை நிறுத்திவிட்டு,

இரண்டு பேர் இறங்குவது நிலவொளியில் தெரிந்தது!

(தொடரும்...)

# சிறுவர் உலகம்

சுகந்தி



புகழ்: புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்

*தெளிவுரை :*

*தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மைத் தாம் நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்ளக் காரணம் என்ன?*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 125

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ★ |
| 06 | ★ | 07 | ★ | 08 | ★ |
| 09 | 10 | 11 | 12 | 13 | ★ |
| 14 | ★ | 15 | ★ | 16 | 17 |
| ★ | 18 | ★ | 19 | ★ | 20 |
| 21 | 22 | ★ | 23 | 24 | 25 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நேரம் பார்க்கும் சாதனம். சுவரில் இருப்பது பெரியது, மணிக்கட்டில் கட்டுவது சிறியது.

(9) நாட்டுக்கூத்துக் கலையில் பயன்படுத்தப்படுகின்ற தோல்வாத்தியக் கருவி. இருபக்கமும் தோல் கட்டப்பட்டிருக்கும். (தலைகீழான சொல்)

(16) பொருட்கள் விற்கப்படுகின்ற வியாபார நிலையம்.

(21) நாயைப் போன்ற தோற்றம் கொண்ட காட்டு மிருகம். (தலைகீழான சொல்)

(23) வனப்பு, எழில் என்றெல்லாம் கூறக்கூடிய சொல். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) தண்டுப் பகுதியில் இனிப்புச்சாறு கொண்ட ஒருவித்திலைத் தாவரம். சீனி தயாரிப்பில் பயன்படுகின்றது.

(3) இரும்பு, நிக்கல் போன்ற மூலகங்களைக் கவரும் திரவியம்.

(5) தாமரை, முளரி, அம்புயம் என்றும் இம்மலரைக் குறிப்பிடலாம். இப்பூவின் தாவரம் நன்னீர்நிலைகளில் வளரும். (தலைகீழான சொல்)

(17) நாட்டின் சில பிரதேசங்களில் சேற்று நிலங்கள் மற்றும் ஈரநிலங்களில் வாழும் புழு போன்ற சிறு உயிரினம். மாடு, மனிதன் போன்ற எந்த உயிரினம் அகப்பட்டாலும், அதன் உடலில் ஒட்டிக் கொண்டு இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து உயிர்வாழும். (தலைகீழான சொல்)

(18) ஆறு, கங்கை ஆகிய ஒத்தபொருள் சொற்களாலும் இச்சொல்லைக் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

(19) வெயில், மழை போன்றவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பயன்படுத்தப்படுவது. நாம் வெளியே புறப்படும் போது இதனை எம்முடன் கொண்டு செல்வது நல்லது. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 124

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வைரம் 06. யன்னல் 10. கோடரி
16. அம்மி 22. ஒலி 24. தாத்தா

**மேலிருந்து கீழ்**

01. வைக்கோல் 03. அரியம் 04. மின்னல் 09. கால்
17. தாகம் 19. காலி 21. மாதா

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 123

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 08, 'அலிப்' சர்வசே பாடசாலை, தர்கா நகர்,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**2. எம்.ஏ.எப். அஸ்மா**
தரம் 10B, க/ பதிஉத்தீன் வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், றம்புக்கண வீதி, மடிகே, கலகெதர.

**3. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**4. எம்.ஆர். மொஹமட் இஸ்ஹாக்**
தரம் 04C, ரோயல் கல்லூரி,
இல. 40/44, இந்திரஜோதி வீதி, இரத்மலானை.

**5. இளன்**
தரம் 05, நாங்கல்ல மு.வித்தியாலயம்,
நாளிரா மன்ஸில், நாங்கல்ல, துல்ஹிரிய.

**6. கு. துவாரகன்**
தரம் 07C, கமு/ கால்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

**7. அம்ரத் அயானி**
தரம் 03A, அல் ஹிதாயா மகளிர் கல்லூரி,
இல. 14A, வடிகான் வீதி, பாலமுனை 03.

**8. ஹதீஜா முனஸ்ஸிர்**
தரம் 04, அல் கசாலி மத்திய கல்லூரி,
அட்டுலுகம, பண்டாரகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 125
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

## வில்லியம் ஷேக்ஸ்பியர் (1564-1616)



வில்லியம் சேக்ஸ்பியர் ஆங்கிலேய நாடகாசிரியர், பாவலர் மற்றும் நடிகர். ஆங்கில மொழி எழுத்தாளர்கள் அனைவரிலும் சிறந்தவராகவும் உலகின் சிறந்த நாடக ஆசிரியராகவும் பரவலாகக் கருதப்படுகிறார். இவர் இங்கிலாந்தின் தேசியக் கவிஞர், "அவோனின் புலவர்" அல்லது சுருக்கமாகப் "புலவர்" என்று அழைக்கப்படுகிறார்.

இவர் இங்கிலாந்தின் வார்விக் மாகாணத்தில் 'ஸ்ட்ரேட் போர்டு கிராமத்தில் 1564ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை உழவராக இருந்ததுடன் கையுறை வியாபாரியாகவும் இருந்தார். இதனால் செல்வாக்கும் செல்வமும் உடையவராக இருந்தார். நாளடைவில் வறுமையடைந்து போகவே, ஷேக்ஸ்பியர் படிப்பை நிறுத்திக் கொண்டார். ஷேக்ஸ்பியர் ஆரம்பத்தில் நெடுங்கணக்கும் கணக்காயர் பள்ளிக் கூடத்தில் லத்தீன் மொழி கற்றார். 1587ஆம் ஆண்டு, ஒரு நாடகக் கம்பனியில் சேர்ந்து சில நாடகங்களை நடித்தார்.

பின்னர் லண்டனுக்குச் சென்று நாடகக் கலையை நன்கு பயின்று நடிகராகவும் நாடக ஆசிரியராகவும் பிரபலமானார். ஷேக்ஸ்பியர், ரோம் வரலாற்றைத் தழுவி, ஜூலிய சீசர், ஆண்டனியும் கிளியோபாட்ராவும், கொரியகீலனஸ் ஆகிய நாடகங்களை எழுதினார்.

இவரது ஹாம்லெட், ஒத்தெல்லோ, லியர், மக்பத், ஆகிய நாடகங்கள் தலை சிறந்த நாடகங்களாகக் கருதப்படுகின்றன.

ஷேக்ஸ்பியர் காலமான பின் 1623இல் அவர் நண்பர்களான யோவான் எம்மிங்சு, என்றி கான்டல் என்பவர்கள், இவரது முப்பத்தாறு நாடகங்களைத் தொகுத்து வெளியிட்டனர்.

சாரணா கையூம் ...

# இவ்வார மழலை



வி. ஹர்ஷினி

விக்னேஸ்வரன் – யாழினி






Lithulka Sasvidu Vithanage
St. John's College, Nugegoda.

## ஆப்பிளில் உள்ள Sticker எதை குறிக்கின்றது?

சந்தை அல்லது கடைகளில் ஆப்பிளையோ அல்லது வேறு பொருட்களையோ வாங்கும்போது அதில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருப்பதை நாம் பார்த்திருப்போம். பொதுவாக நாம் ஆப்பிளை சாப்பிடுவதற்கு எடுத்ததும், அதில் இருக்கும் ஸ்டிக்கரை நீக்கி அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களை படிப்பதில்லை. ஒவ்வொரு ஆப்பிளிலும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு விற்கப்படுகிறது. இதன் உண்மை 99% வீதமானோருக்கு தெரியாது.

ஆப்பிளில் இருக்கும் ஸ்டிக்கரில், பழத்தின் தரம் மற்றும் அது எப்படி வளர்க்கப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் உள்ளன.

PLU code (price lookup number) இதனை வைத்து நாம் சாப்பிடும் ஆப்பிள் இயற்கையானதா, மரபணு மாற்று உற்பத்தியா, வேதி உரங்களில் விளைந்ததா என அறிய முடியும்.

எவ்வாறு அறிவது :

1. PLU codeஇல் 4 எண்கள் இருந்தால் முழுக்க வேதி உரம் கலந்தது.
2. PLU codeஇல் 5 இலக்கம் இருந்து அது "8" என ஆரம்பித்தால் அது மரபணு மாற்றம் செய்யபட்டது.
3. PLU codeஇல் 5 இலக்கம் இருந்து அது "9" என ஆரம்பித்தால் அது முழுக்க இயற்கையானது.



## வெண்ணிலவே

விண்ணில் வந்தது வெண்ணிலா
வெளிச்சம் தந்தது பொன்னிலா
கண்ணில் நின்றது அந்நிலா
குளிர்ச்சி தந்தது தண்ணிலே


நிலவை மேகம் மூடுது
மௌனராகம் பாடுது
விலகி நிலவும் ஓடுது
வேறிடத்தைத் தேடுது

வட்டமான வெண்ணிலா
வையமெங்கும் ஓர் நிலா
இட்டமாக யாவரும்
இனிதே நாடும் வெண்ணிலா!

தங்கம் போல மின்னுது
தவழ்ந்து எங்கோ செல்லுது
எங்கு சென்ற போதிலும்
எம்மை விட்டுச் செல்லுமோ?

கல்லொளுவை பாரிஸ்

## உலகில் உயரமான சிலைகள்



ஐக்கிய அமெரிக்காவின் *சுதந்திரச் சிலை* 45 மீற்றர் உயரமானது.

**உஷிகு அமிடா புத்தர் சிலை** (ஜப்பான்) 120 மீற்றர் உயரமானது.

**அன்னைசிலை** (ரஷ்யா) 82 மீற்றர் உயரமானது.

**ஹௌஸ்டன் சிலை** (டெக்சாஸ்) 169 மீற்றர் உயரமானது.

சாரணா கையூம் ...



# ஒலிம்பிக்

நவீன ஒலிம்பிக் வரலாற்றில் மூன்றாவது முறையாக பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

★ 1900இல் பிரான்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 24 நாடுகளைச் சேர்ந்த 997 வீரர்கள் கலந்துகொண்டனர். 1924இல் இரண்டாவது முறை பிரான்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 44 நாடுகளைச் சேர்ந்த 3,089 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். 2024இல் ஒலிம்பிக் போட்டியில் 10,500 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

★ உலகில் அதிக எண்ணிக்கையிலான நாடுகளும் போட்டியாளர்களும் பங்கேற்கும் ஒலிம்பிக் போட்டியின் வயது சுமார் 2,800 ஆண்டுகளாகும்.

★ பழங்கால கிரேக்கத்தில் பொ.ஆ.மு (கி.மு) 8ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த ஒலிம்பிக் போட்டி, பொ.ஆ (கி.பி) 2ஆம் நூற்றாண்டு வரை விளையாடப்பட்டுவந்தது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பியா என்கிற இடத்தில் 'ஜீயஸ்' கடவுளுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஆண்கள் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

★ஒலிம்பிக் போட்டிகளில் போர்க்குணமிக்க வீரர்கள் பங்கேற்க ஆரம்பித்த பிறகு, விளையாட்டுகளில் சுவாரசியம் கூடியது. 18ஆம் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தம், ஈட்டி எறிதல், குதித்தல் போன்ற விளையாட்டுகள் சேர்க்கப்பட்டன. 20ஆம் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை சேர்க்கப்பட்டது. காலம் செல்லச் செல்ல போட்டிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றது.

★பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் கிரேக்கத்தை ரோமானியர்கள் கைப்பற்றிய பிறகு, ஒலிம்பிக் போட்டிகள் வீழ்ச்சியடைந்தன.

★பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கல்வியாளரும் வரலாற்றாளருமான பியர் டி கூபெர்டின், உடற்கல்வியை மேம்படுத்தும் முயற்சியில் இறங்கினார். அப்போதுதான் ஒலிம்பிக் போட்டிகளை மீண்டும் கொண்டுவரும் எண்ணம் உருவானது.

'போட்டியில் வெற்றி பெறுவது முக்கியமல்ல, எப்படிப் போராடுகிறோம் என்பதே முக்கியம்' என்கிற நோக்கத்தை முன்வைத்து, கூபெர்டின் முயற்சியில் 1896ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் போட்டி ஆரம்பித்தது. கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற போட்டியில் 13 நாடுகளைச் சேர்ந்த 280 வீரர்கள் கலந்துகொண்டனர்.

★1900ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 997 வீரர்களில் 22 பேர் பெண்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட சம அளவில் ஆண்களும் பெண்களும் கலந்துகொள்கின்றனர்.

★1924ஆம் ஆண்டு முதல் பனிப்பகுதியில் விளையாடக்கூடிய விளையாட்டுகளுக்காக, 'குளிர்கால ஒலிம்பிக்' போட்டிகள் நடத்தப்படுகின்றன. கோடைக்கால ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்படுகிறது.

★1936ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அப்போது ஹிட்லர் ஆட்சியில் இருந்தார். ஆரிய இனமே உயர்வானது என்கிற நாஜிகளின் கொள்கையை உயர்த்திப் பிடிக்கும் நோக்கில், நாஜிகள் அதிக பதக்கங்களை வெல்ல வேண்டும் என்று நினைத்தார். வீரர்களிடம் பாரபட்சம் காட்டினார்.

★ஆபிரிக்க அமெரிக்கரான ஜெஸி ஓவன்ஸ், ஹிட்லரின் இனவாத எண்ணத்தை மாற்ற நினைத்தார். கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டார். நீளம் தாண்டுதல் தகுதிச் சுற்றில் ஜெர்மனியின் 'லஸ் லாங்' முதல் முயற்சியில் தகுதி பெற்றார். பதற்றத்தில் இருந்த ஜெஸி ஓவன்ஸ் இரண்டு முறை தோல்வியடைந்தார்.



அப்போது லஸ் லாங், பதற்றப்படாமல் விளையாடினால் வெற்றி பெறலாம் என்று ஜெஸி ஓவன்ஸிடம் கூறினார். இறுதிப் போட்டியில் ஜெஸி ஓவன்ஸ் தங்கம் வென்றார். வெள்ளி வென்ற லஸ் லாங், ஹிட்லர் எதிரிலேயே ஜெஸி ஓவன்ஸைக் கட்டிப்பிடித்துப் பாராட்டினார். அந்த ஒலிம்பிக் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று ஹிட்லரின் இனவாத எண்ணத்தைத் தகர்த்தெறிந்தார் ஜெஸி ஓவன்ஸ்.

★இரண்டாம் உலகப் போரின்போது இரண்டு ஒலிம்பிக் போட்டிகள் ரத்து செய்யப்பட்டன.

★1968ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆபிரிக்க அமெரிக்கர்களான டோம்மி ஸ்மித் தங்கமும் ஜான் கேர்லோஸ் வெண்கலமும் வென்றனர். பதக்கம் பெறும்போது தங்கள் தலையைத் தாழ்த்தி, கையை உயர்த்தி, அமெரிக்காவில் ஆபிரிக்க அமெரிக்கர்கள் நடத்தப்படும் விதத்துக்கு எதிர்ப்புக் காட்டினார்கள்.

★1980ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் மாஸ்கோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை அமெரிக்கா தலைமையில் 65 நாடுகள் புறக்கணித்தன.

★1979ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தான் மீது எடுத்த படையெடுப்புக்காக இந்தப் புறக்கணிப்பு நடந்தது. 1984ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை சோவியத் தலைமையில் கம்யூனிச நாடுகள் புறக்கணித்தன.

★ இன்று ஒலிம்பிக் போட்டிகள் வர்த்தக நோக்கில் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கின்றன.

## மஞ்சரி விளையாட்டு

# ஆடவரை விஞ்சும் இலங்கை மகளிர் கிரிக்கெட்






பல்லேகலவுக்கும் தம்புள்ளைக்கும் இருக்கும் தூரம் மிஞ்சிப் போன இரண்டு மணிநேரம் பயணிக்கும் இடைவெளி. இந்த இரு இடங்களிலும் நடந்த கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை ஆடவர் கிரிக்கெட்டை மகளிர் கிரிக்கெட் விஞ்சிவிட்டது.

கடந்த ஜூலை 28 ஆம் திகதி தம்புள்ளையில் மகளிர் ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை மகளிர்கள் இந்தியாவை வீழ்த்தி முதல் முறை சம்பியன் கிண்ணத்தை வென்ற அதே நாளில் ஒரு மணி நேர இடைவெளியில் நடந்த ஆடவர் கிரிக்கெட்டி இலங்கை அணி இந்தியாவிடம் மீண்டும் ஒருமுறை தோற்று தொடரையும் இழந்தது.

இலங்கை ஆடவர் கிரிக்கெட் தனது வீழ்ச்சியில் இருந்து எழுந்து நிற்க தடுமாறும் நிலையில் இலங்கை மகளிர் அணியின் ஏறுமுகம் புதிய உச்சத்தை தொட்டிருக்கிறது.

இலங்கை மகளிர் கிரிக்கெட் என்பது அண்மைக் காலத்தில் முழுக்க முழுக்க சமரி அத்தபத்துவை மையப்படுத்தி சுழன்று வருகிறது. என்றாலும், இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் சமரி மாத்திரமல்ல ஹர்ஷிதா சமரவிக்ரம, கவீஷா டில்ஹாரி மற்றும் அனுஷா சஞ்சீவனி போன்ற வீராங்கனைகள் அபார திறமையை வெளிப்படுத்தினார்கள். இதனாலேயே இலங்கை மகளிர்களால் ஆசிய சம்பியன்களாக முடிந்தது.

இலங்கை ஆடவர்கள் தோல்வி மேல் தோல்வியை சந்திக்கும் நிலையில் இந்த வெற்றி மிகையாக தென்பட்டது, அதற்கான கொண்டாட்டங்களும் உச்சம் பெற்றிருந்தன. அதற்கு இலங்கை மகளிர்கள் தகுதியானவர்களும் கூட.

இங்கே போட்டியை காண வந்த ரசிகர்களையும் குறிப்பிட்டுக் கூற வேண்டி உள்ளது. இலங்கை மகளிர் அணி இதுவரை காணாத அளவுக்கு இறுதிப் போட்டியில் தம்புள்ளை அரங்கு நிரம்பி இருந்தது. அது அண்மையில் முடிந்த லங்கா பிரீமியர் லீக் போட்டியில் கூட காணாத ரசிகர்கள் கூட்டம். அதிலே பெரும்பான்மையானவர்கள் பெண், சிறுமிகள். இது மகளிர் கிரிக்கெட்டில் புதிய திருப்பத்தை தரக் கூடியது. அதன் எதிர் காலம் பற்றிய நம்பிக்கையை அதிகரித்திருக்கிறது.

இதற்கு முக்கியமான ஓர் ஆளுமையாக சமரி அத்தபத்துவதை குறிப்பிடலாம். 1996 இல் இலங்கை ஆடவர் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்கவுடன் ஒப்பிடும் அளவுக்கு அவர் இருக்கிறார். என்றாலும் அவரது துடுப்பாட்டம் என்பது சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் சிறந்த வீராங்கனைகளில் ஒருவர் எனும் அளவுக்கு உள்ளது.

அண்மைக் காலம் வரை இலங்கை மகளிர் அணி என்பது சமரி என்ற 'ஒரு பெண்ணின் அணி' என்றே பார்க்கப்பட்டது. ஆனால் அந்த நிலைமை இப்போது மாறி வருகிறது. அதற்கும் சமரி தான் காரணம்.

இதற்காக சமரியை இலங்கை ஆடவர் அணிக்கு தேர்வு செய்ய வேண்டும் என்பது போன்று சமூக ஊடகத்தில் வெளியாகும் நையாண்டி கதைகள் எல்லாம் பொருந்தாத ஒன்று. ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் என்பது வித்தியாசப்பட்டது. இரண்டையும் ஒப்பிட முடியாது. பெண்கள் கிரிக்கெட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆடவர் கிரிக்கெட் என்பது உடல் வலிமையுடன் அதிக வேகமாக ஆடப்படும் விளையாட்டு. அங்கே சமரி போன்ற வீராங்கனைகளுக்கு ஜஸ்பிரிட் பும்ரா, மிட்சல் ஸ்டார்க், ஜொப்ரா ஆர்ச்சர் மற்றும் அன்ட்ரிச் நொட்ஜே போன்ற பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதென்பது சாத்தியப்படாதது.

ஆனால் மகளிர் கிரிக்கெட்டில் சமரி என்பவர் உலகத் தரம் வாய்ந்தவர். அந்த அளவுக்கு இலங்கை ஆடவர் கிரிக்கெட்டில் உலகத் தரம் வாய்ந்த வீரர் ஒருவர் தற்போது ஆடும் வீரர்கள் இடையே இல்லை.

சம்பள விவகாரமும் இதே நிலை தான். இலங்கை மகளிர் அணிக்கு கடந்த 2023 பெப்ரவரியில் போட்டிக் கட்டணத்தை இலங்கை கிரிக்கெட் சபை அதிகரித்திருந்தது. அது போட்டி ஒன்றுக்கு 750 டொலர்கள். இது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒன்றில் இலங்கை ஆடவர் அணி பெறும் கட்டணத்துடன் ஒப்பிட்டால் 25 வீதம் தான். ஆடவர்களின் அணி வீரர்களுக்கான ஒப்பந்த தொகையும் மிகச் சிறந்ததாக இருக்கும்.

என்றாலும் இந்த சம்பள முறையை பொத்தாம்பொதுவாக மதிப்பிட முடியாது. அது ஆடவர் அணி மற்றும் மகளிர் அணி போட்டிகளில் ஈட்டும் வருவாயுடன் பொருந்திப் பார்க்க வேண்டி இருக்கும்.

ஆனால் இலங்கை ரசிகர்களிடையே இலங்கை மகளிர் கிரிக்கெட் மீதான ஆர்வம் அதிகரித்திருப்பதோடு ஆசிய கிண்ணத்தை வென்ற பின் நிலைமை இன்னும் மாறி இருக்கிறது. மகளிர் அணியை பார்க்க அரங்கிற்கு வரும் ரசிகர்களின் எண்ணிக்கை எதிர்வரும் காலத்தில் அதிகாரிக்கலாம் என்று எதிர்பார்க்கலாம். அது ஆடவர் மற்றும் மகளிர் அணிகளுக்கு இடையிலான சம்பள ஏற்றத்தாழ்வை குறைக்க வழி செய்யும்.

கடந்த 14 மாதங்களில் இலங்கை மகளிர் கிரிக்கெட் பெற்ற வெற்றிகள் முக்கியம் வாய்ந்தவை பங்களாதேஷ், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 தொடர்களை வென்றதோடு இந்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெறும் மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடரிலும் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஆசிய கிண்ணத்தை வென்ற இலங்கை அணி, பங்களாதேஷில் எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடைபெறப்போகும் மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் எதிர்பார்ப்பை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அது மிகப்பெரிய சவாலாக இருந்தாலும் சாதிக்க முடியாத தூரத்தில் இல்லை.

மறுபுறம் இலங்கை ஆடவர் கிரிக்கெட் கடந்த ஒருநாள் மற்றும் டி20 உலகக் கிண்ணத்திற்குப் பின்னர் எந்தப் புள்ளியில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கிறது என்ற குழப்பத்தில் இருக்கிறது. நடந்த இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரில் மீண்டும் ஒருமுறை தொடர்ந்து தோல்விகளை சந்தித்திருக்கிறது. அதிரடி சீர்திருத்தங்கள் தேவையாக இருப்பது மாத்திரம் புரிகிறது.

உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி படுதோல்விகளை சந்தித்து நாடு திரும்பியபோது, ஊடகங்களிடம் பேசிய குசல் மெண்டிஸ் 'போட்டிகளில் தோற்பது பற்றி பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது அது எமது கையில் இல்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் மகளிர் ஆசிய கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் ஹர்ஷிதா சமரவிக்ரம, 'களத்தடுப்பின்போது நான் இரு பிடியெடுப்புகளைத் தவறவிட்டேன், இந்தியா எத்தனை ஓட்டங்களை அடித்தாலும் நான் துரத்தி அடிப்பேன் என்று அப்போதே நினைத்துக் கொண்டேன்' என்று இந்தியாவை வீழ்த்திய பின் குறிப்பிட்டிருந்தார்.

ஹர்ஷிதா கூறியது போன்று, அவர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் 166 ஓட்ட வெற்றி இலக்கை துரத்தி கடைசி வரை ஆட்டமிழக்காது 51 பந்துகளில் 6 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்களை பெற்றார்.

இதுவே இலங்கை ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட்டின் இப்போதைய நிலைமை.



**எஸ்.பிர்தௌஸ்...**



# கவனத்தை ஈர்த்தார் ஷிராஸ்

மொஹமட் ஷிராஸின் தேசிய அணிக்கான காத்திருப்பு கால்கடுக்கும் அளவுக்கு நீண்டது. அவ்வப்போது உள்ளூர் மட்டப் போட்டிகள், இலங்கை ஏ அணிக்கான போட்டிகள் அப்படி இல்லை என்றால் இலங்கை கிரிக்கெட் சபை அபிவிருத்தி அணிக்கான போட்டிகளில் ஷிராஸின் பெயர் வந்து போகும். சிறந்த திறமையையும் வெளிப்படுத்தி இருப்பார், என்றாலும் இலங்கை அணிக்கு ஆடும் அவரது கனவும் நெடியது.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை அணி தேர்வு செய்யப்பட்டபோது கூட ஷிராஸ் இடம்பெறவில்லை; அதற்கான சாத்தியமும் குறைவாகவே இருந்தது. என்றாலும் வேகப்பந்து வீச்சாளர்களுக்கான எதிர்பாராத தட்டுப்பாடு சிராஸுக்கு வாய்ப்பை தந்திருக்கிறது.



இந்தியாவுக்கு எதிரான டி20 தொடருக்கு முன்னரே முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர சுகவீனமுற்று தொடரில் இருந்து வெளியேறினார். அதனை அடுத்து போட்டிக்கு முன்னர் இடம்பெற்ற களத்தடுப்பு பயிற்சியின்போது நுவன் துஷாரவுக்கு கட்டை விரலில் காயம் ஏற்பட்டது.

எல்.பி.எல். தொடரில் சோபித்து இலங்கை டி20 அணிக்குத் திரும்பிய பினுர பெர்னாண்டோவுக்கு சுகவீனம் ஏற்பட அணியில் இருந்து வெளியேறினார். இதனால் டி20 அணியில் முக்கிய வேகப்பந்து வீச்சாளராக மதீஷ பத்திரண மற்றும் டில்ஷான் மதுஷங்க இடம்பெற்றனர்.

என்றாலும் ஒருநாள் தொடர் ஆரம்பிக்கும் முன்னரே பத்திரணவும் ஏற்கனவே இருக்கும் தோள்பட்டை வலி மீண்டும் வெளிப்பட அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார். தொடர்ந்து டில்ஷான் மதுஷங்கவும் பயிற்சியின்போது தொடைப் பகுதியில் தசைப்பிடிப்புக்கு முகம் கொடுக்க அவரும் ஒருநாள் தொடரில் இருந்து விலனார். இதனை அடுத்தே இலங்கை அணிக்கு இதுவரை ஆடாத ஏஷான் மாலிங்வுடன் மொஹமட் ஷிராஸும் ஒருநாள் அணிக்கு அழைக்கப்பட்டனர்.

ஷிராஸ் கடந்த ஜூலை 30 ஆம் திகதி நடைபெற்ற பிரதான கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் அபாரமாக பந்துவீசி இருந்தார். பி.ஆர்.சி. அணிக்காக ஆடும் அவர் குருநாகல் அணிக்கு எதிரான போட்டியில் 7 ஓவர்களில் 21 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

இது ஏ தர மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் அவரது சிறந்த பந்துவீச்சாகவும் இருந்தது. இதற்கு சரியாக ஒரு நாளைக்குப் பின்னரே அவர் இலங்கை அணிக்கு அழைக்கப்பட்டார்.

இலங்கை அணி அண்மைக் காலத்தில் சந்தித்து வரும் தோல்விகளால் அணியில் புதிய திறமைகளை தேட வேண்டிய கட்டாயத்திற்கு தேர்வுக் குழு தள்ளப்பட்டிருப்பது மற்றும் இருக்கின்ற அனைத்து முக்கிய வேகப்பந்து வீச்சாளர்களும் அணியில் இடம்பெற முடியாத நிலையில் ஷிராஸின் இணைப்பு இடம்பெற்றிருக்கிறது.

என்றாலும் 29 வயதான ஷிராஸ் நீண்ட காலமாக கவனிக்கப்படும் வீரராக இருந்து வருகிறார். ஆனால் அவருக்கான வாய்ப்புகள் என்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்து வருகிறது. உள்ளூர் போட்டிகளில் சோபித்து அண்மையில் நடந்து முடிந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் இடம்பெற்றாலும் அங்கேயும் அவருக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

மடவளை, மதீனா மத்திய கல்லூரியில் இருந்து தனது கிரிக்கெட் வாழ்வை ஆரம்பித்த ஷிராஸ், கிரிக்கெட் பின்னணி இல்லாத சூழலில் இருந்து இத்தனை தூரம் வருவதென்பது சாதாரணமானதல்ல. பின்னர் குருநாகல் யூத் கழகத்தில் ஆடிய அவர் கோல்ட்ஸ் கழகத்தில் இணைந்தது அவரது கிரிக்கெட் வாழ்வின் திருப்பமாகும்.

இதுவரை 49 முதல் தர போட்டிகளில் ஆடியிருக்கும் அவர் 125 விக்கெட்டுகளை வீழ்த்தி இருப்பதோடு பந்துவீச்சு சராசரியும் 31.31 என நன்றாக உள்ளது. இதுவரை 47 ஏ தரப் போட்டியில் ஆடியிருக்கும் அவர் 80 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். பந்துவீச்சு சராசரியும் 17.52 என சிறப்பானது.

2019 ஆம் ஆண்டு இலங்கை அணியின் தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தின்போது ஷிராஸும் இலங்கை குழாத்தில் இடம்பெற்றிருந்தார். ஆனால் அங்கு இலங்கை ஆடிய மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதற்கு பின்னர் அணிக்கு திரும்புவதற்கு அவர் ஐந்து ஆண்டுகள் காத்திருந்தே இலங்கை அணியில் இடம்பெற்றிருக்கிறார்.

தனது திறமையை நிரூபிப்பதற்கு ஷிராஸுக்கு அதிக அவகாசம் கிடைக்கப்போதில்லை, கிடைக்கும் வாய்ப்பை கச்சிதமாக பயன்படுத்தினாலேயே அதனை தக்க வைக்க முடியும். அதற்கு திறமையுடன் அதிர்ஷ்டமும் கைகூட வேண்டும். இது ஷிராஸுக்கு மாத்திரமல்ல உள்ளூர் மட்டத்தில் சோபித்து வரும் இலங்கையின் பல கிரிக்கெட் வீரர்களுக்கு பொருந்தும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# செந்தூரம்

2024 ஓகஸ்ட் 4 ஞாயிற்றுக்கிழமை




மாஸாக தங்கம் வென்று அசத்திய மாஸ் ஓட்ட வீராங்கனை தருஷி கருணாரட்ன

## இலக்கிய ஆளுமை கொண்ட படைப்பாளி ஆசிரியை மஸீதா அன்சார்



பக்கம் : 06

## என்னை அதன் மீது அமர வைத்தார் பா.ரஞ்சித்..!



பக்கம் : 08-09

## மன எழுச்சியை தருவது மகிழ்ச்சி



பக்கம் : 10

## ஸெம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய 2004 O/L Batch சம்பியன்



பக்கம் : 16

# இப்படியும் திருடலாமா?

ஜெர்மனியின் கொபேனிக் நகரில் இருக்கும் மேயர் அலுவலகத்தில் திருடுவது எப்படி என்று திட்டம் போட்டார் 57 வயதாக இருக்கும் வில்ஹாம் வொயிட். ஆனால் அவர் போட்ட திட்டத்தை யாரும் சிந்தித்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள்.

பொதுவாக திருட்டு வேலை



என்றால், ஆயுதங்களை கொண்டு மிரட்டித் திருடலாம் இல்லையென்றால் காலம் நேரம் பார்த்து யாருக்கும் தெரியாமல் இரகசியமாகத் திருடலாம். ஆனால் வில்ஹாமின் வழி தனி வழி. இராணுவத்தை கொண்டு கச்சிதமாகத் திருடிக் காட்டினார்.

வெவ்வேறு கடைகளில் இராணுவத் தளபதி ஒருவருக்கான உடைகளை வாங்கினார். 1906 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி அந்த ஆடையை அணிந்து கொண்டு இராணுவ முகாம் ஒன்றுக்குச் சென்றார். தளபதிபோல் வேசம் போட்டிருந்த வில்ஹாமை பார்த்த எல்லோருமே சலூட் அடிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போதெல்லாம் தளபதிகள் சொல்வதை குருட்டுத்தனமாக செய்வது தான் ஜெர்மனி இராணுவத்தின் வேலை. அதனை பயன்படுத்திக் கொண்ட வில்ஹாம் அங்கிருந்த கிட்டத்தட்ட 20 இராணுவத்தினருக்கும் தம்மை பின்தொடருமாறு உத்தரவிட்டார். அப்படி வந்த இராணுவத்தை கொண்டுபோய் மேயர் அலுவலகத்திற்கு முன்னால் நிறுத்தினார். மேயரை கைது செய்யுமாறு இராணுவத்திற்கு உத்தரவிட்டார். ஏன், எதற்கு என்று கேட்காத இராணுவம் நேராக அலுவவலகத்திற்குள் புகுந்து மேயரை இழுத்து வந்தனர்.

அந்த அலுவலகத்திற்கு சென்ற வில்ஹாம், பணப் பெட்டியை காண்பிக்குமாறு உத்தரவிட்டார். அங்கே சுமார் 4,000 மார்க்ஸ் பணம் இருந்தது. யாரும் பார்ப்பதற்கு முன் அத்தனை பணத்தையும் பைக்குள் போட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மேயரை காரில் போட்டுக் கொண்டு பெர்லின் பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு இராணுவத்தின் ஒரு குழுவுக்கு உத்தரவிட்டார். எஞ்சிய வீரர்களை தம்முடன் இருக்குமாறு கூறினார். ஆனால் அரை மணி நேரம் கழித்து அங்கிருந்து நைசாக நழுவிக் கொண்டார் வில்ஹாம்.




இன்னுமே என்ன நடந்தது என்று தெரியாத படையினர் மேயரையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்றார்கள். நடந்தது எல்லாமே தலையில் மிளகாய் அரைக்கும் வேலை என்பது புரிவதற்கே இன்னும் சில மணி நேரம் தேவைப்பட்டது.

பின்னர் தப்பிச் சென்ற வில்ஹாமை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டது. சில நாட்களின் பின் பெர்லினில் வைத்து சிக்கிக் கொண்ட வில்ஹாமுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. என்றாலும் இரண்டு ஆண்டுகளிலேயே விடுதலை பெற்றார்.

இது ஒரு பயங்கரத் திருட்டு என்றாலும் யாரும் செய்யத் துணியாத குறும்புத்தனமான வேலை. இதனால் அவரது புகழ் ஊரெல்லாம் பரவியது. அவரது மெழுகுச் சிலை ஒன்றும் அண்டர் டென் லின்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. அவர் பற்றிய கதைகள், செய்திகள் உலகெங்கும் பரவின. தனது கதையைக் கூறும் புத்தகம் ஒன்றையும் வெளியிட்டார். அது அமோகமாக விற்பனையானது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



# பூனைகளிடம் தோற்ற எகிப்துப் படை

கி.மு. 525 ஆம் ஆண்டு இடம்பெற்ற பெலுசியம் போர் என்பது பாரசீக பேரரசுக்கும் பிரமிடுகள் கட்டிய எகிப்து பேரரசுக்கும் இடையில் வெடித்த முதலாவது பாரிய போராகும். ஆனால் பாரசீகம் வெறுமனே பூனையை பயன்படுத்தி அந்தப் போரை வென்றது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். எகிப்தியருக்கு பூனை என்றால் புனிதமானது. எந்த சந்தர்ப்பத்திலும் அதனைக் கொல்ல மாட்டார்கள். இதனை ஒரு போர் தந்திரமாகப் பயன்படுத்தினார் பாரசீக பேரரசர் இரண்டாவது கம்பீசஸ்.

எனவே படை வீரர்களின் கவசங்களில் பூனையின் படத்தை வரைந்தார். தனியாக பூனைகளை வைத்து உண்மையான பூனைப்படை ஒன்றை உருவாக்கினார். போருக்காக எகிப்தியப் படை எதிரே வரும்போது முன்னால் புனைகளை அனுப்பினார். வந்த எகிப்திய வீரர்கள் பூனைகளை எதிர்கொள்ள தயங்கியபோது அதனை பயன்படுத்தி பாரசீகப் படை எதிரிகளை முறியடித்து அந்தப் போரை வென்றது.

# வயிறு வெடிக்கச் சாப்பிட்டு உயிரை மாய்த்த பெண்

பெரும் அளவான உணவை இணையத்தில் நேரலையில் உட்கொண்டு பார்வையாளர்களை கவரும் போக்கு 2010 களின் ஆரம்பத்தில் தென் கொரியாவில் பிரபலமானது. இதனை முக்பங் என்பார்கள். 2010களின் நடுப் பகுதிகளில் இந்தப் போக்கு உலகெங்கும் பிரபலமானது. இன்றாகும்போது உயிரைக் கொல்லும் அளவுக்கு உச்சத்தைத் தொட்டுவிட்டது.

சீனாவின் 24 வயதான பான் சுவாட்டிங் இப்படி



உண்பதில் பிரபலமானவர். கடைசியில் பத்து மணி நேரம் இடைவிடாது சாப்பிட்டு வயிறு வெடித்து இறந்தார். அப்போது அவர் கிட்டத்தட்ட 55 கிலோ உணவுகளை சாப்பிட்டிருக்கிறார்.

ஜீரணமாகாத உணவுகள் அவரது வயிற்றில் நிரம்பி வயிற்றைச் சேதப்படுத்தி இருப்பதாக பிரேத பரிசோதனையில் கண்டுபிக்கப்பட்டது. அவரது வயிற்று அமிலம் மற்றும் அடி வயிற்றில் உணவு கசிந்து வயிறு வெடித்திருப்பதாக மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சுவாட்டிங் சீனாவில் சாப்பிட்டே பிரபலமானவர். இணையத்தில் நேரலையில் தோன்றும் அவர் நிற்பவை, நடப்பவை, பறப்பவை, நீந்துபவை என்று கண்டதை எல்லாம் சாப்பிடுவார். ஒரு தடவை அதிகம் சாப்பிட்டதால் இரைப்பை இரத்தப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனையில் கூட அனுமதிக்கப்பட்டார். என்றாலும் வீடு திரும்பிய அவர் மீண்டும் ஒருமுறை கெமரா முன் கண்டபடி சாப்பிட ஆரம்பித்தார்.

இப்படி சாப்பிட்டு உயிரை மாய்த்த முதலாமவர் சுவாட்டிங் அல்ல. 2023 ஜனவரியில் டிக்டோக் நட்சத்திரம் டெய்லர் பிரைஸ் லீஜியுன் அதிகம் சாப்பிட்டு மாரடைப்பு வந்து இறந்தார். இறக்கும்போது அவருக்கு 33 வயது தான்.

# ஜெர்மனியின் இறைச்சிக் கடைக்காரர்

கார்ல் கிரோப்மனை ஜெர்மனியர்கள் இறைச்சிக் கடைக்காரர் என்று தான் அழைப்பார்கள். ஒரு பயங்கரத் தொடர் கொலையாளி, பாலியல் வேட்டையாடுபவர், நரமாமிசம் சாப்பிடுசபவர் என்று கிரோப்மன் பற்றி கதைகள் பயங்கரமாக இருக்கும். 1863 இல் பிறந்த கிரோப்மன் 50 தொடக்கம் 100 பேரை கொன்றிப்பதாக நம்பப்படுகிறது.



ஆனால் அவரது கதையில் முக்கால்வாசி சம்பவங்கள் ஊகங்களாகத் தான் இருந்து வருகின்றன. ஏனென்றால் அவரது 50 வயதுகளில் கைது செய்து விசாரணை நடத்திவந்தபோது தூக்கில் தொங்கி தற்கொலை செய்துவிட்டார். என்றாலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது பாலியல் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் பல தடவை கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் வசிக்கும் குடியிருப்பில் கூச்சல் சத்தங்கள் தொடர்ந்து கேட்பதை பொறுக்க முடியாத அண்டை வீட்டார் பொலிஸில் முறையிட்டபோதே கிரோப்மன் செய்த பயங்கரங்கள் வெளிச்சத்திற்கு வந்தன. கிரோப்மனின் வீட்டுக்குள் நுழைந்த பொலிஸார் படுக்கையில் அண்மையில் கொல்லப்பட்ட பெண் ஒருவரின் சடலம் இருப்பதை கண்டுபிடித்தார்கள்.

பின்னர் நடந்த விசாரணைகளில் கிரோப்மனின் கொலைப் பட்டியல் நீண்டு கொண்டே சென்றது. அது மாத்திரமல்ல கொல்லப்பட்டவர்களின் இறைச்சியை அவர் சாப்பிட்டதாகவும், தெருவோரத்தில் உணவு விற்று வந்த அவர் அதில் அந்த இறைச்சியை கலந்து விற்றதாகவும் கதைகள் உண்டு.

**மாமியார்** : ஏம்மா மருமகளே! காலையில சூரியன் உதிக்கிறதுக்கு முன்னால எந்திரிச்சு வேலைய பாருங்க.... நீ ரொம்ப லேட்டா எந்திரிக்குற!
**மருமகள்** : அத்த... சூரியன் சாயங்காலமே தூங்க போயிடுது... அதனால சீக்கிரம் எழுந்திரிக்குது... ஆனா நா லேட்டாதானே தூங்குறேன்... அதனால லேட்டா தான் எழுந்திருக்க முடியும்!





பயணி: யோவ் டிரைவர்! பஸ்ஸை நிறுத்து... ஒருத்தர் பஸ்ல இருந்து தவறி விழுந்துட்டாரு
டிரைவர்: சும்மா இருய்யா! கண்ட இடத்துல பஸ்ஸை நிறுத்துனா கண்டக்டர் என்னை திட்டுவாரு
பயணி: யோவ்! விழுந்ததே கண்டக்டர்தான்
டிரைவர்: அடப் பாவத்த!

அப்பா: தம்பி அங்க பாருங்க... பசங்களாம் Jolly ahh விளையாடிகிட்டு இருக்காங்க... நீங்க மட்டும் ஏன் தனிய இருக்கிங்க.
மகன்: அப்பா நான்தான் அந்த டீம் ஒட Goal Keeper.





டாக்டர்: மனநிலை சரியில்லையா? என்னம்மா சொல்ற?
பெண்: ஆமா டாக்டர்... நாலு நாளா என் மருமக என்ன செஞ்சாலும் எனக்கு கோபமே வரமாட்டேங்குது டாக்டர்!

மனைவி : உங்க அம்மாவுக்கு சப்பாத்தி பிடிக்கல; இட்லி தோசையும் பிடிக்கல; உப்புமா போட்டாலும் பிடிக்கல. . .
கணவன் : ஐயையோ... வேற என்னதான் போட்ட?
மனைவி : பேசாம பட்டினி போட்டுட்டேன்...



மனைவி: போதை ஏறிச்சுன்னா அதுக்காக இப்படியா?
கணவன் : ஏன்... அப்படி என்ன பண்ணினேன் செல்லம்?
மனைவி : ஐயோ... உங்க கையில இருக்கிறது பிராந்தி பாட்டில் இல்ல மண்ணெண்ணெய் பாட்டில்...



கணவன்: ஒரு மணி நேரம் விசிறியால் எனக்கு விசிறியதற்கு ரொம்ப நன்றி!
மனைவி : நமக்குள்ள எதுக்குங்க இந்த ஃபார்மாலிட்டி எல்லாம்... ஒரு மணி நேரம் நீங்க மாவாட்டுனதுக்கு நான் என்ன தேங்ஸ்சா சொன்னேன்?

கோபு : என்னய்யா பிச்சாண்டி! வீட்டுக்கு என்னமோ Ride வந்தாங்களாம்... நீ சிரிச்சிக்கிட்டே இருந்தியாமே!
பாபு : அது ஒன்னும் இல்ல குமாரு... என் கிட்ட இருக்குற சொத்தை (சொத்தை பல்) காட்ட சொன்ன அதான்..!





தம்பி தீக்குச்சியை பத்த வெச்சு ஏன் இட்லி மேல வைச்சு பார்க்கிற?
நீங்க தானே இட்லி "பஞ்சு" மாதிரி இருக்குன்னு சொன்னீங்க! அதான் தீப்பிடிக்குதானு பார்த்தேன்!





அப்பா 1: தலைவா உங்க பேருல விசாரணை Commision வெச்சி இருக்காங்கலாம்...
அப்பா 2: Commision ahh Very good... எவ்வளவு கிடைக்கும்?

அப்பா 1: ரெண்டு நாளா என் பையனை காணும் குமாரு!
அப்பா 2: யோவ் என்ன சந்தேகபடாதேயா... என் பொண்ணு வீட்டுலதான் இருக்கா!



பாடத்தைக் கவனிக்காமல் இருந்ததால உன்ன டீச்சர் அடிச்சாங்களே,
அதை ஞாபகம் வச்சிருக்கியா?நான் அதை "அடி"யோடு மறந்துட்டேன்.

வெண்ணெய் வியாபாரி லெட்டர் எப்படி எழுதுவாரு?
"உருகி, உருகி" எழுதுவாரு!







# ஸ்ரீ வராஹி அம்மனின் அருள் பெற்ற பிரபல ஜோதிடர் 'குருஜி' ஆனந்தன்



ஸ்ரீ வராஹி அம்மனின் அருள் பெற்ற பிரபல ஜோதிடரும் ஸ்ரீவராஹி அம்மன் உபாசகருமான 'குருஜி' ஆனந்தன் தற்பொழுது இலங்கைக்கு வருகை தந்திருக்கிறார். இவர் ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு வந்து கொழும்பில் தங்கி இருந்து ஜாதகம் கணித்துக் கூறுவதுண்டு.

ஜாதகக்குறிப்பு இல்லாதவர்களுக்கு பிறந்த திகதி, நேரம் ஆகியவற்றை கொடுத்தால் அவர் ஜாதகத்தை எழுதி கணித்துப் பார்த்து பலாபலன்களை கூறுவார்.

இவர் ஜாதகங்களை மட்டுமல்ல சோழி போட்டுப் பார்த்தும் சாஸ்திர ரீதியிலான நன்மை, தீமைகள், எதிர்கால பலன்கள், ஒவ்வொருவரும் எதிர்கொள்கின்ற இடர்கள், துன்பங்கள், எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதுடன் அவற்றுக்கான பரிகாரங்களை கூறுகிறார்.

ஜாதகம் கணித்துக் கூறுவதை பரம்பரையாக கைக்கொண்டு வந்தாலும் மருந்து மாத்திரைகள் பாவிக்காது சித்தர்கள் காட்டிய நல்வழிகளைப் படித்து பின்பற்றி அகனுடாக நோய் நொடிகள் தீர்த்துக் கொள்ள வழிகாட்டி வருகிறார். நோய் நொடிகள் தீர சித்தர்கள் காட்டியுள்ள நெறிமுறைகளை ஏடுகளில் இருந்து படித்து அறிந்து கொண்டதுடன் நின்று விடாது குருக்களிடம் சென்று அவற்றை கற்றுத் தேர்ந்துள்ளார். வயது செல்ல செல்ல உடல்களில் ஏற்படும் உபாதைகள், பார்வை குறைதல், சீனிப் பிரச்சினை, போன்ற பிரச்சினைக்கு ஆங்கில வைத்தியமுறைகளை பின்பற்றி பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மருந்து மாத்திரைகள் உட்கொள்ளாது சித்தர்கள் காட்டிய வைத்திய முறைகளை பின்பற்றி நலன் பெற சொல்லித் தருகின்றார்.

எங்களது பொருட்கள் ஏதாவது காணாமல் போனால் அல்லது நாம் வைத்த இடம் தெரியாமல் தேடி தடுமாறினால் அதனை இலகுவாக கண்டுபிடிக்கக்கூடிய, அவை இலகுவாக கிடைக்கக்கூடிய வழிமுறைகளை இவர் கற்றுத் தருகிறார். வெறுமனே ஒரு மந்திரத்தை 108 தடவைகள் உச்சரித்து கூறுவதன் மூலம் அந்தப் பலனை, அந்த அனுபவத்தை நாமும் பெற்று விடலாம். இதுபோன்ற இன்னொரன்ன மந்திரங்களை இவர் முறையாக கற்றுத் தேர்ந்துள்ளார்.

மந்திரங்கள் என்றால் பெரிதாக அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்ற எந்தத் தேவையும் இல்லை.

இவ்வாறு தான் கற்றுத் தேர்ந்த, தான் தொடர்ந்து பின்பற்றி வெற்றிகண்ட வழிமுறைகளை ஒளிவுமறைவின்றி கற்றுத் தர முன்வந்துள்ளார். தான் பெற்ற இன்பம் பெற வேண்டும் இந்த வையகம் என்ற அடைமொழிக்கு ஏற்ப இவர் தான் கற்றவற்றை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க விரும்புகிறார்.

இதற்கமைய ஒரு நாள் பயிற்சி வகுப்புகளை நடத்த முன்வந்துள்ளார். இவர் இந்தப் பயிற்சி வகுப்பில் 18 சித்தர்களின் மந்திரங்களையும் முத்திரைகளையும் கற்றுக் கொடுக்கவுள்ளார்.

இவ்வாறு 18 மந்திரங்களையும் உச்சரித்து வந்தால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்கிறார்.

மந்திரங்களை கூறுவதன் மூலம் அசுத்தங்களை துடைத்து விட வாழ்வு சிறப்பு அடையும் என்கிறார் அவர். 10 பேருக்கு இவ்வாறு மந்திரங்களை சொல்லிக் கொடுப்பதன் மூலம் 100 குடும்பங்கள் இதன் மூலம் நன்மையடையும் என்கிறார்.

குடும்பப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், கல்வித் தடைகள், வெளிநாட்டுப் பயணத் தடைகள், வியாபார முன்னேற்றத் தடைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சோதிட ரீதியான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் இவரிடம் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி வழங்குகின்ற அன்று பகல் உணவுகளையும் இலவசமாக வழங்குகிறார்.

இவர் ஜாதகங்களை கணித்துக் கூறி பலன்களை சொல்லுவது மட்டுமன்றி குறைகள் இருப்பின் பரிகாரங்களையும் சொல்லி கொடுக்கிறார்.

இவர் பரிகாரங்கள் சொல்லி கொடுப்பதோடு நின்று விடுகிறார். பரிகாரங்களை அவரவர்கள்தான் செய்ய வேண்டும்.


ஜாதகக் குறிப்புகள் இல்லாதவர்களும் பிறந்த திகதி மற்றும் நேரத்தைச் சொல்லி ஜாதகத்தை அமைத்துக்கொள்ள முடியும். அத்துடன் சோழிப் பிரசன்ன முறையிலும் இவர், மக்களின் குழப்பங்களுக்குத் தீர்வு சொல்லி வருகிறார். இவர் 2004 இலிருந்து 20வருட காலமாக இவ்வாறு ஜாதக சோழி பார்த்து பலன் சொல்லி வருகிறார்.

இவருடன் தொடர்பு கொள்வதாக இருந்தால் வட்ஸ்அப்பில் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் கூறுகிறார்.

இவர் தந்தை வழியில் பரம்பரையாக ஜாதகம் கணித்து, சோழி பார்த்து பலாபலன்களை கூறி வருகிறார். இவர் இது தொடர்பு மேலதிகமாக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக குருகுலத்தில் சேர்ந்து 12 வருடங்கள் இது பற்றி கற்றும் வந்துள்ளார்.

ஆன்மீக மற்றும் சோதிட ரீதியான சேவைகளைச் செய்து வரும் குருஜி ஆனந்தனை, 0750786717 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பயனடையலாம்.

முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



# பத்தாவது அகவையில் பலகத்துறை கலை இலக்கிய வட்டம்

கடல் வளம், கல்வி வளம் மற்றும் கவிதை வளம் என சகல வளங்களும் சிறப்பாகப் பெற்ற ஊர் கம்மல்துறை. நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு கடல் வளம் சோறு போடுகிறது. தென்கிழக்கு ஆசியாவின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவர் எமதூர் அறிஞர் மர்ஹூம் யூ.எம். தாஸீன் நத்வி, அல்அஸ்ஹரி என்பது இந்த ஊரின் கல்வி வளத்துக்கு ஒரு பதச் சோறு.

பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்க்காதவர்கள் கூட கவிதை பாடும் அதிசயமான ஊர் இந்தப் பலகத்துறை.பத்திரிகைகளுக்கு தனித்தனியாக கவிதை எழுதிக் கொண்டிருந்தவர்களை 'பலகத்துறை கலை இலக்கிய வட்டம்' என்ற அமைப்புக்குள் கட்டிப் போட்டவர் மர்ஹூம் எம். எஸ். எம். றிஸ்மி ஆசான் அவர்கள். இந்தக் கலை இலக்கிய வட்டம் கடந்த 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் திகதி பலகத்துறை மத்ரஸத்துல் சுலைமானியா மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை காலத்துக்கேற்ற கலை இலக்கியப் பணிகளை இந்த வட்டம் தொடர்ச்சியாக நிறைவேற்றி வருகிறது.

இவ்வமைப்பின் ஆயுட்காலத் தலைவராக மர்ஹூம் யூ. எம். பகுருத்தீன் ஆசிரியர் பணியாற்றினார்.

அவரது மறைவுக்குப் பின்னர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் எம். ஜே. எம் தாஜுதீன் தலைமை பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

வெறும் வாய்ப்பேச்சளவில் இருந்து வந்த பலகத்துறை வரலாற்றை 'பலகத்துறை வரலாறும் வாழ்வியலும்' என்ற நூலின் மூலம் எழுத்து வடிவில் ஆவணப்படுத்திய பெருமை இந்த இந்த இலக்கிய வட்டத்தையே சாரும்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் எழுதிய இந்த நூலே பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் கன்னி வெளியீடாகும்.

பலகத்துறை ஜலால்தீன் பவுண்டேஷன் வழங்கிய இணை அனுசரணையுடன் இந்த நூல் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது. பலகத்துறையில் உள்ள இளம் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக இலக்கிய வட்டத்தின் 'வட்ஸ்அப்' குழுமத்தில் மாதாந்த புகைப்படக் கவிதை போட்டியை இந்த இலக்கிய வட்டம் நடாத்தியது. இலங்கையில் உள்ள தலைசிறந்த கவிஞர்கள் இப் போட்டிக்குநடுவராகநியமிக்கப்பட்டனர். போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு இலக்கிய வட்டம் பணப்பரிசுகளை வழங்கியது. இப் போட்டிகள் மூலம் கிடைத்த நல்ல கவிதைகளை ஒன்று திரட்டி 'புலனம்' என்ற பெயரில் ஒரு கவிதை நூல் கடந்த 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது. பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் இரண்டாவது பிரசுரம் இது.இந்த ஊக்குவிப்பு காரணமாக உறங்கு நிலையில் இருந்த திறமைசாலிகளும் இலைமறை காயாக இருந்த கவிஞர்களும் கவிதை எழுத ஆரம்பித்தார்கள். இதன் காரணமாக பலகத்துறை மண்ணில் ஆயிரம் கவிதைகளை அறுவடை செய்ய முடியும் என்ற நம்பிக்கை எம்முள் துளிர்விட்டது.



இத்திட்டத்தின் முதற்கட்டமாக நூறு கவிதைகளை முதலில் வெளியிட இலக்கிய வட்டம் தீர்மானித்தது. இதன் பெறுபேறாக கம்மல்துறை கவிஞர்கள் 24 பேர் எழுதிய நூறு கவிதைகள் 'தூண்டில்கள் துடிக்கின்றன' என்ற கவிதை நூலாக கடந்த 14.07.24 அன்று வெளியிடப்பட்டது. எமது இலக்கிய வட்டத்தின் இளம் ஊடகவியலாளர் அனஸ் அப்பாஸ் எழுதி 'மீள்பார்வை' பத்திரிகை வெளியிட்ட 'தேசிய சாதனை மடல்' நூல் வெளியீட்டு விழாவை பலத்துறை கலை இலக்கிய வட்டம் கொழும்பில் மிக விமர்சையாக நடத்தி சாதனை புரிந்தது. மர்ஹூம் றிஸ்மி ஆசானின் அயராத முயற்சி காரணமாக வலம்புரி கவிதா வட்டத்தின் 77 ஆவது கவியரங்கை பலகத்துறை கலை இலக்கிய வட்டம் பலகத்துறையில் அறிஞர் யூ.எம்.தாஸீன் அரங்கமைத்து மிகச் சிறப்பாக நடாத்தியது. இதன் காரணமாக பலகத்துறை இளம் கவிஞர்கள் மத்தியில் கவிதையாக்க உத்வேகம் பிறந்தது.

கடந்த காலங்களில் கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரி மாணவர்கள் மத்தியில் கவிதை போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கி வந்தோம். அந்த செயற்பாட்டை மீண்டும் தொடர்வது என கலை இலக்கிய வட்டம் தீர்மானித்துள்ளது. மக்கள் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில், கடந்த காலங்களில் செயலிழந்து போன வாசிகசாலை, அதாவது பொது நூலகத்துக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. பத்தாவது அகவையில் பயணித்துக் கொண்டிருக்கும் எமது கலை இலக்கிய வட்டத்தின் எதிர்கால திட்டங்களில் முக்கியமானது

எமது சொத்து, பலகத்துறை ஈன்றெடுத்த முத்து அறிஞர் யூ.எம்.தாஸீன் அவர்களது ஆளுமைகள் தொடர்பான அரிய தகவல்களை ஒன்று திரட்டி நூலுருவில் கொண்டு வருவதாகும். அதற்காக அன்னாரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் எம்மோடு கைகோர்த்து இப்பணியை சிறப்பாக நிறைவேற்ற உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பத்தாவது அகவையில் பல கனவுகளைச் சுமந்து பல சவால்களைச் சமாளித்து வீறுநடை போடும் பலகத்துறை கலை இலக்கிய வட்டத்துக்கு பக்கபலமாக நின்று ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

எம்.ஜே. எம். தாஜுதீன்

# கிளிநொச்சி, பரந்தனிலுள்ள ஆர். ஜே. மஹாலில்

# ஜூனியர் சுப்பர் சிங்கர்



C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் வடமாகாணத்தில் நடத்தி வரும் ஜூனியர் சுப்பர் சிங்கர் போட்டியின் கடந்த வார குரல் தேர்வு பருத்தித்துறை, வல்லை யாழ் பீச் ஹோட்டலில் நடைபெற்றது. அதில் அதிதியாக கலந்து கொண்டவர்களும் மங்கள விளக்கை ஏற்றி விழாவை மங்களகரமாக ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து போட்டியாளர்கள் மிகவும் உற்சாகமாக கலந்து கொண்டார்கள்.

அந்தப் போட்டியின் தொடர் நிகழ்வு நேற்று கிளிநொச்சி, பரந்தனிலுள்ள ஆர். ஜே. மஹாலில் நடைபெற்றது. இங்கு இன்றும் நடைபெறவுள்ளது.

இதன் இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக் காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.




























# இலக்கிய ஆளுமை கொண்ட படைப்பாளி ஆசிரியை மஸீதா அன்சார்



**கே: நீங்கள் நீண்ட கால இலக்கிய ஆளுமையுள்ள படைப்பாளியாகவும், ஆசிரியையாகவும், சமாதான நீதவானாகவும் இருக்கிறீர்கள். உங்களைப் பற்றிய மேலதிகமான தகவல்களை தாருங்கள்.**

நான் பிறந்த ஊர் மக்கொன. தற்போது மோதர, மொறட்டுவையில் புகுந்த இடத்தில் வசித்துக் கொண்டிருக்கிறேன். எனது ஆரம்பக் கல்வி மக்கொன அல்ஹஸனியா பாடசாலையில் தொடங்கி, 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தர்கா நகரில் உள்ள முஸ்லிம் பெண்கள் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். எனது 17 வயதிலேயே ஆசிரியர் தொழிலுக்கான நேர்முகப் பரீட்சை நடந்து வயது போதாமையினால்



கிடைக்கவில்லை. பின்னர் நான் பெரும்பான்மை ஆசிரியை ஒருவருடன் சேர்ந்து பாலர் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றினேன். அதன் பின்னர் கொழும்பு மருதானையிலுள்ள கலீல் நர்சிங் ஹோமில் தாதியாகக் கடமை புரிந்தேன். அக்கால கட்டத்தில் ஆயுர்வேத வைத்திய புகுமுகப் பரீட்சையில் சிறந்த சித்தியை அடைந்தும் அண்ணா விரும்பாமையால் கற்க முடியவில்லை. அதன் பின்னரே ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டேன். நான் இஸ்லாமிய மார்க்கக் கடமைகளில் ஒன்றான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றியுள்ளமை விசேட அம்சமாகும்.

இன்று, நான் சாமஷ்ரீ தேசகீர்த்தி, கலாபூஷணம், சமாதான நீதிவான் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளதுடன், மொறட்டுவ, மோதர மாதர் சங்கம், ஜனாஸா நலன்புரி சேவைச் சங்கம் ஆகியவற்றில் இணைந்து சமூகப் பணியை மேற்கொண்டு வருகிறேன்.

**கே: பல இலக்கிய ஆற்றல்கள் மிகுந்த நீங்கள் இதுவரை மறைமுகமாகவே எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்டி வருகிறீர்கள். மேலும் வானொலியிலும் நிறைய பங்களிப்பையும் செய்திருக்கிறீர்கள். இதனைப் பற்றி கூறுங்கள்.**

நான் எனது சிறு வயதிலிருந்தே இலக்கிய ஆர்வமும், தமிழில் அதீத வேட்கையும் கொண்டவள். வானொலிப் பிரியை. வாசிப்பும் வானொலி கேட்பதும் எனது இரு கண்களாகும். இதனால் எழுதுவதில் ஆர்வம் கொண்டேன். அதனால் வானொலி, பத்திரிகைகளுக்கு எனது ஆக்கங்களை எழுதுகிறேன். எனது இந்த ஆர்வத்தைக் கண்ட எங்கள் நர்சிங் ஹோமில் கடமையாற்றிய வைத்தியர்களான டாக்டர் முஹிதீன் ஹஸன், டாக்டர் அமீன் ஆகியோர் அந்த நேரம் முஸ்லிம் நிகழ்ச்சியில் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய இஸ்ட்.எல்.எம் முஹம்மத் ஹாஜி, எம். எச. குத்தூஸ் ஆகியோரினால் முஸ்லிம் நிகழ்ச்சியில் பங்குபெற இடம் கிடைத்தது. அவர்கள் இருவரினதும் துணைவியர்கள் எனது ஆசிரியைகளே என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கவியரங்கு, மாதர் மஜ்லிஸ் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்துள்ளேன். ஆமினா பேகம், நெய் றசீம் ஷஹீத், நூர்ஜஹான் மர்சூக், நிஹாரா சபூர்தீன் போன்றவருடன் கலந்து சிறப்பித்துள்ளேன். பின்னால் தமிழ் நிகழ்ச்சிகளிலும், குரல் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு பங்குபற்றியுள்ளேன். எஸ். ராம்தாஸ், எஸ்.எஸ். கணேஷ பிள்ளை (வரணியூரான்) எஸ். செல்வசேகரம், ஜோக்கிம் பர்ணாண்டோ, செல்வம் பர்ணாண்டோ, சந்திர பிரபா மாதவன், ஆனந்த ராணி, ராஜரட்ணம் மற்றும் பலருடன் பங்குபற்றியுள்ளேன். அதே காலகட்டத்தில் நான் தமிழ் நடிகர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளேன். வானொலி நிகழ்ச்சிகளில் தவிர ரூபவாகிஹினி, நேத்ரா தொலைக்காட்சி போன்றவற்றிலும் கலந்து சிறப்பித்துள்ளேன். கவியரங்குகளிலும், நேர்காணல், சாளரம், பாரம்பரியம் நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்துள்ளேன்.

**கே: சிறுகதைகளில் உரையாடல்கள் மிகவும் முக்கியம் இல்லையா... உரையாடல்களை நன்றாக அமைத்தவர்கள் எல்லோரும் வெற்றிகரமான எழுத்தாளர்களாகவே வலம் வந்துள்ளனர். உங்கள் நோக்கில் சிறுகதையை வாசகன் எப்படி கொண்டாட வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

வாசிப்பு ஒரு மனிதனை பூரண மனிதனாக்குகிறது. அது போல் சிறுகதைகள் பெரும்பாலும் வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது எனலாம்.







சிறுகதைகளில் உரையாடல்கள் வரும் பொழுது தான் அவ்வப்பிரதேச பேச்சுவழக்குகள் அதன் ரசனை எம்மை வசப்படுத்தும்.

சிறுகதையை, வாசகன் அதன் உரையாடலை தத்ரூபமாக நாடக பாணியில் வாசிக்கும் பொழுது அதன் ரசனை மேலோங்கி நிற்கும் என்பேன்.

**கே: பெண்களின் நிலைப்பாடு ஆண்டாண்டு காலமாக உள்ளே புழுங்கி வெளியே வெடித்து போராட்டத்தை ஏற்படுத்துகிறது. பெண்கள் பொதுவாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குடும்ப ரீதியாக ... சமூக ரீதியாக எவ்வாறு அவற்றினை தீர்க்கலாம் என நினைக்கிறேன்?**

பெண்கள் என்றால் வீட்டில் பூட்டி வைத்து அவர்களின் உரிமைகளையும், ஆசாபாசங்களையும் வெளிக்கொணர முடியாமல் தடை செய்வது அவர்களின் உளக்குமுறல்களுக்கும், மானசீக நோய்களுக்கும் ஆளாகி, மீறின் தடை அகற்றி தனிவிழி செல்லும் வழி வகுக்கும். பெண் என்பவள் பூட்டி வைக்கும் பேழையல்ல. மொட்டாகி விரிந்து மணம் பரப்பும் மலர் போன்றவள். எனவே, அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து பக்குவப்படுத்தி பூத்துக் குழுங்கச் செய்ய வேண்டியது சமூகத்தின் கடப்பாடு. அவர்களைப் பல துறைகளிலும் பங்காளிகளாக்கி பரிணமிக்கச் செய்வதே சமூகத்தின் தேவையாகும். இன்று பெண் விமானியாக, விண்ணுலகமே செல்பவளாக, எஞ்சினியராக, டாக்டராக, தாதியாக, ஆசிரியர்களாக, பொலிஸ் உத்தியோகத்தராக மேலும் பல உயரிய தொழில்களைச் செய்பவர்களாக மிளிர்வது போற்றக்குரியதே. அதனால் பெண்ணை வெறும் வீட்டு வேலைக்காரியாகவோ, அடுப்பூதும் பெண்களாகவோ காலங்காலமாக பூட்டி வைக்காமல் அவளையும் சமூகத்தின் ஒரு பங்காளியாக்கி அவளைக் காத்து, போஷித்து அவளின் ஆசாபாசங்களுக்கு இடம் கொடுத்து முன்னேற்றி விடுவதே சிறந்ததும் உகந்ததுமாகும்.

**கே: எந்த தேசத்திலும் தனித்த பறவை வானத்தை அணைத்துக் கொள்வதில்லை. உங்களின் எழுத்தாழுமை, ஊக்குவிப்பு, பின்புலன் இவற்றைப் பற்றி குறிப்பிடுங்கள்?**

என் எழுத்தாளுமைக்கு எனது பெற்றோரும், சகோதரரும், ஆசிரியர்களுமே காரணகர்த்தாக்கள் என்பேன். சிறுவயதில் தாய் கூறும் ஒவ்வொரு கதைகளும், சரித்திரங்களும் என்றும் மறக்காதவை. எனது அண்ணா இலக்கியவாதி என்பேன். எனக்கு ஏராளமான புத்தகங்கள் வாசிக்க தருவார். ஆனந்த விகடன், அம்புலி மாமா, ஆயிரத்தொரு இரவுகள், துப்பறியும் நாவல்கள் என பல்வேறு நூல்களையும் கொண்டு வந்து தருவார். தந்தையும் தினகரன் பத்திரிகையைத் தவறாது வாங்குபவர். இவ்வாறு என் வாசிப்பு மற்றும் எழுத்துப் பணிகள் வளர்ந்தது என்று குறிப்பிடலாம்.


**கே: வயதை வாங்கிக் கொண்டு அனுபவத்தைத் தரலாம் அல்லவா..? நீங்கள் கடந்து வந்த இலக்கிய அனுபவங்கள்... விமர்சனங்கள் இவற்றினைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

கற்கும் காலத்திலேயே திறமையையும், ஆர்வத்தையும் புரிந்து கொண்ட எமது ஆசிரியர் என்னை ஒரு பத்திராதிபராக நியமித்து மாணவர்களின் ஆக்கங்களைக் கைப்பிரதிகளாகப் பெற்று "மாணவர் மன்றத்தில்" அவற்றை வாசிப்பேன்.

காரியாலயத்தில் தொங்க விடப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகையில் தத்தமக்குத் தெரிந்த ஆக்கங்களை பார்வைக்கு விடுவதால் ஏனையோரும் வாசிப்பை நுகர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

**கே: சம காலத்தில் எந்தப் பக்கம் திரும்பினாலும் புதுக்கவிதையின்**

(07 ஆம் பக்கம் பார்க்க)



பாத்திமா நளீரா

# இலங்கை வானொலி நாடக வரலாற்றில் தனி முத்திரை பதித்த முதுபெரும் கலைஞர் கே.எம்.ஏ.மொஹிதீன் – ஒரு சந்திப்பு

ஒரு காலத்தில் முஸ்லிம் நாடக உலகின் தனிக்காட்டு ராஜாக்களின் ஒரு ராஜா கே.எம்.ஏ. மொஹிதீன் என்றால் அது மிகையாகாது. இன்று இறையருளால் 88 வயதைத் தாண்டி தேக ஆராக்கியத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். முஸ்லி'ம் சேவையின் முது பெரும் கலைஞர்கள் வரிசையிம் நம்மோடு இன்றும் வாழும் ஒரு கலைஞர் கே.எம்.ஏ. மொஹிதீன் எனும் செய்தி அறிந்து பூரிக்கிறோம். முஸ்லிம் சேவையின் நாடக பாரம்பரியம் காலம் கடந்தும் இன்றும் தனித்து மதம், கடல் கடந்தும் பேசப்படுகிறதெனில் கே.எம்.ஏ. மொஹிதீனுக்கும் அதில் நிறைய பங்கிருக்கிறது. இலங்கை வானொலியின் மற்றைய சேவையினரும், முஸ்லிம் நாடகக் கலைஞர்களை, எழுத்தாளர்களை மனம் திறந்து பாராட்டும் போது, இவரது பெயரையும் பிரஸ்தாபித்தே மனம் நெகிழ்வர். முஸ்லிம் சேவையாக உருவெடுக்க முன்பே, 1955 ஆம் ஆண்டு, முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கென, இலங்கை வானொலியில், முதல் அதிகாரியாக நியமனம் பெற்ற காமில் மரைக்கார் காலத்திலேயே அல்லாமா உவைஸ் அவர்களின் தயாரிப்பில் நாடகங்களை, எழுதியதோடு அதில் நடித்த பெருமைக்கும் உரியவர், கே.எம்.ஏ. மொஹிதீன். அது "ஒலிப்பதிவு" என்ற ஒன்றை நினைத்திராத காலம். நேரடி நிகழ்ச்சிகளில் நடித்து சாதனைப் படைத்தோரில் இவரும் ஒருவர். இலங்கை வானொலி தமிழ்ச் சேவையிலும் இவர் பங்களிப்புகள் உள்ளன. கலைச்சுடர், கலாபூஷணம் என பல பட்டங்களின் சொந்தக்காரர்.



சமூக நாடகங்களோடு, சரித்திர நாடகங்களும் எழுதி, நடித்து சரித்திரம் படைத்தவர். நகைச்சுவை நடிப்பும் இவருக்கு கைவந்த கலை. தான் ஏற்கும் எந்தப் பாத்திரமானாலும் அந்த பாத்திரமாகவே குரல் வழியால் மாறிவிடுவார். இவர் எழுதி, நடித்து இவருக்கு புகழைத் தேடிக்கொடுத்த நாடக தலைப்புகளை சட்டென சொல்லும் நேயர்கள் இன்றும் நம்மோடு வாழ்ந்து வருவது மகிழ்ச்சி தருகிறது. இன்றைய முஸ்லிம் சேவை இவரது அன்றைய நாடகங்களை, காப்பகத்தில் பாதுகாத்து அவ்வப்போது மறு ஒலிபரப்பு செய்து வருவது இவருக்கு கிடைத்த அங்கீகாரமே. இவர் ஓய்வு நிலை ஒரு நல்லாசிரியர், அதிபர். ஆங்கில மொழியிலும் ஆற்றல் மிக்கவர். திடீரென இவரை பற்றி இப்போது, நாம் எழுதுவதன் காரணம், எம்.எச். எம். நஸீர், கலைஞர் எம்.எஸ். அப்துல் லத்தீப், வகவத் தலைவர் கவிமணி நஜ்முல் ஹுசைன் ஆகிய நண்பர் குழுவோடு அவர் தற்போது வாழ்ந்து வரும் திஹாரியில் அவர் இல்லத்தில் அண்மையில் சந்தித்தோம்.



முகமன் கூறுவதற்கே, அவரை சந்திக்கச் சென்ற நாங்கள் மலைத்துப் போனோம். அவரது வரவேற்பில் திளைத்துப் போனோம். அவரது அனுபவ முயற்சி நிறைந்த உரையாடல் எங்கள் வாழ்க்கைக்கு பாடமாகியது. அவரது வயோதிபத்திலும் ஓர் இளமை பளிச்சிட்டது. அவரது தேக ஆரோக்கியம், நினைவாற்றல் கண்டு பேருவகைக் கொண்டோம்.

நல்ல மனிதருக்கு வயது ஒரு பொருட்டல்ல எனும் யதார்த்தத்தை உணர்ந்தோம். முஸ்லிம் சேவையின் வரலாறு, அதன் அன்றைய பொறுப்பாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என அடுத்தடுத்து பலரை நினைவு கூர்ந்தது எங்களை திக்குமுக்காட வைத்தது. முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து பிரபலம் தேடியோர் வரிசையில் முஸ்லிம் சேவையின் "பாரம்பரியம்" நிகழ்ச்சித் தொடரில் மறவாது கலாபூஷணம் கே.எம்.ஏ.மொஹிதீன் அவர்களின் காற்றலைகளின் கலைப்படைப்புகளை, முதிர்ச்சி நிறைந்த வானொலி அனுபவங்களை ஆவணப்படுத்தியதில் மன நிறைவடைகிறோம். பிரஸ்தாப நிகழ்ச்சி 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி செவ்வாய் இரவு முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகியது குறிப்பிடத்தக்கது. அவரது தேக ஆரோக்கியத்துக்கு ஆத்மார்த்தமாக பிரார்த்தித்து விடை பெற்றோம். எங்கள் ஒவ்வொருவரையும் ஆரத் தழுவி விடை தந்தார்.

வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

**எம்.எஸ்.எம்.ஜின்னா.**

## இலக்கிய ஆளுமை கொண்ட... (06 ஆம் பக்க தொடர்ச்சி)

**வீச்சாகவே இருக்கிறது. பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பர் make it new என்ற சொற்றொடருக்கு ஏற்ப நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?**

சம காலத்தில் எங்கு திரும்பினாலும் புதுக் கவிதையின் வீச்சு இருக்கத்தான் செய்கிறது. யாவரும் புரிந்து கொள்ளும் பாங்கில் புதுக் கவிதை அமைந்துள்ளதனால் அதன் வேகம் தொடர்கிறது.

முன்பு புலவர்களால் பாடப்பட்ட கவிதைகளை விளங்கிக் கொள்ள பாமர மக்கள் தடுமாறுவர். ஆனால் இன்று எவரும் படிக்கலாம், புதுமைகளைப் புகுத்தலாம்.

**கே: கற்றலை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை ஆசிரியை என்ற முறையில் மாணவர்களுடனான முகாமைத்துவம் எப்படி எடுத்துச் செல்லப்படுகிறது?**

மாணவர்களுக்கிடையே கற்றல் செயற்பாடுகளை மூவகையாகப் பிரிக்கலாம். மீள்திற மாணவர், சாதாரண மாணவர், பின் தங்கியோர் என வகைப்படுத்தும் போது அதனை வழி நடத்தும், நெறிப்படுத்தும் திறமை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்.

எனவே, அந்தந்த வகையில் மாணவரை இனங் கண்டு அதற்கேற்ற முறையில் சகல மாணவரும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான பொறிமுறைகளைக் கையாண்டு எந்த மாணவரும் கை நழுவி போகாது பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதே சிறப்பு.




**கே: பல நூல்களை பலர் எழுதினாலும் மாணவர்களுக்கென விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய நூல்கள் வெளிவருவது குறைவு தானே... இதனைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் உங்களிடம் இப்படிப்பட்ட தேடல்கள் இருக்கிறதா?**

பல நூல்களை பலர் எழுதினாலும் மாணவர்களுக்கென விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நூல்கள் குறைவு தான்.

அது உண்மை. நான் பத்திரிகைகளில் வரும் விடயங்களை வேறு வேறாக வெட்டி, பகுதி பகுதியாக சிறுவர் கதை, விடுகதை, சரித்திர கதை, பொன்மொழிகள், கட்டுரைகள் இன்னும் இவை போன்ற விடயங்களை சேகரித்து ஒட்டி வகைப்படுத்தி புத்தக ரூபமாக வைத்திருக்கிறேன். அது யாவருக்கும் பிரயோசனப்படும் என நினைக்கிறேன்.

**கே: வாழ்க்கையின் கட்டமைப்பில் எனது இருப்புக்கான முக்கியத்துவம் என்று உங்களை உணர வைத்த சம்பவம் உள்ளதா?**

ஆமாம், சில வேலைகளில் எனது ஆர்வங்கள், மழுங்கடிக்கப்பட்டதுண்டு.

ஆயினும் "துணிந்தெழு பெண்ணே" என்பது போல என்னை ஊக்குவித்து தொடர வைத்தவர் கலைவாதி கலீல், வகவத் தலைவர் நஜ்முல் ஹுசைன் போன்றோரை மறக்க முடியாது.

இன்று நான் என் வாழ்க்கையின் கட்டமைப்புக்காக எழுத்துக்களுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.

**கே: புத்தகங்கள், வெளியிட்டிருக்கிறீர்களா? உங்களை வந்தடைந்த விருதுகள்மற்றும் மேலும் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

நான் சாம ஸ்ரீ தேசகீர்த்தி, கலாபூஷணம், சமாதான நீதிவான் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நான் எழுதிய "முத்துக்கள் ஆயிரம்" என்ற பொன் மொழிப் பேழையும், இதுவரை வெளி வராத "நானல்ல நீ" என்ற புத்தகமும் இன்னும் சிறுகதை, கட்டுரைகள், வரலாற்று மசாலாக்கள் போன்றவை என் கையிருப்பில் புத்தகங்களாக வெளிவர காத்துக் கொண்டிருக்கின்றன.

# முகம் சுழிக்க வைத்த ராயன்.. தனுசுக்கு எதுக்கு இவ்ளோ பில்டப்பு..!



இரு நாட்கள் முன்பு திரையில் வெளியாகி அதிகமாக பேசப்பட்ட திரைப்படமாக தனுஷ் நடித்த ராயன் திரைப்படம் இருந்தது. ராயன் திரைப்படத்தை தனுஷே இயக்கி அதில் நடித்திருக்கிறார். இது தனுஷின் ஐம்பதாவது திரைப்படம் ஆகும். 50 வது திரைப்படம் கண்டிப்பாக ஒரு வெற்றி திரைப்படமாக இருக்க வேண்டும் என்பதாலேயே இந்த திரைப்படத்தை தனுஷ் இயக்கி இருக்கிறார் மேலும் படத்தின் வரவேற்பை அதிகரிப்பதற்காக நிறைய முக்கிய நட்சத்திரங்களை படத்தில் நடிக்க வைத்திருக்கிறார்.முக்கிய நட்சத்திரங்கள்:

அந்த வகையில் இந்த திரைப்படத்தில் அவரது அண்ணனான செல்வராகவனும் நடித்திருக்கிறார். இந்த நிலையில் முதல் நாளே ராயன் திரைப்படம் நிறைய எதிர்மறையான விமர்சனங்களுக்கு உள்ளானது. இந்த நிலையில் படத்தில் வரும் நிறைய காட்சிகள் முரணானதாக இருக்கிறது.

தனுஷ் படத்தை இயக்குவதில் நிறைய கோட்டை விட்டுவிட்டார் என்று பேச்சுக்கள் இருந்து வருகின்றன. அப்படி தனுஷ் எந்த விஷயங்களை எல்லாம் அதில் கோட்டை விட்டார் என்று பட்டியலிட்டு கூறியிருக்கிறார் பிரபல சினிமா விமர்சகரான செய்யாறு பாலு.

## விளாசும் பிரபலம்!

அதில் அவர் கூறும் பொழுது படத்தின் ஆரம்பகாட்சியிலேயே தனுஷின் தாய் தந்தையர் அவரை விட்டுவிட்டு டவுனுக்கு செல்வதாக ஒரு காட்சி வரும் அதற்குப் பிறகு அவர்கள் திரும்ப வரவே மாட்டார்கள். தனுஷும் அவரது உடன் பிறந்தவர்களும் பிறகு வேறு இடத்திற்கு நகர்ந்து சென்று விடுவார்கள்.படத்தில் இருந்த தவறு:

ஆனால் படத்தின் இறுதிவரை அந்த அம்மா அப்பா என்ன ஆனார்கள் என்பதை தனுஷ் காட்டவே இல்லை. அவர் அதை சுத்தமாக மறந்து விட்டார் அதேபோல ஒரு காட்சியில் தனுஷ் பத்து வருடத்திற்கு முன்பு ஏற்கனவே ஒரு பெரும் பிரச்சனை செய்ததாக வில்லன் கூறுவது போன்ற காட்சி ஒன்று வரும்.

ஆனால் பத்து வருடத்திற்கு முன்பு என்ன தனுஷ் செய்தார் என்பது தெரியாத விஷயமாக இருக்கிறது. பாட்ஷா படத்தில் வருவது போல ஆரம்ப கட்டம் முதலே தனுஷ்கான பில்டப் அதிகமாக இருக்கிறது. சரி அவர் பழைய கதையில் ஏதோ ஒன்று பெரிதாக செய்திருப்பார் என்று மக்களும் எதிர்பார்க்கத் துவங்குகின்றனர்.இதையும் படிங்க : 5 வயசு புள்ளக்கூட இதை விட பெரிய கெவுன் போட்டுருக்கும்!.. தொடை அழகில் மெர்சல் காட்டும் நடிகை ஐஸ்வர்யா மேனன்!.ஆனால் இறுதிவரை அவர் என்னதான் செய்தார் என்பதை படத்தில் காட்டவே இல்லை. அது மக்களுக்கு ஒரு பெரும் அதிருப்தியாக முடிந்து விட்டது அதேபோல தனுஷின் தம்பியை விரட்டி விரட்டி காதலிக்கும் ஒரு பெண் கதாபாத்திரம் இருக்கும். அந்தப் பெண் குடிசை பகுதியை சேர்ந்த பெண்ணாக இருக்கும்.

ஒரு காட்சியில் குடித்துவிட்டு வரும் தனுஷின் தம்பி அந்த பெண்ணின் தந்தையை வெளியில் தள்ளிவிட்டு அந்த பெண்ணிடம் மதுவை கொடுப்பார் உடனே அந்த பெண்ணும் அதை குடித்து விட்டு அவனுடன் சேர்ந்து நடனம் ஆடுவாள். இதன் மூலமாக குடிசை பகுதியில் வாழும் பெண்கள் சரக்கு அடிக்க கூடியவர்கள் என்று காட்ட விரும்புகிறாரா தனுஷ் என்று பலவகையான கேள்விகளை எழுப்பி இருக்கிறார் செய்யாறு பாலு.

# மாமனார் செய்ற வேலையா இது..? கணவரை பிரியும் ஐஸ்வர்யா ராய்..!

சமீப காலமாகவே பாலிவுட் திரைத்துறையில் ஐஸ்வர்யாராய் மற்றும் அபிஷேக் பச்சனின் விவாகரத்து தொடர்பான பேச்சுக்கள்தான் அதிகமாக சென்று கொண்டே இருக்கின்றன. முக்கியமாக பாலிவுட் முழுக்கவும் இதுதான் இப்பொழுது பேச்சாக இருக்கிறது.

சமீபத்தில் ஆனந்த் அம்பானியின் திருமணம் நடந்த பொழுது அந்த திருமண விழாவிற்கு ஐஸ்வர்யா ராயும் அபிஷேக் பச்சானும் தனித்தனியாக வந்திருந்தனர். அந்த திருமணத்திற்கு வந்த ஜோடிகள் அனைவருமே சேர்ந்து வந்த பொழுது இவர்கள் மட்டும் தனித்தனியாக வந்திருந்தனர்.

இந்த திருமண விழா மட்டுமின்றி சமீபத்தில் நடந்த நிறைய விழாக்களுக்கு அபிஷேக் பச்சனும், ஐஸ்வர்யா ராயும் தனியாக வந்துதான் கலந்து கொண்டிருந்தனர். இதனால் இவர்கள் இருவரும் பிரிய போகிறார்கள் என்கிற பேச்சு பாலிவுட் சினிமாவில் அதிகரிக்க துவங்கியிருக்கிறது.அதற்கு தகுந்தார் போல சமீபத்தில் ஒரு எழுத்தாளர் விவாகரத்துக்கு ஆதரவாக போட்டிருந்த பதிவிற்கு லைக் செய்திருந்தார் அபிஷேக் பச்சன். அதனை தொடர்ந்து அபிஷேக் விவாகரத்துக்கு தயாராக தான் இருக்கிறார் என்றெல்லாம் பேச்சுக்கள் இருந்து வந்தன.

ஆனால் குடும்பத்திலும் இது சம்பந்தமாக தகராறு இருந்ததுதான் தற்சமயம் இவர்கள் பிரிவிற்கு காரணமாக இருக்கிறது என்று பயில்வான் ரங்கநாதன் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார். அதில் அவர் கூறும் பொழுது அபிஷேக் பச்சன் ஐஸ்வர்யா ராயை திருமணம் செய்து கொள்வதில் அமிதாப் பச்சனுக்கு விருப்பமே இல்லை.

ஏனெனில் ஐஸ்வர்யா ராய் திருமணத்திற்கு முன்பே விவேக் ஓப்ராய், சல்மான் கான் போன்ற நடிகர்களுடன் உறவில் இருந்தார். இதனால் விருப்பம் இல்லாவிட்டாலும் தன்னுடைய மகன் ஆசைக்காக திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார்.திருமணத்திற்கு பிறகும் ஐஸ்வர்யாராயை முழுமையாக அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு நடுவே மும்பையில் ஒரு பெரிய சொகுசு வீட்டை கட்டி இருக்கிறார் அமிதாப் பச்சன். பணக்காரர்கள் வசிக்கும் பகுதியில் அந்த வீடு கட்டப்பட்டுள்ளது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த வீட்டை அமிதாப்பச்சன் தன்னுடைய மகள் ஸ்வேதா நந்தாவிற்கு கொடுத்துவிட்டார்.

இது ஐஸ்வர்யா ராய்க்கு அதிக கோபத்தை ஏற்படுத்தியது. இதனாலேயே அவர் வீட்டில் உள்ள யாரிடமும் பேசாமல் ஐஸ்வர்யா தனியாக இருந்து வருவதாக கூறப்படுகிறது. இதற்கு நடுவே நடிகர் அபிஷேக் வேறு ஒரு நடிகையுடன் தொடர்பு இருப்பதாகவும் பேச்சுக்கள் இருக்கின்றன. இதுவும் குடும்பத்தில் விரிசல் ஏற்பட காரணமாக இருப்பதாக கூறுகிறார் ரங்கநாதன்.

இந்த மாதிரியான காரணங்கள் எல்லாம் சேர்ந்துதான் தற்சமயம் ஐஸ்வர்யா ராய் அபிஷேக் பச்சனை பிரிவதற்கு முடிவு செய்து இருப்பதாக அவர் கூறுகிறார்.



# 'சீதாராமம்' இயக்குநர் படத்தில் மீண்டும் மிருணாள் தாக்குர்



துல்கர் சல்மான் நடித்து வெற்றி பெற்ற 'சீதாராமம்' படம் மூலம் இந்தி நடிகை மிருணாள் தாக்குர் தென்னிந்திய ரசிகர்களுக்கு அறிமுகமானார். ஹனு ராகவபுடி இயக்கிய இந்தப் படத்தில் இளவரசியாக சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார். இதை அடுத்து மிருணாள் தாக்குருக்கு சில தெலுங்கு பட வாய்ப்புகள் கிடைத்தன.

இந்நிலையில் ஹனு ராகவபுடி இயக்கும் அடுத்த படத்தில் பிரபாஸ் கதாநாயகனாக நடிக்கிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. வரலாற்றுப் பின்னணியில் உருவாகும் ஆக்‌ஷன் படமான இதில் பாகிஸ்தான் நடிகை சஜல் அலி நடிக்க இருப்பதாகக் கூறப்பட்டது. இந்நிலையில் இதில் மிருணாள் தாக்குரும் நாயகியாக நடிக்க இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# எனக்குப் போட்டி நான் மட்டும்தான்

நடிப்புக்காகத் தேசிய விருது பெற்ற பிறகு, வணிகப் படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் கீர்த்தி சுரேஷ், இணைகோடாக பெண் மையக் கதைகளிலும் நடித்து வருகிறார். இந்தித் திணிப்பை எதிர்க்கும் கதைக் களத்துடன் உருவாகியிருக்கும் 'ரகு தாத்தா' படத்தில் முதன்மைக் கதாபாத்திரம் ஏற்றிருக்கிறார். ஒரு முழு நீள அரசியல் நகைச்சுவை படமாக உருவாகியிருக்கும் இதை, பிரபலமான 'தி ஃபேமிலி மேன்' இந்தி இணையத் தொடரின் திரைக்கதை எழுத்தாளரான சுமன் குமார் எழுதி, இயக்கியிருக்கிறார். இப்படத்தின் புரமோஷனுக்காக சென்னை வந்திருந்த கீர்த்தி சுரேஷ், அளித்த பேட்டியிலிருந்து ஒரு பகுதி:




10 ஆண்டுகள் திரைப் பயணம் எப்படி உணர்கிறீர்கள்? பத்து வருடம் ஆகிவிட்டதா என்று பிரமிப்பாக இருக்கிறது. அதேநேரம் பொறுப்பு கூடிவிட்டதாக நினைக்கிறேன். கமர்ஷியல் படங்கள் 'ஆஃப் பீட்' படங்கள் என இரண்டையும் பண்ணுவது நல்ல 'பேலன்சிங்' ஆக இருக்கிறது.தயாரிப்பில் இருக்கும் 'கன்னி வெடி', 'ரிவால்வர் ரீட்டா' வரை, 'மகாநடி' படத்துக்குப் பின் தானாகத் தேடி வந்து அமைந்த கதாபாத்திரங்கள். இனி நல்ல கதாபாத்திரங்களை நானும் தேடிச் செய்வது என்கிற முடிவுக்கு வந்திருக்கிறேன். அதற்காக, இதுவரை யாரும் தொடாத 'ஸோன்' எது என்று தேடத் தொடங்கிவிட்டேன்.

திரையுலகில் உங்களுக்குப் போட்டி நயன்தாராவா? எனக்குப் போட்டி நான் மட்டும்தான். எனது ஒரு படத்தை இன்னொரு படம் தாண்டிச் செல்ல வேண்டும் என்று நினைப்பவள்.

# படையப்பாவில் தோன்றிய குழந்தை யார் ?

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் என்றால் யாருக்குத் தான் பிடிக்காது. சின்ன குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ரஜினியின் படத்தை விரும்பி பார்ப்பார்கள்.அந்த வகையில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளி வந்த படையப்பா படத்தில் நடித்த குழந்தை பற்றிய விவரங்கள் பற்றி இந்த பதிவில் படித்து தெரிந்து கொள்ளலாம்.அதுவும் இந்த படத்தில் இடம் பிடித்த என் பேரு படையப்பா என்ற பாடல் வரிகளில் ரஜினியின் இளமைக்காலத்தை சுட்டி காட்டக் கூடிய குழந்தையின் முகம் ஒன்று காட்டப்படும். அந்த குழந்தை யார் என்பதை பற்றித்தான் இந்த பதிவில் நாம் அறிந்து கொள்ள இருக்கிறோம். படையப்பா படத்தில் இடம் பிடித்த என் பேரு படையப்பா இளவட்ட நடையப்பா என்ற பாடல் பாட்டி தொட்டி எங்கும் கேட்கப்பட்டு ரசிகர்களால் பெரிதும் கவரப்பட்ட பாடல்களில் ஒன்றாக விளங்கியது.



இந்த பாடல் வரிகளில் பாசமுள்ள குழந்தை அப்பா என்ற வரிகள் இடம் பிடித்திருக்கும். முடிந்தால் நீங்கள் அதை ஒரு முறை பாடி பார்த்தால் உங்களுக்கு தெரியும்.அப்படி குழந்தை அப்பா என்று வரும் வரிகள் வரும் போது விசுவலாக ஒரு சிறு குழந்தையின் முகத்தை காட்டி இருப்பார்கள். அதன் பிறகு தான் ரஜினியின் முகம் வரும்.என்ன பாடலின் இடையில் வரும் குழந்தை தற்போது சீரியல்களில் கலக்கி வரும் மிகச் சிறந்த ஹீரோயினியாக வளர்ந்து இருக்கிறார் அவர் தான் ஹேமா பிந்து.ஹேமா பிந்து தற்போது பல சீரியல்களில் நடித்து அசத்தி வருகிறார் என்பது உங்களுக்கு தெரியும்.

கே எஸ் ரவிக்குமாருக்கும் ரஜினிகாந்த்க்கும் இடையே ஒரு நட்பை உருவாக்க இந்த படம் மிக முக்கிய காரணமாக அமைந்தது. இந்த படத்தின் வெற்றிக்கு பிறகு தான் இருவரும் மிகச் சிறந்த நண்பர்களாக மாறினார்கள்.



# என்னை அதன் மீது அமர வைத்தார் பா.ரஞ்சித்..!

## மாளவிகா மோகனன்



மலையாள சினிமாவின் மூலமாக வெள்ளி திரைக்கு அறிமுகமானவர் நடிகை மாளவிகா மோகனன். மாளவிகா மோகனனை பொருத்த வரை கல்லூரி காலங்களில் இருந்து அவருக்கு திரை துறையில் பணியாற்ற வேண்டும் என்பதுதான் ஆசையாக இருந்தது.

இதற்காகவே மும்பைக்குச் சென்று மாஸ் மீடியா படிப்பை முடித்த மாளவிகா மோகனன் பிறகு மலையாள சினிமாவில் நடிகையாக அறிமுகமானார். மலையாளத்தில் அவருக்கு குறைவான வரவேற்பே கிடைத்தது. தொடர்ந்து கன்னடம் ஹிந்தி ஆகிய மொழிகளிலும் முயற்சி செய்து வந்தார் மாளவிகா மோகனன்.ஆனால் எங்குமே அவருக்கு பெரிதாக வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அதன் பிறகுதான் 2019 ஆம் ஆண்டு இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் மூலமாக தமிழில் அறிமுகமானார் மாளவிகா மோகனன். பேட்ட திரைப்படத்தில் பூங்கொடி என்கிற கதாபாத்திரத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.முதல் படமே பெரிய நடிகரின் படம் என்பதால் ஓரளவுக்கு அவருக்கு வரவேற்பு கிடைத்தது. படத்தில் ஒரு முக்கியமான கதாபாத்திரமாக அவரது கதாபாத்திரம் இருந்தது. தொடர்ந்து மாஸ்டர் திரைப்படத்தில் கதாநாயகியாக வாய்ப்பை பெற்றார் மாளவிகா மோகனன்.ஆனால் அந்த திரைப்படத்தில் அவரது நடிப்பு அதிக விமர்சனத்திற்கு உள்ளானது. நிறைய இடங்களில் படத்தில் மாளவிகா மோகனன் ஒழுங்காகவே நடிக்கவில்லை என்று பேச்சுக்கள் இருந்து வந்தன. தொடர்ந்து தனுசுக்கு ஜோடியாக மாறன் என்கிற படத்தில் நடித்தார் மாளவிகா மோகனன்.

அந்த திரைப்படமும் அவருக்கு பெரிதாக வரவேற்பு பெற்று கொடுக்கவில்லை. பிறகு மலையாளத்தில் அவர் நடித்த கிறிஸ்டி என்கிற திரைப்படம் ஓரளவு வரவேற்பை பெற்றுக் கொடுத்தது. தொடர்ந்து தற்சமயம் இயக்குனர் பா ரஞ்சித் இயக்கும் தங்கலான் திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் இவர் நடித்து வருகிறார்.

தமிழ் சினிமாவை பொறுத்தவரை பெரிய கதாநாயகர்கள் அல்லது பெரிய இயக்குனர்கள் படத்தில்தான் தொடர்ந்து நடித்து வருகிறார் மாளவிகா மோகனன். இந்த திரைப்படத்தில் மிகவும் மாறுபட்ட ஒரு கதாபாத்திரத்தில் இவர் நடித்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் பேட்டி ஒன்றில் கூறும் பொழுது தங்கலான் திரைப்பட அனுபவம் குறித்து பேசி இருந்தார் மாளவிகா மோகனன். அதில் அவர் கூறும் பொழுது தங்கலான் படப்பிடிப்பு நடந்த பொழுது ஒரு எருமை மாடு அலைந்து கொண்டிருப்பதை பார்த்தேன்.

அதை பார்த்துவிட்டு இயக்குனர் என்னிடம் வந்து உங்களுக்கு எருமை பிடிக்குமா என்று கேட்டார் நான் ஆமாம் என்று சொன்னேன். உடனே எருமை மேல் நீங்கள் உட்கார வேண்டும் என்று சொல்லி விட்டார் நான் சும்மா விளையாட்டுக்கு கூறுகிறார் என்று நினைத்தேன். ஆனால் படத்திற்காக ஒரு காட்சிக்கு நிஜமாகவே என்னை எருமை மீது அமர வைத்து விட்டார் இயக்குனர் பா ரஞ்சித் என்று கூறி இருக்கிறார் மாளவிகா மோகனன்.

# மன எழுச்சியை தருவது மகிழ்ச்சி

மகிழ்ச்சி என்பது மிகவும் சிக்கலான உணர்வு. இதை அடைவதே பலரது இலக்காக உள்ளது. இது வெளிப்புற சூழல்கள் மற்றும் ஒருவரின் மனநிலையால் ஏற்படுவதாக பல கோட்பாடுகள் கூறுகின்றன. ஒருவரை மகிழ்ச்சியாக வைத்திருக்க பல காரணிகள் உள்ளன. இந்தப் பதிவில் ஒருவரின் மகிழ்ச்சிக்கு பங்களிக்கும் பல்வேறு விஷயங்கள் என்னென்ன என்பது பற்றி முழுமையாகப் பார்க்கலாம்.

**மகிழ்ச்சியின் அடிப்படை காரணிகள்:**

நல்ல நட்பு, குடும்பம், ஆதரவான சூழல் போன்றவை மகிழ்ச்சியின் முக்கிய அடித்தளம். மனிதன் ஒரு சமூக உயிர் என்பதால் மற்றவர்களுடன் இணைந்து வாழும்போது மனதில் செயல்படுவது மனதிற்கு ஒரு உற்சாகத்தை அளிக்கிறது.

குடும்பம், நண்பர்கள், சமூகம் போன்றவர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு, மகிழ்ச்சியாக இருங்கள். அதேபோல, ஒரே விஷயத்தில் காலத்தை ஓட்டி விடலாம் என நினைக்காமல், புதிய திறமைகளை கற்றுக் கொள்வது, புதிய இடங்களுக்கு பயணம் செய்வது போன்றவை உங்கள் வாழ்க்கையை சுவாரசியமாக்கி மகிழ்ச்சியைத் தருகின்றன.

உங்களது உடலுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடற்பயிற்சி, நல்ல உணவுகளை உண்பது போன்றவை மன



நிறைவுடன் இருக்கிறான்.

புதிய விஷயங்களை கற்றுக் கொள்வது, திறமைகளை வளர்ப்பது, இலக்குகளை நோக்கி செயல்படுவது போன்றவை தனிமனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன.

ஆரோக்கியமான உடல், மனதிற்கும் ஆரோக்கியத்தை அளிக்கும்.

உடற்பயிற்சி, சரியான உணவு, போதுமான தூக்கம் போன்றவை மகிழ்ச்சியின் முக்கிய அம்சங்கள். மனிதன் தன்னுடைய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும்போது எந்த அழுத்தமும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்க முடியும். இருப்பினும், அதிகப்படியான பொருள்வளம் மகிழ்ச்சியை உறுதி செய்யாது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

எல்லா சூழ்நிலைகளிலும் நேர்மறையாக சிந்தித்து செயல்படுவது மன அழுத்தத்தை குறைத்து மகிழ்ச்சியாக இருக்க உதவும்.

இத்துடன் ஆன்மீக நம்பிக்கைகள் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை அளித்து மனதிற்கு அமைதியான உணர்வைத் தருகின்றன.

**மகிழ்ச்சியை அதிகரிக்கும் வழிகள்:**

நீங்கள் உங்களது மகிழ்ச்சியை அதிகரிக்க முதலில் உங்கள் வாழ்வில் உள்ள நல்ல விஷயங்களுக்கு நன்றி கூறி மனதை நிறைவாக வைத்திருங்கள். வாழ்க்கையில் தெளிவான இலக்குகளை நிர்ணயித்து அவற்றை நோக்கி அழுத்தத்தை குறைத்து நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க உதவும். இத்துடன், தியானம், யோகா போன்றவை மனதை அமைதிப்படுத்தி மகிழ்ச்சியாக மாற்றுகின்றன. மகிழ்ச்சி என்பது பலூன் அல்ல... அது மூச்சுக்காற்று! சுவாசிக்கத் கற்றுக் கொண்டால் மகிழ்ச்சிதான்!

**பொய்யான மகிழ்ச்சியின் காரணிகள்:**

அதிகப்படியான பொருள்வளம் உண்மையான மகிழ்ச்சியை உறுதி செய்யாது. உங்களுக்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு பொருள்வளம் என்பது உங்கள் மகிழ்ச்சியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது.

மற்றவர்களின் பாராட்டு, அங்கீகாரம் போன்றவை உங்களுக்கு தற்காலிக மகிழ்ச்சியைத் தந்தாலும் நீண்ட கால மகிழ்ச்சிக்கு அவை அடிப்படையாக இருக்காது.

மது, புகை போன்ற போதை சார்ந்த விஷயங்கள் உங்களுக்கு தற்காலிக மகிழ்ச்சியையே தரும். இவை நீண்ட காலத்திற்கு உங்களது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மேற்கூறிய விஷயங்களை சரியாகப் புரிந்துகொண்டு, எதுவெல்லாம் உங்களுக்கு உண்மையான மகிழ்ச்சி தரும் என்பதில் அதிக கவனம் செலுத்தி, வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழுங்கள்.

# இன்றையப் பெற்றோர் பிள்ளைகள் உறவில் இடைவெளியே பல பிரச்சினைகளுக்கு காரணமா!

குறள் 64 அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்.

தன் குழந்தை சின்ன கைகளால் கரைத்த கூழ், அமிழ்தைவிடவும் சிறந்த சுவையுடையதாக இருக்கும். திருமணத்தின் அடுத்த நிலை தாங்கள் எப்போது பெற்றோர் ஆவது என்பதே தம்பதியர்களின் எதிர்பார்ப்பாகும்.அந்த தகுதியும் கிடைத்தப்பின் நீ, நானென்று போட்டிப் போட்டு பிள்ளைகளை வளர்ப்பது இன்றைய பெற்றோர்களின் செயலாக இருக்கிறது. நல்லதொரு சமூக மாற்றம் எனலாம். காரணம் முன்னையக் காலங்களில் பொதுவாக ஆண்கள் தன் தாயிடமே அனைத்து தேவைகளையும் முன் வைப்பவர்களாக இருந்தனர். தந்தையைக் கண்டால் தொலைதூரம் ஒதுங்கி நிற்கும் பழக்கம் அதிகமான குடும்பங்களில் இருந்தது. தந்தை என்றாலே வில்லனாய் பார்க்கும் பார்வை மாற அந்தப் பையன் திருமணம் முடித்து தந்தையாகும் தருணம் வரும் வரை காலம் நீடித்தது. தந்தையின் கண்டிப்பும், தியாகமும், உழைப்பும் தெரியும் போது பல பிள்ளைகள் தந்தையை இழந்தும் இருந்தனர். அதே போல பெண் பிள்ளைகள் தந்தையின் செல்லமாக வளர்ந்ததும் ஒரு காலம். அம்மாவிடம் பேசினால் மகனுக்குதான் ஆதரவு கிடைக்கும் என்பதை புரிந்து தந்தையிடம் ஒட்டிக் கொண்டனர். தந்தையான அந்த ஆண் தன்னையே நம்பி வந்த மனைவி மீதான அன்பை விட., பலமடங்கு அன்பை தனது மகள் மேல் செலுத்துவார். தாய்மார்கள் மகன்களுக்கு நல்ல தோழியாக இருப்பது போலவே மகள்களுக்கும் தந்தையே நல்ல தோழனாக இருந்தார்கள் இன்று சமூகத்தில் அப்படியல்ல. பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான உறவு மிக நெருக்கமாக உள்ளது. இது உண்மையா என்று சிந்திக்கும் போது நெருக்கமாக இருப்பது போல நடித்துக் கொண்டு இருக்கிறோமே என்று தோன்றுகிறது. காரணம் நாட்டை உலுக்கிய இல்லையில்லை உலகை உலுக்கும் போதைப் பொருள் பாவனைகள், காரணம் தெரியா தற்கொலைகள் என்பன சிந்திக்க தூண்டுகிறது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் உள்ள உறவு இன்றைய நாளில் 'நாம் அந்த கால தாய், தந்தையர் போல நாங்கள் இல்லை பிள்ளைகளுக்கு தேவையான அத்தனையும் வாங்கிக் கொடுக்கின்றோம். பிள்ளைகளுடன் நட்புடன் இருக்கிறோம்' என்று கூறுவதுடன் அதை நிரூபிக்கும் வண்ணம் சமூகவலைத் தளங்களில் குடும்பத்துடன் புகைப்படம் பதிவிடல், சுயபடம் எடுத்தல் (selfi) என்பன பிள்ளைகளும் பெற்றோரும் மகிழ்வாக இருப்பதையும் குறையின்றி வாழ்வதையும் உறுதி செய்கிறது. பின் ஏன் குடும்பத்திற்கு தெரியாத போதைப் பொருள் பாவனை, காரணம் தெரியாத தற்கொலைகள்! பல விபரீத செயற்பாடுகள். உண்மையை உற்று நோக்கினால் பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டு வாழ்கிறார்களோ! என்று யோசிக்க வைக்கிறது.

இந்த அவசர உலகில் பெற்றோங்களின் முழு நேரத் தொழில் நேரம் கிடைக்கும் போது வலைத்தளங்களின் உலா , உலகலாவிய முகமறியா நட்பு, தொலைக்காட்சி நாடகங்கள், கைபேசி உரையாடல்கள் என்று எந்நேரமும் பெற்றோர்கள் பரபரப்பாய் பிஸி என்கிற ஒற்றைச் சொல்லில் கடக்கின்றனர். அதேப்போல பிள்ளைகளும் படிப்பு, மற்றும் ஏனைய தேவைகள் பெற்றோரால் நிறைவேற்றபடும் நேரங்களில் வீட்டில் சேட்டை இல்லா அமைதி, நாகரீக ஆடையலங்காரம், விலையுயர் கைபேசி அதில் நண்பர்களுடன் கூட்டணி கற்கை என்றும் மேலதிக வகுப்புக்கள் என்றும் முழு நேரமும் பரபரப்பாய் பிள்ளைகள் ஒருபக்கம் இருகின்றார்கள். ஒரு வீட்டில் அருகருகே அறைகளில் இருந்தும் கூட வெளிநபர்களை சந்திப்பது போன்ற சந்திப்பு, உரையாடல்கள்,



புன்சிரிப்பு என்பவற்றுடன் மனப்பகிர்வின்மை அங்கே அவர்களை ஆளுகின்றது. பெற்றோர் நட்புடன் பழகும் விதம் அவர்கள் அன்புடன் பார்த்து பார்த்து செய்யும் வசதிகள் என்பன அவர்களின் கடமை என்கிற ரீதியில் பிள்ளைகள் புரிந்துகொள்ள பெற்றோரும் தாங்கள் பெற்றோரால் வளர்க்கப்பட்ட விதத்தில் பிள்ளைகள் வளரக் கூடாது, தாங்கள் படும் சிரமங்கள் தெரியக்கூடாது என்று பிள்ளைகளை வெகு சொகுசாக வளர்க்கின்றனர். பெற்றோரின் கனவு பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி, மற்ற பிள்ளைகளை விட உயர்ந்த வாழ்க்கை விளைவு!!! நாளைடைவில் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பெற்றோருடன் நட்பாகவும் அன்புடனும் நடந்துக் கொள்வதாய் எண்ணிக்கொண்டு தங்களின் ஆழ்மன தாக்கம், கவலைகளை பிள்ளைகள் பெற்றோருடன் பகிர்ந்துக் கொள்வதில்லை. தங்களின் பிரச்சனைகளுக்கு மட்டுமல்ல தங்களின் அதிகளவு சுதந்திரம், மகிழ்ச்சி, கவலை என்பவற்றை வெளிப்படுத்த போதையைச் சிறந்த தீர்வாக எடுக்கிறார்கள்.சில தோல்விகளுக்கு தற்கொலையை நாடுகின்றனர். எங்கள் பிள்ளை எங்கள் மீது அன்புள்ளவவர், எதையும் மறைப்பதில்லை என்கிற பெருமை பெற்றோருக்கு பிள்ளையின் உயிர் போய் பிணமாக கிடக்கும் போதும் என்ன காரணமென தெரியாத வேதனையாக முடிகிறது. அல்லது போதையின் ஆதிக்கத்தில் முழுமையாக மூழ்கியப் பின்னே தெரிய வருகிறது.

தமிழ் நாட்டின் திரைப்படத் துறையை சேர்ந்த நடிகர், இசையாமைப்பாளர் என்று பல துறைகளில் சாதிக்கும் ஒருவரின் மகளின் தற்கொலை மரணம் நம் மக்கள் மத்தியிலும் வேதனையைய் கக்கிச் சென்றது. நன்றாக படிக்க கூடிய நல்ல பிள்ளை,தன் வேலை தான் உண்டு என்கிற குணம். மூடிய அறைக்குள் தற்கொலை செய்துக் கொள்கிறாள். பெற்றோருக்கோ, நண்பர்களுக்கோ தற்கொலைக்கான காரணம் தெரியாது. அந்த பிஞ்சு மனதின் தாங்கமுடியாத வேதனை எதுவோ! அதனை தெரிந்து வைத்துக்கொள்ள முடியாத அளவுக்கு இடைவெளியை யார் புகுத்தியது? இது போன்ற பல வேதனைச் செய்திகள் நாளாந்தம் நம்மை வந்து சேருகிறது இங்கு யாரை யார் நோவது! 'எங்களை மலைப் போல நம்புகிறவர்கள் பெற்றோர்கள். அவர்களுக்கு நாங்கள் உண்மையாக இல்லை' என்பதை உணராமையை நினைக்காத பிள்ளைகளை குறை சொல்வதா? 'இல்லை!எல்லா வசதிகளையும் செய்து கொடுத்த அந்த பிள்ளைக்கு மனம் என்று ஒன்று இருக்கிறது.

அதில் நிறைந்து கிடக்கும் குறை, நிறைகள் என்ன என்று நாங்கள் தேடவில்லை" என்று உணராதப் பெற்றோரை நோவதா! குடும்பத்துடன் மகிழ்வாக இருப்பதை உலகுக்கு பறைசாற்ற குடும்பத்துடன் இருக்கும் புகைப்படங்களை பதிவேற்றும் வேகம், பிள்ளைகள் பெற்றோருக்கு இடையில் தேவைகளை வாங்குவதிலும், கொடுப்பதிலும் இருக்கும் வேகம் மனதை புரிந்துக் கொள்ளும் தன்மையில் இல்லை. அப்படி பார்த்தால் நாகரீக பெற்றோகளாகிய நாம் பிள்ளைகளின் அருகில் இருப்பது போன்ற நினைப்புடன் தூரமாய் இருப்பதாகவே தோன்றுகிறது. பிள்ளைகளிடம் அன்பு, கண்டிப்பு, நிராகரிப்பு, ஏமாற்றம், தோல்வி வலி எல்லாவற்றையும் கலந்துகொடுத்து வாழ பழக்கினால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடைவெளி குறையும். இனி வரும் நாட்களிலாவது இதைப் பற்றி விழிர்ப்புணர்வுடன் பெற்றோர்களாகிய நாம் செயற்படுவோம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# மரபுக் கவிதை எழுதுவதை வழக்கமாகக் கொண்ட கவிதாயினி

ஷிபானியா பௌசுல் என்ற கவிஞர் எழுத்தாளர் வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் நேகம எனும் கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர், J.m .பௌசர், J.u.சிபாயா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார். அ/ நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை கல்வியை பயின்ற இவர், இளங் கலைமாணி பட்டப்படிப்பு , பட்டப்பின் கல்வி டிப்ளோமா போன்றவற்றை நிறைவு செய்து தமிழ் மொழியில் புலமைப்பெற்றுள்ள கலைப் பட்டதாரியவார். இவர், தான் கற்ற அ/ நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்போது ஆசிரியராக கடமையாற்றுகிறார். "அந்திக்கரை " என்ற இலக்கணக் கவிதைத் தொகுப்பினையும் வெளியிட்டவர்.



**1.உங்கள் இலக்கிய பிரவேசம் எவ்வாறு அமைந்தது ?**

தன் இளமைக் காலம் முதல் இன்று வரை இயற்கை மீதுள்ள பற்றற்ற அன்பு காரணமாக இயற்கை நேசத்தின் விளைவாக என் எண்ணங்கள் முழுதும் இயற்கையோடு கலந்த இலக்கிய பாதையிலே நடமாடத் தொடங்கியது எனலாம்.



பாடசாலை காலங்களில் இருந்தே பேச்சு, கட்டுரை கவிதை, சிறுகதை போன்ற பல ஆக்கங்களை எழுதி வந்தேன். பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சான்றிதழ்களையும் பரிசுகளையும் பெற்றுக்கொண்டதோடு பாடசாலைக் காலங்களில் கவிதைப்போட்டியில் பங்கு பற்றி தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டேன்.

புத்தகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இருக்கவில்லை. பாடசாலை காலங்களில் இருந்து இலக்கியப் பாதையில் பயணித்தாலும் இடையில் ஏற்பட்ட கல்வியில் பக்க நாட்டம் அதிகரித்தமை மற்றும் திருமண வாழ்க்கை போன்ற பல காரணங்களினால் இடைநிறுத்தம் காணப்பட்டாலும் என் பொழுதுபோக்காக எழுதுவதையும் வாசிப்பதையும் நிறுத்தவில்லை. கால வேகத்தின் பின்னரே மாணவராக இடைநிறுத்தப்பட்ட என் கவித்தேடலை ஆசிரியராக கடமையேற்றதும் மகிழ்வுடன் பயணத்தைத் தொடங்கினேன். அதற்கான களத்தை முகநூல் அமைத்துத் தந்தது. அதனைத்தொடர்ந்து பத்திரிகையிலும் சஞ்சிகைகளிலும் வானொலி சேவைகளிலும் சர்வதேச வானொலிகளிலும் கவியரங்க மேடைகளிலும் களம் கண்டேன். முகநூல் வாயிலாக தன் கவிதைகளுக்கு அங்கீகாரம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து கவிதை நூலொன்றையும் வெளியீடு செய்வதற்கான வாய்ப்பையும் இறைவன் ஏற்படுத்தித் தந்தான்.

**2. இலக்கியத்திற்கு பின்புலமாக யார் இருந்தார்கள் தோற்றம் பற்றி கூறுக?**

என் தாய் அடிக்கடி கூறுவார். நான் சிறுவயதில் இருக்கும் போதே இயற்கையை மிகவும் நேசிக்க கூடியவளாகத் தான் இருந்தேன் என்று அடிக்கடி கூறுவதை செவியுற்றிருக்கின்றேன். அதேபோல பாடசாலை காலத்தில் சுதந்திரம் என்ற கவிதைக்கு எனக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது அதுக்கு என் சகோதரி அவர்கள் வழிகாட்டியாக இருந்தார்கள் .



பாடசாலை காலத்திலே விட்ட என் கவிப் பயணத்தை ஆசிரியையானதும் கைகளில் எடுத்துக்கொண்டேன் . நான் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று சென்றபோது அப்பள்ளியில் என்னோடு பணியாற்றிய ஆசான்கள் அப்பள்ளி மாணவர்கள் ஊக்கமான வார்த்தைகளை பரிசாக தந்தமை என்னை மேலும் ஆர்வத்தை தூண்டியது.

அதிகமான கவிதைகள் பழைய புத்தகங்களுக்குள்ளே ஒளிந்து கொண்டே இருந்தன. அதற்கான முகவரிகளை தேடிக் கொடுத்தது. முகநூலும் முகநூல் சொந்தங்களும் முகநூலில் அதிகமாக கவிதைகளை பதிவிடுவதின் மூலம் என் கவிதைகளுக்கு முகநூல் களம் அமைத்து தந்தது. அதனைத் தொடர்ந்து பத்திரிகைகளில் பல கவிதைகளை கவிதாயினி பாத்திமா நளீரா பதிவிடக்காரணமாக இருந்தார். அதனைத் தொடர்ந்து சஞ்சிகைகள், பத்திரிகைகள் உள்நாட்டு, வெளிநாட்டு வானொலிகள், பல கவியரங்குகள் இப்படி வாய்ப்புகள் எனக்கு கிடைத்தன .

புதுக்கவிதைகள் மாத்திரமே எழுதிக் கொண்ட நான் மரபுக்கவிதைகளை அதிகமாக நேசிக்கத் தொடங்கினேன்.

மரபை முறையாக கற்றுக் கொண்டு என் ஆசானின் உதவியுடன் மரபிலே தடம் பதித்தேன்

அதனைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா வளர்பிறை வானொலி நிகழ்ச்சி தாயாரிப்பாளர் மரபு நூலை வெளியிடுமாறு ஆலோசனைகளை தந்துதவினார்.

என் தாய், தந்தை, கணவர், அவரின் நண்பர்கள் அவரின் உறவினர்கள் மற்றும் என் சகோதரர்கள் மற்றும் என் நண்பர்கள் போன்ற பலரும் எனது கவி பயணத்தைத் தொடர்ந்து பயணிக்க வேண்டுமென ஊக்கமளித்தார்கள் .

**3. தேர்ந்தெடுத்த துறை பற்றி சொல்ல முடியுமா?**

வாசிப்பின் தீவிர தன்மையும் என் எழுத்துகளின் ஆதிக்கத்திலுமே எண்ணங்கள் தடம் பதித்ததின் விளைவாக

கட்டுரை, சிறுகதை, சிறுவர் கதை, பாடல், கவிதை போன்ற ஆக்கங்கள் தலை நிமிர்ந்தன. மரபுக்கவிதை மீதே என் கவனம் அதிகமாக திரும்பிக் கொண்டன.

ஆரம்பத்தில் புதுக்கவிதை மாத்திரமே எழுதிக் கொண்டிருந்த என் உள்ளத்திற்கு மரபு கவிதைகள் மீது ஆர்வம் அதிகரித்தது. ஆனாலும் புதுக்கவிதை எல்லோராலும் எழுத முடியும் ஆனால் மரபுக் கவிதையை முறையாக கற்றவர்களால் மாத்திரமே எழுத முடியும் என்பதை உணர்ந்து மரபுக்கவிதை எழுதும் முறையை முறையாக கற்று மரபுக் கவிதைகளை எழுதுவதை நான் வழக்கமாக்கிக் கொண்டேன். காலப் போக்கில்மரபுக்கவிதைகள்எழுத



வேண்டுமென்ற எண்ணத்தில் மரபு கவித யையை முறையாக கற்பதற்கான வாய்ப்புகளைத் தேடிப் பெற்றுக் கொண்டேன்.

மரபுக்கவிதைகள் பற்றிய விரிவான விளக்கங்களை பெற்றுக் கொண்டு எழுதவும் ஆரம்பித்தேன். பின்னர் ஒரு மரபுக் கவிதை நூலையும் வெளியிட எண்ணி அவுஸ்ரேலிய வானொலி வளர்பிறை தயாரிப்பாளரின் உதவியுடன் "அந்திக்கரை" என்ற மரபுக் கவிதை நூலை வெளியிட்டேன்.

அக்கவிதை நூல் 60 மரபுக்கவிதைகளை உள்ளடக்கிய கவிதை தொகுதியாகவும் 84 பக்கங்களையும் கொண்டுடது என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

**4. நீங்கள் எழுதிய முதலாவது கவிதை எது?**

நான் எழுதிய முதலாவது கவிதை என்னை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய என் தாய்க்காக எழுதிய கவிதை .



அன்பு மழைத்துளிகளை எனக்காக..
சேமித்து வைத்து
உறவெனும் ஊற்றுக்களால் தரணியை தனியாளாக்கி
பணிவு காட்டி
பாச வலையில் தினமும் என்னை
மூழ்க வைத்த
அன்னை என்ற
உறவே
ஆயிரம் உறவுகளின் ஆணிவேர்...
என்ற கவிதை

ஆஸ்திரேலியா இன்பத்தமிழ் வானொலி வளர்பிறை நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகியது.

என் தாய்க்காக எழுதிய கவிதையை என் தாய் கேட்டு கண்ணீர் வடித்த நொடிகள் இன்னும் என் கண்களில் தான் இருக்கின்றன.

**5. உங்களுக்கு விருப்பமான கவிஞர்கள் யார்?**

எனக்கு பிடித்த கவிஞர்கள் என்று சொன்னால் பலரை பிடிக்கும். அதில் எனக்கு மரபுக் கவிஞர்களின் கவிதைகளை விரும்பிப் படிப்பேன் . அதேபோல வித்தியாசமான பாணியில் எப்போதும் வித்தியாசமாக கவிதை அமைக்கும் N. முத்துக் குமாரையும் எனக்கு மிகவும் பிடிக்கும் . எல்லோராலும் விரும்பக் கூடிய வகையில் கவிதை படைக்கும் கவிப்பேரரசு வைரமுத்து, கண்ணதாசன், பாரதியார் , வாணிதாசன் போன்றவர்களையும் கவிகோ அப்துர் ரஹ்மான் போன்றவர்களின் ரசிகை இவள் எனலாம்.

**6. நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி கூறுங்கள்....!**

பெற்றுக் கொண்ட விருதுகளில் முதலாவது விருதான "கவித்தாரகை" விருது 2016ம் ஆண்டு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து கண்டி கலாச்சார அமைப்பினால் "தேசபிமானி"," விஸ்வ கீர்த்தி ( கல்வி) " "ரத்ன தீப" போன்ற விருதுகளையும் பெற்றுக் கொண்டேன். பின்னர் சிறந்த ஆளுமையுள்ள பெண்களுக்கான விருது விழாவில் ஆளுமையுள்ள பெண்ணாக என்னையும் இணைத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து லக்சோ மீடியா வழங்கிய "கவிச்சுடர்" விருதும் கிடைத்தது.

இவ்வாறு விருதுகளையும் பெற்றுக் கொண்டதோடு கலைஞர் கலாச்சார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல போட்டிகளில் சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டேன்.

**நேர்காணல் இக்பால் அலி**

# ஆசிரியர் பதவி பெற்றுத்தரும் டவர் மண்டப நாடக டிப்ளோமா
















புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற டவர் மண்டப அரங்க மன்றம், "உயர் நாடக டிப்ளோமா சான்றிதழை" வழங்கி மாணவர்களை திறந்த பல்கலைக்கழகத்தின் ஊடாக ஆசிரியராக்கும் செயல்முறையை நாடக பாடசாலை ஊடாக செயற்படுத்தி வருகின்றது. அப்பாடசாலையின் முதலாம் அணி மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டின் முழுமையை பறைசாற்றுவதற்கு பண்டத்தரிப்பில் அமைந்துள்ள வடலியடைப்பு, சண்டிலிப்பாய் கலாச்சார மத்திய நிலையத்தில் உலகப் புகழ் பெற்ற நாடக மேதை சேக்ஸ்பியரின் கிங்லியர் நாடகத்தினை மேடை ஏற்றினர். இதில் 45 பேர் சேர்ந்து பயின்று வருகின்றார்கள். டவர் மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி ஜெயப்பிரகாஷ் சர்மா இதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து மிகவும் துரிதமாக செயற்பட்டு வருகிறார். கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் நான்கு வருட காலம் கற்று பட்டதாரிகளாகிய பின் ஆசிரியர் பதவிக்கு உள்வாங்கப்படுகிறார்கள். அதேபோல் டவர் மண்டபத்தில் 2 வருட காலம் கற்று "உயர் நாடக டிப்ளோமா சான்றிதழை" பெற்றதன் பின் அவர்களுக்கு 2 வருட காலம் திறந்த பல்கலைக்கழகத்தில் கற்றபின் ஆசிரியர் பதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடந்தே இலங்கையை சுற்றிவரும் இளைஞர் சஹ்மி

பேருவளையைச் சேர்ந்த 25 வயது இளைஞரான முஹமட் சஹ்மி இலங்கையின் கரையோரத்தைச் சுற்றி சுமார் 1500 கிலோமீற்றர் நடைபயணத்தை கடந்த 13 ஆம் திகதி ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இந்தப் பயணம் பற்றி அவ்வளவாக பலரும் அறிந்திருக்கவில்லை.சுட்டெரிக்கும் வெயில் இடைக்கிடை மழை என எதனையும் கண்டு கொள்ளாமல் தைரியத்துடன் பயணித்திருக்கும் இவர் எதனைப் பற்றியும் கவலையின்றி நடைபயணத்தை மேற்கொள்கிறார். சில பகுதிகளில் அவ்வளவாக ஆதரவு கிடைக்காவிட்டாலும் கிழக்கு மாகாணத்தில் அமோக வரவேற்பு கிடைத்தது. எதற்கும் தளராமல் தனது





இலட்சியப் பயணத்தை தொடர்கிறார் இவர்.

சுட்டெடுத்த வைரம். ஆளும் கொஞ்சம் உயரம். வாழ்வில் நிறையத் துயரம். மனது முழுதும் தைரியம். படிக்கும் வயதில் தந்தையை இழந்தான். படித்துக்கொள்ள பெருந்தவம் இருந்தான். தன் தாயும், உடன் பிறப்புக்களும் வாழ்ந்தாக வேண்டும். இளவயதில் வழிதெரியவில்லை. ஓட்டிச் செல்ல சைக்கிளோ மோட்டார் சைக்கிளோ இல்லை. தொழிலுக்கு கூட்டிச்செல்ல உதவிக்கு யாரும் இல்லை.

வறுமை மட்டுமே வாழ்க்கை என்று காலம் அவனுக்கு கற்பித்துக் கொண்டிருந்தது. முயற்சிகள் பலவும் செய்தான் ஏழைக் குடும்பம் நின்று கவனிக்க யாரும் இல்லை. அவனது வாழ்க்கை அவனது முயற்சி என்றானது. இருந்தும் செயற்பாடுகள் அனைத்தும் இறை பக்தியுடனே இருந்தது. அடுத்தவர்களோடு தனது கஷ்டங்களை பேசமாட்டான்.

உதவிக்கு அல்லாஹ் மட்டுமே என முழுமையாக நம்பினான்.

இத்தனை துயரங்களோடும் ஒருவனால் சிரிக்க முடியுமா ? சஹ்மி சிரித்துக் கொண்டே எல்லாம் கடந்து போகிறான். வாழ்வில் அவன் பட்ட அடிகள் அத்தனையும் எனக்குத் தெரியும். சிறு வயது முதலான அவனது வாழ்க்கை சூழல் அவனுள் ஒரு வைராக்கியத்தை வளர்த்தது. தன்கையே தனக்குதவி என்பதை உணர்கிறான். சுயமாக எதையாவது செய்ய முயல்கிறான்.முதல் கொடுக்கவோ தொழிலொன்றைக் காட்டிக் கொடுக்கவோ யாரும் இல்லை. தொண்டர் ஆசிரியராகிறான்.

அவனது மலையளவு பெரிய தேவைகளுக்கு, அந்தச் சின்னஞ் சிறிய சம்பளம் போதவில்லை. அவனுக்குள்ளிருந்த நீறுபூத்த நெருப்பு வேரு பூத்து நிற்கிறது.



எதையாவது சாதிக்க வேண்டும்.என்ற வெறி அவனுக்குள் வேரூன்றி நிற்கிறது. அவன் சில முயற்சிகளைச் செய்கிறான். அவனது முயற்சிகளை அறிந்த சிலர்,அவனைப் பைத்தியம் என்கிறார்கள். அவர்களுடன் சஹ்மியின் சகபாடிகள் சண்டைக்குப் போகிறார்கள்.

கேலி செய்பவர்கள் தான் நாளை என்னைக் கொண்டாடப் போகிறார்கள் என்று சொல்லி தன் நண்பர்களை சமாதானப்படுத்துகிறான்.

அவனது இலக்கை, அவனது கனவை யாராலும் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. அதனால் அவனது ஆசைகளை, திட்டங்களை அவன் யாரோடும் பகிர்ந்து கொள்வதில்லை. சொன்னால் அவனைப் பைத்தியகாரன் என்கிற பட்டியல் நாளும் நீளும்.

"நான் வெல்வேன்" என்கிற மந்திரத்தை மட்டும் மனதுக்குள் உச்சரித்துக் கொண்டிருந்தான். இலக்கில் மட்டும் குறியாக இருந்தான். "சாத்தியப்படாத கனவுகளில் சஞ்சரிப்பவன் சஹ்மி "என்றுதான் அவனை அறிந்தவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள்.

திடீரென ஒரு நாள், "நான் கரையோரமாக நாட்டைச் சுற்றிவரப் போகிறேன்"என்று திகதி குறிக்கிறார். இது சிறுபிள்ளைத் தனமாகச் செல்லும் பயணம் அல்ல.பொலிஸ் அறிக்கை, வைத்தியர் அறிக்கை ஆகியவற்றை பெற்று வாருங்கள்.

உங்கள் 50 நாள் பயணத்துக்கு மான செலவுகளை எனது SYMI HOLDING(PVT) LTD ஊடாகச் செய்து தருகிறேன் என்று அவரை உற்சாகப்படுத்துகிறார் big city group of company உரிமையாளர் இஜ்லான் யூசுப், பிரபல மாணிக்க வியாபாரியான அஸ்ஹர் ஸவாஹிர் கெமரா ஒன்றை வாங்கிக் கொடுத்தார்.

இன்னும் சில நாட்களில், ஷஹ்மிக்கு அனுசரணை வழங்கிக் கொண்டிருக்கும் இஜ்லான் யூசுப் கையடக்க தொலைபேசி ஒன்றை வாங்கிக் கொடுக்கிறார். இவை அவனின் பயணத்திற்கு ஊக்கம் அளித்தன.

சஹ்மியிடம் எனக்குப் பிடித்தது, அவர் ஒரு யதார்த்தவாதி என்பது மட்டுமல்ல,இரவுகளில் இளைஞர்களோடு விழித்திருந்து அரட்டை அடித்து காலத்தை வீணடிக்காமல், தன் இலக்கில் குறியாக இருந்து இலக்கை அடைய, அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலைகளைச் செய்பவர் என்பதாலும் தான். அவனின் இலட்சிய பயணம் நிறைவடையும் போது சஹ்மி என்ற நாமம் திக்கெட்டும் பரவியிருக்கும்.

**நப்ஹான் சிஹாப்டீன்**
பேருவளை

# பொன்னுசாமிபிள்ளை ஞாபகார்த்த ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு







ஹல்துமுல்லையை பிறப்பிடமாகக் கொண்ட தற்பொழுது அமெரிக்காவில் பணிபுரியும் பொன். சூரியகுமார்,தனது தந்தையின் ஞாபகார்த்தமாக ஹல்துமுல்லை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறையொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். இதன் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் திருசெல்வம் தலைமையில் நடைபெற்றது. பொன். சூரியகுமார் மற்றும் அவரது தயார் இணைந்து பொன்னுசாமி





ஞாபகார்த்த ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைத்தனர். பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர். பொன். சூரியகுமார் பல ஊடக நிறுவனங்களில் ஊடகவியலாளராக பணியாற்றியுள்ளதோடு தற்பொழுது அமெரிக்க பொலிஸில் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.பாஹிம்**

# மாஸாக தங்கம் வென்று அசத்திய மாஸ் ஓட்ட வீராங்கனை தருஷி கருணாரட்ன

தென் கொரியாவின் யெச்சியொன் விளையாட்டரங்கில் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற 20ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்த இலங்கையின் வீராங்கனை தருஷி கருணாரட்ன.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியை 2 நிமிடங்கள், 05.63 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை தருஷி கருணாரட்ன சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. வலல்ல ஏ. ரட்நாயக்க மத்திய கல்லூரியைச் சேர்ந்த 19 வயதான தருஷி கருணாரட்ன வென்றெடுத்த இரண்டாவது பதக்கம் இதுவாகும்.

ஏற்கனவே நடைபெற்ற பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியை 53.70 செக்கன்களில் நிறைவு செய்த தருஷி கருணாரட்ன வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஒரு துளிக் கடலும் கடலுதைக்கும் கவிதைகளும்

கவிதை காலாகாலமாக நிகழ்த்திவரும் அற்புதம் அல்லது உயிர்ப்பு கடலைப் போன்றது.

கடலின் துளியின் பலம் அல்லது வளம் கவிதைக் குண்டு.கவிதைக்குள் கிடந்து துடிப்பெடுக்கும் சொற்களின் உயிர்ப்பு அலையை யொத்தது. சொற்கள் மேலெழுவதும் கீழ் அலைவதும் சுழல்வதும் வெள்ளென நுரைபொங்கி வழிவதுமான உயிர்த்தொழிற்பாடு கவிதைக்குள் நடப்பது.

கவிதை மண்ணின் வேராகி நிற்பது; காற்றின் திசையாகி எழுவது; நீரின் ஊற்றாகிப்பாய்வது; நெருப்பின் கொதிப்பாகி கிளம்புவது; வானத்தின் வடிவாகிப்படர்வது; அதனால் உலக இயக்கம் வரை இயங்குகிறது கவிதை எனும் நெம்புகோல். இந்த பூமி உருண்டையைப் புரட்டக்கூடிய நெம்புகோல் கவிதையை உங்களில் எவர் பாடப்போகிறீர்கள் என்று கேட்டான் கவிஞனொருவன். நான், நானென்று எழுதுகோல் எடுக்கின்றனர் பலரும்.



நிஹ்றியும் எடுத்துள்ளார் எழுதுகோல்.அது நெம்புகோலாகும் நம்பிக்கையை கவிதையில் விதைக்கத் தொடங்குகிறார் நிஹ்றி.

அந்த விதைப்பும் வளர்ப்பும் மேலுமான கவிதைகளை நிஹ்றியிடமிருந்து வாசகருக்குப் பரிசளிக்கிறது.

நிஹ்றி கவிதைகளில் அவரது வாழ்வனுபவம் சுழல்கிறது. பாதிக்கப்பட்ட கனங்கள் வெடிப்பெடுக்கின்றன.

இழந்த கனத்த கணங்கள் நினைப்பெடுக்கின்றன.

இழந்த மண் குறித்து குறிப்பாக வடபுலப்பெயர்வு குறித்து வலியெடுக்கும் கவிதைகள்கவிதையில் துடிக்கும் காலமாகி ஈழத்தில் தொண்ணூறுகளில் இருந்து வெந்து தணியா சொற்களோடு அலைவதை அல்லது ஈழத்துக் கவிதை வெளியை நிரப்புவதைக் காணலாம். நிரம்பி வழியும் அத்தகைய சொற்காரரனாக நிஹ்றியும் நிற்பதற்கான அத்தனை தகுதியுடனும் தன் பனுவலை முன்வைக்கிறார்.

நிஹ்றி கவிதை குறித்த எழுத்து தொடரும்

# வனம் திரும்புதல்' எனும் புதிய எழுத்துக்குத் திரும்புதல்

எழுத்தில் நவீனத்தை அதன் உள்ளடக்கம் மற்றும் வடிவம் எனும் மொழிப்பெயல்வு குறித்து எழுதுபவர்கள் பெரும் கவன ஈர்ப்பைக் கோருகிறார்கள்.




நவீன எழுத்தில் எழுந்த பொ. கருணாகரமூர்த்தி சரிநிகர் காலத்தவர்.கதைகளின் அற்புதத்தால் சரிநிகரை நிகரற்றதாக்கியவர்களில் குறிப்பிடும் படியானவர்.

அவரது கதைகளின் பெறுமானம் புலம் பெயர்வுக்குப் பின் இன்னொரு தளத்தில் நின்றது.

அண்மையில் வெளிவந்த வனம் திரும்புதல் கதைகளின் திரட்டு கருணாகரனின் இன்னொரு எழுத்துப் பாய்ச்சலெனலாம்.

புலம்பெயர் தேசத்தின் அலைச்சல், சமூகப் பொருளாதாரப் பின்புல வாழ்வனுபவம் சார்ந்து பாத்திரங்களைப் படைக்கும் பொ.க தனது வனந்திரும்புதலில் 14 கதைகளூடாக ஒற்றுமையும் முரணுமான வாழ்வனுபவத்தைப் பெய்கிறார். கதையென்பது ஆழத்திலூறும் மொழியின் திரட்சி என்பதனைத் தன் கதை வழி நிரூபிக்காறார் கதாசிரியர்.

நவீன வாசிப்பின் முன்னெழு பனுவலாக இந்தக்கதைகளுக்குத் திரும்ப முடியும்.



# ரூமியின் வைரங்கள்

ஒளி ஒன்றே
விளக்குகள் வேறு வேறு
ஒளி ஒன்றே
உன் உள்ளத்தில்
ஒளி இருந்தால்
வீடடையும் வழி அறிவாய்
உலகச் சோலைக்கு
எல்லை இல்லை
உன் மனத்தைத் தவிர
காதலுக்கு இல்லை
அடித்தளம் எதுவும்
முடிவற்ற கடல் அது
துவக்கமும் இல்லை
முடிவும் இல்லை
காதலே
உனக்கும் அனைத்திற்கும்
இடையிலான பாலம்
தீயைப் பற்றிய உன் அறிவில்
தெளிவு எங்கிருந்து?
வார்த்தைகளே அதை உனக்கு
வழங்கி விட்டது எனில்
தீயினைக் கொண்டே
சமைவதைத் தேடு
இரவில் தெளிவில்
இருக்காதே
எரிந்திடாத வரை
எட்ட இயலாது
நிஜத் தெளிவை நீ
ஆசைதான் எனிலா
அமர்க தீயில்
என் வார்த்தைகள்
கப்பலைப் போன்றவை
அதன் அர்த்தங்களோ
கடல்
என்னிடம் வா
உயிரின் ஆழங்களுக்கு
அழைத்துச் செல்கிறேன்
நீ பார்க்கும்
ஒவ்வொன்றிற்கும்
மறைவுலகில் உள்ளன
வேர்கள் இன்மையிலிருந்து
வருகிறோம்
சுற்றிச் சுழன்ற படி
விண்மீன்கள்
புழுதியாப் பறந்தபடி
புனிதப் பயணம்
புறப்பட்டோரே
நீங்கள் எங்கே?
நீங்கள் எங்கே?
தெய்வீகக் காதலி
இங்கே
இருக்கிறாள்
வாருங்கள் இங்கே!
வாருங்கள் இங்கே!
உன்னைத் தெரியுமா
உனக்கு?
தெய்வீகக் கடிதத்தின் பிரதி
புனித முகத்தைப்
பிரதிபலிக்கும்
கண்ணாடி பிரபஞ்சம்
உனக்கு வெளியே இல்லை
உன்னுள் பார்
எதை நீ தேடுகின்றாயோ
அதுவாகவே இருக்கிறாய்



இப்போதே!
சொர்க்கச் சோலையின்
பறவை நான்
பூமிப் பந்தின்
பிரஜை அல்லன்

வைரங்கள் சுடரும்

# வாசிப்பாற்றுப்படை மீதான கவன ஈர்ப்பு

வாசிப்பு எனும் உயிர்ப்பு இன்றைய இளைய தலைமுறையின் கவனத்தை ஈர்த்து நிற்காறதா எனும் பெரும் கேள்வி, பெரும் கதையாடலைத் தோற்றுவிக்கத் தக்கது.

வாசித்தல் மீதான ஆற்றுப்படை பாடசாலை மட்டத்தில் எந்தளவு உயிர்ப்புமிக்கதாக, செவ்வியதாக, தொடரறாச் செயற்பாடாகக் கட்டமைகிறதென்பது இந்தக் கதையாடலை அழுத்துகிறது.

வெறுமனே பாடப் பனுவல் வாசிப்பாளர்களாக மாணவர்களை வழிப்படுத்துவதற்கப்பால் படிமுறையானதொரு வாசிப்பாற்றுப்படை அவசியமாகிறது.எழுத்தாயினும், மின்னெழுத்தாயினும் இன்றைய வாசிப்பு முறைமை மாறியிருக்கிற சூழலில் முழுத் தன்மை கொண்ட வாசிப்பு பொறிமுறையை கல்விக்கூடங்கள் காத்திரப் படுத்துவதற்கு நூலக மேம்பாடு இன்றியமையாததாகிறது.

பாடசாலைகளின் நூலகக் கட்டமைப்பு எந்தளவு கவர்ச்சியான கருத்தாக்கம் மிக்கக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதென்பதும் கேள்வியே.

கல்வி வாசிப்பு,அறிவியல் வாசிப்பு, பண்பாட்டு வாசிப்பு இலக்கிய வாசிப்பு என் விரிந்த புலத்தில் இலக்கிய வாசிப்பானது அதன் அனுபவப்புலத்தையொட்டி கட்டமைய வேண்டும்.

நவீன எழுத்துப் புலத்தில் இந்தவாறான வாசிப்புப் பனுவல் தேடல் ஆற்றுப்படையின் முக்கிய அம்சமாகும் என்பதனால் வாசிப்பு ஒழுங்கமைவு கட்டாயமானது.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

அவரோ “நெல்சன், நீ கோருடன் அதிகம் சுற்றுகிறாய் என்று நன்றாகப் புரிகிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவனுடன் அதிகம் தொடர்பு வைத்துக்கொள்ளாதே அது உன் இலட்சியத்திற்கு எவ்வித உபயோகமுமில்லை. அரசியல், போராட்டம், புரட்சி இதெல்லாம் நமக்கானதல்ல. நீ வழக்கறிஞர் ஆகவேண்டும். நீ அரசியல் ஈடுபாடு கொண்டால், அரசாங்கத்தையும் காவல் துறையையும் பகைத்துக்கொள்ள வேண்டி வரும். அவர்கள் நம் நண்பர்கள். அவர்களின் உதவி உன் இலட்சியப் பயணத்திற்கு தேவை. அவர்களிடம் மோதினால், நீ உன் வாழ்க்கையை சிறையில்தான் கழிக்க வேண்டி வரும். நீ வழக்கறிஞராக மாறி நியாய முறையில் வாதாடி உன் இன மக்களை காப்பாற்று. அதை விட்டு விட்டு அரசியல்தான் வழி என்று நினைத்து அரசியல் சாக்கடையில் விழுந்து விடாதே. நான் திரும்ப திரும்பக் கூறியும் நீ கேட்காமல் கோருடன்



சேர்ந்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கூட்டங்களுக்கு செல்கிறாய் என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது. இனியாவது புத்தியாக நடந்துகொள்” என்று சற்றுக் கடுமையான தொனியில் ஒரு குட்டி பிரசங்கத்தையே நடாத்தி முடித்துவிட்டார். அது அறிவுரை மட்டுமல்ல எச்சரிக்கையும் கூட என்று மண்டேலாவுக்கு புரிந்து விட்டது.

மண்டேலாவோ தலையை தொங்கவிட்டபடி மௌனியாக இருந்து அவரின் அறிவுரையை கேட்டுவிட்டு அங்கிருந்து மெதுவாக நழுவிச் சென்றான். அவர் இவ்வளவு கூறியும் மண்டேலாவின் உள்மனதோ சிடெல்ஸ்கி கூறுவது முற்றிலும் தவறு, கோரின் அணுகுமுறைதான் சரி என்று வாதாடியது. “அவர் கூறுவது சரி என்றால் பேரூந்துப் போராட்டம் தோற்றுப் போயிருக்க வேண்டுமே! அரசாங்கத்தை எதிர்த்து அரசாங்கத்தின் ஆணையை மீறி நடந்த அந்தப் போராட்டம் மாபெரும் வெற்றியை அல்லவா ஈட்டித் தந்திருக்கிறது.

அப்படி பார்க்கும் போது கோரின் அணுகுமுறைதானே சரி.” என்று அவன் மனதில் நினைத்துக் கொண்டான். இவ்வாறு ஆயிரமாயிரம் விடை தெரியா வினாக்கள் அவன் மனதில் தோன்றி மறைந்தன.

அவன் மனம் குழப்பங்களின் குட்டையாகியது. யார் கூறுவது சரி, யாரை பின்பற்ற வேண்டும் என்ற குழப்பம் அவன் மனதில் பேரலையாக உருவெடுத்து உள்ளத்தை உலுக்கியது. இவனது உள்ளத்தை அறிந்த உற்ற தோழன் சிசுலு மண்டேலாவிடம் “நாம் அரசியலில் களமிறங்கினால்தான் நம் இன மக்களுக்கு அவர்களின் அபிலாஷைகளை விரைவாக பெற்றுக்கொடுக்க முடியும்.

சிடெல்ஸ்கி கூறும் வழிமுறையானது,

ஒற்றையடி பாதை கண் முன் இருக்க, எங்கோ கண்காணா தொலைவில் இருக்கும் மலையை சுற்றி வலம் வந்து வழி தெரியாமல் விழி பிதுங்கி இறுதியில் மற்றவர் மீது பழி சொல்லும் வழிமுறையே ஆகும்.” என்று கூறி முடிக்க மண்டேலா அவனையே உற்று நோக்கினான்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...✍
யாழ்ப்பாணம்

# இனிக்கும் இசைக்குயில் சித்ரா

**தொடர்**

1985–1986ஆம் ஆண்டில், இளையராஜாவின் இசையமைப்பில் சித்ரா பாடிய பல பாடல்கள் வெற்றியடைந்தன. இதைத் தொடர்ந்து. இசையமைப்பாளர்கள் பலரும் தம் பாடல்களுக்கு உயிரூட்ட சித்ராவின் குரலைப் பயன்படுத்தினர். சித்ராவுடன் தமிழில் முதலில் பாடிய கங்கை அமரன் , மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் , சங்கர் கணேஷ் ஆகியோர் இசையமைப்பிலும் அநேக பாடல்கள் பாடியிருக்கிறார் சித்ரா.

எண்பதுகளின் பிற்பகுதியில் சந்திரபோசின் இசைக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. அவருடைய இசையமைப்பில் சித்ராவிற்கு 'மெதுவா மெதுவா ஒரு காதல் பாட்டு', சின்னக்கண்ணா செல்லக்கண்ணா, 'பூ முடிக்கணும் ', 'வண்ணாத்திப்பூச்சி வயசென்னாச்சு' போன்ற பாடல்களைப் பாடும் வாய்ப்புகள் கிடைத்தன.

மேலும் வி.குமாரின் இசையமைப்பில் எஸ்.பி.பியுடன் இணைந்து 'பட்டுப்பூச்சி பட்டுப்பூச்சி பூவெல்லாம் ' பாடிய சித்ரா அவர்கள் குன்னக்குடி வைத்யநாதனின் 'உலா வந்த நிலா' திரைப்படத்தில் சில அரிய பாடல்களையும், டி.ராஜேந்திரனின் இசையில் சில பாடல்களையும் பாடினார்.

சில இசையமைப்பாளர்கள் சித்ராவிற்காக காத்திருந்து தம் படங்களில் பாடும் வாய்ப்பளித்தார்கள். ஆர்.டி.பர்மன் (நதியே நதியே நைல் நதியே), லட்சுமிகாந்த் பியாரிலால் (அச்சமில்லா பாதையில்), பப்பிலஹரி (தக்கதிமிதானா), வி.எஸ். நரசிம்மன் (விழிகளில் கோடி அபிநயம்), எல்.வைத்யநாதன் (என்னை விட்டுப் பிரிவது நியாயமாகுமா), தேவேந்திரன் (கண்ணுக்குள் நூறு நிலவா, புத்தம்புது ஓலை வரும்), ஹம்சலேகா (ராக்குயிலே கண்ணிலே என்னடி கோபம், சேலை கட்டும் பெண்ணுக்கொரு), எம்.ரங்காராவ் (குடும்பம் ஒரு கோயில்), மனோஜ் க்யான் (சின்னக்கண்ணன் தொட்டது பூவாக, கண்ணா நீ வாழ்க, உள்ளம் உள்ளம்





இன்பத்தில் துள்ளும், அழகில் சொக்காத ஆண்களே) , பாக்கியராஜ் (அம்மாடி இது தான் காதலா), எஸ்.பி.பி (உன்னைக் கண்ட பின்பு தான், இதோ என் பல்லவி), எஸ். ஏ. ராஜ்குமார் (ஆயிரம் திருநாள்) , தேவா (சந்திரலேகா, வேண்டும் வேண்டும்), போன்றவர்களின் பாடல்கள் அவரின் பன்முகத்திறமைக்கு கட்டியம் கூறும் முகமாக அமைந்துள்ளன.

அடுத்து தொடர்ந்த பத்தாண்டுகளில் இசையரங்கில் ஏ. ஆர். ரகுமான் , மரகதமணி,

வித்யாசாகர், சிற்பி, பரத்வாஜ் போன்றவர்களின் பிரவேசத்தினால் இசையின் பரிமாணத்தில் பல அற்புதமான மாற்றங்கள் காணத் துவங்கின. இத்துறையில் முதன்மையாக நின்ற ஏ.ஆர்.ரஹ்மான் அவர்கள் சித்ராவின் குரலில் 'புத்தம்புது பூமி வேண்டும்' , 'என் மேல் விழுந்த மழைத்துளியே' , 'தென் கிழக்குச் சீமையிலே', 'கண்ணாளனே' , ’ஊலலலா’, ’எங்கே எனது கவிதை’ போன்ற பல வெற்றிப்பாடல்களை வழங்கினார்

சித்ராவின் இசைப்பயணத்தில் இசையமைப்பாளர் மரகதமணியும் ஒரு மைல் கல்லாக நிற்கிறார். 'அழகன் ' படத்தில் தாம் 'தத்தித்தோம் ' என்ற பாடலை பாடினார். அவர் இயக்கத்தில் 'நாடோடி மன்னர்களே' , 'நீ ஆண்டவனா?' , ' கம்பங்காடே' (வானமே எல்லை) போன்ற பாடல்களையும் பாடினார். 'உயிரே உயிரே' என்ற பாடலும், 'தேவராகம்' என்ற இரு மொழிப்படத்துப் பாடல்களும் அவருக்கென்றே இசையமைக்கப்பட்டவை.

பாலபாரதி (உன்னைத் தொட்ட தென்றல்), ஆதித்யன் (ஒயிலா பாடும் பாட்டிலே, வெள்ளி கொலுசு ஜதி போடுதே), மஹேஷ் (பூங்குயில் பாடினால்), சிற்பி (கன்னத்துல வை, ஐ லவ் யூ ஐ லவ் யூ, தென்றல் தென்றல் தென்றல் வந்து) , ரஞ்சித் பாரோடு (மின்னல் ஒரு கோடி), ஆகோஷ் (தொலைவினிலே, முந்தானை சேலை), வித்யாசாகர் (பாடு பாடு பாரத பண்பாடு, அடி ஆத்தி, அன்பே அன்பே நீ என் பிள்ளை, நீ காற்று நான் மரம்), பரத்வாஜ் (ஒரு பூ வரையும் கவிதை, வானும் மண்ணும் கட்டிக் கொண்டதே, உன்னோடு வாழாத, ஒவ்வொரு பூக்களுமே), ரமேஷ் வினாயகம் (காதலை வளர்த்தாய்), எஸ்.ஏ.ராஜகுமார் (தொடு தொடு எனவே, இன்னிசை பாடி வரும்) போன்ற பல வேறு இசையமைப்பாளர்களின் இசையில் சித்ரா பாடிய பாடல்களில் சில.

இருபது ஆண்டுகளுக்கு மேல் மலையாளத் திரையுலகில் மட்டுமின்றி, பி. லீலாவிற்குப் பிறகு கேரளாவிலிருந்து வந்து, தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகள் நான்கிலும் பாடியிருக்கிறார். ஹரிஹரன் ,

உன்னிகிருஷ்ணன் , எஸ். பி. பி, மனோ, ஜெயச்சந்திரன் என்று பலருடனும் இணைந்து பாடி வாலி , வைரமுத்து, பழனி பாரதி, பா.விஜய் போன்றவர்களின் வரிகளை தம் குரலால் உயிர்ப்பித்திருக்கிறார்.

தெலுங்கில் சித்ராவை 'பிரளயம்' திரைப்படத்தில் அறிமுகப்படுத்திய திரு.கே.வி.மஹாதேவன் 'ஸ்வாதி கிரணம்' என்ற திரைப்படத்தில் 'பிரணதி பிரணதி' என்ற பாடலை திரு.எஸ். பி. பியுடனும், திருமதி.வாணி ஜெயராமுடனும் பாடும் அரிய வாய்ப்பைக் கொடுத்தார். அதைத் தொடர்ந்து எஸ். பி.பி,, இளையராஜா, கீரவாணி (மரகதமணி) போன்றவர்கள் அவரை தெலுங்கில் பல அற்புதமான பாடல்களைப் பாட வைத்தார்கள். முதலில் மொழி அறியாது அவர் சற்று சிரமப்பட்டாலும் எஸ்.பி.பி அவர்கள் மொழியை பொருளோடு புரியவைத்து உச்சரிக்கும் முறை சுட்டிக் காட்டியபொழுது கற்றுக் கொண்டார். திருமதி.பாலசரஸ்வதியும், பிறரும் பாரட்டும் வண்ணம் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர் போன்றே அம்மொழிப் பாடல்களை மிகச் சிறப்பாக பாடினார்.

**இந்திப் பாடல்கள்**

பாலிவுட்டில் பல பாடல்களைப் பாடியுள்ளார். இசையமைப்பாளர் ஆனந்த் மிலிந்த் 'ப்ரேம' என்ற தெலுங்கு படத்தை 'லவ்' என்ற பெயரில் தயாரித்த பொழுது, இளையராஜாவின் பாடல்களைப் பின்பற்றி இசை அமைத்து சித்ராவையும், எஸ்.பி.பியுடன் இணைந்து பாட வைத்தனர். ஏ.ஆர்.ரஹ்மான் அநேக ஹிந்தி மொழிப்படங்களில் அவரைப் பாட வைத்தார். ராஜேஷ் ரோஷன், நாதீம் ஷ்ரவண், அனுமாலிக், நிகில் வினய், இஸ்மாயில் தர்பார் போன்ற இசையமைப்பாளர்கள் அந்த காலகட்டத்தின் மிகச் சிறந்த பாடகி என்று திருமதி. சித்ராவிற்குப் புகழாரம் சூட்டியிருக்கிறார்கள். லதா மங்கேஷ்கர் எழுபத்தைந்தாம் ஆண்டு பிறந்த நாள் விழாவின் போது அந்தேரியில் நடந்த பிரம்மாண்டமான பாராட்டு விழாவில் லதா கேட்டுக் கொண்டதற்கேற்ப சித்ரா அவர்கள் 'ரசிகா பல்மா' பாடலைப் பாடி விழாவைத் துவக்கி வைத்தார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...✍
கம்பளை

# பேருவளை மாலிகாஹேனை ஜெம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய 2004 O/L Batch சம்பியன்







பேருவளை மாலிகாஹேனை ஜெம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாடசாலையின் அதிபர் எஸ் குமார் தலைமையில் இரவு பகல் போட்டியாக வெகுவிமரிசையாக அண்மையில் நடைபெற்றது. இத்தொடரில் 32 அணிகள் பங்குபற்றின. இறுதிப்போட்டியில் 2013 O/L Batch அணியும் 2004 O/L Batch அணியும் மோதின. இதில் 2004 O/L Batch அணி வெற்றி பெற்று சம்பியனானது. 100 வருட வரலாற்றைக் கொண்ட பாடசாலை வரலாற்றில் இது பெரும் சாதனையாக கருதப்படுகின்றது. சமூக சேவையாளர் பாஸி சுபைரும் இதில் கலந்து கொண்டார்.

# MR.SRI LANKA போட்டியில் உதயகுமார் ஷங்கர் கேணஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்









2024 ஆம் ஆண்டிற்கான MR.SRI LANKA போட்டியில் மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தின், நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த உதயகுமார் ஷங்கர் கேணஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். கொழும்பு தெஹிவளையில் குறித்த போட்டி கடந்த 28.07.2024 திகதி நடைபெற்றது. இப்போட்டியில், எல்லா மாவட்டங்களிலும் இருந்தும் 60 பேர் பங்குபற்றிய நிலையில் MEN PHYSIQUE மற்றும் 80 kg எடைப் பிரிவிற்கான BODY BUILDING ஆகிய பிரிவுகளில் உதயகுமார் சங்கர் கணேஸ் முறையே தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளார். தற்போது இவர் நுவரெலியா நகரத்தில் THE IRON KINGDOM உடற்பயிற்சி கூடத்தில் பயிற்றுவிப்பாளராக (COACH( கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.